வெளியீடு : 19-2-2004 Issued : 19-2-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 24, 2003 தொகுதி 44 – எண் 2

**Thursday the 24th April, 2003 – Volume 44 – No. 2**

*மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

## 24-4-2003


| உள்ளடக்கம் | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 317-354 |
| **2. உரிமை மீறல் பிரச்சினை—** | |
| மாண்புமிகு முதலமைச்சர், சென்னை மாநகர காவல் ஆணையர், இராணி மேரி கல்லூரி முதல்வர் மற்றும் கடலூர் சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் மீது | 354-364 |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 364-366 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| வேலூரில் ரிலையன்ஸ், பாரத் டெலிநெட், பி.எஸ்.என்.எல். ஆகிய நிறுவனங்களால் வெட்டப்பட்ட சாலைகளை மீண்டும் செப்பனிடல் | 366-371 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 371 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி—** | |
| கோரிக்கை எண் 5— வேளாண்மைத் துறை | |
| *மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம் | 382-383,386, 397,402,408, 411-412 433-470 |
| திரு. எம். ராம்குமார் | 383-391 |
| *திரு. வீ. சந்திரன் | 391-395 |

P03.442


பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி—

கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை-தொடர்ச்சி—

| | |
|---|---|
| திரு. அ. இரா. மல்லையப்பசாமி | 395-403 |
| திரு. கே. மகேந்திரன் | 403-409 |
| திரு. ஜி. பழனிசாமி | 410-417, 420-423 |
| *திரு. ப. அரசன் | 423-429 |
| திரு. லா. சந்தானம் | 429-433 |

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 474-475


தமிழ்நாடு ஆவணக் காப்பகம் (85077)

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 11, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

பல தொழில்களைச் செய்து சுழன்று கொண்டிருக்கும் இந்த உலகம் ஏர்த் தொழிலின் பின்னேதான் சுற்ற வேண்டியிருக்கிறது. எனவே, எவ்வளவுதான் துன்பம் இருப்பினும் உழவுத் தொழிலே சிறந்தது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 301, திருமதி எஸ். கனிதா சம்பத். மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**301—**

### நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

**•6040—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, செங்கல்பட்டு-திருப்போரூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ;

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது செங்கல்பட்டு-திருப்போரூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி எஸ். கவிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-திருப்போரூர் பாதை, ஒருவழிப் பாதையாக இருப்பதால், அங்கே நிறைய விபத்துகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், திருப்போரூரில் புகழ்பெற்ற முருகன் கோவில் உள்ளது. மகாபலிபுரம், கோவளம், முட்டுக்காடு, எம்ஜிஎம் போன்ற சுற்றுலாத்தலங்களும் அதிகமான தொழிற்பேட்டைகளும் உள்ளதால் இதனை பரிசீலனை செய்து, ஒருவழிப்பாதையாக உள்ளது இருவழிப்பாதையாக இந்த நிதியாண்டிலே மாற்றிக் கொடுக்கப்படுமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு-திருப்போரூர் சாலையானது கிலோ மீட்டர் 0/0 முதல் 21/8 வரை நெடுஞ்சாலைத் துறையால் மாவட்ட இதரச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலையானது 3.66 மீட்டர் அகலமுள்ள ஒருவழிப் பாதையாக உள்ளது. இச்சாலையை 5.50 மீட்டர் அகலமுள்ள இடைவெளிப் பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய, தோராயமாக ரூ.100 இலட்சம் தேவைப்படும். இச்சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணியானது ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம்பெறவில்லை. இருப்பினும், இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளின் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நிதிநிலைமைக்கேற்ப செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதைச் செய்தால், அது சென்னையினுடைய நெரிசலைக் குறைப்பதற்கு, தொழிற்சாலைப் பகுதியாக இருக்கிற திருப்போரூர், சோழிங்கநல்லூர், திருவான்மியூர் போன்ற பகுதிகளுக்கு, நெடுந்தூரத்திலிருந்து, தென் மாவட்டங்களிலேயிருந்து வரும் வாகனங்கள் செங்கல்பட்டிலேயிருந்து திருப்போரூர் வழியாகச் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள், முன்னுரிமை அடிப்படையிலே இந்த ஆண்டே அதை எடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப மேம்பாடு செய்யப்படும் என்று சொன்னேன். வரும் நிதியாண்டு என்றால், இந்த ஆண்டும் சேரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 302, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**302—**

**மேம்பாலம்**

***9813—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி-பெரியகுளம் நெடுஞ்சாலையிலும், தேனி-மதுரை நெடுஞ்சாலையிலும் இரயில்வே இருப்புப்பாதை, சாலைகளின் குறுக்கே செல்வதால், அவ்விடங்களில் மேம்பாலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.

அரசின் ஆய்வில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தேனி நகரம் மாவட்டத்தின் தலைநகராகவும், தமிழகத்தின் முக்கியமான ஒரு வர்த்தக மையமாகவும் இருப்பதால், ஆண்டிற்கு ப இலட்சம் டன் சரக்குகள் தேனி மார்க்கெட் மூலம் கையாளப்பட்டு வருகின்றன, மேலும் தேனி மாவட்டத்திலுள்ள தேனி, பெரியகுளம், போடி, சின்னமனூர், கம்பம் ஆகிய ஐந்து நகராட்சிகளும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தொகுதியான ஆண்டிப்பட்டி, உத்தமபாளையம், தேவாரம், கூடலூர் போன்ற டவுன் பஞ்சாயத்துகளும் முக்கிய வர்த்தக மார்க்கெட்டுகளாக விளங்கி வருகின்றன. அந்தச் சரக்குகளைக் கையாளும் வர்த்தகர்களின் வர்த்தகம் தற்போது தேனியின் மையப் பகுதியான தேனி-பெரியகுளம் சாலையில் போக்குவாத்து மூலமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தேனி-மதுரை சாலை, தேனி-குமுளி சாலை, தேனி-போடி சாலை, தேனி-திண்டுக்கல் சாலை ஆகிய முக்கிய சாலைகளை மேம்பாடு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், தேனி நகரில் போக்குவாத்து நெரிசல் கூடுதலாக இருப்பதால் தேனி-பெரியகுளம் சாலையிலுள்ள இரயில்வே மேம்பாலத்தினைத் துரிதமாகச் செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி நகரில், தேனி-பெரியகுளம் மாநிலச் சாலை கிலோ மீட்டர் 72/8-லும், தேனி-மதுரை தேசிய நெடுஞ்சாலை கிலோ மீட்டர் 75/8-லும் இரண்டு இருப்புப்பாதைகள் குறுக்கிடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த இரயில்வே மேம்பாலத்தைப் பற்றி, அதன் அவசியத்தைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். வரும் நிதியாண்டில்,



2003 ஏப்ரல் 24]

நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு அதனை ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை-தேனி நெடுஞ்சாலையில் உசிலம்பட்டி தொகுதியும், ஆண்டிப்பட்டி தொகுதியும் சந்திக்கின்ற இடமாகிய ஆண்டிப்பட்டிக் கணவாயில் இரயில்வே gate ஒன்று இருக்கிறது. அந்தச் சாலை மிகவும் வளைவுகள் உள்ள சாலையாக இருக்கிறது. அது மலைப் பாதையாகவும் இருக்கிறது. அந்த இடங்களிலே அந்த வளைவுகளின் காரணமாக, மிகப் பெரிய விபத்துகள் எல்லாம் அடிக்கடி நடந்து கொண்டு இருக்கின்றன. அந்தச் சாலையை நேர் செய்து அங்கே இருக்கின்ற அந்த இரயில்வே gate-ன் அருகிலும் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா? அதேபோல, அதே சாலையில் செக்கானூரணி என்ற இடத்திற்கு மேற்காக, இந்த இரயில்வே லைன் குறுக்கிடுகள் இருக்கின்றன. அதுவும் தேசிய நெடுஞ்சாலை என்கின்ற காரணத்தினால், அங்கு வாகனப் போக்குவாத்து மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கேயும் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தா அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டிக்கும், உசிலம்பட்டிக்கும் இடையில் இருக்கின்ற அந்த மலைப் பாதை வளைவுகள் நிறைந்ததாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் கூறினார்கள். அந்த வளைவுகள் வரும் ஆண்டில் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும், ஆண்டிப்பட்டிக் கணவாயில் இருக்கின்ற இருப்புப்பாதை கடவுபாதை பற்றியும், செக்கானூரணியில் இருக்கின்ற இரயில்வே மேம்பாலப் பணியைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கு ஏற்ப அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2003 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 303, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

**303—**

## தேர்தல் சீர்திருத்தம்

***19802—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தல் சீர்திருத்தம் பற்றி மத்திய அரசு அமைத்த இந்திரஜித் குப்தா கமிட்டிப் பரிந்துரையைச் செயல்படுத்திட வேண்டும் என மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திரு. இந்திரஜித் குப்தா தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் நகல் இம்மாநில அரசிற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. எனவே, இக்குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துமாறு மத்திய அரசை வற்புறுத்தும் கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் சீர்திருத்தம் பற்றிய மிக முக்கியமான கேள்வி இது. மாண்புமிகு நிதியமைச்சர் மத்திய அரசு அனுப்பி வைக்கவில்லையென்று கூறுகிறார்கள். குறிப்பாக, அன்றையதினம், மத்திய உள் துறை அமைச்சராக இருந்த எங்கள் ஒப்பற்ற தலைவர் மரியாதைக்குரிய திரு. இந்திரஜித் குப்தா அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட கமிட்டி அது. அந்தக் கமிட்டி மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிற பரிந்துரையினுடைய நோக்கம் என்பதே செலவைக் கட்டுப்படுத்துவது என்பதுதான்; பிரதான நோக்கமாக, அந்தப் பரிந்துரை அளிக்கப்பட்டிருக்கிறது. அதில், குறிப்பாக, தேர்தல் நேரங்களில் செலவை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று அந்தக் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது. அதற்குக் காரணம், ஒரு வரன்முறை என்று



2003 ஏப்ரல் 24]

வரையறுக்கப்பட்டிருக்கிறது. மூன்று இலட்சம் அல்லது ஐந்து இலட்சம் என்று தேர்தல் செலவுகளை அரசு, தேர்தல் ஆணையம் வரையறுத்துச் சொல்லியிருந்தாலும், அதை மீறி, வரம்பு மீறிய செலவுகள் தேர்தல் நேரத்தில் நடைபெறுகிறது. ஆகவே, செலவினை வசதியுள்ளவர்கள், வாய்ப்பு உள்ளவர்கள், ஆளுங்கட்சியாக இருக்கிறவர்கள், இப்படிப்பட்டவர்களாலே செய்ய முடிகிறது என்று பொதுவான கருத்து இந்தியா முழுமையிலும் இருக்கிறது. ஆகவே, இந்தக் கருத்தின் அடிப்படையிலேதான், அந்தக் கமிட்டி அமைக்கப்பட்டு, சீர்திருத்த வேண்டும் என்பதற்காக அந்தப் பரிந்துரையை அளித்துள்ளார்கள். ஆகவே, வேட்பாளருடைய தேர்தல் செலவை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படுமானால், அது நடைமுறைப்படுத்தப்படுமானால், யார் தகுதியான வேட்பாளர்கள் என்பது மக்கள் தேர்வு செய்வதற்குரிய ஜனநாயகத்திலே முழு நம்பிக்கையோடு வாக்கு அளிக்கிற மக்களுக்கு உறுதிசெய்யப்படும் என்ற அடிப்படையில் அந்தப் பரிந்துரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பரிந்துரையை அமல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை நமது தமிழ் மாநில அரசாங்கம் முன்மாதிரியாக வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூறிய பதில்; எத்தகைய பரிந்துரையை திரு. குப்தா அவர்கள் மைய அரசுக்குத் தந்தார்கள் என்ற தகவலே மாநில அரசுக்குத் தரப்படவில்லை. ஏன்? அந்தத் தகவலை மைய அரசு--மாநில அரசுக்கு, நமக்கு மட்டுமல்ல--எந்த மாநிலங்களுக்கும் குப்தா அவர்களுடைய தேர்தல் சீர்திருத்த பரிந்துரைகளைத் தரவில்லை. ஆனால், என்ன பரிந்துரைகள் என்பதனை மாநில அரசு மைய அரசிடமிருந்து கட்டாயம் கேட்கும். நல்ல ஆலோசனைகளாக இருந்தால், அதை நடைமுறைப்படுத்த மைய அரசை மாநில அரசு வற்புறுத்தும்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய

[2003 ஏப்ரல் 24

விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். அதில் குறிப்பாக ஒரு செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், சென்ற ஆட்சியில், இந்தப் பேரவையினுடைய சபைத் தலைவராக இருந்த மரியாதைக்குரிய சேடப்பட்டி முத்தையா அவர்களே, அதிலே குழு உறுப்பினராக இருந்திருக்கிறார். ஆகவே, அவர் மூலமாகக்கூட அந்த அறிக்கை, நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்காவது கிடைத்திருக்கும். ஆகவே, அதன் மூலமாகப் பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கலாம். இல்லையென்று சொன்னால்கூட, அக்கறையோடு நமது மாநில அரசு, மத்திய அரசாங்கத்திடம் கோரிப் பெற்று, அந்த அறிக்கையை அமல்படுத்த வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துவதற்கான முயற்சியை, நமது அமைச்சர் அவர்களும், அரசும் மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. இந்திரஜித் குப்தா அவர்கள் மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்தால், மாண்புமிகு உறுப்பினருடைய இயக்கத்திலும் அந்த அறிக்கை இருக்கும் என்று கருதுகிறேன். எங்களுக்குத் தாருங்கள்; நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் சீர்திருத்தம் பற்றிப் பேசுகிறோம். தமிழ்நாட்டில், பல சட்டமன்றத் தொகுதிகள், பல ஆண்டுகளாக, தனித் தொகுதிகளாக அறிவிக்கப்பட்டு, இப்போது நடைமுறையிலே இருந்து வருகின்றன. அவற்றையெல்லாம், பொதுத் தொகுதிகளாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை, பல ஆண்டுகளாக இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்கூட முன்பு குறிப்பிடுகையில், 2020 வரை அதுபோன்ற தனித் தொகுதிகளை மாற்றும் எண்ணம் இல்லை; தேர்தல் கமிஷன் கூறியிருக்கிறது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தற்போது, சட்டமன்றத் தொகுதிகளை எல்லாம் வரையறை செய்வதற்கு ஒரு கமிட்டி வந்து, இங்கே ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்ற இந்தக் கமிட்டியிடம், மாநில அரசு, தனித் தொகுதிகள் எல்லாம் பல ஆண்டு காலமாக



2003 ஏப்ரல் 24]

இருக்கிற காரணத்தினால், அவற்றையெல்லாம் சுழற்சி முறையிலே மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்கெனவே மைய தேர்தல் ஆணையத்திற்கு, மாநில அரசு எடுத்துச் சென்றிருக்கிறது. 35 ஆண்டு காலமாகத் தொடர்ந்து, சில பல தொகுதிகளை, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு reserve செய்த தொகுதிகளாக இருக்கிற காரணத்தால், சுழற்சி முறையிலே அந்தந்த ஜனத்தொகை—மக்கள் தொகையின்—எண்ணிக்கையின் அடிப்படையில், அந்த descending order-இல் அதைக் கருத வேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு தெரிவித்திருக்கிறது. தேர்தல் ஆணையத்திற்கும் தெரிவித்திருக்கிறது. அடுத்த மாதம் 31 ஆம் தேதி, ஒரு கூட்டத்தைத் தேர்தல் ஆணையம் தொடர்பான ஓர் அமைப்பு கூட்டியிருக்கிறது. அந்தக் கூட்டத்திலும் இக்கருத்தை, மாநில அரசு வற்புறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே உள்ள 45 தனித் தொகுதிகளின் எல்லைகளும், பரப்பளவுகளும், மிகச் சிக்கலாகவும், நீண்ட அளவிலும், மிகப் பரந்த அளவிலும், கடந்த காலங்களிலே அமைக்கப்பட்டுவிட்டன. இப்போது, புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டமன்ற வரையறைக் குழு, இதை மாற்றியமைக்கிறபோது--தனித் தொகுதிகளிலே போட்டியிடுகிற சட்டமன்ற வேட்பாளர்கள், பொதுவாகவே ஏழைச் சமுதாயத்திலே பிறந்தவர்கள். இவ்வளவு பெரிய பரப்பளவும், சிக்கலும் நிறைந்த தொகுதிகளிலே போட்டியிட்டு அவர்கள் பணியாற்றுவது என்பது, மிகச் சிக்கலாக அமைந்துவிடுகிறது. எனவே--அந்த எல்லைக் கோடுகளைத் திரும்ப வரையறை செய்கிறபோது, குறுகிய அளவிலும், இலகுவான அளவிலும் வரையறை செய்வதற்கு அரசு உரிய பரிந்துரைகளைச் செய்யுமா எனக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல, எல்லைப் பகுதிகளைக் குறுக்கி, குறுகிய அளவிலே வரையறை செய்தால், அது பொதுத் தொகுதியாக மாறிவிடும்.

தாழ்த்தப்பட்ட, மக்களுக்கு உள்ள வாய்ப்பு அதிலே கிடைக்காமல் போய்விடும். ஆனாலும்கூட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் வாழ்கின்ற, அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகுதிகளுக்கெல்லாம், Boundaries have to be reorganised. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்கள். De-limitation Committee-க்கும் இந்தக் கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அடுத்த மாதத்திற்குப் பிறகு, இந்தப் பணியினை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்னும் மீண்டும் ஆய்ந்து, மைய தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் சீர்திருத்தத்திலே, நம்முடைய தமிழக அரசு எப்படிப்பட்ட நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறது; இந்தத் தேர்தல் சீர்திருத்தத்திலே, தமிழக அரசினுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புவதோடு, பொதுவாகத் தேர்தல் என்று சொன்னாலே, வரக்கூடிய ஆட்சிக்கு அல்லது மக்கள் பிரதிநிதிகளுக்கு, ஊழலை உருவாக்க்வோ அல்லது நிர்வாகச் சீர்கேட்டை உருவாக்கவோ, இந்தத் தேர்தலே காரணமாக அமைந்துவிடுகிறது. ஆகவே, தேர்தலை நெறிமுறைப்படுத்துவது கடுமையாக்குவது நம்முடைய கடமையாக இருக்குமென்று கருதுகிறேன். அந்தவகையிலே, ஒரு தொகுதியிலே ஒருவர் மக்கள் பிரதிநிதியாகப் போட்டியிடுகிறார் என்று சொன்னால், அங்கே இலட்சக்கணக்கிலே செலவிட வேண்டியிருக்கிறது. அதைச் செலவழித்துவிட்டு, பிரதிநிதியாக வந்தவுடனே, செலவழித்ததை எப்படியெல்லாம் மீண்டும் சம்பாதிக்க வேண்டும்; அடுத்த தேர்தலுக்கு எப்படித் தயாராக வேண்டுமென்ற சிந்தனை, பரவலாக வருவது இயல்பாக அமைந்துவிடுகிறது. ஆகவே, இதையெல்லாம் மனதிலே கொண்டு, தேர்தல் நெறிமுறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, கடுமையாக்குவதற்கு முன்வரவேண்டும். தேர்தல் என்று சொன்னால், ஒரு வேட்பாளர், ஒரு குறிப்பிட்ட தொகையை deposit-ஆக முன்வைப்புத் தொகையாகக் கட்டவேண்டும்; மீதித் தொகையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு தொகுதியில் 5 வேட்பாளர்கள் நிற்கிறார்கள் என்று சொன்னால், அந்த





5 வேட்பாளர்களுக்கும் வாகனங்களைத் தேர்தல் ஆணைய முத்திரையோடு அரசாங்கமே கொடுக்க வேண்டும். wall poster, notice எல்லாம் தேர்தல் ஆணைய முத்திரையோடு, தேர்தல் ஆணையமே கொடுக்க வேண்டும். பிரச்சாரம் என்று சொன்னால், பொதுக் கூட்ட மேடை என்று சொன்னால், தேர்தல் ஆணையமே மேடை அமைத்து, நாளை ஒதுக்கிக் கொடுத்து குறிப்பிட்ட இடத்தில் பேச வேண்டும் என்ற நெறிமுறைகள் எல்லாம் வகுக்கும் என்று சொன்னால், தேர்தல் முறைப்படுத்தப்படும்; நெறிமுறைப்படுத்தப்படும்; செலவினங்கள் சிக்கனப்படுத்தப்படும்; மக்கள் பிரதிநிதிகள் ஆரோக்கியமாகச் செயலாற்றுவார்கள்; அவர்கள் வந்தபிறகு அதிகாரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒரு நல்ல ஆட்சி கொடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட ஆலோசனைகளைத் தமிழக அரசு முன்வைக்குமா, இவற்றைச் சீர்திருத்தத்திற்குக் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஏகோபித்த முறையில் இப்படிச் செய்யலாம் என்ற ஒரு முடிவை எடுத்து மைய அரசிடம் கூறி, தேர்தல் ஆணையத்திடம் கூறினால், ஒருவேளை இதுகுறித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அரசியல் கட்சிகளுக்குள் ஒற்றுமை வேண்டும். அகில இந்திய அளவில் unanimous decision is necessary in this regard at the level of the political parties. அப்போதுதான் இது சாத்தியக்கூறாகும். நல்ல ஆலோசனை. இந்த ஆலோசனையை நாங்களும் ஆய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் சீர்திருத்தம் சம்பந்தமாக மத்திய அரசு அமைத்த மரியாதைக்குரிய மறைந்த தோழர் திரு. இந்திரஜித் குப்தா தலைமையிலான அந்தக் கமிட்டியின் பரிந்துரையைச் செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதுதான் கேள்வி. அப்படிப்பட்ட ஒரு அறிக்கை இங்கு வரவில்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்திரஜித் குப்தா அவர்களும் இப்போது இல்லை; ஓரே ஒரு வேறு உதாரணம் இங்கே சொல்வதற்கு யாரும் இல்லை;

[2003 ஏப்ரல் 24

முக்கியமான சாட்சி, அன்றையதினம் மத்திய அமைச்சராக இருந்த, சட்ட அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்பிதுரை அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மிக முக்கிய சாட்சியாக இங்கே இருக்கிறார்கள். (குறுக்கீடு) அந்த கமிட்டியைப் போட்டதே அவர்கள்தான். ஆகவே, நீங்கள் அதைப் பெற முடியும். இண்டர்நெட்டிலும் இருக்கிறது என்று தகவல் இருக்கிறது. ஆகவே அதைப் பெற முடியும். கேள்வி என்னவென்றால் இதை அமல் நடத்துவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்வருமா? இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்துமா? எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் தேர்தல் சீர்திருத்தத்தின்படி நடந்துகொள்வதற்கும், அந்த முடிவுகளை ஏற்றுக்கொண்டு அமல் நடத்துவதற்கும் தயாராக இருக்கிறோம். அ.இ.அ.தி.மு.க.-வும் மாநில அரசும் தயாராக இருக்கிறதா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இயக்கக், கொள்கைகளுக்குத் தொடர்புடைய திரு. குப்தா அவர்களுடைய அறிக்கை எப்படி இவர்கள் கையிலே சிக்காமல் போய்விட்டது என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. கட்டாயம் மத்திய அரசிடம் கேட்டு, அந்த அறிக்கையை வாங்கி, அந்த அறிக்கையினுடைய நல்ல ஷாத்துகளை ஆய்ந்து, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு நாங்கள் கூறுவோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்தார்கள். இருந்தாலும்கூட இந்த மாதம் 17 ஆம் தேதி அன்று இதுகுறித்து மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 பேரும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் 5 பேரும் கூடி விவாதித்து இருக்கிறார்களா, இல்லையா என்ற தகவல் இல்லை. இருந்தாலும்கூட, இந்தச் சட்டமன்றத் தொகுதிகளைப் பிரிக்கும்போது, வரன்முறைப்படுத்தும்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களும நிர்வாகிகளும், எல்லா மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களையும் அந்தந்த மாவட்டத்தினுடைய பிரதிநிதிகளையும், உள்ளாட்சி/ஊராட்சி அமைப்புகளினுடைய பிரதிநிதிகளையும்



2003 ஏப்ரல் 24]

எல்லாம் அழைத்து, சர்வ கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்து அந்தக் கூட்டத்தைக் கூட்டி விவாதம் செய்தால் கண்டிப்பாக நன்றாக இருக்கும் என்ற வகையிலே அந்தந்த மாவட்ட நிர்வாகத்திற்கு நமது மாநில மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 17 ஆம் தேதி டில்லியிலே நடந்த கூட்டத்திலே ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. அந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திற்குச் சென்று 2 மாத கால அவகாசம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அந்த அடிப்படையில் மே மாதம் 31 ஆம் தேதி வரை கால அவகாசம் தரப்பட்டு இருக்கிறது. சில கருத்துகளை நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம். உதாரணமாக 234 தொகுதிகள் என்பது 2026 ஆம் ஆண்டு வரை மாற்றப்பட முடியாத ஒன்று என்ற நிலை இருக்கிறது. அடுத்து 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறி இருக்கிறார்கள். இப்போது 2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு முடிந்துவிட்ட காரணத்தால், அதையே அடிப்படையாக வைக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் நாம் வலியுறுத்தி இருக்கிறோம். சென்ற உறுப்பினர்களும் அந்த கருத்தையே அங்கு கூறி இருக்கிறார்கள். அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டுக்கு 3 தொகுதிகள் தற்போதைய 1991 ஆம் கணக்கெடுப்பின்படி அதிகமாக வருகிறது. Scheduled Tribe--மலைவாழ் மக்களைப்--பொறுத்தவரைக்கும் ஒரு தொகுதி குறைகிறது. அந்தத் தொகுதி குறையக்கூடாது என்று நாங்கள் வற்புறுத்தி இருக்கிறோம். அடுத்து, boundaries-ஐப் பொறுத்தவரைக்கும் இந்த மாவட்ட எல்லைகள், administrative jurisdiction-ஐப் பொறுத்தவரைக்கும், அதற்குள்ளேயே சட்டமன்றத் தொகுதிகள் அமைய வேண்டும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். That is practically impossible, தற்போது இருக்கிற நிலையிலே, சென்னைக்கு இரண்டு சட்டமன்றத் தொகுதிகள் அதிகமாகிறது, தேனிக்கு ஒரு சட்டமன்றத் தொகுதி குறைகிறது. அப்படி இருக்கின்றபோது district administrative boundaries should be taken as a yardstick என்று வருவது மிகச் சிரமமாக இருக்கும். இந்தக் கருத்தும் அங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதெல்லாம் அனைத்துக் கட்சிகளுடனும் ஆய்ந்து அதாவது அந்தந்தக் கட்சிகளும், நீங்களும் தகவல்களைத் தாருங்கள். அந்த அடிப்படையில் ஒவ்வொரு

கட்சிக்கும் அங்கு பிரதிநிதித்துவம் இருக்கிற காரணத்தால் அதை ஆய்ந்து 31 ஆம் தேதி டெல்லிக்கு நமது உறுப்பினர்கள் செல்கிறபோது சரியான தகவலை need based report, we have to submit to the delimitation Committee. அதற்கு அரசியல் கட்சிகளுடைய கருத்தையும் பெற்று ஒருங்கிணைத்து அதை டெல்லிக்கு நாம் அனுப்புவோம்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 304, திரு. டி. மணி, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**304—**

**நீதிமன்றக் கட்டடம்**

**•3364-திரு. டி. மணி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நீதிமன்றக் கட்டட வளாகம் கட்டப்படுவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

(அ) சென்னை உயர் நீதிமன்றம் அனுப்பிய முன்னுரிமைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

(ஆ) முன்னுரிமைப் பட்டியலில் கண்ட திட்டங்களுக்கான கோரப்பட்ட நிதியுதவி மைய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு போரவைத் துணைத் தலைவரவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு வாக்கில் இதுசம்பந்தமான மதிப்பீடுகள்





எல்லாம் அந்தப் பகுதியிலே தயாரிக்கப்பட்டு, அந்த மதிப்பீடுகளின் அடிப்படையிலே உடனே கட்டடம் கட்டப்படும் என்று அந்த நீதிமன்றங்களிலே இருக்கிற அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சருடைய பதிலைக் கேட்கின்றபோது மீண்டும் காலதாமதம் ஏற்படும் என்று தோன்றுகிறது. ஏற்கெனவே வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட பழைய கட்டடங்கள் அவை. எந்த நேரமும் உடைந்து விழும் என்றவொரு ஆபத்தான நிலையில் உள்ளது. ஆகையால் இந்தப் பட்டியலை வைத்து மாநில அரசாங்கம் இதிலே நிதியை ஒதுக்கிச் செய்வதற்கு ஏதாவது வழி உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் மொத்தம் 6 நீதிமன்றங்கள் இயங்குகின்றன. அதிலே இரண்டு நீதிமன்றங்கள் வெவ்வேறு இடங்களில் இயங்குகிற ஒரு சூழ்நிலையால், வழக்கறிஞர்கள், பொது மக்கள் கஷ்டப்படக்கூடாது; மாண்புமிகு உறுப்பினருடைய அந்த கோரிக்கையும் ஒரு நல்ல நிலையிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் ஒருங்கிணைந்த அந்த நீதிமன்றக் கட்டடம் ஒரே இடத்தில் அமைய வேண்டும் என்று உங்களைக் காட்டிலும் அரசு அதிக அக்கறை எடுத்து அதன் அடிப்படையிலே கிட்டத்தட்ட 2 கோடியே 63 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு இடம்பெற்று மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மத்திய அரசு தாராளமாக நிதி ஒதுக்குகின்ற அந்தச் சூழ்நிலையில், ஒருங்கிணைந்த அந்த நீதிமன்றக் கட்டடம் 2 கோடியே 63 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் உதயமாகும்போது நிச்சயமாகப் பொது மக்கள், வழக்கறிஞர்கள் எல்லோரும் பயன் பெறுகின்ற நிலை; ஒரே இடத்திலே வழக்குகள் தாக்கல் செய்கின்ற நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, அந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் அந்த infrastructure அடிப்படை வசதிகளை நாம் உருவாக்கும்போது 1993-94 ஆம் ஆண்டிலிருந்து ஒரு திட்டம்; அதாவது மத்திய அரசு 50 சதவிகிதம் போட வேண்டும், மாநில அரசு 50 சதவிகிதம் போட வேண்டும் என்று இருக்கிறது. எனவே, இதில் மாநில அரசு தாராளமாக, கிட்டத்தட்ட அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு

உரிய நிதி உதவி அளித்திருக்கிறது என்பதற்கு 12-11-2002 நாளிதழில், As far as Tamil Nadu is concerned upto March 31, 2002 the State should have spent only Rs.595.7 crores including its share of Rs.297.8 crores. But as per the cumulative utilisation certificate sent by the State it has spent a total of Rs.935.9 crores thus exceeding its share. எனவே, நம்முடைய 50 சதவிகிதம், அந்தப் பணத்தை matching grant-க்கு மேலாக நாம் போட்டும்கூட மத்திய அரசு அந்த அளவு நமக்குப் பணம் தாவில்லை. ஒவ்வோர் ஆண்டும் ரூ.2 கோடி, ரூ.3 கோடி என்று கொடுத்தால் யானைப் பசிக்கு சோளப்பொரி என்பது போல; அது எப்படிச் சரியாக இருக்கும்? எனவே மாண்புமிகு உறுப்பினருடைய அந்த இயக்கம் அகில இந்திய இயக்கம் என்கிற ரீதியில் - அந்த விவரங்களை எல்லாம்கூட மாண்புமிகு உறுப்பினருக்குத் தருகிறேன் - பாராளுமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்தால் நிச்சயமாக நம்முடைய மாநில அரசுக்குப் போதிய நிதி உதவி கிடைக்கும். இந்த ஆண்டு தொடர்ந்து நாங்கள் வற்புறுத்தியதன் காரணமாக முதல் தவணையாக ரூ.2 கோடியே 83 இலட்சத்து 93 ஆயிரத்தை மத்திய அரசு விடுவித்திருக்கிறது. இரண்டாம் தவணையாக ரூ.2 கோடியே 36 இலட்சத்தை விடுவித்திருக்கிறது. எனவே இதில் 140 கோடி ரூபாய்க்கு நாம் ஒரு கருத்துருவை அனுப்பும்போது 70 கோடி ரூபாய் மாநில அரசினுடைய பங்கை நாம் செலுத்துவதற்குத் தயாராக இருக்கின்றோம். ரூ. 70 கோடி அவர்கள் கொடுத்து விட்டால், உறுப்பினர்களுடைய இந்தக் கேள்வி தினந்தோறும் எழுகின்ற அந்தப் பிரச்சினை - இந்த அவையில் இருக்காது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் தந்த விரிவான விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், எங்களைவிட அதிகமாக உறவு வைத்து கொண்டு இருக்கின்ற அல்லது நெருக்கமாக இருக்கின்ற இந்த அரசு, மத்திய அரசோடு தங்களுடைய கருத்தை மீண்டும் வலியுறுத்தி, நமக்குக் கிடைக்க வேண்டிய (சிரிப்பு) இன்னும் சொல்லவில்லையே அதுதான் (சிரிப்பு). எனவே மத்திய அரசிடம் இன்னும் நம்முடைய கோரிக்கையை, மாநில அரசினுடைய





கோரிக்கையை வலுவாக வலியுறுத்தி அந்தத் தொகையை முழுவதுமாகப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில், எங்களுடைய கட்சியின் சார்பிலே, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழியாக இந்தப் பிரச்சினையை மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நாங்களும் தயாராக இருக்கின்றோம் என்பதை இந்த அவையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மத்திய அரசிற்கு இருக்கின்ற உறவைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக இந்த அவையிலே விளக்கி விட்டார்கள். நான் மேலும் விளக்க விரும்பவில்லை. ஆனால் ரகசிய உறவு, புதிய உறவு தேடிக் கொண்டவர்களுக்கெல்லாம்—நிச்சயமாக அவர்களுடைய மனசாட்சிக்குத்—தெரியும். அவர்கள் அங்கே தட்டினால் நிச்சயமாகக் கிடைக்கும் என்ற ஒரு நம்பிக்கை உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 305, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்.

**305—**

**கட்டடம்**

**•12912—திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் நகரில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு வழக்கறிஞர்களுக்கான அறைகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2003 ஏப்ரல் 24

(அ) மற்றும் (ஆ) கோரப்பட்டுள்ள நிதி உதவி மைய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

**திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளத்திலுள்ள நீதிமன்றமானது ஆங்கிலேயர் காலத்திலே சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்படுத்தப்பட்டது; Camp Courts என்று அழைக்கப்பட்டு இயங்கி வருகிறது. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் 1978-லே உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றமாக நிலை உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது. 1987-லேயே இந்தக் கட்டடம், பழுதான நிலையில் இருந்ததால் இடித்து புதிய கட்டடம் கட்டித்தர பொதுப் பணித் துறைக்கு சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமல் நாளது வரை கிடப்பில் போடப்பட்டுள்ளது. நீதிமன்றக் கட்டட வளாகத்திற்கு உள் பகுதியிலேயே தாலுகா அலுவலகம், காவல் நிலையம் இயங்கி வருவதால், மக்கள் நெரிசல் அதிகமாக உள்ளது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், புதூர் போன்ற ஒன்றியங்களிலிருந்து பல மைல்களுக்கு அப்பாலிருந்து வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் பயன் தரும் வகையில் சுகாதார வசதியுடன் நீதிமன்றக் கட்டடமும், வழக்கறிஞர்கள், பொதுமக்கள் கலந்து பேசக்கூடிய அளவில் சந்திப்பு அறையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய இந்தச் சிரமத்தை இந்த அரசு நிச்சயம் உணர்ந்திருக்கின்றது. எனவே நான் ஏற்கெனவே 304-வது கேள்விக்கு அளித்த அந்த விடை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் பொருந்தும் என்பதைச் சொல்லி ஒரு முன்னுரிமை அடிப்படையில் நிச்சயமாக இந்தக் கோரிக்கை நிறைவேறுவதற்கு முழு அளவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி.



2003 ஏப்ரல் 24]

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடம் கட்டுவதற்குப் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். இந்த நிதி ஆண்டு எத்தனை புதிய நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்? அப்படியென்றால் எங்களுடைய மேலூர் தொகுதியில் ஒரு சிறிய ரூமில் நீதிபதி அவர்களும், வழக்கறிஞர் அவர்களும் மற்றும் குற்றப் பிரிவிற்கு விசாரணைக்கு வரக்கூடிய அந்தக் குற்றவாளிகளும் உள்ளேகூட நின்று சாட்சிகளை விசாரிப்பதற்கும் குற்றங்களைச் சொல்வதற்கும்கூட இடவசதி பற்றாமல் இருக்கின்ற காரணத்தால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வியாகப் போடுங்கள் (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஆர். சாமி:** போடுகிறேன். தனிக் கேள்வி போடுகிறேன். இந்த நிதி ஆண்டு எங்களுடைய மதுரை மாவட்டம், மேலூர் தொகுதியில் உள்ள சிறிய அறையிலே நடக்கின்ற நீதிமன்றத்திற்கு புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தொலைநோக்குப் பார்வையோடுதான், ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்ற பிரச்சினைகள் இருக்கக்கூடாது என்கின்ற வகையில்தான் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் ஒரே இடத்தில் அமைவதன் மூலம் எல்லா வசதிகளும் வழக்கறிஞர்கள், பொதுமக்கள், நீதிபதிகள் மற்றும் அனைவருக்கும் கிடைக்கப் பெறவேண்டும் என்கின்ற ஓர் உயர்ந்த கண்ணோட்டத்தோடுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 140 கோடி ரூபாய் செலவில் 74 செயற்குறிப்புகளை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, அந்த 74 செயற்குறிப்புகளில் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையும் இருக்குமென்றே நான் கருதுகின்றேன். இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

[2003 ஏப்ரல் 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழகத்திலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிட்டத்தட்ட 50 விரைவு நீதிமன்றங்களை ஆரம்பித்திருக்கின்றார்கள். அந்த விரைவு நீதிமன்றங்களை ஆரம்பிப்பதற்காக ஏற்கெனவே இயங்கி வந்த வழக்கறிஞர்கள் ஓய்வு அறைகள் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதனால் தமிழகத்திலே வழக்கறிஞர்கள் ஓய்வு எடுப்பதற்கோ அவர்களது நூல்களை வைப்பதற்கோ இடவசதி இல்லாமலும், கழிப்பறை வசதி இல்லாமலும் அவதிப்படுகிறார்கள். ஒரு சிறப்புத் திட்டமாக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறையாவது கட்டித்தா முன்வருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கு நிதி நெருக்கடி இருந்தாலும் M.L.A. நிதியிலிருந்து (மணியடிக்கப்பெற்றது) இந்த வழக்கறிஞர்கள் ஓய்வு அறை கட்டித் தருவதற்கு அனுமதி அளிக்கப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் 50 Fast Track Courts--விரைவு நீதிமன்றங்கள்--என்று சொன்னார்கள். அது தவறு. 49 Fast Track Courts இருக்கின்றன. ஐந்தாண்டு காலத்திலே அந்த வழக்குகள் எல்லாம், இந்த மாவட்ட Principal Sessions Court-ல் இருக்கின்ற அந்த வழக்குகள் எல்லாம் விரைவாக முடிக்கப்படவேண்டும். உரிய நீதி தரப்படவேண்டும்; Justice delayed is justice denied; Justice should not be denied; மறுக்கப்பட்ட நீதியாக இருக்கக்கூடாது என்கின்ற அடிப்படையிலே 14 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் 5 ஆண்டு காலத்திற்குச் செலவு செய்வதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். எனவே 5 ஆண்டு காலத்திலே அந்த Criminal Cases அனைத்துமே தீர்க்கப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்படும். கிட்டத்தட்ட இப்போதுகூட ஒரு புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே



2003 ஏப்ரல் 24]

average-ஆக தமிழ்நாடு முழுவதும் பார்த்தால், 55 சதவிகித வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன. எனவே அந்த Fast Track Courts அமைக்கப்பட்ட இடங்களில் எல்லாம் .சில அடிப்படைத் தேவைகள் இல்லை என்ற ஒரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். 5 ஆண்டு காலத்திற்குத்தான் இயங்குகின்ற ஓர் அடிப்படையிலே ஒரு வாடகைக் கட்டடத்திலோ, இல்லையென்றால் ஒரு நீதிமன்ற வளாகத்திலோ அது அமைக்கப்படுகின்றது. எனவே அதிலே ஒரு வசதி செய்யப்பட வேண்டுமென்றால் அரசாங்கம் பெரிய அளவுக்குத் திட்டங்களைப் போடுகின்றது. சின்னச்சின்ன விஷயங்களுக்கெல்லாம்கூட அரசை அணுகாமல் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து,--நம்முடைய வழக்கறிஞர்கள் சங்கம் இவை எல்லாம் பல இடங்களிலே; வழக்கறிஞர்கள் சங்கம் திருப்பூரிலே, பிற பகுதிகளிலே எல்லாம்கூட --Xerox Machine-ஐ வாங்கி வைத்து அவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து—அந்த வசதியைச் செய்து கொடுத்தால் அரசு அதற்கு ஆட்சேபணை ஒன்றும் தெரிவிக்கப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 306, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**306—**

**நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி**

***17219—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூருக்கு அருகில் உள்ள பேரூரில் பட்டீஸ்வரர் கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி நடத்த அரசு வசதி செய்து தருமா?

[2003 ஏப்ரல் 24

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே:

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். கோவை மாவட்டம் மற்றும் வட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி கோயம்புத்தூர் மாநகர ரோட்டரி சங்கம் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது. தேவைப்பட்டால் திருக்கோயில் மூலம் வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், நீங்கள் கேட்கிறீர்களா?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இப்போது அரசு மூலம் இதை நடத்த வசதியில்லை என்கின்ற முறையில் இப்போது ரோட்டரி சங்கம் மூலம் நடத்துவதாகக் கூறினார்கள். நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி என்பது எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாக எல்லா ஆலயங்களிலும் நடத்தப்பட வேண்டிய ஒன்று. இப்போது இருக்கக்கூடிய நவநாகரீக காலத்தில் இருக்கக்கூடிய பெண்கள் இதுபோன்ற நடனத்தை எல்லாம் மறந்துவிட்டு, break dance போன்றவற்றை எல்லாம் கற்றுக்கொண்டு, கன்னா, பின்னா என்று எது எதையோ Dance என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நிலை தமிழகத்தில் வந்து கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக, நாட்டியாஞ்சலி போன்ற நிகழ்ச்சிகளை முறையாக இந்து சமய அறநிலையத் துறையே ஆலயங்களில் நடத்துவதற்கு ஆவன செய்யுமா? நாட்டியாஞ்சலி நடத்தினால்தான்—இப்போது B.P., Sugar போன்ற பிரச்சினைகள் எல்லாம் பெண்களுக்கு நிறைய வந்துவிடுகிறது. அப்படி எல்லாம் வராமல்—பெண்களுடைய உடலைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும் (மணியடிக்கப்பெற்றது) அதேபோல ஆடவர்கள் அதைக் கற்றுகொள்வதற்கும் அமைச்சரவர்கள் ஆவன செய்யவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர் மாநகர ரோட்டரி சங்கம் மூலம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்களில் கடந்த



2003 ஏப்ரல் 24]

எட்டு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றன. இடையில் இரண்டு வருடங்கள் நடைபெறவில்லை. தற்பொழுது மீண்டும் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் திருக்கோயில் வெளிப்பிரகாரத்தின் உள்ளே அம்மன் சன்னதி முன்பு வடக்குப் பிரகாரத்தில் திருக்கோயிலில் நடைபெறும் பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு. திருக்கோயில் நிதியிலிருந்து செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளப்படாமல் இந்நிகழ்ச்சிகள் யாவும் ரோட்டரி சங்கம மூலம நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் முன்வந்து நடத்துகின்ற காரணத்தாலே அங்கே நடத்தப்படுகின்றது. அவர்கள் நடத்தவில்லையென்று சொன்னால், ஆலயத்தின் மூலமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கோயம்புத்தூரிலுள்ள நிறுவனங்களை மற்றும் நன்கொடையாளர்களை மாநகர ரோட்டரி சங்கமே அணுகி, நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அதனால் திருக்கோயில் மூலம் நடத்த அவசியம் ஏற்படவில்லை. தேவைப்பட்டால் உபயதாரர்கள் உதவியுடன் திருக்கோயில் மூலம் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், கன்னா, பின்னா என்று சொல்கிறார்கள். கன்னா, பின்னா என்று சொல்வது என்னவென்று சொன்னால், தெரிந்து அதன்மீது அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கன்னா, பின்னா உங்கப்பன் கோயில் பூசாரி என்று சொல்வார்கள் அதில் ஒரு பழமொழி வரும். (சிரிப்பு) (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், அது வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கன்னா, பின்னா என்பதற்கு விளக்கம் கேட்டார்கள். முறையற்ற முறையில், முறையாக நடனம் ஆடாதவர்களைத்தான் கன்னா, பின்னாவென்று நாம் சொல்கிறோம். அது பின்னத்தை ஏற்படுத்துகின்ற காரணத்தால் அப்படி இல்லாமல், முறையாக எல்லா ஆலயங்களிலும் இந்து அறநிலையத் துறையின் மூலமாக இப்படிப்பட்ட கலை நிகழ்ச்சிகளைக் கற்றுத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா? பேரூரில்

[2003 ஏப்ரல் 24

மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்துணை ஆலயங்களிலும் இதை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையாக எந்தெந்த நாட்டிய நடனங்கள் ஆலயங்களில் நடத்தப்படவேண்டுமோ அவற்றைத் தான் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு நடத்தச் சொல்கிறதே தவிர, கன்னா, பின்னாவென்று முறையற்ற காட்சிகளை நடத்துவதற்கு புரட்சித் தலைவி அரசு ஆலயங்களில் அனுமதி கொடுக்காது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமிக்க ஆலயங்களில் ஒன்றாக பேரூர் பட்டீஸ்வரர் கோயில் இருந்து வருகிறது. அது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. ஆகவே பேரூர் பட்டீஸ்வரர் கோயில் வளாகத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி ஆண்டுதோறும் அந்தப் பகுதியில் உள்ள சில நன்கொடையாளர்கள் மூலமாக நடைபெற்று வருகிறது. அந்த நிகழ்ச்சி நடைபெறுகிறபோதுகூட அந்தக் கோயிலில் இருக்கிற மின்சாரத்தைப் பயன்படுத்தாமல் ஜெனரேட்டர் மூலமாக மின்சாரத்தை எடுத்து அந்த ஆலயத்தில் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள். ஆனால் தென்னக பண்பாட்டு மையத்தின் சார்பில் கடலூர் மாவட்டத்திலே இருக்கிற சிதம்பரம் நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் நாட்டியாஞ்சலி நிகழ்ச்சி அரசால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே நம் அரசாங்கம் நிரந்தரமாக பேரூர் பட்டீஸ்வரர் கோயில் வளாகத்தில் ஏதாவது ஒரு இடத்திலே தனியாக நாட்டியாஞ்சலி நிகழ்ச்சியை நடத்த, மேடை அமைத்துத் தரத் திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயிலில் உள்ள மின்சாரத்தைக் கொண்டு மின்விளக்குகள் அமைக்கப்படவில்லை; ஜெனரேட்டர் பொருத்தித்தான் அந்த விழாக்கள் நடத்தப்படுவதாகச் சொன்னார்கள்.



2003 ஏப்ரல் 24]

சட்டமன்ற உறுப்பினர் அந்தத் தொகுதியைச் சார்ந்தவர். ஆலயத்திற்கு வருகின்ற மின்சாரத்திலிருந்து அந்தத் திருவிழாக்கள் நடைபெறுவதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கோயிலுக்குச் செலவு ஏற்படாதவண்ணம் அதாவது அந்த நிகழ்ச்சிக்கு ஆகும் செலவினால் ஆலயத்தினுடைய நிதி குறையாமல் இருப்பதற்குத்தான் வசதி படைத்தவர்கள் இப்படிப்பட்ட மெட்ரோபாலிடன் ரோட்டரி சங்கம் மூலம் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் நன்கொடையாகக் கொடுத்து அதன் மூலம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே ஆலயத்தின் மூலம் நடத்தினாலும் ஒன்றுதான், பொதுமக்கள் கொடுத்து நாட்டிய நடனம் நடத்தினாலும் ஒன்றுதான் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில் திருவிழாக்களில் சினிமாப் பாட்டுகளும், சினிமாவும் போடப்பட்டு அதன் மூலம் திருவிழாக்களிலே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சட்டம் ஒழுங்குப் பிரச்சினையும் ஏற்படுகின்றது. ஆகவே குறைந்தது, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்ற கோயில் திருவிழாக்களில் சினிமாப் பாட்டோ சினிமாவோ போடப்படாது என அரசாங்கம் தடை விதிக்குமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் திரைப்படப் பாடல்கள் எங்கேயும் போடப்படுவதில்லை. ஆண்டவனுடைய பக்திப் பாடல்கள்தான் அங்கே போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே அப்படி ஏதாவது ஒரு ஆலயத்தில் இப்படிப்பட்ட திரைப்படப் பாடல்களை அங்கே ஒலிபரப்புவதாகச் சொன்னால் நடவடிக்கை எடுத்து இன்றிலே இருந்து அது நிறுத்தப்படும் என்பதைத் தங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வினாயகமூர்த்தி. பக்திப் பரவசத்திற்கு மட்டும் முதலில் விட்டுவிட்டோம்.

[2003 ஏப்ரல் 24

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னா, பின்னா என்பது ஒரு தவறான வார்த்தை போல இங்கே விமர்சனம் நடந்துகொண்டு இருக்கிறது. இலக்கியத்திலே ஒரு மன்னவனைப் பார்த்துப் பாடுகின்றபோது "கன்னா பின்னா மன்னா" என்று பாடியிருக்கின்றார்கள். (சிரிப்பு) அதற்கு விளக்கம் சொல்கின்ற புலவர் அவர்கள் "கன்னா என்று சொன்னால் கர்ணனே, பின்னா என்று சொன்னால், பின்னவனே, அவனுக்குப் பின் வந்தவனே, மன்னவனே என்று சொல்வதாக இலக்கியம் கூறுகின்றது. அதைத் தவறான வார்த்தையாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 307, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**307—**

**கோயில்களில் பூஜை**

***20363—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் அரசு மானியத்துடன் ஒரு கால பூஜை நடைபெறும் கோயில்கள் எத்தனை உள்ளன?

(ஆ) மானியம் இல்லாத கோயில்களுக்கும் மானியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா.?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) 9702 திருக்கோயில்களில் பொதுமக்கள் நன்கொடை மற்றும் அரசு மானியத்துடன் ஒருகால பூஜை நடைபெற்று வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) ஆம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சென்று தரிசனம் செய்யும்



2003 ஏப்ரல் 24]

ஏழை பக்தர்களுக்கு பசியினைப் போக்கும் வகையிலே அன்னதானத் திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்து நாட்டுமக்களின் இதயத்தில் குடியிருந்த கோயிலாக விளங்கும் அம்மா அவர்களின் நல்லாட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் வருமானம் இல்லாத கோயில்களைப் புதுப்பிக்கும் பணிகள் நிறைவடையாமல் உள்ளன. குறிப்பாக எனது தொகுதியிலுள்ள பச்சப்பட்டி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கரிய பெருமாள் காடு வடபுறம் உள்ள அருந்ததியர் காலனி அருள்மிகு காளியம்மன் கோயிலைக் கட்டி முடிக்கவும், மேலும் அந்தக் கோயில்களில் ஒருகால பூஜை செய்யவும் மற்றும் எனது தொகுதி கார்பெட் சேரியிலுள்ள மாரியம்மன் கோயில், நெஞ்சம்பட்டி மாரியம்மன் கோயில், காந்தி மகான் தெரு மாரியம்மன் கோயில்களுக்கு அரசு மானியம் வழங்குமா, மேலும் மானியம் பெறும் கோயில்களுக்கு இலவச மின்சாரம் வழங்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதி பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளிலுள்ள திருக்கோயில்களுக்கு நிதி வழங்குகின்ற. திட்டம் சென்ற ஆண்டு வரையிலும் ஆண்டு ஒன்றுக்கு 100 ஆலயங்களுக்குத்தான்--25 ஆயிரம் ரூபாய் ஒரு ஆலயத்திற்கு வழங்கலாம்--என்று இருந்ததை மாற்றி, இந்த ஆண்டு 250 ஆலயங்களுக்கு, ஆதிதிராவிடர் ஏழை எளிய மக்களுடைய கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு எல்லாம் திருப்பணி செய்யலாம். என்று ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தாங்கள் சொல்லிய பகுதியில் இருக்கிற ஆலயங்களையும் வருகின்ற ஆண்டுகளில் திருப்பணி செய்வதற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியினைத் தெரிவித்து, எனது பகுதியிலே அருள்மிகு சேலம் நெத்திமேடு காளியம்மன் திருக்கோயில் திருப்பணி சுமார் 30 இலட்சம் ரூபாயில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். இத்திருக்கோயில்

பணி முழுமையடையவும். கும்பாபிஷேகம் நடைபெறவும் அரசின் புதிய அறிவிப்பிலேயே நிதி ஒதுக்கீடு கொடுத்து உதவிட வேண்டுகோள் விடுத்தேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் கேட்பவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கும் அமைச்சர் அவர்கள் இத்திருக்கோயிலுக்கு குறைந்தபட்சம் ரூபாய் ஐந்து இலட்சமாவது நிதி ஒதுக்கிக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் நகரத்தில் வசதி படைத்த ஆன்மீகத்தில் பற்று உடையவர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்களிடத்திலே நீங்கள் நிதி வசூல் செய்யுங்கள். போதவில்லை என்று சொன்னால், அறநிலையத் துறையின் மூலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தத் திருப்பணி செய்வதற்கு நிதி உதவி செய்யும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் அரசு மானியத்துடன் ஒருகால பூஜை நடைபெறுகின்ற கோயில்களின் எண்ணிக்கை 9,702 என்று அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை 36,324 என்பதாக அறிகிறேன். அப்படி 36,324 கோவில்கள் இருக்கிற நிலையில் 9702 கோவில்களில் ஒரு கால பூஜை நடைபெறுவதாகக் குறிப்பிட்டு இருக்கையில், மீதமுள்ள 26,622 திருக்கோயில்களில் அனைத்துக் கோவில்களிலும் ஒரு கால பூஜை நடைபெறுகிறதா? அப்படி இல்லை என்றால் நடைபெறுகிற 2003-2004 ஆம் ஆண்டுகளில் மிச்சமிருக்கிற 26,622 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை நடைபெறாத கோவில்களைத் தேர்ந்தெடுத்து அவற்றையும் ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அனைத்து ஆலயங்களிலும் ஒரு கால பூஜை நடத்துவதற்கு புரட்சித் தலைவி



அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அடிப்படையில் சென்ற ஆண்டு--2002-2003 ஆம் ஆண்டு--460 கோவில்கள் ஒரு கால பூஜைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மீண்டும் எங்கெல்லாம் ஒரு கால பூஜை நடைபெறாமல் இருக்கிறதோ அந்த ஆலயங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு அங்கே எல்லாம் ஒரு கால பூஜை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 308, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**308—**

### அவசர ஊர்தி

***8189—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அரசு மருத்துவமனைக்கு அவசர ஊர்தி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டு பகுதித் திட்டத்தின்கீழ் 20 புதிய ஆம்புலன்ஸ் ஊர்திகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கி அதற்கேற்ப திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, வழங்கல் ஆணையும் Supply Order சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் கிடைத்துவிடும். எனவே அந்த மருத்துவமனைக்கு இன்னும் ஒரு மாத காலத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்துவிடும்.

[2003 ஏப்ரல் 24

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாரி வழங்கும் அம்மா அவர்கள் ஆட்சியில், கேட்டதைக் கொடுக்கின்ற அம்மா அவர்கள் ஆட்சியில் ஆம்புலன்ஸ் வழங்குவதாக அறிவித்த அம்மா அவர்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *309*, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**309—**

**சொந்தக் கட்டடம்**

***24713—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழ்குடி ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியை எழுதிக் கொடுத்தபோது கீழ்குடி துணை மருத்துவ சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் இல்லாமல்தான் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகவும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படியும் இதுவரை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த கீழ்குடியிலுள்ள துணை சுகாதார நிலையத்திற்கு நபார்டு உதவியுடன் சொந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 24]

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *310*, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**310—**

**ஊனமுற்றவர்களுக்குச் சலுகைகள்**

***12513—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசு என்னென்ன சலுகைகள் வழங்கி வருகின்றது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) உடல் ஊனமுற்றவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

(1) சிறப்புக் கல்வி

(2) கல்வி உதவித் தொகை

(3) பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

(4) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

(5) சுய வேலைவாய்ப்பிற்கு அரசு மானியம்

(6) இலவச உதவி உபகரணங்கள்

(7) திருமண உதவிச் சலுகைகள்

(8) இலவச பேருந்து பயணச் சலுகை

(9) கடும் ஊனமுற்றோரைப் பராமரிக்கப் பராமரிப்பு உதவித் தொகை

(10) சட்டப் படிப்பு முடித்த பட்டதாரிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் உதவித் தொகை

என்று உடல் ஊனமுற்றோருக்கு பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தாலும், வீட்டிலும், உற்றார் உறவினர்களாலும் வஞ்சிக்கப்பட்ட, இழிந்த, நலிந்த அந்த உடல் ஊனமுற்றவர்களுடைய வாழ்வுக்கு வழி சேர்க்கக்கூடிய வகையிலே பல்வேறு சலுகைகள் அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டியலிட்டுக் கூறினார்கள். அதிலே குறிப்பாக, இந்தச் சமுதாயத்தில் ஒரு தன்னம்பிக்கையோடு விளங்க சுயதொழில் செய்வதற்காக அரசு மிக முக்கியமான ஒரு கொள்கை முடிவாக எடுத்து உடல் ஊனமுற்றவர்களுக்கு சுயதொழில் செய்வதற்கு மானியம் மட்டும் போதாது, அவர்கள் தொழில் நடத்த வங்கியில் கடன் வழங்கவும் இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடல் ஊனமுற்றோரை மனித நேயத்தோடு கவனிக்க வேண்டுமென்று இந்தத் துறைக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களைச் சந்திக்கிற நேரத்தில்கூட, பல்வேறு சலுகைகள் தங்களுக்கு வேண்டுமென்று கோரிக்கை வேறு விடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் சுயமாகவே அவர்கள் வேலை செய்து பிழைக்க வேண்டும், தன்னம்பிக்கையை



வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஊனமுற்றோர் சுய வேலைவாய்ப்பிலே ஈடுபடுவதற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி அளித்து, ரூ. 2 ஆயிரம் அல்லது மொத்த கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அதை அரசு மானியமாக அவர்களுக்குத் தந்து, அரசு கட்டடங்களிலே போய் அவர்கள் இந்தக் குறைந்த பணத்தை வைத்துக்கொண்டு இருந்த இடத்திலேயே இருந்து வேலை செய்து பிழைத்துக்கொள்வதற்குத் தகுந்த முறையிலே, பெட்டிக் கடையோ அல்லது அவர்கள் எந்தக் கடை வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களுக்கு, குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கித் தர வேண்டுமென்றுகூட அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கனேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 2 ஆயிரம் ரூபாயோ அல்லது அவர்கள் செய்யக்கூடிய தொழிலுக்குத் தேவையான மூலதனத்தில் மூன்றில் ஒரு பகுதியோ மானியமாக அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். இதுவரை இந்த அரசு பொறுப்பேற்று எத்தனை உடல் ஊனமுற்றவர்களுக்கு எவ்வளவு தொகை மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வந்திருக்கிற கணக்குப்படி நம்முடைய தமிழ்நாட்டில் 1.9 சதவீதம் பேர், அதாவது 10,61,320 பேர் உடல் ஊனமுற்றோர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதிலே அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகவே இந்தக் கடன் உதவியைப் பெற்றுத் தர வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கு எவ்வளவு பேர் விண்ணப்பம் செய்திருக்கிறார்களோ, அவர்களில் கடை வைத்துப் பிழைப்பதற்கு எத்தனை பேர் விரும்பியிருக்கிறார்களோ அந்த அடிப்படையிலேதான் கடன் உதவி வழங்கப்படுகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்:

[2003 ஏப்ரல் 24

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்கிறபோது ஊனமுற்றவர்களுக்குக் கடன் வழங்குவதாகவும் அதிலே மானியத் தொகையாக ரூபாய் 2 ஆயிரம் வழங்குவதாகவும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊனமுற்றவர்கள் கடனைக் கேட்டு மனு செய்கிறபோது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கடனைக் கொடுப்பதற்கு வங்கியினுடைய அதிகாரிகள் மறுத்து வருகிறார்கள். ஆகவே, ஊனமுற்றவர்கள் அனைவருமே கடன் பெறுகிற வகையிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய கூட்டுறவு வங்கிகள் மூலமாக அந்த ஊனமுற்றவர்களுக்குக் கடன் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதையும், மேலும், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக சுய உதவிக் குழுக்களை எல்லாம் ஆரம்பித்து, அவர்களுக்கு பல்வேறு வகையிலே கடன்களையும் மானியங்களையும் வழங்கி வருகிறார்கள். அதேபோல, நம்முடைய ஊனமுற்றவர்கள் சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்து அவர்கள் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இதை எடுத்துச் சொல்லி அவர்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்வார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல ஏற்கெனவே உடல் ஊனமுற்றோருக்காக சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அவை சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வங்கிகளிலே கடன் பெறுவது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். வங்கிகளிலே கடன் பெறுகிறபோது சில நிபந்தனைகளை, திருப்பி வாங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சில கட்டுப்பாடுகளைத் தெரிவிக்கிற நேரத்தில், அவர்களுக்குக் காலதாமதமாகிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே இருக்கின்ற முக்கியமான தலைமை அலுவலர்களை எல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, இதுபோன்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு, கட்டுப்பாடுகளைத் தளர்த்தி



2003 ஏப்ரல் 24]

கடன் வழங்க வேண்டுமென்று அரசின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்ற ஒருவர், பேசமுடியாதவராகவும், காது கேளாதவராகவும் இருந்து கொண்டு இருப்பதன் காரணமாக அவருக்கு வேலை கொடுப்பதற்கும் மறுக்கப்படுகிறது. மற்ற முறையிலே வேலை செய்து வாழ்க்கை நடத்துவதற்கும் முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள், வயது அவர்களுக்கு முதிர்ச்சி அடையவில்லை என்ற காரணத்தைச் சொல்லி pension கொடுப்பதற்கு அரசு மறுக்கிறது. ஆகவே, இப்படிப்பட்டவர்களை பிரத்தியேகமாகப் பரிசிலித்து அவர்களுக்கு pension கொடுப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோருக்கான வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீட்டை 3 சதவிகிதம் ஊனமுற்றோருக்கு அரசுத் துறைகளிலே வழங்கப்பட வேண்டும் என்கிற கண்டிப்பான உத்தரவை ஊனமுற்றோரின்பால் அன்பு வைத்திருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். வாய் பேசாதவர் என்று பிரித்துப் பார்க்கக்கூடிய எண்ணம் அரசுக்கு இல்லை. 3 சதவிகிதத்தில் 1 சதவிகிதம் பார்வையற்றோருக்கும் ஒரு சதவிகிதம் கை கால் இழந்தவர்களுக்கும், ஒரு சதவிகிதம் செவித்திறன் குறை உடையவர்களுக்கும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. Pension-ஐப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே சொன்னார்கள். 40 சதவிகிதம் உடல் ஊனம் என்கின்ற நிலை கண்டறியப்பட்டால்தான் Pension வழங்க முடியும்; அதற்குக் கீழே என்று சொல்லுகின்றபோது அதிகமாக பதிவு செய்து இருக்கின்றவர்கள் வேலை செய்ய முடியாதவர்கள் ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு நகர முடியாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்குத்தான் pension வழங்க முடியுமே தவிர, கொஞ்சம் வேலை செய்யக்கூடிய சக்தி படைத்தவர்களுக்கு

pension வழங்க முடியாது என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்படுகின்ற பல சலுகைகளை இங்கே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். அந்த உடல் ஊனமுற்றவர்கள் என்று Certificate அத்தாட்சி எந்தவித அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள்; 40 சதவிகிதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்த விதி சற்றுக் கடுமையாக இருக்கின்ற காரணத்தினால் பலர் அந்தச் சலுகைகளைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்த விதியைச் சற்றுத் தளர்த்தினால் பலபேர் இந்த நிதியைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அந்த விதிகளைச் சற்றுத் தளர்த்தி உடல் ஊனமுற்றவர்கள் பயன்பெறும் வகையில் அதைச் சிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்காக அந்தந்த மாவட்டங்களிலே பயிற்சி முகாம்களை மாவட்ட மறுவாழ்வு மையம் நடத்துகிறது. அப்படி நடத்துகிறபோது அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஊனமுற்றோர் எல்லாம் போய் மாவட்ட உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையத்திலே பதிவு செய்கின்றபோது, இவர்கள் இத்தனை சதவிகிதம் ஊனமுடையவர்கள்தான் என்று அடையாள அட்டையை அவர்கள் பெறுகிறார்கள். மாவட்ட மறுவாழ்வு மையம் மூலமாக நடத்தக்கூடிய மருத்துவ முகாம்களுக்கு வருகிறபோதே இவர்கள் ஊனமுற்றவர்கள்தான் என்று டாக்டரிடமிருந்து Certificate பெற்றுக் கொண்டு வருகிறபோது அந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அந்த அடையாள அட்டையை வைத்துக் கொண்டுதான் ஊனமுற்றோருக்கான சலுகைகளைத் தேர்வு செய்து அதன்படி சலுகைகள் தருகிறோம் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.





**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்தார்கள். சில சட்டமன்றத் தொகுதிகள் 3 தாலுகாக்கள் அடங்கியதாகும். ஊட்டி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள், உடல் ஊனமுற்றவர்களுக்குக் கட்டிக் கொடுத்தாலும்கூட, 2 லட்சம் வாக்காளர்கள் கொண்ட ஊட்டி சட்டமன்றத் தொகுதிக்கு அது வரவில்லை. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் புதிதாக நமது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலேகூட ஒன்றியத்திற்கு கொடுக்கும்போது சட்டமன்ற தொகுதிகள் விடுபட்டுபோகும் சந்தர்ப்பம் இருக்கிறது. உடல் ஊனமுற்றவர்கள் ஊட்டி சட்டமன்றத் தொகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். நான் பொறாமையாகச் சொல்லவில்லை. மக்கள் எல்லோருக்கும் உதவி கிடைக்க வேண்டும் என்பதுதான். 25 வீடுகள் இன்னொரு தொகுதிக்குக் கட்டும்போது, ஒரு இரண்டு வீடுகள் ஊட்டியில் கட்டிக் கொடுத்தாலும்கூட நன்றாக இருக்கும். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வரைபடங்கள்—அரசினுடைய அரிய நலத் திட்டங்கள் எல்லாம் சேரும்போது, எல்லா சட்டமன்றத் தொகுதிக்கும் போகும் வண்ணம், .....

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முடிகிற வரைக்கும் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எச்.எம். ராஜு:** அந்த நல்லத் திட்டங்கள் எல்லாம், எல்லா மக்களுக்கும் சேரும் வகையிலே ஒவ்வொரு மாவட்டத்திற்கும், சட்டமன்றத் தொகுதியினுடைய வரைபடத்தை—அரசு இந்தத் துறையின் மூலமாகக் கொடுத்து, திட்டம் நடைபெற ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் எவ்வளவு ஊனமுற்றோர், வீட்டுவசதி இல்லாமல் தனிப்பட்ட முறையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து, அவர்கள் மூலமாகவே தெரிவு செய்து கட்டுவதுதான்

[2003 ஏப்ரல் 24

ஊனமுற்றோருக்கான தொகுப்பு வீடுகள். அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளையும் இணைத்து, இரண்டு வீடுகளாவது ஒதுக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. உரிமை மீறல் பிரச்சினை

### மாண்புமிகு முதலமைச்சர், சென்னை மாநகர காவல் ஆணையர், இராணி மேரி கல்லூரி முதல்வர் மற்றும் கடலூர் சிறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றைத் தந்திருக்கிறார்கள். அது எப்படி அவை உரிமை மீறல் என்கிற வட்டத்திற்குள் வரும் என்பதைச் சுருக்கமாக திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் 6 கோடியே 30 இலட்சம் பேர் இருந்தாலும், அதில் 234 பேர் மட்டும்தான் சட்டமன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் அச்சமின்றி சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். எனவேதான், சட்டமன்றத்திலே பேசுவதற்கு, யாருக்கும் பதில் சொல்லத் தேவையில்லை; பேசுவதற்கோ, வாக்கு அளிப்பதற்கோ எந்த நீதிமன்றத்திலேயும் யாரும் கேள்வி கேட்க முடியாது என்று, இந்திய அரசமைப்புச் சட்டமே தெளிவுபடுத்திக் கூறுகிறது.



2003 ஏப்ரல் 24] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

சட்டமன்ற உறுப்பினரை, அவை வளாகத்தில் கைது செய்ய வேண்டும் என்று சொன்னால், பேரவைத் தலைவருடைய முன் அனுமதி பெற வேண்டும் என்று தெளிவாகவே விதிகள் இருக்கின்றன. வெளியே கைது செய்தாலும்கூட, தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்; சட்டப் பேரவைத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறது. சட்டமன்றம் கூடியிருக்கின்ற காலத்திலே சட்டமன்றத்திலே தெரிவிக்கலாம். இல்லாவிட்டாலும்கூட, செய்தித்தாள் வாயிலாகவாவது தெரிவிக்கப்பட வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. உறுப்பினருடைய உரிமையைக் காப்பதுதான் பேரவைத் தலைவருடைய கடமை. அதற்காகவே அவருக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதற்கு மாறாக உறுப்பினர்களின் உரிமை பறிக்கப்படுவதையும், மறுக்கப்படுவதையும் பேரவைத் தலைவர் ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்களின் சேவகராக முதலமைச்சர் இருந்தாலும், இந்த அவையின் சேவகராக விளங்குபவர் பேரவைத் தலைவர் அவர்கள்தான். தமிழகத்தினுடைய 6 கோடி மக்களுடைய பிரதிநிதிகளான 234 உறுப்பினர்களுக்கு மட்டுமே பதில் கூறுவதற்கு மாநில அமைச்சரவை கடமைப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் தலைமையில் மாநில அமைச்சரவை மேற்கொள்ளும் முடிவுகளைத்தான் ஆளுநர் நிறைவேற்றி வைப்பார்.

அத்துடன் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின்படி, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்மீது உறுதிமொழி எடுத்துகொண்டு, இந்திய நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் கட்டிக் காப்பேன் என்றும், இதில் அரசமைப்புச் சட்டத்திற்கு உண்மையாகவும், விசுவாசமாகவும் நடந்துகொள்வேன் என்றும், சத்தியப் பிரமாணம் செய்து, தங்களுடைய கடமைகளை நிறைவேற்றும் சிறப்பு உரிமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களும், உயர் நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளும், மாநிலங்களின் ஆளுநர்கள் போன்றவர்களும், அவ்வாறு உறுதிமொழி மேற்கொள்ளும் சிறப்பு உரிமையைப் பெற்றிருக்கிறார்கள்.

மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும்தான், அவர்களுடைய ஊதியங்களையும், படிகளையும் சட்டமன்றத்தால் மட்டுமே தீர்மானிக்க முடியும், இவை போன்ற சிறப்பு உரிமையை மற்ற எவருக்கும் நமது அரசமைப்புச் சட்டம் வழங்கவில்லை.

எவ்விதத் தடையும் இடையூறும் இல்லாமல் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்திய அரசமைப்புச் சட்டம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இத்தகைய பல சிறப்பு உரிமைகளையும், அதிகாரங்களையும், விதி விலக்குகளையும் வழங்கியிருக்கிறது.

சென்ற ஏப்ரல் 8 ஆம் நாள், சென்னை மாநகர முன்னாள் மேயரும், ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், இராணி மேரி கல்லூரி அமைந்துள்ள திருவல்லிக்கேணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. உசேன், தியாகராய நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் க. பொன்முடி மற்றும் மூத்த சட்டமன்ற உறுப்பினர் திரு. எ.வ. வேலு ஆகியோர் அடங்கிய சட்டமன்ற உறுப்பினர்கள் குழுவாக, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இராணி மேரி கல்லூரி மாணவியரையும், ஆசிரியர்களையும் நேரில் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகளையும் அறிந்துகொண்டு, சட்டமன்றத்திலும், அரசிடமும் உரிய முறையிலே எடுத்துரைத்து, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்றிருந்தார்கள். ஆனால், அங்கே நின்ற காவலாளி அவர்களை உள்ளே செல்லக்கூடாது, ஏனென்று சொன்னால் கல்லூரி முதல்வர் அப்படிக் கட்டளை இட்டிருக்கிறார், என்று சொன்னார். அவர்களுக்கு உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு இங்கே வந்திருக்கிறோம் என்று. மாணவிகளிடத்திலும், சம்பந்தப்பட்டவர்களிடத்திலும் பேசி இந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவு காண வேண்டும், நல்ல முடிவு காண வேண்டும். தீர்வு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கிறோம், எங்களைத் தடுப்பது இந்திய தண்டனைச் சட்டம் 341-ன்படி குற்றமாகும், எனவே, தடுக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றிருக்கிறார்கள். மாணவிகளைச் சந்தித்துவிட்டு, பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வந்திருக்கிறார்கள்.





*முற்பகல் 11-05*

இன்றையதினம் அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. யார் வழக்குத் தொடுத்தார்கள்? யார் புகார் தாக்கல் செய்தார்கள் என்று சொன்னால் கல்லூரி முதல்வர் புகார் தாக்கல் செய்திருக்கிறார். கல்லூரி முதல்வர் நேராக ஏதாவது பார்த்தாரா என்றால் இல்லை. கல்லூரி முதல்வருக்கு யார் சொன்னார்கள்? இந்தக் காவலாளி சொல்லியிருக்கிறார். திரு. ஸ்டாலின் இந்த அவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதுமட்டுமல்ல, இரண்டு முறை இந்த மாநகரத்தினுடைய மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சென்னை மாநகர மேயர் என்பது ஒரு பாரம்பரியம் மிக்க பதவி. 300 ஆண்டு காலத்திற்கும் மேலாக சென்னை மாநகர மேயருக்கு ஒரு பாரம்பரியம்; Mayoralty என்பது அவ்வளவு சிறப்பானதாகக் கருதப்பட்டது. இன்று அல்ல 300 ஆண்டுகளுக்கு முன்னாலே 'யேல்' அவர்கள் இங்கே ஆளுநராக இருந்த காலத்தில் இதற்காக சார்ட்டர் வழங்கப்பட்டது. அந்த காலத்திலேயிருந்து இங்கே சென்னை மேயர் உண்டு. அந்த 'யேல்' தான் இங்கு கவர்னராக இருந்துவிட்டு அமெரிக்காவிலே போய்க் கடைசிக் காலத்தைக் கழித்து அவருடைய பெயரிலே இன்றைக்குப் பல்கலைக்கழகம்கூட இருக்கிறது. அந்த 'யேல்' பல்கலைக்கழகத்தைத்தான் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருக்கும்பொழுது...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பிரச்சினைக்கு நேராக வந்துவிடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** வருகிறேன். வருகிறேன். அவ்வளவுதான் பிரச்சினை. யேல் பல்கலைக்கழகத்தினர் அண்ணா அவர்களை அழைத்திருந்தார்கள். அண்ணா அவர்களை அழைத்ததைக்கூடச் சொல்ல வேண்டாம் என்று சொன்னால் நான் என்ன சொல்வது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நல்லதைத்தான் சொல்கிறேன். அண்ணா அவர்களை அழைத்து இருந்தார்கள் என்று சொல்வது தவறா? அண்ணாவை ஏன் அழைத்தார்கள்? இங்கே யேல் தன் கைப்பட தயாரித்த பல ஆவணங்கள் நம்முடைய

அருங்காட்சியகத்திலே இருந்தன. யேல் பல்கலைக்கழகத்திற்கு அன்றையதினம் ஒரு நூற்றாண்டு விழா வந்தது. அதற்காக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், பிரச்சினை யேல் பல்கலைக்கழகத்தைப் பற்றியது அல்ல.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி, வந்துவிடுகிறேன். சரி, விஷயத்திற்கு வந்துவிடுகிறேன். வந்தாகிவிட்டது. அதில் என்ன ஆகிவிடப்போகிறது. 15 விநாடிகளில் ஒன்றும் ஆகிவிடாது; பாவாயில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராணி மேரிக் கல்லூரியைக் கொண்டு போய் யேல பல்கலைக்கழகத்துடன் இணைக்கிறீர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இராணி மேரிக் கல்லூரிக்கே நான் வருகிறேன். இராணி மேரிக் கல்லூரியை இடிப்பதற்கு, அந்தப் பிரச்சினைக்கு நான் போகவில்லை. இராணி மேரிக் கல்லூரியின் விவகாரத்தில் கைது செய்யப்பட்ட இடத்திற்குத்தான் நான் வருகிறேன். இவ்வளவு சிறப்பு உரிமை பெற்ற ஒரு முன்னாள் மேயர், ஒரு சட்டமன்ற உறுப்பினர், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் மற்ற நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் குழுவாகச் செல்கின்ற நேரத்திலே--அவர்கள் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்துப் பேசி பிரச்சினைக்கு என்ன தீர்வு காண வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் செல்கிறார்கள்--அவர்களுடைய செயலுக்கு ஒரு காவலாளி உள்நோக்கம் கற்பிக்க முடியாது. அந்தக் காவலாளியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஒரு கல்லூரி முதல்வர் உள்நோக்கம் கற்பிக்க முடியாது. உள்நோக்கம் கற்பித்து வேறு ஏதோ நோக்கத்தோடு அங்கே சென்றிருக்கிறார்கள் என்று கூறி அந்தப் புகாரைத் தாக்கல் செய்கிறார். அந்தப் புகாரின் அடிப்படையிலே காவல் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதை நிச்சயமாக சட்டமன்றம் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசமைப்புச் சட்டத்திற்கு உண்மையாகவே நடந்துகொள்வோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் இங்கே வீற்றிருக்கிறார்கள். அவருக்குக் கீழே, நேர் கீழே, செயல்படும் சென்னைப் பெருநகர காவல் ஆணையரும், சென்னை இராணி மேரி அரசினர் கல்லூரி முதல்வரும், கடலூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரும் அரசமைப்புச் சட்டத்தின் விதிகளை அலட்சியப்படுத்தி, சட்டத்தை மீறிச் செயல்பட்டும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக





வழக்குகளைத் தொடுத்தும் அத்துமீறி நடந்து கொண்டிருப்பது சட்டத்தை மீறிய செயலாகும்; அத்துடன், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் பெற்றிருக்கும் சிறப்பு உரிமைகளையும், அதிகாரங்களையும், விதிவிலக்குகளையும் மறுக்கும் செயலாகும். எனவே, இந்த நான்கு பேரும் நம்முடைய பேரவையினுடைய உரிமையை மீறி இருக்கிறார்கள். முதல்வர், காவல் துறை ஆணையர், கல்லூரி முதல்வர், கடலூர் சிறைக் கண்காணிப்பாளர் நான்கு பேரும் நம்முடைய பேரவையினுடைய உரிமையை மீறி இருக்கிறார்கள். எனவே, இது பற்றி முறையாக விசாரிப்பதற்கு பேரவையினுடைய உரிமை மீறல் குழுவுக்கு அனுப்பி இதை விசாரித்து இதற்கு நல்ல தீர்வு காணவேண்டும் என்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 219-ன்கீழ் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் எனக்கு எதிராகவும், சென்னை மாநகர காவல் ஆணையருக்கு எதிராகவும் மற்றும் இராணி மேரி கல்லூரி முதல்வருக்கு எதிராகவும் இராணி மேரி கல்லூரி பிரச்சினை குறித்து அவை உரிமை மீறல் அறிவிப்பு ஒன்றை இங்கே கொடுத்துள்ளார். அவை உரிமை மீறல் என்பதற்கு திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கூறும் முக்கியமான காரணங்கள்:

(1) இராணி மேரி கல்லூரி காவலர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. ஜெ. அன்பழகன், டாக்டர் க. பொன்முடி, திரு. எ.வ. வேலு ஆகியோரை இராணி மேரி கல்லூரி வளாகத்திற்குள் அத்துமீறி நுழைய விடாமல் தடுத்தது இந்திய தண்டனைச் சட்டம் 341-ன்படி தண்டனைக்குரியது. அதாவது சட்ட விரோதமாகத் தடுத்து நிறுத்தல் என்னும் குற்றம் என்று அவர் கூறுகிறார்.

முற்பகல் 11-10

இரண்டாவதாக இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 194-ன்படி உறுப்பினர்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை, immunity-ஐ மீறியதாகும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இதில் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் குற்றம் சாட்டியதுபோல அவை உரிமை மீறல் இல்லை என்று

அதனை நான் ஆணித்தரமாக மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவை உரிமை மீறல் இல்லை என்று நான் மறுப்பதற்கான காரணங்கள்;

(1) கல்லூரி வளாகத்திற்குள் அத்துமீறி நுழைய முயற்சித்த சட்டமன்ற உறுப்பினர்களைத் தடுத்தது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 341-ன்கீழ் தண்டனைக்குரியது ஆகாது.

(அ) இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 341, சட்ட விரோதமாகத் தடுத்து நிறுத்துதல் குறித்த தண்டனை பற்றி விளக்குகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் கல்லூரி வளாகத்திற்குள் சட்டத்திற்குப் புறம்பாக அத்துமீறிச் சென்றுள்ளனர். எனவே, இவர்கள் கல்லூரிக் காவலரால் சட்டத்திற்குப் புறம்பாகத் தடுத்து நிறுத்தப்படவில்லை என்று குறிப்பிடுகிறேன்.

(ஆ) ஆனால் மேற்கூறிய சட்டமன்ற உறுப்பினர்கள்தான் கல்லூரிக் காவலரை, அதாவது அரசு ஊழியரை, தனது பணியினைச் செய்ய விடாமல் தடுத்துள்ளனர். அவர்கள்தான் கீழ்க்கண்ட தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்துள்ளனர்: (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பிடப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் செய்துள்ள குற்றங்கள் என்ன?

(1) சட்ட விரோதமாகக் கூடுதல்-இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 143-ன்படி Unlawful Assembly என்னும் குற்றமாகும்.

(2) அத்துமீறி நுழைதல்—இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 448-ன்படி இது Trespass என்னும் குற்றமாகும்.

(3) அரசு ஊழியரைத் தனது கடமையைச் செய்ய விடாமல் தடுத்துத் தாக்கியது-இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 353-ன்படி Assault on public servant during the execution of his official duty என்னும் குற்றமாகும்.

(4) கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனப் பயமுறுத்துதல்—இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 506-ன்படி Criminal Intimidation என்னும் குற்றமாகும்.

(5) குற்ற நடவடிக்கைக்குத் தூண்டுதல்-இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 109-ன்படி அதாவது Abetment of students என்னும் குற்றமாகும்.





எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 341-ன்கீழ் சட்ட விரோதமாகத் தடுத்து நிறுத்தப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 194-ன் கீழ் உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பை மீறியது குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில்கொள்ளலாம். Regarding violation of immunity given under Article 194 of the Constitution of India, the Article says that, "No member of the Legislature of the State shall be liable to any proceedings in any Court in respect of anything said or any vote given by him in the Legislature."

அதாவது எந்த சட்டமன்ற உறுப்பினரும் சட்டமன்றத்தில் ஆற்றிய எந்த உரைக்காகவோ அல்லது வாக்களித்ததற்காகவோ எந்த ஒரு நீதிமன்றத்திலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க இயலாது என்றுதான் கூறுகிறது. எனவே, உறுப்பினர்கள் சட்டமன்றப் பேரவைக்குள் தங்களது கருத்துகளைச் சுதந்திரமாகச் சொல்வதற்கு மட்டுமே இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பாதுகாப்பு—immunity—வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 194 குறித்து உச்ச நீதிமன்றம் Searchlight Case AIR 1959-ல் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளது;

While interpreting, Article 194, the Supreme Court of India in Searchlight case, AIR 1959 observed as follows:—

"The privilege has been given to members only in respect of anything said or any vote given in Parliament and anything which falls outside the ambit of this profession is liable to be dealt with by the Court in accordance with the law of the land."

"They are not entitled to any immunity under Article 194 of the Constitution of India for the offences committed by them outside the precincts of the Assembly."

முற்பகல் 11-15

அதாவது சுப்ரீம்கோர்ட் 1959-ல் தனது தீர்ப்பில் கூறியதாவது: எந்த ஒரு உறுப்பினரும் அவைக்குள் பேசிய உரைக்கு அல்லது வாக்கு அளித்தமைக்காக எந்த ஒரு நீதிமன்றமும் அவர் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. சட்டமன்றத்திற்கு வெளியே

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 ஏப்ரல் 24

உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்து நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வெளியே சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு, அதன் தொடர்பான சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எந்தப் பாதுகாப்பையும் எந்த immunity-யையும் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 194-ன்கீழ் கோர இயலாது என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது புதிதாக மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, கடலூர் சிறைக் கண்காணிப்பாளரையும் சேர்த்து, அவரும், அவை மீறலைக் குறிப்பிட்டு (குறுக்கீடு) அப்படியே இருக்கட்டும், இருக்கட்டும். இப்பொழுது பேசுகின்றபோது கடலூர் சிறைக் கண்காணிப்பாளரையும் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அவர் எப்படி இந்த அவையின் உரிமையை மீறினார் என்பது எனக்குப் புரியவில்லை, காரணம் நீதிமன்றத்தின் ஆணைக்கு உட்பட்டுத்தான் கடலூர் சிறை Superintendent தனது கடமையைச் செய்து இருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பிடப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் காவல் துறையினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிமன்றம்தான் அவர்களை remand செய்து இருக்கிறது. அப்படியானால் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் remand செய்த நீதிபதியையும் சேர்த்து அவரும் அவை உரிமையை மீறிவிட்டார் என்று கோரியிருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அதை விட்டுவிட்டார் என்று தெரியவில்லை. ஆகவே, கடலூர் சிறை எஸ்.பி. நீதிமன்றத்தின் ஆணைப்படி நடந்து இருக்கின்றாரே தவிர, அவரை இதில் சேர்ப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்கிறேன். ஆகவே, இப்பொழுது நான் தெளிவான விளக்கங்களை அளித்து இருக்கிறேன். இதில் அவை உரிமை மீறல் என்பதற்கே இடம் இல்லை என்பதைக் கூறி, இப்பிரச்சினையைத் திட்டவட்டமாக மறுக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 ஏப்ரல் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொடர்பாக என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 194-ன்படி ஓர் உறுப்பினர்மீது அவர் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைக்காகவோ அல்லது வாக்கு அளித்ததற்காகவோ எந்த ஒரு நீதிமன்றத்திலும் அவர்மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலாது. மேலும் இந்தப் பாதுகாப்பு— immunity— சட்டமன்றத்திற்குள் மட்டுமே உள்ளது என்றும் சட்டமன்றத்திற்கு வெளியே உறுப்பினர்களது நடவடிக்கைகள் குறித்து நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சட்டமன்றத்திற்குள் உறுப்பினர்கள் சுதந்திரமாகத் தங்களது கருத்துகளைச் சொல்வதற்கு இந்திய அரசமைப்புச் சட்டம் பாதுகாப்பு அளித்து இருக்கிறதே அன்றி, சட்டமன்றத்திற்கு வெளியே, சட்டத்திற்குப் புறம்பான குற்றச் செயல்களில் உறுப்பினர்கள் ஈடுபட்டால் நடைமுறையில் இருக்கும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியது அரசினது கடமையாகும். இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு உண்மையாக நடந்துகொள்வேன் என்று உறுதிமொழி எடுத்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்குள், இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு தங்களது ஜனநாயகக் கடமைகளை ஆற்றாமல், சட்டமன்றத்திற்கு வெளியே, சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கைகள், கீழ்க்கண்ட குற்றங்களுக்காகக் காவல் துறையால் எடுக்கப்பட்டுள்ளன:

(1) சட்ட விரோதமாகக் கூடுதல் — இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 143.

(2) அத்து மீறி நுழைதல்—இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 448.

(3) அரசு ஊழியரைத் தனது கடமையைச் செய்யவிடாமல் தடுத்துத் தாக்கியது — இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 353.

(4) கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் எனப் பயமுறுத்துதல் — இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 506.

(5) குற்ற நடவடிக்கைக்குத் தூண்டுதல் - இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 109.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 24

இதுபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு வெளியே குற்றச் செயலைப் புரிந்ததற்காகக் கைது செய்யப்படுவதும் முதல் முறையல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் நன்னிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி பத்மா அவர்கள் 9-3-1998 அன்றும், திரு. தாமரைக்கனி அவர்கள் 22-6-1998 அன்றும், திரு. கும்மிடிப்பூண்டி வேணு அவர்கள் 24-8-1998 அன்றும், தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் 16-4-1999 அன்றும், திருப்பத்தூர் கோ. சண்முகம் அவர்கள் 15-4-1999 அன்றும் சட்டமன்றத்திற்கு வெளியே குற்றச் செயல்களில் ஈடுபட்டதற்காக இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். எனவே, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை குறித்து அவையின் கவனத்தை ஈர்க்கத் தேவையில்லை. இதுகுறித்து அவை உரிமை மீறல் ஏதும் எழவில்லை எனத் தீர்ப்பு அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள், (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்...

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறைக்கு வாருங்கள். எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றிப் பேசுவோம், ஞானசேகரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. (குறுக்கீடு) ஆய்வில் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2003 ஏப்ரல் 24]

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கிறது, பிறகு எடுத்துக்கொள்ளலாம். திரு. ஞானசேகரன்.

*முற்பகல் 11-20*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) எடுத்துக் கொள்ளப்பட்டதற்குப் பிறகுதான் அதைப்பற்றிப் பேச வேண்டும். (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள், அதைப்பற்றிப் பேசலாம். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்போது எங்களுக்கு அதன் மேலே சொல்வதற்கான உரிமை உண்டு. அந்த உரிமையின் அடிப்படையில் எங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அந்த முறையில் அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்போது அதை எடுக்கவில்லை. (குறுக்கீடு) இப்போது அதை எடுக்கவில்லை. எப்போது எடுக்கிறேன் என்று சொல்கிறேன், என்னுடைய அறைக்கு வாருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இந்த விஷயத்தைப் பொறுத்த அளவிலே காலம் கடத்தவேண்டிய ஒரு பிரச்சினை அல்ல. ஏற்கெனவே நாங்கள் முதலமைச்சர் அவர்களுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு; நாளைக்கு வாருங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நாளைக்கு வாருங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2003 ஏப்ரல் 24

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதனாலே எங்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது என்கிற முறையிலே நாங்கள் அதை ஆட்சேபித்து, வெளிநடப்புச் செய்கிறோம்.

[இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டம், காட்பாடி, கழிஞ்சூர் பகுதியில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் தனது பையை வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆகவே, நிச்சயம் திரும்பி வருவார் என்று நம்பலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொன்ன வேலையைச் செய்யுங்கள் ஞானசேகரன். (சிரிப்பு) பெரிய கொடுமையாக இருக்கிறது உங்களோடு. (சிரிப்பு)

## 4. கவன ஈர்ப்பு

### வேலூரில் ரிலையன்ஸ், பாரத் டெலிநெட், பி.எஸ்.என்.எல். ஆகிய நிறுவனங்களால் வெட்டப்பட்ட சாலைகளை மீண்டும் செப்பனிடல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. ஞானசேகரன்.



2003 ஏப்ரல் 24]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் போடப்பட்ட சாலைகளை ரிலையன்ஸ் மற்றும் பிஎஸ்என்எல். போன்ற நிறுவனங்கள் வெட்டி நாசம் செய்ததை மீண்டும் அரசாணைப்படி செப்பனிடாமல் மண்போட்டு மூடிவிட்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

### அறிக்கை

வேலூர் நகராட்சிப் பகுதிகளில் ரிலையன்ஸ் நிறுவனம் 3.815 கி.மீ. தூரத்திற்கு சாலைகளில் கேபிள் அமைக்க கி.மீ. ஒன்றுக்கு தடவாடகை (Track Rent) ரூ. 5500/- வீதம் 2000-2001 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 20,983 நகராட்சிக்குச் செலுத்தியுள்ளது. மேற்படி நிறுவனம் தோண்டிய பள்ளங்களில் சிரமைத்தலைகளில் பழுதடைந்துள்ளவற்றைச் சரியான முறையில் சீரமைக்க 4-12-2002, 7-3-2003 மற்றும் 25-3-2003 தேதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பாரத் டெலிநெட் நிறுவனத்திற்கு மொத்தம் 23.573 கி.மீ. தூரம் அனுமதிக்கப்பட்டு கேபிள் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு தடவாடகை 2001-2002ஆம் ஆண்டிற்கு ரூ. 1,29,652/-ம் 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,29,652/-ம் செலுத்தப்பட்டுள்ளது. தோண்டப்பட்டுள்ள பள்ளங்களில் சீரமைத்தலைகளில் பழுதுபட்டுள்ளவற்றை நல்ல முறையில் சீரமைக்க கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. மற்றும் 1998 முதல் பி.எஸ்.என்.எல். நிறுவனம் 15.79 கி.மீ. தூரத்திற்கு சீரமைப்புக் கட்டணம் ரூ. 28,85,418/-ம் செலுத்தியுள்ளது. மேற்படி அரசு சார்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல். சீரமைப்புக் கட்டணம் செலுத்தியுள்ளதால், மேற்படி நிறுவனத்தினால் தோண்டப்பட்டுள்ள பள்ளங்களில் patches போட நகராட்சி மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டதும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சாலைகள் சீரமைக்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். எங்களுடைய வேலூர்

நகரில் எம்.எல்.ஏ. தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் எம்.பி. தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் பல Scheme funds மூலமாக, அதாவது, Eleventh Finance, Tenth Finance என்று Finance மூலம் வரக்கூடிய பணத்தையெல்லாம் வைத்து ரோடுகளை—இப்போதிருக்கக்கூடிய நிதி நெருக்கடியில் பல சிரமத்திற்கிடையே அவற்றையெல்லாம்—போட்டு, பழுதுபார்த்து வைத்திருந்தார்கள்.

இப்போது பி.எஸ்.என்.எல்., அதேபோல ரிலையன்ஸ், பாரத் டெலிநெட் போன்ற கம்பெனிகளெல்லாம் அனுமதியை நகராட்சியிலே பெற்றார்கள். Track rent என்ற ஒன்றை கொடுத்து, ரிலையன்ஸ் கம்பெனி 3.815 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுமார் 20,983/- ரூபாயையும், அதேபோல பாரத் டெலிநெட் நிறுவனம் 23.573 கிலோ மீட்டர் தூரத்திற்கு அவர்கள் வெட்டுவதற்காக அனுமதி பெற்று, அவர்கள் ஒரு இலட்சத்து, 29 ஆயிரத்து 652 ரூபாயையும், அதேபோல பி.எஸ்.என்.எல். நிறுவனம் 15.79 கிலோ மீட்டர் தூரத்தை வெட்டுவதற்காக அவர்கள் 28 இலட்சத்து 85 ஆயிரத்து 418 ரூபாயையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இதெல்லாம் அறிக்கையிலேயே இருக்கிறதே?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை. நான் இதை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களிடம் என்ன கேள்வி கேட்க வேண்டுமோ அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து என்று சொல்வதைவிட, பல கோடி ரூபாயைச் செலவு செய்து, இன்று சில இடங்களிலே தார்ச் சாலைகள், சிமெண்ட் சாலைகள் என்று போடப்பட்ட சாலைகளையெல்லாம் இந்த 3 கம்பெனிகளும் அங்கே எலி கொறிப்பதைப்போல, கண்ட இடங்களிலே அவர்கள் வெட்டிவெட்டிப் போட்டுவிட்டு, போய்விட்டார்கள். பொதுவாக சி.எம்.டி.ஏ. Chennai Metropolitan Development Authority மூலம் City-யிலே எப்படி ரோட்டைப் பழுதுபார்ப்பார்களோ அந்த அளவிற்கு இணையாக அவர்கள் புதுப்பித்துத் தர வேண்டுமென்கிற ஒரு நிபந்தனையோடுதான் அவர்களுக்கு Agreement போட்டு இதையெல்லாம் வெட்டுவதற்கு விடுகிறார்கள். ஆனால், அங்கே அப்படிச் செய்யாமல்--இன்றைக்குக் கூட மாண்புமிகு அமைச்சர்



அவர்கள் எங்களுடைய வேலூர் நகரத்திற்கு வந்து தெருக்களைப் பார்த்தால் தெரியும்--போடப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிற சாலைகள் இன்னும் அப்படியே குழியும் குண்டுமாக இன்று நடக்க முடியாத நிலைக்கு, பல கோடி ரூபாய்க்கான இழப்பீட்டை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், அங்கே நகராட்சித் தரப்பிலே அவர்கள் ஏற்கெனவே ஒரு contract செய்துகொண்டு, அவர்கள் சும்மா மண்ணை மட்டுமே போட்டு மூடியிருக்கிறார்கள். மீண்டும் அதிலே சிறு சைக்கிள் போனாலும் சரி, நடந்து போனாலும் சரி, அங்கே மீண்டும் பள்ளமாக ஆகிவிடுகிறது. அப்படிப்பட்டதொரு நிலை இருக்கிறது. 3 கடிதங்கள் எழுதியும் அது செப்பனிடப்படவில்லை என்றும் அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறீர்கள்.

ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு பெரிய சர்வே எடுத்து, எங்கெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் மீண்டும் சிமெண்ட் சாலைகளுக்கு, சிமெண்ட் போட்டும், தார்ச் சாலைகளுக்கு மீண்டும் தாரைப் போட்டும், நல்ல சாலைகளாக அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா? தவறிய நிறுவனங்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பத் துறை அரசாணை எண் 7, நாள்: 12-2-2001 மற்றும் அரசாணை எண் 10, நாள்: 4-5-2000 ஆகிய ஆணைகளின் அடிப்படையில் ரிலையன்ஸ் நிறுவனம், பாரத் டெலிநெட் நிறுவனம் மற்றும் பிஎஸ்என்எல். நிறுவனம் ஆகிய 3 நிறுவனங்களுக்கு கண்ணாடி இழை வடம் Optical Fibre Cable பதிக்கும் பணிக்காக சாலைகள் தோண்டப்பட்டு, தோண்டப்பட்ட சாலைகளில் கண்ணாடி இழை வடம் பதிக்கப்பட்டு மீண்டும் தரமாக, முழுமையாக, நிறைவாக, சாலைகளை அமைத்துத் தர வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டது போல, ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு 3.815 கிலோ மீட்டர் தூரமும், பாரத் டெலிநெட்

நிறுவனத்திற்கு 23.573 கிலோ மீட்டர் நீளமும் கொடுக்கப்பட்டு, தற்சமயம் பல்வேறு பகுதிகளில் உள்ள சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன. அப்படிச் செப்பனிடப்பட்ட சாலைகளைச் சரிவர, முழுமையாகச் சீர்செய்து தரவில்லை என்ற கருத்து அரசுக்கு வந்துள்ளது. எனவே, பாரத் டெலிநெட் நிறுவனத்திற்கும், ரிலையன்ஸ் நிறுவனத்திற்கும் 4 முறை கடிதங்கள் மூலமாக வலியுறுத்தப்பட்டு, உடனடியாக அரசின் நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்தச் சாலைகள் முழுமையாகவும், தரமாகவும் செப்பனிடப்பட வேண்டும் என்று நகராட்சி மூலமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் இந்த அரசு மிக அதிக கவனத்தை எடுத்துக்கொண்டு, உடனடியாக அந்தச் சாலைகளை முழுமையாக, தரமாகச் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு வலியுறுத்திக் கடிதங்கள் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பி.எஸ்.என்.எல். நிறுவனம் 15.79 கிலோ மீட்டர் பள்ளங்களைச் சீரமைக்க கட்டணமாக அவர்களே முதற்கட்டமாக 28,85,418/- ரூபாய் நகராட்சி நிர்வாகத்திற்குச் செலுத்தியுள்ளார்கள். அது தற்சமயம் நகராட்சி நிர்வாகத்தினுடைய பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் 10 இலட்சம் ரூபாய் செலவினத்தில் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலே, வெகு விரைவாக, வரும் 2003 மே மாதம் நடைபெறவிருக்கும் நகர மன்றக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டு, உடனடியாகச் சாலைகள் சீர் செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இந்தக் கேள்வியையாவது சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை வேலூரில் மட்டும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை அல்ல. தமிழ்நாடு முழுக்க இப்படிப் பல இடங்களிலே இதுபோன்ற நிறுவனங்கள் சாலைகளையெல்லாம் வெட்டிப்போட்டுவிட்டு, இன்று சாலைகள் எல்லாம் படுமோசமாக இருந்து கொண்டு இருக்கக்கூடிய நிலையை நான் இங்கே எடுத்துரைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும்



ஒப்புக்கொள்கிறார்கள். 3, 4 கடிதங்கள் எழுதியும்கூட, அந்த நிறுவனங்கள் இன்னும் அந்தப் பணியைச் செய்து தராமல் இருந்து கொண்டிருக்கின்றன. சி.எம்.டி.ஏ. வினுடைய அந்த ரேங்கிற்கு அவர்கள் அதைச் செப்பனிட்டுத் தர வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனையில் இருக்கக்கூடிய Condition. ஆனால் Condition-ஐ அவர்கள் செய்யத் தவறிவிட்டிருக்கிறார்கள். நகராட்சியினுடைய பல கடிதங்களுக்கு அவர்கள் பதில் அளிக்காத இந்தச் சூழலில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் மீது குற்ற வழக்கு, Criminal Case ஏதாவது தொடுத்தாவது அவர்கள் உடனடியாக இப்படிப்பட்ட பணிகளைச் செய்து கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா, அரசு அதற்கு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிலையன்ஸ் நிறுவனம், பாரத் டெலிநெட் நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு 4-12-2002, 12-1-2003, 7-3-2003 மற்றும் 25-3-2003 ஆகிய 4 முறை இதுகுறித்து வலியுறுத்தப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அரசு உடனடியாகத் துரிதபபடுத்தி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து, அமர்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2003 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பது முதல் இருபத்து இரண்டாவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

# 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

## கோரிக்கை எண் 5-வேளாண்மைத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மைத் துறை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை எண் 5-ன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 754, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 4449, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5061, திரு. மு. கார்த்தி.







**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5544, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5580, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 5941, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க .வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7172, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8060, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8222, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8393, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 8804, திரு. எஸ். நடராஜன்.



**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8890, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** பேரவையின் தாய் பெருந்தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் மேல் காதல் அவருக்கு. (சிரிப்பு)

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4128, திரு. ஜெக. வீரபாண்டியன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 4287, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6063, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4925, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6816, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 7095, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7545, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் 46 பஞ்சாயத்துகளிலும் கடும் வறட்சியின் காரணமாக அனைத்து வேளாண் விதைகளையும் இலவசமாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4318, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்களை வழங்க ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 15 டிராக்டர்கள் வாங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7819, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் தரமான பருத்தி சாகுபடி செய்யப்படுவதால், விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தரமான பருத்தி விதைகளும், பூச்சி மருந்துகளும் மானிய விலையில் கிடைக்கச்

செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4678, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி பகுதியிலுள்ள விவசாயப் பெருமக்களுக்கு மானிய விலையில் பவர் டில்லர் இயந்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7485, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக விவசாயிகளுக்கு மானிய விலையில், கலப்பை, மண்வெட்டி போன்ற உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4972, திரு. சோ. இராசேந்திரன்.



**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் டிராக்டர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 476, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னைகளைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த புதிய மருந்துகள் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6297, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள தென்னை மரங்களைத் தாக்கியுள்ள Zero byte (சிலந்தி பூச்சி) தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து அதற்கு உரிய பூச்சிக் கொல்லிகளை மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7674, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னை மரங்களை நோய் தாக்குதலில் இருந்து காக்க விவசாயிகளுக்குப் பூச்சி மருந்துகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000 /- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 436, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் குடியிருக்கும் தென்னை விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6260, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6313, திரு. கே.வி. முரளிதரன்.

**THIRU K.V. MURALIDHARAN:** Hon Speaker Sir, "To discuss the need to construct a cold storage each at Denkanikota and Hosur to store the perishable vegetables and fruits", I move- "that the sums of Rs.618,26,06,000/- allocated under Revenue account, Rs.5,77,28,000/- allocated under Capital account and Rs.55,000/- allocated under Loan Account under Demand No. 5 - Agriculture Department be reduced by Rs.100/- ."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6864, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் உற்பத்திச் செலவினைக் கணக்கில் கொண்டு அந்தச் செலவினங்களுக்கு ஏற்ப விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1796, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மகளிர் சுயநிதிக் குழுக்களுக்குத் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4550, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேர் நிலம் ஒதுக்கித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,77,28,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை (@) நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(@ 477 முதல் 619 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளன.



மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக விவசாயிகள், வள்ளுவர் பெருந்தகை சொன்னதைப்போல,

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்று சொல்லப்படுகின்ற நிலைமையிலே, ஒரு கடுமையானத் தொழிலை செய்கின்றவர்களாக இருக்கின்றார்கள். அதுவும் இந்த ஆண்டு நம்முடைய மாநிலத்தில் இதுவரை கண்டிராத வறட்சியின் காரணமாக, அவர்களுடைய வாழ்க்கை மிகக் கடுமையான ஒரு சூழ்நிலையில் இருந்து கொண்டுள்ளது. மற்றப் பொருட்களுடைய விலையை, அதை உற்பத்திச் செய்கின்றவர்களே நிர்ணயிப்பது போல, விவசாயிகளும் தாங்கள் உற்பத்திச் செய்கின்ற விளைபொருட்களுக்கு உரிய விலையைத் தாங்களே நிர்ணயிக்கின்ற அளவுக்கு மாற்றங்கள் வருகின்றபோதுதான் அல்லது அந்த மாற்றத்திற்கு நாம் ஆவன செய்கின்றபோதுதான் விவசாயிகளினுடைய வாழ்க்கை மேம்படும் என்பதனை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நீங்கலாக 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து விவசாயிகளுடைய நில வரி, நில மேல்வரியை ரத்து செய்ததையும்

ஏழை எளிய விவசாயக் கூலித் தொழிலாளர் குடும்பங்களுக்கு முழுமையாக இல்லாவிட்டாலும்கூட, 30 கிலோ அரிசியினை வழங்கியதையும், வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியதையும், விவசாயக் கடன்களுக்கான வட்டியை மத்திய அரசு அனுமதித்ததை விட முழுமையாகத் தள்ளுபடி செய்தமைக்கும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல இந்த ஆண்டு நிலவிய கடுமையான வறட்சியைக் கருத்தில் கொண்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் சரி, தேசிய வங்கிகளாக இருந்தாலும் சரி, விவசாயிகள் வாங்கிய கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன். மீதமுள்ள விவசாயக் கூலித் தொழிலாளர் குடும்பங்களைப் பற்றிய கணக்கினை முழுமையாக எடுத்து, அவர்களுக்கும் இந்த இலவச அரிசியினை தமிழக அரசு வழங்கிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல டெல்டா மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற அந்த மாவட்டங்களிலே ஒரு விவசாயக் கல்லூரி வேண்டுமென்கின்ற கோரிக்கையினை வலியுறுத்தி அதை எனது சட்டமன்றத் தொகுதியான பாபநாசம் தொகுதியிலே அமைத்துக் கொடுக்க வேண்டுமென நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், இன்றைக்குக் கடுமையான வறட்சியான சூழ்நிலை நிலவினாலும்கூட, நிலத்தடி நீரைக் கொண்டு பயிர் செய்திருக்கின்ற விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதில் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை, 129 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு--நேற்றுவரை 54 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இன்னும் பல்வேறு கொள்முதல் நிலையங்களிலே மூட்டைகள் தேங்கி உள்ளன. இந்த ஆண்டு உள்ள கடுமையான வறட்சியைக்கூட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பார்க்காமல், Food Corporation of India சொல்லியுள்ள தரத்திற்குத் தான் விவசாயிகள் நெல்லைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி 2, 3 முறை இயந்திரங்களில் நெல்லைத் தூற்றச் செய்து வாங்கும் அளவுக்கு — ஏற்கெனவே வறட்சியின் காரணமாக பாதிப்பு அடைந்துள்ள விவசாயிகள் மேலும் பாதிப்பு அடைகின்ற வகையிலே, — தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய நடவடிக்கை அமைந்துள்ளது. ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீதமுள்ள நெல்லையாவது உடனடியாகக் கொள்முதல் செய்வதற்கும், அதுவும் கடந்த ஆண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் என்ன தரத்திற்கு நெல்லைக் கொள்முதல் செய்ததோ, அதே தரத்திற்குக் கொள்முதல் செய்வதற்கும் உரிய ஆணைகள் பிறப்பிக்க வேண்டும் என்று டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 27-ல் கரும்பு பெருக்கத் திட்டம் என்ற தலைப்பில் அரசு குறிப்பிடுகின்றபோது, கரும்பு பயிரிடுகின்ற பரப்பு 3 இலட்சம் எக்டர் என்றும், நம்முடைய மாநிலத்தின் இலக்கு 320 இலட்சம் டன்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்கு கரும்பு விவசாயிகளுக்கு இருக்கின்ற நிலையினைப் பார்க்கின்றபோது, அவர்கள் கரும்பு பயிரிடுவதையே நிறுத்தி விடுவார்களோ என்கின்ற ஐயப்பாடு உள்ளது. கரும்பு விலையினைப் பார்க்கின்றபோது, 2002-2003 ஆம் ஆண்டு மத்திய அரசானது 8.5 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.695 என்று குறைந்தபட்ச விலையாக அறிவித்துள்ளது. கூடுதலாக உள்ள 0.1 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு, டன் ஒன்றுக்கு ரூ.8.20 காசுகள் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்துள்ளது. ஆனால் மாநில அரசோ, குறைந்தபட்ச ஆதார விலையை அறிவிக்கவில்லை. ஆகவே தமிழகத்தைப் பொறுத்தவரை 8.5 சதவிகிதம் சர்க்கரைச் சத்துள்ள, சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்பே இல்லாத ஒரு சூழ்நிலையில் விவசாயிகள் குறைந்தபட்ச விலையான மத்திய அரசு அறிவித்து இருக்கின்ற ரூ.695/- ஐயே பெறக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது.

ஆகவே, மாநில அரசு உடனடியாகக் குறைந்தபட்ச ஆதார விலையை அறிவிப்பதுடன், விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற 8.5 சதவிகிதம் சர்க்கரைச் சத்துள்ள, சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்புக்கு—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கிறது. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் எல்லாம் 904 கோடி ரூபாய் அளவிற்கு நட்டத்திலே இயங்குகிற காரணத்தினாலேதான் தமிழக அரசு அதற்கு support விலை கொடுக்க முடியவில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ராம்குமார்:** விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற 8.5 சதம் சர்க்கரைக் கட்டுமானமுள்ள கரும்புக்கு ரூபாய் ஆயிரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கரும்பு விவசாயிகள் சார்பாக நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல இலவச மின்சாரத்தினைப் பொறுத்தவரையில், இந்த மன்றத்திலே கடுமையான விவாதங்கள் எல்லாம் நடைபெற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்குரிய பதிலையும் விளக்கங்களையும் அளித்துள்ளார்கள். சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்படுத்துகின்ற 3 மற்றும் 5 H.P. மோட்டார்களுக்கு அரசு கொடுக்கின்ற மானியத் தொகையினை ஏனைய விவசாயிகளுக்கும், அதாவது 7.5 மற்றும் 10 H.P. மோட்டார் வைத்துள்ள விவசாயிகளுக்கும் வழங்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மாவட்ட விவசாயிகள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

அதேபோல, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற வேளாண் அலுவலர் (விரிவாக்கம்), வேளாண் அலுவலர் (வேதியியல்) போன்ற பதவிகளுக்கு 119 நபர்களுக்கு பட்டியல் வெளியிடப்பட்டு 12 மாதங்கள் ஆகியும்கூட, பணி நியமன ஆணை இன்னும் வழங்கப்படாமல் உள்ளது. உடனடியாக அவர்களுக்கு இந்த அரசு பணி நியமன ஆணையை வழங்கி உதவிட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பில் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் என்ற தலைப்பில், 2001-2002 ஆம் ஆண்டிற்கு கரும்புக்கு மேல் வரியாக டன் ஒன்றுக்கு ரூ.5 வீதம் வசூலித்துப் பெறப்பட்ட தொகை ரூ.872.91 இலட்சம் எனவும், அதில் புதிய சாலைகள்



அமைக்க 236.45 இலட்சமும், சாலைப் பராமரிப்புக்காக ரூ.97.54 இலட்சமும், ஆக கூடுதலாக 333.99 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகையான 538 இலட்சம் ரூபாய் அந்த ஆண்டு செலவழிக்கப்படவில்லை. அதேபோல, 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை ரூ.620.44 இலட்சம். புதிய சாலைகள் அமைக்க ரூ.500 இலட்சமும், சாலை பராமரிப்புக்கு ரூ.200 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.700 இலட்சம், கூடுதலாக 80 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதாகக் கூறபபட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக இருக்கின்ற தொகைக்கு உரிய சாலைகளையும், பாலங்களையும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டு, அந்தந்த ஆலைப் பகுதிகளில் வசூலிக்கப்படுகின்ற அந்தத் தொகை, அந்தந்த ஆலைப் பகுதிகளுக்கே செலவழிக்கப்படுகின்றதா என்பதையும் தங்களுடைய பதிலுரையிலே விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நிவாரணம் அளிக்கின்றபோது, மொத்தம் முழுமையாகப் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் 11 இலட்சம் எனவும், பகுதியாகப் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் 28 இலட்சம் எனவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அறிக்கை பெறப்பட்டு, அதற்கு மத்திய அரசு வழங்கிய ரூ.30.50 கோடி மூலம் முழுமையாகச் சேதமடைந்துள்ள மாங்களுக்கு ரூ.150 எனவும், பகுதியாகச் சேதமடைந்துள்ள மரங்களுக்கு ரூ.50 எனவும் வழங்கப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இது மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், மாநில அரசு கூடுதலாக நிதியினை ஒதுக்கி, தென்னை விவசாயிகளுக்குத் தகுந்த நிவாரணம் வழங்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 31-3-2002 அன்று டான்காப் நிறுவனம் மூடப்பட்டு, அதில் பணிபுரிந்த 151 பேர் வேளாண்மைத் துறை இயக்குநர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அதில் 40 பேர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் வேலை உத்தரவு வழங்கவேண்டுமென மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பிலே வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலமாக வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பாக

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களிலே 1139 பண்ணைக் குட்டைகள் ரூ.299.99 இலட்சம் மதிப்பீட்டில் 5,70,073 மனித நாட்கள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், மேலும் வருகின்ற ஆண்டுகளில் 9 டெல்டா மாவட்டங்களில் 6700 பண்ணைக் குட்டைகள் ரூ.20 கோடி மதிப்பீட்டில், 37 இலட்சம் மனித நாட்கள் மூலம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கொள்கை விளக்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயக் கூலித்தொழிலாளர்கள் பயனடைய வேண்டும் என்பதற்காகவும், நிலத்தடி நீர் உயரவேண்டும் என்பதற்காகவும் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தில் முழுமையாக அந்த நோக்கத்தினை நிறைவேற்றும் முகமாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கையையும், கண்காணிப்பினையும் இந்தத் திட்டத்தின்பால் மேற்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேலைக்கு உணவுத் திட்டத்தின்மூலம் பொதுப் பணித் துறையின் மூலமாக சி மற்றும் டி சேனல்கள், மனித உழைப்பின்மூலம் தூர் வாரப்படுகின்றன. அதேபோல, அனைத்து 'ஏ' கிளாஸ் சேனல்களையும், பொக்லைன் இயந்திரங்கள் கொண்டு தூர்வாரிக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, எனது தொகுதியில் உள்ள கொங்கன் வாய்க்கால், காங்கேயன் வாய்க்கால், பழவாறு வாய்க்கால், மண்ணியாறு போன்றவற்றை இந்த ஆண்டு தூர் வார நடவடிக்கை எடுக்கவேண்டுமென மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மண்ணியாற்றின் குறுக்கே, எனது தொகுதியில், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில், மானம்பாடி ஊராட்சியில் உள்ள பழமையான ரெகுலேட்டர் கடந்த 10 தினங்களுக்கு முன்பாக முழுமையாக இடிந்து விழுந்துவிட்டது. ஆற்றில் தண்ணீர் வருவதற்குள்ளாக மேற்படி ரெகுலேட்டர் கட்டப்படவில்லை என்று சொன்னால், சுமார் 10 கிராமங்கள், மானம்பாடி, சேங்கலூர், பூச்சாத்தனூர், நெடுங்கொல்லை போன்ற கிராமங்களின் விவசாயிகள் மிகக் கடுமையாக பாதிக்கப்படுவதோடு, விவசாயமும் செய்யமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் ஆற்றில் தண்ணீர் வருவதற்குள்ளாக அந்த ரெகுலேட்டரை புதுப்பித்துக் கட்டித் தரவேண்டும் என நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



பல்வேறு வாய்க்கால்களில் உள்ள மதகுகளும், ஷட்டர்களும் பழுதடைந்துள்ள ஒரு சூழ்நிலையில் அவற்றைப் புதுப்பிக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதனை நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். அதேநேரத்தில், தண்ணீர் வருவதற்குள்ளாக மேற்படி பணிகள் தரமுடன் நடைபெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி பணிகள் சரிவர நடைபெற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் மாதம் ஒரு முறை டெல்டா மாவட்டங்களுக்கு வருகை தந்து ஆய்வினைச் செய்து பணிகள் தரமுடன் நடைபெற அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளன. கடந்த மகாமகத்தின்போது எனது தொகுதியில் உள்ள கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ள அனைத்துச் சாலைகளும் புதிதாகப் புதுப்பிக்கப்பட்டன. ஆனால் தற்போது, 2004 ஆம் ஆண்டு வரும் மகாமகத்திற்காக நெடுஞ்சாலைத் துறை ஒதுக்கியுள்ள தொகை மிகமிகக் குறைவாக உள்ளது. ஆகவே நெடுஞ்சாலைத் துறை கும்பகோணம் உட்கோட்டத்திற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கூடுதல் நிதியினை ஒதுக்கி மகாமகத்திற்குள்ளாக அனைத்துச் சாலைகளும் புதுப்பித்துக் கொடுக்கப்பட வேண்டுமென நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பாபநாசம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற பாபநாசம் புறவழிச் சாலையையும், அதேபோல எனது தொகுதியை இணைக்கின்ற வகையில் புகழ்பெற்ற சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கல்லணை பூம்புகார் சாலையையும் அகலப்படுத்தி உறுதி செய்து தர வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலே அந்தச் சாலைப் பணிகள் எடுக்கப்பட்டு ரூ.60 கோடி அளவுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகள் செய்துதரப்படவில்லை. ஆகவே இந்த நிதியாண்டிலாவது அல்லது வருகின்ற நிதியாண்டிலாவது அந்தச் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த கல்லணை பூம்புகார் சாலையை அகலப்படுத்தி உறுதி செய்து தருவதற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் மற்றும் பொம்பலூர் மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்த நல்லூர்-மதனத்தூர் பாலத்தினை அரசுத் துறை மூலமாக அமைத்துத் தாவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாபநாசம். தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும், அதைப்போல ஜெயங்கொண்டம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் கடந்த 15 ஆண்டு காலமாக இந்த மன்றத்திலே வலியுறுத்தி வருகிறார்கள். அந்தப் பாலம் அமைக்கப்பட்டால் தஞ்சை மாவட்டத்திலிருந்து சென்னைக்குச் செல்கின்ற தூரம் என்பது சுமார் 30 கிலோ மீட்டர் குறைவதோடு பின்தங்கி இருக்கிற பொம்பலூர் மாவட்டம் முன்னேறுவதற்கும் ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கருணை கூர்ந்து அந்தப் பாலத்தினை எடுத்துச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளிக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான சுவாமிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில் அறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கிறது. அங்கு பக்தர்கள் தங்கும் விடுதிகள் பழுதடைந்து உள்ளதை அகற்றி புதியதாக நவீன வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் அமைத்துத் தா வேண்டுமென மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல சுவாமிமலையைப் பொறுத்தவரையில் வயதானவர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களும் மலை மேலே சென்று முருகப் பெருமானைத் தரிசிப்பதற்காக நீண்டகாலக் கோரிக்கையாக இருக்கின்ற ஒரு 'வின்ச் கார்' வசதியை அந்தக் கோயிலுக்கு நீங்கள் அமைத்துத் தா வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல எனது தொகுதியைச் சேர்ந்த கபிஸ்தலம், அய்யம்பேட்டை காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. அய்யம்பேட்டை, கபிஸ்தலம்,



சுவாமிமலை, காவல் நிலைய காவலர்களுக்குக் குடியிருப்பு வசதியும் இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அந்த வசதியினை செய்து தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு இந்த அளவுக்கு இந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் என்னைப் பேசுவதற்கு அனுமதித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. சந்திரன்.

**•திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் எனச் சபதமிட்டு வாழும் வீரமங்கை வேலு நாச்சியாரின் மறுவுருவே, கழகத்தின் காவல் தெய்வம், ஏழைகளின் இதய தெய்வம், எங்கள் குலதெய்வம், சமூக நீதி காத்த வீராங்கனை தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை வரலாற்று மிக்க இப்பேரவையில் வேளாண்மை மானியக் கோரிக்கையின் சார்பில் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் சார்பாகவும், என் சிவகங்கை தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து என் உரையைத் துவங்குகிறேன்.

நம் அனைவருக்கும் தெரிந்தபடி, தமிழ்நாட்டில் 60 சதவீத மக்கள் உழவை மட்டுமே நம்பியிருக்கிறார்கள். எனவே நாமும் உழவை மேம்படுத்தினால்தான் உயர்வை உறுதிப்படுத்த முடியும். முதலில் வந்துவிட்டோம் என்ற முத்திரையை நமக்குத் தருவதே வேளாண்மைத் துறையின் வெற்றிதான். நமக்கு அடிப்படைத் தேவையான உணவு, அந்த உணவுப் பண்டங்களால் விளையும் வளர்ச்சி, வாழ்வில் பிற மேம்பாடுகள் அனைத்தும் இதிலேயே அடங்கி இருக்கின்றன. அதனால்தான் உழுபவர்தான் உலகத்திற்கு அச்சாணி என்று வள்ளுவன் சொன்னான். உழவன் சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்றான் ஒரு கவிஞன். எனவே, வேளாண்மைத் துறையில் நம் அரசு செலுத்தும் கவனம்தான் உச்சத்தில் கொண்டுபோய் நிறுத்தும் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநிலத்தின் நிகர உற்பத்தியில் 17 சதவீதம் வேளாண்மை மூலமே பெறப்படுகிறது. தற்போது அத்துறையில் முன்னேற வேண்டுமென்றால் இரண்டு செய்திகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று நகரங்கள்

விரிவுபடுத்தப்படுவதால் விளை நிலங்கள் குறைந்து மனை நிலங்கள் ஆகிவிடுகின்றன.

முற்பகல் 11-50

அதேநேரத்தில் எத்தனையோ இலட்சம் ஏக்கர் நிலம் தரிசு நிலமாக விடப்பட்டு, அதனால் எவ்வித உற்பத்தியும் இல்லாமல், பாதகமான நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் 1965-66 ஆம் ஆண்டு 52.52 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் இருந்த பயிர் உற்பத்தி 2001-2002 ஆம் ஆண்டு 84.72 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. அல்லும் பகலும் அயராது உழைக்கும் எங்கள் ஆற்றல்மிக்க டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அற்புத சாதனைக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

மேலும், அரிசி உற்பத்தித் திறனில் பஞ்சாப் மாநிலத்திற்கு இணையாகத் தமிழகம் இப்பொழுது முன்னிலையில் உள்ளது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வான் பொய்த்தாலும் தான் பொய்க்காது என்று பாராட்டப் பெற்ற காவிரி, சிலரது செயற்கைச் சதிகளால் டெல்டா பகுதி விவசாயிகளுக்குப் பாதிப்பை உண்டாக்கியிருக்கிறது என்பதை அறிவோம். இயற்கையாக நாம் பெற வேண்டிய மழை அளவு குறைந்து வறட்சி ஏற்பட்டதையும் பார்க்கின்றோம். இவ்வளவையும் மனதில் வைத்துக் கொண்டுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தஞ்சை டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ரூ.64 கோடி ஒதுக்கீடு செய்து, விவசாயிகள் மேம்பாடு அடையச் செய்தார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறையை முதன்மைத் துறை என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த முதன்மை நிலை நீடித்து நிலைபெற அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே கூட்டுறவு வங்கியில் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல், தவணை தவறிய கடன்கள் வளர்ந்த நிலையில் வட்டிக்காகவும், அபராத வட்டிக்காகவும் ரூ.311 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் தள்ளுபடி செய்து அறிவித்தார்கள். இதனால், எத்தனையோ விவசாயிகள் தவணை தவறிய கடனைத் திரும்பச் செலுத்தினார்கள். அப்படிச் செலுத்தியதால், 6 இலட்சத்து 11 ஆயிரத்து 913 பேர் அம்மாவின் ஆசியால் பயன் பெற்றார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



கடந்த கால தி.மு.க. ஆட்சியில் இதே சலுகையை விவசாயிகளுக்கு அளிக்குமாறு கேட்டபோது ஏதேதோ பேசி விவசாயிகளை ஏமாற்றினார்களே தவிர, உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. அதுமட்டுமல்லாமல், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நபார்டு வங்கிக்கு ஒரு கடிதம் எழுதியதாக தவறான தகவலை இந்த அவைக்குத் தந்தவர்தான் முன்னாள் முதல்வர். அப்படி ஒரு கடிதமே தான் எழுதவில்லையென்று இந்த அவையில் அம்மா அவர்கள் அறிவித்தபோது, வாயடைத்துப் போனவர்கள்தான் தி.மு.க.வினர்.

அம்மா அவர்கள், மேலும் விவசாயிகளைக் காப்பாற்ற விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்திற்கு மாதம் 30 கிலோ அரிசி வழங்கியதால், கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர். தற்போது வேலைக்கு உணவுத் திட்டத்தையும் அறிவித்துச் செயல்படுத்தி வரும் அம்மா அவர்களின் நல்ல நோக்கத்தை நாடே பாராட்டுகின்றது.

அதுமட்டும் இல்லாமல் தரிசு நில மேம்பாடு என்ற வகையில் 5 ஆண்டுகளில் 20 இலட்சம் ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்தத் திட்டமிட்டு அறிவித்தார்கள். அதன்படி 10 மாவட்டங்களில் ஒரு இலட்சத்து, 35 ஆயிரத்து 95 ஹெக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் பணி நடந்து வருவதாகவும் கடந்த ஆண்டே நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தில் 5 ஆண்டு முடிவில் சுமார் 10 இலட்சம் கிராம மக்கள் பயனடைவார்கள். மேலும், தரிசு நிலங்களில் தோட்டக் கலைப் பயிர்கள், வேளாண்மைக் காடுகள், மருத்துவப் பயிர்கள், எரிசக்திக்குத் தேவையான மரங்கள், தீயணைப்புப் பயிர்கள் போன்ற வர்த்தகப் பயிர்களை வளர்த்துப் பயன்பெற அம்மா அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

நிலத்தடி நீர் கூடுதலாகும்போது உற்பத்தி உயரும் என்பதை உணர்ந்து ஓயாது உழைக்கும் ஒப்பற்ற தலைவியின் ஆட்சியில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இந்தியாவிற்கே எடுத்துக்காட்டாகத் தமிழகம் விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தெந்தப் பகுதியில் என்னென்ன விளையும் என்பதைக் கண்டறிந்து, அதற்கான தொழில்நுட்பக் கூடங்களை அமைப்பது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர எவரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், தற்போது மூலிகைப் பயிர்களைப் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ்நாட்டில் 5,000 ஹெக்டேர் பரப்பில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு மருத்துவத் துறையில் புரட்சியை ஏற்படுத்தி வருகின்றது.

(பிற்பகல் 11-55

நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு 42 டிராக்டர்கள், 561 பவர் டில்லர்கள், 13 கதிரடிக்கும் கருவிகள் வழங்குவதற்காக ரூ.182.85 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002-2003 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கு ரூ. 599 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கு ரூ.618 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக, இந்த ஆண்டு விவசாயிகளுக்காக 19 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதற்காக விவசாயிகளின் சார்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் எனக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாய்ப்பினில் எனது சிவகங்கை சட்டமன்ற தொகுதிக்குச் சில திட்டங்களைச் செயல்படுத்திக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை தொகுதியில், பெரியார் பாசனக் கால்வாயில் லெஸ்லீஸ் மற்றும் சீல்டு கால்வாய் என்று உள்ளது. லெஸ்லீஸ் கால்வாய் பணிகள் உலக வங்கி நிதி உதவி மூலமாக நடந்து முடிவடைந்துவிட்டன. கடந்த ஆட்சியாளர்கள், இந்தப் பணியைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். சீல்டு கால்வாய்ப் பாசனப்பகுதி விவசாயிகளுக்குக் கால்வாய் கட்டப்படாமல் உள்ளது. அந்தக் கால்வாய்ப் பணியை நிறைவேற்றித் தருமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் காளையார்கோயில் ஒன்றிய விவசாயிகள் வானம் பார்த்த பூமியை நம்பியே வாழ்கின்றார்கள். அப்பகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் நீர்நிலைகள் நீண்டகாலமாகத் தூர் வாரப்படாமல் உள்ளன. எங்கள் மாவட்டமும், பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால், எங்களுக்கும் புரட்சித் தலைவி அம்மா



அவர்கள் கருணை உள்ளம் கொண்டு கண்மாய் தூர்வார நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டந்தோறும் அம்மா அவர்கள் நேரில் சென்று நலத் திட்டங்களை அறிவித்து வருகின்றார்கள். கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கும் வருகைதந்து நலத் திட்டங்களை அறிவிப்பீர்களென்று எனது தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைநகரும், வளர்ந்து வரும் நகருமான சிவகங்கையில் பாதாள சாக்கடை இல்லாததால், சுகாதாரக் கேடுகள் விளைகின்றன. எனவே, சிவகங்கை நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை நகரில் குடிநீர்த் தேவையை நிறைவேற்றிட அரசின் பரிசீலனையில் உள்ள ரூ. 1.59 கோடி திட்டத்தினை நிறைவேற்றித் தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாளெல்லாம் உழைக்கும் உழவனின் வாழ்க்கையில், மகிழ்ச்சி பொங்கவும், உழவன் நலமாக இருந்தால் உலகம் மகிழ்ச்சி அடையும் என்ற உண்மை விளங்கவும், உழைத்து வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சிக்குத் துணை நிற்போம்.

ஒவ்வொரு உழவனின் வாழ்விலும் வளம் உண்டு. ஆனால், வறுமை இல்லையென்ற நிலையை அடைந்திடுவோம் என்று கூறி எங்களை வழிநடத்திச் செல்லும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் [illegible]மத்தைத் துதிப்போம் என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மானியக் கோரிக்கையில், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக ஒரு விவசாயி, விவசாயப் பட்டதாரி என்ற முறையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களது இயக்கத்தின் நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமை நாயகன் டாக்டர் சின்ன அய்யா அவர்களுக்கும், எங்களது கட்சியின் தலைவர்

திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, எனது கருத்துகளை இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உணவுப் பூங்காக்கள் (Food Bank) அமைக்கப்பட வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரில் எனது கருத்தைக் கூறியிருந்தேன். அதற்கேற்ப, உணவுப் பூங்காக்களை ஏற்படுத்தி உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிப்பது எனது கடமை என்று கருதுகிறேன்.

கிராம ஊராட்சிகளில் சிறுகுளங்கள் மற்றும் 100 ஏக்கருக்குக் குறைவான ஆயக்கட்டினைக் கொண்டுள்ள ஏரிகளைத் தூர்வாரி மேம்படுத்த ரூ.50 கோடி செலவிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அரசின் திட்டத்தையும், பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள நீர்நிலைகளைத் தூர்வாரி புதுப்பிப்பதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீட்டுடன் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற திட்டத்தையும் வரவேற்கின்ற இந்த நேரத்தில், இந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகள், பெருமளவு அரசின் முயற்சிகளால் பாதுகாக்கப்பட்டாலும், பருவ மழை பொய்த்துப் போதல், தாமதமாதல், போன்ற காரணங்களால், கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுவதாலும்....

[ஏற்கெனவே வெளியேறிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவைக்குத் திரும்பினார்கள்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் வருவீர்கள் என்று முதலமைச்சர் அவர்கள் முன்னாலேயே சொல்லிவிட்டார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** எனக்கு உண்மையைப் பற்றி நம்பிக்கை இருக்கிறது.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுவதாலும், இன்று நிலத்தடி நீர் மட்டம் மிகப் பெரிய அளவில் குறைந்து, கடல்மட்டத்தைத் தொட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு போதுமான நீர் பெற முடியவில்லை. இதற்கெல்லாம் தீர்வாக 3 சதம் வரை வடிகால் குட்டைகளை—percolation ponds—ஒவ்வொரு



விவசாயியும் தன் சொந்த நிலத்தில் கட்டாயமாக அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். நிலம் இல்லாத தொழிலாளர்களுக்கு உணவுக்கு வேலை, புதிய வேலைவாய்ப்புத் திட்டம் என இதனைப் போர்க்கால நடவடிக்கையாக நிறைவேற்றலாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உழவர்களின் முதலீடுகளை ஈர்க்க கூட்டுறவு நிறுவனங்களின்மூலம் கடன் வசதி பெற அரசு உதவலாம். இதில் தேங்கும் நீரை வறட்சிக் காலங்களில் சிக்கனமாகப் பயன்படுத்தி, குறுகிய காலப் பயிர்களுக்குத் தெளிப்பு நீர்ப்பாசன உபகரணங்களையும், மர வகைப் பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசன உபகரணங்களையும் இந்தத் திட்டத்தினுடன் இணைத்து, தேவையான பகுதிகளுக்கான சாத்தியக்கூறுகளை அலசி ஆராய்ந்து வழங்கினால், இந்தத் திட்டத்தின் பயன்பாடு உடனடியாக வெளிச்சத்திற்கு வந்து நமது பூமி, பசுமை பூமியாக மாறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேற்கூறிய பாசன முறையைப் பயன்படுத்துவோருக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.25 ஆயிரம் மானியமாக வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டில், விவசாயப் பயிர்ச் சாகுபடியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், சுமாராக 60 சதவிகிதமே எட்ட முடிந்தது. 2003-2004 ஆம் ஆண்டிற்கான இலக்குகள், 2002-2003 ஆம் ஆண்டின் இலக்கிற்குக் குறைத்தே மதிப்பிடப்பட்டுள்ளது. இலக்கே குறைத்து நிர்ணயிக்கப்பட்டால், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், எப்படி நாம் நான்கு சதவிகித வளர்ச்சியை எட்ட இயலும் என்று....

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கு குறைக்கப்பட்டிருக்கிறதே தவிர, எதிலே குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். தோட்டக் கலைப் பயிர்கள் அதிகமாக உற்பத்தி செய்கிற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே அதில்தான் குறைக்கப்பட்டிருக்கிறதே தவிர, இலக்கைக் குறைக்கவில்லை என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** கொள்கை விளக்கக் குறிப்புப் பக்கம் 16-ல் கூறியபடி, 2002-2003 ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல், விநியோக புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, நெல்

கொள்முதல், 15008.6 டன், விநியோகம் 15,483.5 டன், சிறு தானியங்கள் கொள்முதல் 341.4 டன், விநியோகம் 366.5 டன், எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் 3615.8 டன், விநியோகம் 4269.1 டன் எனக் கொள்முதலைவிட விநியோகம் அதிக அளவில் செய்யப்பட்டதாகக் காட்டப்படுவது எப்படி? புள்ளிவிவரங்கள் தெளிவானதாக இல்லை. மேலும், 10.11 இலட்சம் தேங்காய் நெற்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு 11.24 இலட்சம் தென்னங்கன்றுகள் எப்படி உற்பத்தி செய்து, விநியோகம் செய்ய முடியும்?

விரிவான மானியக் கோரிக்கை 5-ல், பக்கம் 23-ல், வேளாண்மை இயக்குநர் தலைப்பில், நிலச் சீர்திருத்தமும், மேம்பாடும் என்ற உப தலைப்பில், மாநிலத் திட்டத்தின்கீழ், 2001-2002-ல், ரூபாய் 23 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2002-2003-ல், ரூ.40 கோடி திட்ட மதிப்பீடு, திருத்த மதிப்பீட்டில் ரூ.20 கோடியாக, பாதி அளவாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2001-2002-க்கும் குறைவாகக் குறைக்கப்பட்டது ஏன்? 2003-2004-க்கும் திட்ட மதிப்பீடு ரூ.25 கோடி என்பது, மிகக் குறைவானதாகும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புப் பக்கம் 32-ன்படி கரும்பு மேல் வரி வசூல் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. வசூலான தொகையில், சுமார் ரூ. 900 இலட்சம் குறைவாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 6-9-2002-ல், மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. இந்த ஆண்டு, உத்தேசமாக எந்தத் தேதியில் திறந்து விடப்படும்? வழக்கமான ஜுன் 12-க்கு இன்னும் 50 நாட்களே இருப்பதால், அரசாங்கத்தின் திட்டம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாற்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்"**

என்ற வள்ளுவரின் குறள் வரிகள், வள்ளுவன் காலத்திலாவது நடைமுறையில் இருந்ததா? அல்லது, வள்ளுவனுக்கும் இது கனவோ எனத் தெரியவில்லை. ஆம்! இன்று விவசாயமும், விவசாயிகளும்தான் மிகப் பரிதாபமான சூழலில் சிக்கித் தவிக்கின்றனர். விவசாயம்



மட்டும் செய்து கொண்டிருப்பவர்கள் யாரும் இன்று நல்ல நிலையில் வாழ்க்கை நடத்த முடியவில்லை. இதைத் தவிர்த்திட, விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அவர்களே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதற்காக, தேவைக்கேற்ப உற்பத்தி இருக்க வேண்டும்.

நமது விவசாயிகள், மரபுவழி வேளாண்மை என்ற மனப்பான்மையிலிருந்து விடுபட வேண்டியதன் கட்டாயத்தை, வேளாண்மைத் துறை மூலம் உணர்த்த வேண்டும். அதற்காக, கிராமம் கிராமமாகச் சென்று, சர்வதேச விவசாயத்தின் தரம், தொழில்நுட்பம், தரத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்க வேண்டும். இந்த முயற்சி பலனளிக்கத் தொடங்கிவிட்டால், விவசாயிகளுக்கு இன்றுள்ள தடைகளும் பிரச்சினைகளும் கிட்டத்தட்ட அகன்றுவிடும்.

வருவாய்த் துறையும், வேளாண்மைத் துறையும் இணைந்து, வரும் ஆண்டிற்கான தேவையை முன்கூட்டியே அறிவித்து, அந்த அளவிற்கு மட்டுமே உற்பத்தி செய்ய, விவசாயிகள் அறிவுறுத்தப்பட வேண்டும். இது உடனடியாகச் சாத்தியப்படாது. ஆனால், காலப்போக்கில் சாத்தியமாகிவிடும். மேலும், இடைத் தரகர்களை ஒழித்து, 'உழவர் விற்பனை அங்காடி' அமைக்கப்பட வேண்டும். Cold storage வசதிகளை தாலுகாதோறும் அமைத்து, காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஒரு தொழிலதிபர், தனது நிலம், கூலி ஆள், மூலதனம், தனக்குண்டான இலாபம் ஆகியவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு உற்பத்திப் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்கிறார். இலாபம் பெறுகிறார். ஆனால், இவற்றைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு, தான் சாகுபடி செய்யும் பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை. ஆகவே, அரசு, விவசாயிகள் தங்களது விளை பொருட்களுக்குத் தாங்களே விலை நிர்ணயம் செய்யும் சூழ்நிலையை உருவாக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் வேண்டுகிறேன்.

தற்போது, தமிழகத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறைக்கேற்ப, கூடுதல் விலை மதிப்புள்ள, குறைந்த அளவு நீர் மட்டும் தேவைப்படும் சூரியகாந்தி, வேர்க்கடலை, மக்காச்சோளம், பருத்தி போன்ற பணப் பயிர் சாகுபடியை ஊக்குவித்து, நெல் சாகுபடி மாற்றப்பட வேண்டும்.

இதற்காக கிராமந்தோறும் படித்த இளைஞர்களைக் கொண்ட பிரச்சாரக் குழு உருவாக்கப்பட வேண்டும்.

*பிற்பகல் 12-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு டன் கரும்பிலிருந்து 100 கிலோ சர்க்கரையும், 250 கிலோ சக்கையும், 35 கிலோ மொலாசசும், அதிலிருந்து 8 லிட்டர் குடிசாராயமும், 50 யூனிட் மின்சாரமும் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டு, ஒரு டன் கரும்பிலிருந்து ரூ.4,618 வருமானமாகக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தனியார் சர்க்கரை நிறுவனங்கள் இன்று லாபத்தில் இயங்கி வருகின்றன. இதை எல்லாம் மனதில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரும்பிற்கு ஒரு டன்னிற்கு ரூ.1000 விலை நிர்ணயம் செய்து உற்பத்திக்கு ஊக்கம் அளித்து, விற்ற உடனே மற்ற பண்டங்களுக்குக் கொடுப்பது போலக் கரும்பிற்கும் தொகை பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் நிலுவையில் உள்ள பாக்கி தொகைகளை உடன் வழங்க உதவி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி வாய்ப்பைக் கருத்தில்கொண்டு இன்று இந்திய மூலிகைப் பயிர்களுக்கு மிகப் பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது. நித்ய கல்யாணியிலிருந்து மருந்துப் பொருட்கள் இன்று கோடிக்கணக்கான ரூபாய் அளவில் விற்பனையாகின்றன. உலக அளவில் ஆரம்ப நிலை மார்புப் புற்று நோய்க்கு இதிலிருந்து எடுக்கப்படும் vincristine sulphate சல்பேட் மருந்து,......... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இது முக்கியமான முதன்மைத் துறை, ஆகவே 5 நிமிடங்கள் கொடுங்கள். **உலக அளவில் இன்று** பெருகியுள்ள மன உளைச்சலுக்கும்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, 2 நிமிடத்தில் உரையை முடியுங்கள்.



**திரு. அ.இரா. மலையப்பசாமி:** டென்ஷனுக்கு மருந்து சொல்லிவிடுகிறேன். இன்றைக்குள்ள மன உளைச்சலுக்கும் இதிலிருந்து எடுக்கப்படும் vinblastin sulphate முக்கியமான மருந்து. நம் தமிழகத்தில் உள்ள, தண்ணீர் தேங்காத அனைத்துப் பகுதிகளிலும் இப்பயிர் நன்கு வளரும். இந்த நித்ய கல்யாணியிலிருந்து எடுக்கப்படும் சத்தான வின்கிறிஸ்டைன் சல்பேட் (vincristine sulphate) ஒரு கிராம் விலை 24,000 அமெரிக்க டாலர்கள். ஆகவே, அரசு, மூலிகை விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் பொய்த்து வரும் நிலையில் விவசாயிகளுக்கு ஓரளவு வேலைவாய்ப்பையும், வருமானத்தையும் கொடுத்து வாழ்க்கையில் ஒளி ஏற்றும்வகையில் கால்நடைத் துறை செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் 26 மில்லியன் கால்நடையும், 24 மில்லியன் கோழிகளும் இருக்கின்றன. கால்நடை மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை சுகாதாரம்..... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கால்நடை மானியக் கோரிக்கையில் பேசலாம். அடுத்து, திரு. மகேந்திரன்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை, இல்லை, ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்; பேச்சை நிறைவு பண்ணுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கியின் மூலம் கடன் உதவியோ அல்லது நிதி உதவியோ பெற்று விவசாயிகளுக்கு அறிவிக்கப்படும் திட்டங்கள் பற்றிய அறிவிப்பு வேளாண்மைத் துறையில் சரியான முறையில் செய்யப்படுவதில்லை. அரசின் திட்டங்கள் என்ன, அதனால் விவசாயிகளுக்கு என்ன பயன் கிடைக்கும், என்பது போன்ற செய்திகள் மக்களைச் சென்றடைந்தால்தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி முதன்மைத் துறையான வேளாண்மைத் துறையின் பலன்கள் மக்களுக்குக் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை இயக்குநர் அலுவலகத்தில் பூச்சி மருந்துகள், உரங்கள் ஆகியவை கொள்முதல் செய்யப்படும்பொழுது, விலை குறைவாகக் கூறியவர்களிடம் விலை குறைவாகக் கூறியவர்கள் அனுபவம் இல்லாதவர்கள் என்று காரணம் காட்டி, அவர்களிடம் கொள்முதல் செய்யப்படாமல், நல்ல பொருட்களாக இருந்தாலும் டெண்டர்

மறுக்கப்படுகிறது. அதிக விலை கோரியவர்களிடம் வாங்கினால் அரசுக்கு அதிக செலவாகும் வாய்ப்பு உள்ளது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி உடன் விசாரணை செய்து, தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் முன்பு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாய வல்லுநர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்து முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்கு....

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்து வழங்குவதில் தவறுகள் நடந்து இருப்பதாக, டெண்டர் வைத்ததில் தவறுகள் நடந்து இருப்பதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் அதைக் குறிப்பாக எழுதிக் கொடுத்தால் அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்து முதன்மைத் துறையான வேளாண்மைத் துறைக்குத் தனியாக ஒரு நிதிநிலை அறிக்கை தயார் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை இடு பொருட்கள் விற்பனை செய்திடும் தனியார் நிறுவனங்களுக்கு வேளாண்மையில் படிப்பறிவு இருந்தால் மட்டுமே உரிமம் வழங்கப்பட வேண்டும். முதன்மைத் துறையான வேளாண்மைத் துறை,.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன். (குறுக்கீடு)

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** முக்கியமான ஒன்று. ஐயா, முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம், தொகுதிபற்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் அவருக்குக் கொடுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நிறையத் தாள்கள் வைத்து இருக்கிறார்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை, முடித்துவிடுகிறேன்; ஐயா, முடித்துவிடுகிறேன். எனது கபிலர்மலை தொகுதியையும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதியையும் இணைக்கும், அதாவது சோளகிராமணிக்கும் பாசூருக்கும் இடையில் மின்சார உற்பத்திக்காக ஒரு குறுக்கணை கட்ட அரசிடம் உள்ள திட்டத்தில் உடன் தரைவழிப் பாலம் ஒன்று கட்டப்பட வேண்டும்.

எனது தொகுதியில் சுமார் 25 கிலோமீட்டர் நீளம் உள்ள ராஜா வாய்க்கால் மூலம் கடைமடைப் பகுதி ஆயக்கட்டு,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலையப்பசாமி, அதைப் பற்றியெல்லாம் அப்புறம் எழுதிக் கொடுங்கள்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன்; ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகேந்திரன்.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** ஐயா, ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள். புயல், பருவ மாற்றம், மழை வாய்ப்புகள், மண் பரிசோதனை, இயற்கை வேளாண்மை, மண்புழு உரம், புதிய தொழில்நுட்பங்கள், இண்டர்நெட் தொடர்புகள், இயந்திர மயமாக்கல், பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல், என இன்றைய விவசாயத்தை மேம்படுத்துவதற்கான அனைத்துத் தேவைகளுக்கும், வேலைவாய்ப்புக் கிடைக்காத வேளாண் பட்டதாரிகளின் உழைப்பை முழுமையாகப் பயன்படுத்தி, விவசாயிகளுக்குக் கொண்டு சென்றால், நாளைய விவசாயம், நலமான வளமான விவசாயம், நாளைய தமிழகம் இந்தியாவில் முதல் மாநிலம் என்பதில் சந்தேகம் இல்லை என்று கூறி, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீதான

விவாதத்திலே கலந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழகத்திலே வேளாண்மைத் துறையை வளர்ப்பதற்கு பல்வேறு விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாய நிலைமைகளைக் கணக்கில்கொண்டு, விவசாய உற்பத்தியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நமக்கு வருடந்தோறும் பெய்ய வேண்டிய சராசரி மழை கடந்த நான்கு ஆண்டு காலமாக குறைவான அளவே பெய்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டும் தென்மேற்குப் பருவ மழை எதிர்பார்க்கும் அளவைவிடக் குறைவாகவே பெய்யும் என I.M.D.A. தெரிவித்துள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம்முடைய அரசுக்கு இருக்கிறது.

வருடாவருடம் ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணை காவிரி டெல்டா விவசாயிகளுக்காகத் திறக்கப்படும் என்ற நியதி கடந்த காலத்திலே இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் தேதி காவிரி டெல்டா விவசாயத்திற்கு, குறிப்பாக குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையைத் திறக்க முடியாத நிலைமை நமக்கு ஏற்பட்டது. மேட்டூர் அணை கடந்த ஆண்டு ஒன்பதாவது மாதத்தில்தான் திறக்கப்பட்டது. அதனுடைய விளைவாக தமிழகத்திலே, குறிப்பாக காவிரி டெல்டா மாவட்டங்களிலே, குறுவை சாகுபடி என்பது கடுமையான பாதிப்பைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பா சாகுபடியும் அதாவது மாநில அரசினுடைய புள்ளிவிவரப்படி 8 இலட்சம் ஏக்கரிலே பயிரிடப்பட்ட சம்பா சாகுபடி பாதிப்பைச் சந்தித்தது. 5 கோடிக்கும் அதிகமான ரூபாய் இழப்பு என்பது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஆண்டு குறுவை சாகுபடியைப் பாதுகாப்பதற்கு ஜூன் மாதம் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறப்பதற்கு, நமது மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான காவிரி நீர் பங்கீட்டினைப் பெறுவதற்கு இப்போதிலிருந்து நம்முடைய மாநில அரசு தொடர்ச்சியான முயற்சிகளை



மேற்கொள்ளவேண்டும். காவிரி டெல்டா மாவட்டத்திலே குறுவை சாகுபடியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இருக்கக் கூடிய வறட்சி நிவாரணம்; கடந்த ஆண்டு ரூபாய் 3800 கோடிக்கும் அதிகமான அளவிற்கான வறட்சி நிவாரண நிதி என்பது நமக்கு வேண்டும் என்று மத்திய அரசிடம் மாநில முதல்வர் அவர்கள் வலியுறுத்தி இருந்தாலும்கூட, மத்தியிலே ஆளக்கூடிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மாநிலத்திற்குத் தேவையான நிவாரணப் பணிகளுக்குத் தேவையான பணத்தை முழுமையாகக் கொடுத்திருக்கிறார்களா என்றால் கிடையாது. நாம் கேட்டு இருக்கக்கூடிய 3800 கோடி ரூபாயில் வெறும் 258 கோடி ரூபாய் தான் மத்திய அரசால் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய வறட்சி நிவாரணப் பணிகள்கூட இன்னும் முழுமையாக விவசாயிகளுக்குச் சென்றடையவில்லை என்ற கருத்துகளை இன்றைக்கு விவசாயிகள் மாநிலத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜனவரி மாதத்தினுடைய இறுதியிலே இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்ட அந்த வறட்சி நிவாாணப் பணிகள் உடனடியாக, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று வேலைக்கான உணவுத் திட்டம் என்பது இன்றைக்கு மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே தொடங்கப்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த இலவச அரிசி என்பது மார்ச் மாதம் 31 ஆம் தேதியோடு நிறுத்தப்பட்டு இருப்பதாகச் சில அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி மார்ச் மாதம் 31 ஆம் தேதியோடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 30 கிலோ இலவச அரிசி நிறுத்தப்பட்டு இருந்தால் உடனடியாக அடுத்த விவசாய சாகுபடியைத் தொடங்கும்வரை அந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, 30 கிலோ இலவச அரிசியைத் தொடர்ந்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, வேலைக்கான உணவுத் திட்டம் இன்றைக்கு பல்வேறு ஒன்றியங்களிலே அமலாக்கப்படக்கூடிய சூழ்நிலையில் தினக்கூலியாக 54 ரூபாய் விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த 54 ரூபாயில் 7 கிலோ அரிசிக்கு 5 ரூபாய் 65 பைசா என்ற கணக்கின் அடிப்படையில் 7 கிலோ அரிசி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த 5 ரூபாய் 65 பைசா என்று வழங்கப்படக்கூடிய, கழிக்கப்படக்கூடிய இந்த அரிசியினுடைய விலையை 3 ரூபாய் 50 பைசா என்று, மாநில அரசால் மானியத்தோடு அரிசி கொடுப்பது போன்று விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கான வேலைக்கான உணவுத் திட்டத்திற்கும் கணக்கிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-15

ஏனென்றால் 5 ரூபாய் 65 பைசா என்று கணக்கிடப்பட்டால் தினக்கூலியாகக் கொடுக்கக்கூடிய 54 ரூபாயில் 14 ரூபாய்தான் மீதமாக விவசாயிகளுக்குக் கிடைக்கிறது. 40 ரூபாய் அரிசிக்காக எடுக்கப்பட்டு வெறும் 14 ரூபாய் கிடைத்தால் ஒரு விவசாயி குடும்பத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை நாங்கள் பணிவன்போடு சுட்டிக்காட்டி, 5 ரூபாய் 65 பைசா என்று கொடுக்கக்கூடிய அரிசியினுடைய விலையை 3 ரூபாய் 50 காசாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று மாநிலத்தினுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடனுக்கான வட்டித் தொகையை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். கடன் தொகை என்பது பின்னால் வசூலிக்கப்படும் என்று சொல்லப்பட்டுக்கொண்டு இருக்கிறது. காவிரி டெல்டா பகுதி மட்டுமல்ல, இன்றைக்கு மாநிலத்திலே இருக்கக்கூடிய 28 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையில், காவிரி மாவட்டத்திலே சம்பா சாகுபடி, குறுவை சாகுபடி, இதற்கு முந்தைய சம்பா சாகுபடி 3 போகம் விளைச்சல் நடைபெறாத சூழ்நிலையில் இந்தக் கடன் தொகை முழுவதும் ரத்து செய்யப்படவேண்டும் என்று நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று மாநிலத்திற்குத் தேவையான வறட்சி நிவாரணத்தை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்குத் தேவையான முயற்சிகளை



மாநில அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று மாநில அரசுஅறிவித்திருக்கிறது. ஆனால் அந்த நிவாரணம்கூட விவசாயிகளுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்ற தகவல் சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே நாம் அறிவித்திருக்கக்கூடிய அந்த நிவாரணம் என்பது குறைவான தொகையாக இருக்கக்கூடிய காரணத்தினால் ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று பண்ணைக் குட்டைகள் உருவாக்குவதற்கான திட்டங்கள் என்பது, கடந்த ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டு, இப்போது மாநிலத்திலே பல்வேறு பகுதியிலே பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்பட்டு இருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே விவரங்கள் என்பது கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் மாநிலத்தினுடைய பல்வேறு பகுதிகளில் பண்ணைக் குட்டைகள் உருவாக்குவதற்கு ஏராளமான மனுக்கள் என்பது இப்போது அரசிடம் கொடுக்கப்பட்டும்கூட அந்தப் பண்ணைக் குட்டைகளை உருவாக்குவதற்கான மானியங்கள் மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை என்ற விவரம் சொல்லப்பட்டு இருக்கிறது. பண்ணைக் குட்டைகள் தொடங்குவதற்கு விண்ணப்பித்த அனைத்து விவசாயிகளுக்கும் இந்த மானியம் என்பது கிடைப்பதற்கு நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று கரும்பு விலையைப் பொறுத்தவரையில் டன்னுக்கு ஆயிரம் ரூபாய் விலை என்பது அவர்களுடைய கோரிக்கை. இது நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சியில்கூட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தால் அதே கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்குக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2001-2002 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்சம் விலை மட்டும் இப்போது கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாநில அரசினுடைய பரிந்துரை விலை — S.A.P. — கொடுக்க வேண்டியதில்லை என்று மாநில அரசு அறிவித்திருக்கிறது. இந்த அறிவிப்பு என்பது--மாநில அரசினுடைய பரிந்துரை விலை

என்பது 1980-1981 ஆம் ஆண்டிலே தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டதாகும். அந்த மாநில அரசினுடைய பரிந்துரை விலை என்பது நிறுத்தப்பட்டு இருப்பது--எந்தவகையிலும் நியாயமாக இருக்க முடியாது. 1974 ஆம் ஆண்டு .. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதிலுரை (குறுக்கீடு) இன்னும் இரண்டு மணித் துளிகளில் முடித்து விடுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பைப் பொறுத்த அளவில் இருக்கக்கூடிய அத்தனை கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நடத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். சட்டியில் இருந்தால்தானே அகப்பையிலே வரும். ஆகவே சட்டியிலே இல்லை என்று சொன்னால் எப்படி அகப்பையிலே வரும்? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இந்த முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை நஷ்டத்தில் இயங்குவதற்கும் கரும்பு விவசாயிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மத்திய அரசு, கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சம்பந்தமான ஆணையம், தமிழகத்திலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை Inspection நடத்தியதிலே 12 ஆலைகளை தனியாருக்கு விட வேண்டிய அவசியமே இல்லை. கூட்டுறவுத் துறையின் மூலமாகவே நடத்திவிடலாம். அந்த ஆலைகளை சிறப்பாக நடத்துவதற்கு என்ன என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று பரிந்துரைகளைக் கொடுத்து இருப்பதாக சொல்லப்படுகிறது. அந்தப் பரிந்துரைகள் அமல்படுத்தப்பட்டால், இந்தக் கூட்டுறவு நிறுவனங்களை - கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை மாநில அரசே கூட்டுறவுத் துறையின்கீழ் நடத்த முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநிலத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் இயங்குகின்ற காரணத்தினால், விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய அந்த மாநில அரசினுடைய விலையைக் குறைப்பது எந்த வகையிலும் நியாயமாக இருக்க முடியாது என்பதைக் கணக்கில்கொண்டு, மாநில அரசு அந்தப் பரிந்துரை விலையை உடனடியாகக், கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-20*

அதேபோன்று தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றிப் பல்வேறு விவரங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. உலக வங்கியின் கடன் உட்பட சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி. பழனிசாமி, (குறுக்கீடு) திரு. மகேந்திரன், உரையை முடித்து விடுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. கே. மகேந்திரன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்; இன்றைக்குத் தமிழகத்திலே நிலமற்ற விவசாயிகளுக்கு, விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அந்த நிலம் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கான முயற்சியை ஆட்சியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று பேச்சிப்பாறை அருகிலே இருக்கக்கூடிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு பேச்சை முடித்து விடுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. கே. மகேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்; உரையை முடித்து விடுங்கள். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இனிப் புதிய கருத்துக்கு இடமில்லை. வேறு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலாவதாக வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய கொள்கைக் குறிப்பிலே எடுத்தவுடனேயே ஓர் அச்சத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். காரணம், உலக பொருளாதாரத்தாலும், தனியார்மயத்தாலும், நம்முடைய வேளாண்மைத் துறையில் ஈடுசெய்ய முடியாத பேரபாயம் ஏற்பட்டிருக்கிற அந்த நிலையை எடுத்த எடுப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் சில பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்கின்ற நிலைகளும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இறக்குமதிக் கொள்கையால் ஏற்பட்டிருக்கின்ற விளைவால் வேளாண்மைத் தொழில் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக, எப்படி வேளாண்மைத் துறையிலே விவசாயிகளைப் பாதுகாக்கப் போகிறோம் என்று ஒரு கணம் பார்க்க வேண்டியிருக்கிறது. ஒருபுறத்திலே புதிய பொருளாதாரக் கொள்கை; தாராளமயமான இறக்குமதிக் கொள்கை; நபார்டு வங்கியால் இன்றையதினத்திலே விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய பூச்சி மருந்தினுடைய மானியத்தைத் தடுத்து நிறுத்துவது; உரத்தினுடைய மானியத்தைத் தடுத்து நிறுத்துவது; ஆக விவசாயிகளுடைய இடுபொருட்களுக்காகக் கொடுக்கக்கூடிய மானியத்தைத் தடுத்து நிறுத்துவது போன்ற நிலைகள், நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக, இயற்கையாக நமக்குக் கிடைக்க வேண்டிய நீராதாரங்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏரிப் பாசனம், இறைவைப் பாசனம், கிணற்றுப் பாசனம் இந்த மூன்றிலும் ஒரு பாதிப்பு இப்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய மாநிலத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய எந்த ஒரு பொருளையும், ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு விவசாயத்தை மேம்பாடு செய்வதற்கான வாய்ப்புகளே இல்லாத அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. இதனை நம்முடைய அரசு உணர்ந்திருப்பதற்காக முதலிலே நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



வேளாண்மைத் துறையில் மட்டுமல்ல, வேளாண்மைத் துறையைச் சார்ந்திருக்கிற பொதுப் பணித் துறையும் சேர்ந்துதான் வேளாண்மைத் துறையிலே அபிவிருத்தி காண முடியும். குறிப்பாக வேளாண்மைத் துறையும், பொதுப் பணித் துறையும், இந்த இரண்டும் ஒன்றையொன்று சார்ந்திருக்கிற துறையாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் வேளாண்மைத் தொழிலிலே வருகின்ற இடர்பாடுகளைக் களைவதற்கு, தீர்வு காண்பதற்கு நல்லதொரு வாய்ப்பை உருவாக்க முடியும் என்ற என்னுடைய கருத்தினை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதிலே 60 சதவிகிதம் பார்த்தோம் என்று சொன்னால் மானாவாரியினுடைய புஞ்சைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, சம நிலப் பகுதியாக இருக்கக்கூடிய நீர் நிலைகள், சம நிலப் பகுதியாக இருக்கக்கூடிய காவிரி டெல்டா போன்ற பகுதிகளுக்கு என்ன முதன்மையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை இதிலே முழுமையாக, தெளிவாகக் காண முடியவில்லை. காரணம் என்னவென்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள், காய்கறிகள், எண்ணெய்வித்துப் பொருட்கள் போன்றவற்றிற்கு என்ன ஊக்கம் கொடுக்க முடியுமோ அது கொடுத்திருப்பது தவறல்ல. ஆனால்....

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதிக்கு, அதனுடைய வளர்ச்சிக்கு எதுவுமே சொல்லப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். காவிரி டெல்டா பகுதியை வளப்படுத்த வேண்டுமென்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுபட்ட திட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள். அப்படி எடுத்து வருகின்ற அடிப்படையில்தான் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், குளங்கள் வெட்டுதல், ஏரிகளை ஆழப்படுத்துதல், வாய்க்கால்களைத் தூர் வாருதல் போன்ற பல பணிகளை இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதியிலே நடைமுறைப் படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, டெல்டா பகுதியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புறக்கணிக்கவில்லை. காவிரிக்காக 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து, காவிரி டெல்டா பகுதியினுடைய விவசாயிகளைப் பாதுகாத்தவர்

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆக, புஞ்சை தானியங்களுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் காவிரி டெல்டா பயிருக்கும் கொடுக்க வேண்டும், அதையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதேநேரத்திலே மழையின் அளவைப் பார்க்கிறபோது, ஒட்டுமொத்தமாக 38.5% இப்போதுக் குறைந்திருக்கிறது. அதேபோல தென்மேற்குப் பருவமழையும் 45.8% குறைந்திருக்கிறது. இதுதான் காவிரி குறுவை சாகுபடிக்கு ஏற்ற மழைநீர் ஆதாரம்; இப்போது முற்றிலுமாகக் குறைந்திருக்கிறது. நவம்பர், டிசம்பரில் மழை பெய்யாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, நாம் ஒட்டுமொத்தமாக இன்று பார்த்தோம் என்று சொன்னால், வானிலை ஆய்வு மையம், வருகிற நடப்பாண்டிலும்கூட மழை பெய்வது குறைவாக இருக்குமோ என்ற அச்சத்தை இன்றையதினத்திலே தெரிவித்திருக்கிறது. எனவேதான் இந்த ஆண்டில் விவசாயிகளுடைய நிலைமைகள் என்ன ஆகுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஆக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் இப்போது காவிரி நதிநீர் பிரச்சினையில் உரிய காலத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளைக் கடந்தகாலத்தில் எடுத்ததைப்போன்று எடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கடந்தகாலத்தில் கர்நாடக அரசை நாம் அணுகியிருக்கிற அணுகுமுறை, மத்திய அரசினுடைய காலம் கடத்தியிருக்கிற அணுகுமுறையில் ஏற்பட்டிருக்கிற இடைவெளியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தடவை போக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடக அரசில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இன்று அநேகமாக பார்த்தோம் என்று சொன்னால், அங்கே வருகிற சிறு கால்வாய்களிலெல்லாம்கூட 1/2 டி.எம்.சி.,



1 டி.எம்.சி. தண்ணீர் வரக்கூடிய இடங்களில் எல்லாம் சுமார் 350-க்கு மேற்பட்டிருக்கிற சிறிய ஏரிகளை இன்றையதினத்திலே அமைத்து முடித்துவிட்டார்கள். ஆகவே அந்த அரசு சொல்கிற விவரம் என்பது, 365 டி.எம்.சி. தண்ணீரை மேலேயே தேக்கி வைக்கலாம், அணைகளுக்கு வாராமல், என்ற நிலையை இன்றையதினத்திலே அவர்கள் சொல்கிறார்கள். ஆக காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் அதனுடைய இடைக்கால இறுதித் தீர்ப்பு வருவதற்கு இடைப்பட்ட காலத்தில் புதிய அணைகளைக் கட்டுவதற்கு மாறாக, இப்படிப்பட்ட சிறிய அணைகளைக் கட்டுவதற்கான முயற்சிகளை நபார்டு வங்கியில் ஆயிரம் கோடி ரூபாய் அந்த அரசு வாங்கி இன்றையதினத்திலே கட்டி முடித்திருக்கிறது. இது நம்முடைய அரசுக்குத் தெரியாதது அல்ல. ஆகவே காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் உடனடியாக நம்முடைய அரசு மீண்டும் தலையிடவேண்டும். இது ஏதோ ஜூன் மாதம் மட்டும் இந்தப் பிரச்சினை தலைதூக்கி எல்லா விவசாயிகளும் இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் வரக்கூடிய ஜூன் 12 ஆம் தேதி வழக்கமாக தண்ணீர் நமக்கு திறக்கிற வழக்கம் உண்டு. இப்போது நமக்கெல்லாம் அச்சம் இருக்கிறது. ஆகையால் அதற்குரிய நடவடிக்கையை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று காவிரி நதிநீர்ப் பிரச்சினையோடு இப்போது காவிரி ஆற்றுப்பாசனத்தை எடுத்துக்கொண்டால், கரூர், குளித்தலை போன்ற காவிரிப் படுகையிலே--இன்று ஏதோ கர்நாடகம் தண்ணீர் தந்து, மேட்டூரில் தண்ணீர் திறக்கப்பட்டால்--அந்தத் தண்ணீர் டெல்டா பகுதிகளுக்கு, கடைமடைப் பகுதிகளுக்குப் போகுமா என்ற ஓர் அச்சம் இன்று ஏற்பட்டிருக்கிறது. காவிரிப் படுகையிலே, ஆற்றிலேயே ஒரு பெரிய ஏரியாக இன்றையதினம் 50-க்கு மேற்பட்ட மண் இயந்திரங்களை வைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான லாரிகளில் அந்த மண்ணை அள்ளிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றுக்கூட திருப்திகரமான, நம்பிக்கையூட்டக்கூடிய விதத்தில் ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். பாடல் மூலமாகத் தெரிவித்தார்கள். எவரும் தெரிந்தே செய்தாலும் அந்தக் குற்றத்தை நான் தடுப்பேன் என்றார்கள். அந்த நம்பிக்கையில் நான் சொல்கிறேன். நான் நேரடியாகப் பார்த்தேன், 50 பொக்லைன் கனரக வாகனங்கள் ஆற்றுக்குள்ளே நிற்கின்றன. ஆயிரம் லாரிகளுக்கு மேல் அந்த மண்ணை அள்ளுகிறார்கள். அநேகமாக 10 ஆயிரம்

டி.எம்.சி. தண்ணீர் மேட்டூரில் திறந்துவிடப்படும் என்று சொன்னால், கரூருக்கு இந்தாண்டே அந்தத் தண்ணீர் வராது. அந்த அளவுக்கு மிகப் பெரிய ஏரி போல் உள்ளது. ஆக இதை எப்படி அனுமதிக்கிறார்கள் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் அதற்கான உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இல்லையென்று சொன்னால், காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகள் வாழ்க்கையை அது முற்றிலுமாகச் சீரழிவான பாதைக்குக் கொண்டு சென்றுவிடும். அத்தகைய பேரபாயம் இன்றையதினத்திலே வந்திருக்கிறது. காலத்தோடு அரசு அதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாரதப் பிரதமரை இடையிலே சந்தித்தாவது, இந்தப் பிரச்சினையை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போய் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளை மீண்டும் உணர்த்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற விதைகளைப் பொறுத்தமட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் குறுவையும் முழுமையாக விளையவில்லை, சம்பா சாகுபடியும் விளையவில்லை. ஆகையால் இந்த நேரத்தில் தரமான விதைகள் எந்தவொரு விவசாயிகளிடத்திலும் இல்லை. ஆகையால் 10 ஆண்டுகளுக்கு முன்னால் தயார் செய்யப்பட்டு இருக்கின்ற அந்த விதைகளில், தரமான விதைகளை வேறு புதிய விதைகளை இன்று கண்டுபிடிப்பதற்கான முழு முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதேபோன்று 17 சதவீதம்தான் இப்போது விவசாயிகளுக்கு மானியமாக விதைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே விதைகளை அதிகப்படுத்தவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசினுடைய குழு வறட்சி நிலையைப் பார்வையிட்டு நம்முடைய மாநிலத்தில் சுற்றிப்பார்த்தபோது விவசாயிகளுடைய கோரிக்கைகளை மத்திய அரசிடத்திலே எடுத்துச் சொன்னார்கள். ஒரு எக்டேருக்கு 12,500 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும், ஒரு ஏக்கருக்கு 500 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும்; எதிர்காலத்திலே விவசாயிகள் பெற்றிருக்கிற கூட்டுறவுக் கடன்களுடைய வட்டியையும் முதலையும் தள்ளுபடி



செய்யவேண்டும் என்று மத்திய அரசிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால் மத்திய அரசு கொடுத்திருப்பதோ 258 கோடி ரூபாய்தான். நமக்கு 350 கோடி ரூபாய் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கணக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நான் சொல்ல வருவது என்னவென்று சொன்னால், அந்த விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணம் உடனடியாக வழங்கப்படவேண்டும் என்பதோடு, அந்த விவசாயிகளிடத்திலே வருமானச் சான்றிதழ், அனாவாரி சான்றிதழ் வழங்கப்பட வேண்டும் என்ற ஓர் உத்தரவை நீங்கள் அறிவித்துவிடக் கூடாது. தமிழகம் முழுமையும் வறட்சி என்று சொல்லி, வரிகளைத் தள்ளுபடி செய்த பின்னாலும் அவர்களுக்கு இந்த அனாவாரி சான்றிதழ்கள் வழங்குகின்ற ஒரு முறையை வைத்தோம் என்று சொன்னால், கண்டிப்பாகப் பல இடையூறுகள் ஏற்படும். பாதிக்கப்பட்ட அந்தப் பயிர்களுக்கு முழுமையான நிவாரணம் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, விலை நிர்ணயம். காலங்கடந்தும்கூட, சட்டமன்றத்திலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு அரசால் நேரடி கொள்முதல் நிலையங்கள் மாவட்டங்களிலே துவக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே சன்ன ரக நெல்லை மட்டுமே இப்போது கொள்முதல் செய்கிறார்கள். மோட்டா ரக நெல்லாக இருக்கக்கூடிய 1009 என்ற அந்த நெல்லை இப்போது கொள்முதல் செய்வதில்லை. ஆனால் அந்த மாவட்டத்திலே பிரதானமாக விவசாயம் செய்யக்கூடிய நெல் இந்த 1009. அதுதான் சம்பா. அது மழைக்கும் வெய்யிலுக்கும் வறட்சிக்கும் தகுதியாக விளையக்கூடியது அந்த நெல். அதனால் அதைத்தான் பெரும்பகுதி அங்கே நட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நெல்லை இப்போது கொள்முதல் செய்வதில்லை. அதிலே நான் அரசினுடைய கவனத்திற்கு என்ன கொண்டுவர விரும்புகிறேன் என்று சொன்னால் சென்ற தடவை 12 சதவீத ஈரப்பதம் இருந்தால் கொள்முதல் செய்யலாம் என்று இருந்தது. இன்றையதினத்திலே 3 சதவீதம் என்று சொல்கிறார்கள். எந்த ஒரு நெல்லானாலும் 3 சதவீதத்திலே உற்பத்தியே செய்யமுடியாது. மூன்று தடவை நான்கு தடவை இயந்திரம் வைத்து தூற்றப்பட்ட பிறகும்கூட அந்த நெல்லை இப்போது விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து நெல்லை வாங்கமுடியாத நிலை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல முயற்சியின் அடிப்படையில் நேற்று வரை 338 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 1,18,315 மெட்ரிக் டன் நெல்லை வாங்கியிருக்கிறார்கள். அரசு என்ன சொன்னதோ அந்த அடிப்படையிலே அவர்கள் தூற்றி அதனைத் தந்திருக்கிறார்கள், பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூற்றிக் கொடுப்பதிலேகூட தவறு என்று நான் சொல்லவில்லை. நாங்களேகூட அந்தக் கமிட்டியிலே இருந்தபோது, தூற்றிக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்துவிடுகிறேன். இந்த சம்பா நெல் சி.ஆர். 1050-ஐயும் கொள்முதல் செய்வதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இது இன்னும் ஒரு தடவைகூட கூட்டப்படவில்லை என்று நான் அறிகிறேன். அதையும் கூட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பெரிய கம்பெனிகளான பாரி, ரிலையன்ஸ், டி.வி.எஸ். போன்ற கம்பெனிகளுக்கு இந்த நிலங்கள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று இல்லாமல் சாதாரண விவசாயிகளுக்கும் அந்த நிலங்களை வழங்க வேண்டும்.

அதேபோன்று என்னுடைய பகுதியிலே, திருத்துறைப்பூண்டியிலே குன்னலூர் என்ற ஊரிலே ஏற்கெனவே அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் பல ஆண்டு காலமாகச் சாகுபடி செய்துகொண்டிருந்தார்கள். அவை தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்



கீழ் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஏற்கெனவே பயன்படுத்தி விவசாயத்திலே ஈடுபடுத்தியிருக்கிற நிலங்களை எடுப்பது போன்ற காரியங்களை அரசு எடுத்தால், அதையும் ஆய்வு செய்து தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப்பற்றிச் சில ஐயப்பாடுகளை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அதற்கு விளக்கம் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன். விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் இரண்டு பிரிவுகளாகச் செயல்படுத்தப்படுகிறது. ஒன்று நீர்வடிப் பகுதி அணுகுமுறையில் மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளின் பட்டா நிலங்களை மேம்படுத்துதல். விவசாயிகளுக்கே நிறையப் பட்டா நிலங்கள் இருக்கின்றன. அவை பல ஆண்டு காலமாகத் தரிசாக விடப்பட்டிருக்கின்றன. ஆகவே விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா நிலங்களை மேம்படுத்துதல் இந்தத் திட்டத்தின் ஒரு பிரிவாகும். அதாவது, Participatory Water Shed Management.

(2) கூட்டாண்மை, சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக அரசு தரிசு நிலங்களை மேம்படுத்துதல். அதாவது, leasing of Government Waste lands for development by Corporate Sector or Small Companies or Co-operatives.

முதலாவது செயல் திட்டமாக மக்கள் பங்கேற்புடன் விவசாயிகளின் பட்டா நிலங்களில் விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், சேலம், திண்டுக்கல், தேனி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் மொத்த இலக்கான 55 ஆயிரம் ஹெக்டேரில் அதாவது ஏறக்குறைய 1,37,500 ஏக்கரில் 16-4-2003 வரை 21,304 ஹெக்டேர் நிலப்பரப்பில் அதாவது கிட்டத்தட்ட 53,260 ஏக்கரில் வீரிய வகை ஒட்டு மாங்கனி, நெல்லி, சப்போட்டா, சொர்க்கமரம் என்கிற சைமரூபா, புளி, வேம்பு, மூங்கில் மற்றும் சவுக்கு மரக் கன்றுகள் மொத்தம் 23,16,144 நடப்பட்டுள்ளன. இதற்கென 2001-2002-ல் அரசு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 16-4-2003 வரை 21.17 கோடி ரூபாய் செலவு செய்து மேலும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கூடுதலாக 5 கோடி ரூபாய் 2002-2003-ல் திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏற்கெனவே நடப்பட்ட மரக் கன்றுகளின் பராமரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் அதாவது 2003-2004-ல் இத்திட்டத்திற்கென 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தரிசு நில மேம்பாட்டிற்காக விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 8,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்களது தரிசு நிலங்களில் இத்தகைய மரக் கன்றுகளைப் பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் இதுவரை 23,16,144 மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மொத்தம், அதாவது 60 இலட்சத்திற்கு மேற்பட்ட மரக் கன்றுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பருவ மழை பொய்த்துவிட்டதால் அவற்றை நடமுடியவில்லை. ஆகவே, வரும் ஆண்டில் பருவ மழை நன்கு பெய்தால் இந்த மரக் கன்றுகளும் நடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது செயல் திட்டமாக அரசின் பொறுப்பில் உள்ள, பயன்பாட்டிற்குக் கொண்டு . வரப்படாத தரிசு நிலங்கள் குறித்து 423 விண்ணப்பங்கள் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு அதாவது Corporate Sector-க்கு வழங்கப்பட்டு அதில் 224 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டன. 3,689 விண்ணப்பங்கள் சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு, அதாவது Small Companies and Co-operatives-க்கு வழங்கப்பட்டு இதுவரை 1,373 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து பெறப்பட்டுப் பரிசீலனையில் உள்ளன. இதற்காக அமைக்கப்பட்ட குழு ஒரு முறைகூடக் கூடவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி குறிப்பிட்டார்கள். அது சரியான தகவல் அல்ல. இந்தக் குழு பலமுறை கூடியிருக்கிறது. ஆகவே, பூர்த்தி செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களில் யாருக்குக் கொடுப்பது என்பதைப் பற்றி அடிக்கடி இந்தக் குழு சந்தித்து முடிவுகள் எடுத்து வருகிறது. கூட்டாண்மை நிறுவனங்களுக்கு ஏற்றுமதித் தரம் வாய்ந்த பழச் சாறு, ஜாம், மூலிகைகள், மருந்து வகைகள், அழகு சாதனப் பொருட்கள், காகிதக் கூழ் மூலப்பொருள் தயாரித்தல் போன்ற திட்டங்களுக்கென அவர்களின் செயல் திட்டத்திற்கேற்ப தரிசு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.



மேலும், மாவட்டங்களில் அமைந்துள்ள பொருளாதாரத்தில் தன் சார்பு பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பின் மூலம் அதாவது, Federation of Self-Help Groups for Waste Land Development மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 8 ஹெக்டேருக்கு உட்பட்ட தரிசு நிலப் பகுதிகளை மேம்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையிலான குழுக்களின் பரிசீலனையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பழனிசாமி அவர்களும், மாண்புமிகு மகேந்திரன் அவர்களும் பேசுகின்றபோது, இந்தத் தரிசு நிலங்களை ஏழையெளிய மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறோம் என்று குறிப்பிட்டார்கள். அதற்காகத் தான் இந்தத் திட்டம். தனி நபர்களுக்குக் கொடுப்பதில்லை என்பது இந்த அரசின் கொள்கை முடிவாகும். ஆகவே, ஏழையெளிய விவசாயிகள், இந்தத் தரிசு நிலத் திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புகின்றவர்கள் சுய உதவிக் குழுக்களை அமைத்துக்கொள்ளலாம். இப்படிப் பல சுய உதவிக் குழுக்கள் இணைந்து ஒரு கூட்டமைப்பு—ஒரு Federation— அமைத்துக்கொள்ளலாம். அப்படி அவர்கள் அமைத்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பித்தால் அவர்களுக்கு 8 ஹெக்டேர் நிலம் ஒதுக்கப்படும். அப்படி அவர்கள் அந்த நிலத்தைப் பெற்றுக்கொண்டு நிச்சயமாக இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

**திரு எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி பேசட்டும்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமில்லை.

***திரு எச்.எம். ராஜு:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுவில் மாண்புமிகு உறுப்பினர் கே.என். லட்சுமணன் அவர்களையும், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் வில்வநாதன் அவர்களையும் என்னையும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவாக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். எங்கள் மூன்று பேருக்கும் இதுவரை கூட்ட அழைப்பு வரவில்லை, நாங்களும் செல்லவில்லை என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பழனிசாமி அவர்களும், மாண்புமிகு மகேந்திரன் அவர்களும் பேசுகின்றபோது வருகிற ஜூன் மாதம் 12 ஆம் தேதி அன்று மேட்டூர் அணையைத் திறப்பீர்களா, காவிரி நீர் கிடைக்குமா, என்று கேட்டு, அதற்கு இப்போதிருந்தே இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், தொடங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே இந்த அரசு தொடங்கிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாதம் 21-4-2003 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மத்திய அரசின், Secretary of the Ministry of Water Resources, திரு. கோஸ்வாமி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கடிதத்தில் ஏற்கெனவே நடைபெற்ற காவிரி ஆணையத்தின் Monitoring Committee கூட்டங்களைக் குறிப்பிட்டு, வறட்சிக் காலங்களில் நதி நீரை எவ்வாறு பகிர்ந்துகொள்வது என்பது குறித்து ஒரு Distress sharing formula இன்னும் வகுக்கப்படவில்லை. வகுக்கப்பட்ட திட்டத்தை இன்னும் கர்நாடகா ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, இதுகுறித்து விரைந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும என்று வற்புறுத்தி இதற்காக அதிகாரிகள் மட்டத்தில் கூடி ஒரு முடிவு எடுத்து, அதனை அடுத்த Monitoring Committee கூட்டத்தில் வைத்து—Monitoring Committee கூட்டத்தை உடனடியாகக் கூட்டி—இதுகுறித்து ஒரு முடிவு எடுத்து, அதைக் காவிரி ஆணையத்திற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். ஆகவே, தேவையான நடவடிக்கைகளை விழிப்புடன் இந்த அரசு செய்து வருகிறது, எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் விளக்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று பயிர் Insurance திட்டம் காவிரி டெல்டா பகுதிகளில் இயற்கைச் சீற்றத்தால், வறட்சியால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கிறது. கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே பெற்றிருக்கிற கடனை ஈடுசெய்வதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு Group Insurance. ஆகவே இன்றையதினத்திலே மாவட்டம் முழுமையும் பாதித்தால் மட்டுமே அது பயன்படுவதாக இருக்கிறது. ஆக, அதைத்



தனி நபர் பயிர் insurance-ஆகக் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் எல்லா விவசாயிகளும் அதிலே நன்மை அடைவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்கிற காரணத்தினால் அவருக்கு அதனை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தஞ்சை மாவட்டத்திலே டெல்டாப் பகுதியிலேயும் தமிழ்நாடு முழுவதும் இந்தப் பண்ணைக் குட்டைகள் அமைப்பது; நீராதாரங்களைச் சேமித்து வைத்து கீழ்வரும் நீராதாரத்தை மேம்பாடு செய்வதற்கான ஒரு நல்ல திட்டம் அது. அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 30 ஆயிரம் ரூபாய்க்கு பண்ணைக் குட்டை, (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். பண்ணைக் குட்டை என்று அறிவித்திருக்கிறார்கள். அது குறைந்தபட்சம் ஒரு விவசாயி ஒரு ஏக்கருக்காவது பண்ணைக் குட்டை அமைத்துக்கொண்டால்தான் உண்மையாக அது பயனுள்ளதாக அமைய முடியும். இல்லையென்று சொன்னால், இது ஏதோ ஒரு சிறிய ஆதாரம்; ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சில விவசாயிகளின் தேவைக்கேற்ப அந்தப் பணிகள் நடக்கும். சில சமயங்களில் தேவை இல்லாமல் அந்தப் பண்ணைக் குட்டை அமைந்துவிடுகிறது. இதுவரையிலே நான் பல இடங்களிலே பண்ணைக் குட்டையைப் பார்க்கிறபோது சில நீராதாரங்கள், அது கடலுக்குச் சேருகிற இடங்களுக்கு அப்பாற்பட்டு அந்தப் பண்ணைக் குட்டை அமைந்துவிடுகிறது. ஆகையினால் அந்த விவசாயிகளுக்கு நீங்கள் 30 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு குறிப்பிட்ட 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலத்திற்கு ஏதாவது ஒரு வங்கி மூலமாகக் கடனைப் பெற்று அவர்களுக்கு 10 ஆண்டு காலத்திற்கு ஒரு வட்டி இல்லாத கடனைக் கொடுத்தால்தான் குறைந்தது ஒரு ஏக்கருக்கு அவர்கள் அதை வெட்டினால்தான் மீன் வளர்க்க முடியும், மரங்கள் வளர்க்க முடியும், காய்கறிகள் உற்பத்தி செய்ய முடியும், கோடைப் பயிர்களை உற்பத்தி செய்வதற்குகூட சாத்தியமாக இருக்க முடியும். இப்போது 30 ஆயிரம் ரூபாய்க்கு வெட்டக்கூடிய பண்ணைக் குட்டை என்பது செயல்பாட்டுக்குப் போதுமானதாக அமையவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை மூலமாக வழங்கக்கூடிய இடுபொருட்கள், மண்வெட்டி, பாரை இவையெல்லாம் தேவையே இல்லை. அவற்றையெல்லாம் யாரும்

எதிர்பார்ப்பதில்லை. விவசாயிகளுக்கு ஓர் ஆயில் இன்ஜின்; இந்த நேரத்திலே தண்ணீர்ப் பற்றாக்குறையாக இருப்பதனால், அவர்கள் பண்ணைக் குட்டைகள் அமைப்பதனால் ஆயில் இன்ஜின்கள் கொடுப்பதற்கு நம்முடைய வேளாண்மைத் துறை மூலமாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட பொருட்களை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

திருவாரூரைப் பொறுத்தவரையில், ஒரு வேளாண்மைக் கல்லூரி திருவாரூர், நாகை, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்காக—ஒரு வேளாண்மைக் கல்லூரி—வேண்டுமென்று நீண்டகாலமாக ஒரு கோரிக்கை இருக்கிறது. ஆகவே, பல இடங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற வகையில் அதை நிறுவ வேண்டும். விதைப் பண்ணைகள் அந்த மாவட்டங்களில் நிறைந்திருக்கின்றன. அவை முற்றிலும் செயல்படாமல் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளைப் புனரமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போன்று ஏற்கெனவே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், நானும் இதே சட்டமன்றத்திலே அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டுமென்று இரண்டு பேரும் சேர்ந்து வெளிநடப்பு செய்தோம். கோரிக்கைகள் கொடுத்திருக்கிறோம். இதை ஏன் நினைவுபடுத்துகிறேன் என்று சொன்னால் இன்றைக்கு அவர்...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் வாக்குறுதி கொடுத்திருந்தது. 'நீங்கள் கொடுத்த அந்த வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை' என்றுதான் கேட்டோம். அப்போதிருந்த முதலமைச்சர் 'என்னை ஆள விடுங்கள், ஆளையும் விடுங்கள்' என்று சொல்லித் தப்பித்து ஓடினார். அவர் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்பதைத்தான் நான் நினைவுபடுத்தினேனே தவிர, நாங்கள் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம் டன்னுக்கு என்று ஒரு போதும்... *(சிரிப்பு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட நாமே அந்த இடத்தில் இருக்கும்போது கொடுப்பதுதானே நியாயம். அதைத்தான் நான் கேட்கிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்க வேண்டுமென்று எங்களுக்கும் ஆசைதான். அதற்குத்தான் ஏற்கெனவே மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அழகாகச் சொல்லிவிட்டார்கள். சட்டியில் இருந்தால்தானே அகப்பையிலே வருமென்று கூறினார். அதையேதான் நானும் கூறுகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர், நாகை மாவட்டங்களிலே காவிரி ஆறு பாயக்கூடிய பகுதிகள் அனைத்துமே கடலில் போய் வடியக்கூடிய முகத் துவாரங்களாக இருக்கின்றன. இன்றைக்கு அந்த மாவட்டத்திலே மிகப்பெரிய பதட்டமான சூழ்நிலை இருக்கிறது. இறால் பண்ணை அமைக்கிறேன், உப்பளம் அமைக்கிறேன் என்ற பெயராலே அந்தப் பகுதியிலே ஆற்றினுடைய வடிமுனைகளை முற்றிலுமாகவே அடைத்துவிட்டார்கள். யார் அனுமதி கொடுத்தார்கள்? எப்படி அனுமதி வாங்கினார்கள்? எப்படி அடைக்கிறார்கள்? என்பதே தெரியவில்லை. ஏதோ இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கலாம், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஒரு பெரு வெள்ளம் வந்தது என்று சொன்னால் முற்றிலுமாக அந்தக் கிராமப்புறத்திலே இருந்து கொண்டிருக்கிற குடிசைகளும் அழிந்துவிடும், விளை நிலங்களும் அழிந்துவிடும், பயிரும் முழுவதுமாக, முற்றிலுமாக நீரில் அழிந்து விடும். அப்படிப்பட்ட அபாயம் இருக்கிறது. இதன்மீதும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்தப் பகுதியிலே ஒரு பதட்டமான சூழ்நிலை இருக்கிறது. அந்தவகையில் இறால் பண்ணையை உடனடியாகத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, பேசுகிற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று சொன்னான் பாரதி. உழவர்கள் இந்தியாவின் முதுகெலும்பு என்று சொன்னார் தேசப்பிதா மகாத்மா. நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், 'கடவுள் என்னும் முதலாளி, கண்டெடுத்த தொழிலாளி, விவசாயி' என்று பாடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகளுடைய மானியக் கோரிக்கையில் நான் உரையாற்றுவதிலே உண்மையிலே பெருமையடைகிறேன். விவசாய மானியக் கோரிக்கையில் உரையாற்றுவதற்கு முன்னால் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளிடத்தில் இருக்கக்கூடிய ஒரு கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். புதுக்கோட்டை மாவட்டம், என்னுடைய அறந்தாங்கி தொகுதியிலே பாதிக்கு மேற்பட்ட பகுதியும், ஆலங்குடி தொகுதியும், புதுக்கோட்டை, குளத்தூர், திருமயம் போன்ற தொகுதிகளும் ஆழ்துளைக் கிணறுகளிலிருந்து, மின்சாரத்தை உபயோகித்து விவசாயம் செய்கிற பகுதிகள் ஆகும். அந்தப் பகுதியிலே அடிக்கடி மின்தடை ஏற்பட்டு சென்ற வாரம் கூட ஆலங்குடி தொகுதி, கிரமங்களத்திலே விவசாயிகள் ஆர்ப்பாட்டம் எல்லாம் நடத்தினார்கள். ஆகவே, நான் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய பகுதியிலே அடிக்கடி ஏற்படுகிற மின் தடையை அகற்றி எங்கள் பகுதி விவசாய மக்களுடைய வாழக்கையில் ஒரு நல்ல நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்திலே ஒரு மிகப் பெரிய கோரிக்கை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மிகப் பெரிய வெள்ளம் வந்தபோது அங்கே சுற்றுப்பயணம் வந்திருந்தார்கள். அன்றைக்கு புதுக்கோட்டை தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த எங்களுடைய புதுக்கோட்டை ராஜா அவர்களும், ஆலங்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த புஷ்பராஜ் அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பார்த்து ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். கொள்ளிடத்திலே உபரி நீர் நிறைய வருகிறது, அந்த உபரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்குத் தர வேண்டும், நாங்கள் விவசாயத்திலே மிகவும் சிரமப்படுகிறோம், நிலத்தடி நீர் மிக மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது, எங்களுடைய



ஆவுடையார்கோவில் பகுதியிலே 1,100 அடிக்குக் கீழேதான் ஆழ் துளைக் கிணறு மூலம் தண்ணீர் எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று இவற்றையெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே சொல்லி அன்றைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆணையிட்டு, அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடத்திலே சொல்லி, இப்போது ஒரு திட்டம் திட்டப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-50

காவிரி நதியிலே வருகிற தண்ணீரைக் கணக்கெடுத்துப் பார்க்கிறபோது, ஒன்றிரண்டு ஆண்டுகளைத் தவிர காவிரியிலே உபரி நீர் வருகிறது. அது கொள்ளிடத்திற்கு வீணாக அனுப்பப்பட்டு, கடலிலே சென்று கலக்கிறது. அதை எங்கள் மாவட்டத்திற்குத் தர வேண்டும் என நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மிக அதிகமான நிதிச் சுமைகூட வராது. முன்பு இருந்த எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுப் பணித் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி, 120 கோடி ரூபாயிலே ஒரு திட்டத்தினைத் தயாரித்து, அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். 25 ஆயிரம் கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மத்திய சர்க்காரை ஆளுகிற காரணத்தாலே உங்களுக்கு ரொம்பச் சாதாரணமாகத் தெரிகிறது. (சிரிப்பு)

**திரு. ப. அரசன்:** இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனது வைத்தால் முடியும் என்பதற்காகச் சொன்னேன். 120 கோடி ரூபாயிலே ஒரு மாவட்டத்திற்கு அற்புதமான திட்டத்தைத் தரமுடியும் என்று சொன்னால், தர முடியும் என்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும் என நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகத் தன்னுடைய மானியக் கோரிக்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். உலகம் எங்கும் வேளாண்மை விரைவான மாறுதலை அடைந்து வருகிறது என்று குறிப்பிட்டு, நம்முடைய விவசாயம் பல்வேறு மாறுதல்களை எதிர்நோக்கியிருக்கிறது என்பதை அவர்களுடைய மானியக் கோரிக்கையிலே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள

விரும்புவது என்னவென்று சொன்னால், உலகம் மாறி வருகிறபோது, விவசாயமும் மாறித்தான் ஆக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மனிதனுடைய உழைப்பு போக, இயந்திரங்களை உபயோகித்து விவசாயம் செய்கிற சூழ்நிலை வந்ததற்குப் பின்னாலே அந்தச் சவால்களை எல்லாம் சந்திக்கிற அளவிற்கு, நம்முடைய விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டும் என இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அவருடைய மானியக் கோரிக்கையிலே, தரமான விதைகளைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆளுநர் தன்னுடைய உரையை முடித்ததற்குப் பின்னாலே, அவரிடமே கோரிக்கையாக வைத்திருக்கிறேன். இந்த ஆண்டு கடுமையான வறட்சியின் காரணமாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலேயும், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டங்களிலேயும் பயிர்கள் சரியாக விளையாத காரணத்தாலே, வருகிற ஆண்டு நல்ல தரமான விதைகளை விவசாயிகளுக்குத் தருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என நான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுகொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே, அவரிடத்திலே என்னுடைய ஒரு பணிவான கோரிக்கை என்னவென்று சொன்னால், விவசாயிகளிடத்திலிருந்து நெல் கிலோ ஆறு ரூபாய்க்கு வாங்குகிறீர்கள். ஆனால், விதையை அவர்களுக்குத் திருப்பித் தருகிறபோது 10 ரூபாய், 11 ரூபாய், 12 ரூபாய் என்று அளிக்கிறீர்கள். ஏற்கெனவே, மானியம் எல்லாம் விதை நெல்லுக்கு இருந்தது. இப்போது சில நெல் விதைகளுக்கு மானியங்கள் இல்லை. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மானிய விலையிலே தரமான விதை நெல்லைத் தருவதற்கு முயற்சிக்க வேண்டும் என நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே இந்த அவையிலேகூட, பூச்சிக் கொல்லி மருந்து உபயோகத்தைப் பற்றி கேள்வி வந்தபோது, நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அரசாங்கத்தாலே தயாரிக்க முடியவில்லை; நாங்கள் அதை அடிக்கடி பரிசோதிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவுதான் பரிசோதனை செய்தாலும், விவசாயிகளுக்குத் தரமான பூச்சிக் கொல்லி மருந்துகள்



கிடைப்பதில்லை. ஆகவே, நான் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன என்று சொன்னால், விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிக் கொல்லி மருந்துகளை அரசாங்கமே தயாரிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஏன் என்று சொன்னால், இப்போது பூச்சிக் கொல்லி மருந்து உபயோகம் என்பது விவசாயிகளிடத்திலே மிக அதிகமாக இருக்கிறது. உபயோகிக்கக்கூடாது என்று எவ்வளவுதான் நம் வேளாண்மைத் துறையிலேயிருந்து சொல்லியிருந்தாலும், அவர்கள் அதிகமான பூச்சிக் கொல்லி மருந்துகளை உபயோகிக்கிற காரணத்தாலே, தரமான பூச்சிக் கொல்லி மருந்துகளைத் தருவதற்கு, அரசே தயாரிக்க வேண்டும் என நான் அவர்களை இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

அதேபோல, விவசாயிகளுக்குப் பயன் தரக்கூடிய வகையிலே பயறு, உளுந்து போன்ற பயிர்களைப் பயிரிடுவதற்கு வேளாண்மைத் துறை ஊக்கம் அளிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் நெற் பயிரிலே அதிக இலாபம் இல்லை. மிக அதிகமான செலவு செய்து மிகக் குறைவான இலாபத்தைப் பெறுகிற ஒரு பயிராக நெற் பயிர் இருப்பதாலே பயறு, உளுந்து, போன்ற பயிர்களை விவசாயிகள் அதிகமாக விளைவித்து அதன்மூலம்....... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஐந்து நிமிடம்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள் அரசன்.

**திரு. ப. அரசன்:** பயறு, உளுந்து போன்ற பயிர்களை விளைவிப்பதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஊக்குவிக்க வேண்டும் என நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நான் சிலவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே எங்களுடைய மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னாலே நம்முடைய மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தினை ஆய்வு

செய்தார்கள். அப்படித் திட்டத்தினை ஆய்வு செய்கிறபொழுது நானும், நம்முடைய ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நிறையக் கேள்விகள் கேட்டோம். சட்டமன்றத்திலேதான் கேட்கமுடியவில்லை, இங்கேயாவது கேட்போம் என்று நாங்கள் நிறையக் கேள்விகளைக் கேட்டோம். அப்போது அதிகாரிகள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்திலே உங்களுக்குப் போதுமான வாய்ப்புத் தரப்படுகிறது.

**திரு. ப. அரசன்:** அப்போது அதிகாரிகள், 'இல்லை, இல்லை நாங்கள் சரியாகச் செய்வோம்' என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே, எங்களுடைய கேள்விகளைக் கேட்டதற்குப் பின்னாலே அவர்கள் இரண்டு நிகழ்ச்சிகளை, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில் என்ன செய்கிறோம் என்று சொல்லி விழா ஏற்பாடு செய்து என்னை, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களை, ஆலங்குடி பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரையெல்லாம் அழைத்து அங்கே விழா நடத்தினார்கள். அப்படி விழா நடத்தியபோது என்ன சொன்னார்கள் என்று சொன்னால் இப்பொழுது விவசாயிகளை ஊக்குவிப்பதற்கான நிதிதான் வந்திருக்கிறதே தவிர, இன்னும் செயல்பாட்டிற்கான நிதி வரவில்லை என்று என்னிடத்திலே அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான நிதி வேண்டும். ஏனென்றால் மிக உன்னதமான திட்டம், முதலமைச்சர் அவர்களுடைய சீரிய சிந்தனையிலே உதித்த நல்ல திட்டம். அந்த திட்டத்திற்கு எங்களுடைய மாவட்டத்திற்கு நிறைய நிதி தர வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் *(குறுக்கீடு)* சரி, ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. ப. அரசன்:** எங்களுடைய காரைக்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தை அதிலே சேர்க்கவில்லை, அதைச் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, என்ன சேர்க்கவில்லை?

**திரு. ப. அரசன்:** தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே சிவகங்கை மாவட்டத்தைச் சேர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



ஆகவே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திலே சிவகங்கை மாவட்டத்தைச் சேர்க்க வேண்டும் என நான் கேட்டுக்கொண்டு கரும்பு விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாய்..... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்த அளவிலே நான் ஒரு விவசாயி என்கின்ற காரணத்தினால் இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சியினருக்கு எல்லாம் பேசுவதற்கு சரியாக வாய்ப்பு அளிப்பதில்லை என்கின்ற ஒரு குறையை என்னுடைய நண்பர்கள் எல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாளும் நடைமுறையிலே நான் பார்க்கிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களைக் காட்டிலும், எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர் என்ற முறையிலேதான் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இன்றைக்குக்கூட நேரம் அதிகமாகி விட்டது என்கின்ற காரணத்தினால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்கள். தாங்கள் சொல்வதுதான் உண்மை. ஆளும் கட்சியினுடைய வாய்ப்பைப் பறித்துத்தான் பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுக்கு நான் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். எண்ணிக்கை விகிதாச்சாரத்தில் பார்த்தால் *(குறுக்கீடு)* பெரும்பாலும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வாய்ப்பே கிடைக்காது. ஆளும் கட்சியினுடைய வாய்ப்புத்தான் கொடுக்கப்படுகிறது.

**திரு. லா. சந்தானம்:** பேசுவதற்கு நேரம் இல்லை என்கின்ற காரணத்தினால்தான் வேண்டாம் என்று கூட ஒப்புக்கொண்ட நேரத்தில் ஆளும் கட்சியிலே இருக்கின்றவர்களை எல்லாம் குறைத்துக்கொண்டு அவர்கள் பேசட்டும் என்று சொல்லுகின்ற நிலையை முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அரசு எந்த அளவிற்கு எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது என்று இதன்மூலம் உறுதி செய்யப்படுகிறது என்பதை நான் சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நேரம் இல்லை என்கின்ற காரணத்தினால்; "பசி வந்தால் பத்தும் பறந்து விடும்" என்று சொல்வார்கள். அப்படிப் பசி வந்த நேரத்திலே எனக்கு வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களை எல்லாம் நாம் சோதிக்காது செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்று சொன்ன வள்ளுவன் குறள் போல் இங்கு செவிக்கு உணவு கிட்டவிருக்கிறது. நமது மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூற இருக்கிறார்கள். எனவே இதையெல்லாம் பொருட்படுத்தாது அந்த செவிக்கு உணவு என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற முறையிலேயும், விவசாயம் என்பதுதான் தமிழ்நாட்டு மக்களுடைய மிகப் பெரிய தொழிலாக இன்றைக்கு 80 விழுக்காடுகளுக்கு மேலே இருக்கின்றவர்கள் அந்தத் தொழிலை மேற்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-00

இன்றைக்கு நமது கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது போல் நெல், சோளம் போன்ற பயிர்களை எல்லாம் இந்திய அளவிலே ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்தினுடைய உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கிறது என்பதை கொள்கைக் குறிப்பிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பணப் பயிர்களாகக் கருதப்படும் பருத்தி, கரும்பு போன்றவை எல்லாம் ஓரளவு அரசு நிர்ணயித்த இலக்கைக் காட்டிலும் குறைவாகத்தான் உற்பத்தி செய்ய முடிகிறது என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த மாநிலத்திலே நிலவி வந்த கடுமையான வறட்சியின் காரணமாகத்தான் நாம் அந்த இலக்கை எட்ட முடியவில்லை என்கின்ற நிலை இருக்கிறது. இருந்தாலும் அந்த வறட்சி நிலைமையைப் போக்குகின்ற அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச அரிசி வழங்குகின்ற திட்டத்தின் மூலமாகவும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குவதாக அரசு அறிவித்திருக்கின்ற காரணத்தாலும் இப்போது சிறிது ஆறுதல் அடைந்து மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்

எங்களது பெரியாறு நீர்ப் பாசனப் பகுதி எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக



பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கடைசியாக ஓர் இருமுறை தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தால் அந்த விவசாயம் முழுமையாக வந்திருக்கும் என்று சொல்லுகிற நேரத்தில், அணையிலே தண்ணீர் இல்லை என்கின்ற காரணத்தினால் அதைச் செய்ய முடியவில்லை. ஆனால் அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் ஒரு யோசனையை அரசுக்குத் தெரிவித்தார்கள். அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர் சற்று நல்ல விதத்திலே இருக்கிறது. எனவே, ஒரு தனித் திட்டமாக எடுத்துக்கொண்டு அங்கே இருக்கின்ற கிணறுகளுக்கெல்லாம் மின்சார இணைப்புக் கொடுத்தால் அது நிரந்தரமான ஒரு திட்டமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு ஓர் இருமுறை தண்ணீர் தட்டுப்பாடு வருகின்ற நேரத்திலே அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, நிலத்தடி நீரைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய நெல் விவசாயத்தை முழுமையாகச் செய்துகொள்ள முடியும். அதற்கு அரசு ஒரு தனித் திட்டத்தைத் தீட்டி அந்த பெரியாறு விவசாயப் பாசனப் பகுதிகளிலே ஓரளவுக்கு, 100, 200 மின் இணைப்புகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்ற நிலையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதை பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே பேசுகின்றபோதுகூட இப்படி ஒரு திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த பெரியாறு விவசாயம் என்பது 3, 4 மாவட்டங்களை உள்ளடக்கிய விவசாயப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், அதை ஒரு தனித் திட்டமாக, மின் இணைப்பு வழங்குகிற ஒரு திட்டத்தை நீங்கள் ஏற்படுத்தித் தருவீர்களானால் அது நிரந்தர பயனுள்ள ஒரு திட்டமாக அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்கு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப் போல எங்கள் பகுதியிலே இருக்கின்ற இரண்டு கரும்பு ஆலைகள் இருக்கின்றன. அலங்காநல்லூரிலே இருக்கின்ற கூட்டுறவு ஆலை, பாண்டியராஜபுரத்திலே இருக்கின்ற பொதுத் துறை ஆலை. இந்த இரண்டு ஆலைகளிலுமே விவசாயிகள் தங்களுடைய கரும்பைப் பதிவு செய்துவிட்டு எப்போது ஆலை ஓடும், அதிலே அரவைக்கு எப்போது கரும்பை எடுத்துக்கொள்வார்கள் என்கிற நிலையிலே காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலைகள் ஓட

முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி இருக்கிற நேரத்திலே பக்கத்தில் இருக்கின்ற ஆலைகளுக்காவது அதை எடுத்துச் செல்வதற்கு அதிகாரிகளும், அரசும் உரிய நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுடைய கரும்பை எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கேரளாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவிலே இரண்டாவது மாநிலமாக தென்னை உற்பத்தியிலே, தேங்காய் உற்பத்தியிலே இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்கின்ற நிலை இருக்கிறது. இங்கு கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானம் அனைத்தையும் நான் படித்துப் பார்த்தேன். ஏறக்குறைய 10, 20, வெட்டுத் தீர்மானங்கள் இந்த தென்னையைப் பாதிக்கின்ற ஈரியோ-பைட் என்கின்ற சிலந்திப் பூச்சி தாக்குதலை நீக்குவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து, உரிய மருந்தைக் கண்டுபிடித்து, அதை மானிய விலையிலே கொடுத்து அந்த விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற வெட்டுத் தீர்மானங்களைத்தான் பெரும்பாலானோர் கொடுத்திருக்கிறார்கள். எனவே, சென்ற முறை வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கெல்லாம் நிவாரணம் வழங்கிய இந்த அரசு, சிலந்தி பூச்சிப் நோயைப் போக்குவதற்கு ஏதாவது ஒரு வழியில்—விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்திருக்கிறது—அதற்கு எப்படியாவது ஒரு மருந்தினைக் கண்டுபிடித்து அதை மானிய விலையிலே விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்கள் பயன்படுகிற நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதோடு இங்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசுகின்றபோதுகூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். விவசாயத்தை வளர்க்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தையெல்லாம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற இந்த அரசு ஏறக்குறைய 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலமாகப் பரீட்சை நடத்தப்பட்டு, சென்ற ஆண்டு அவர்களுக்கு நேர்முகத் தேர்வும் நடைபெற்று அவர்கள் பணிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு பணி நியமன தடை உத்தரவு விதித்திருந்தாலும்கூட, அது தேர்வாணையத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பொருந்தாது என்கின்ற ஒரு விலக்கையும் அளித்திருக்கின்ற



காரணத்தினால் அவர்களுக்கு உடனடியாகப் பணி நியமனம் தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, ஏழை விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு 30 கிலோ வீதம் இலவச அரிசி வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதாகச் சில அதிகாரிகள் கூறினார்கள் என்று இங்கே கூறினார்கள். அப்படி யார் கூறினார்கள் என்று தெரியவில்லை. அந்தத் திட்டம் நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து"

என்ற குறளுக்கு ஏற்ப உலகுக்கு அச்சாணிபோலச் செயல்பட்டு வரும் விவசாயிகளுடைய வாழ்வு செழிக்க செயல்பட்டு வரும் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, பிறவா யாக்கை பெரியோன் என்ற சிறப்புக்கு உரியவன் சிவபெருமான். பிறப்பும், இறப்பும் இல்லாதவன் அவன். ஒரு தாயினுடைய வயிற்றில் பிறக்காதவன். அத்தகையோன் புனிதவதியாரை, அம்மையே என அழைத்து தாயாக்கிக்கொண்டான். குழந்தைபேறு இல்லாத அவர் இறைவனுக்கே தாயானார். இறைவன் எல்லா உயிர்கள் இடத்தும் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கருணை வைக்கிறார். அப்படித்தான் கோடிக்கணக்கான தொண்டர்களுக்குத் தாயாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) கருணை வைக்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் வணங்குகிறேன். தெளிவான சிந்தனை, தீர்க்கமான முடிவு, உறுதியான செயல்பாடுகள் இவற்றை வழிமுறைகளாகக் கொண்டு

தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற, அந்த மக்களுடைய நம்பிக்கையை நிறைவேற்றுகிற வகையில் வறுமையை அகற்றி, தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றும் உணர்வோடு இலக்கை அடையும் வரை இமை மூடாமல் உழைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழி காட்டுதல்படி வேளாண்மைத் துறையில் ஆற்றியுள்ள, ஆற்ற உள்ள நல்ல பணிகளை நான் உங்கள் முன்னாலே வைக்கிறேன். அப்படி வைக்கிற இந்த நேரத்தில் நடந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியை உங்கள் முன்னாலே நான் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்றே கருதுகிறேன்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்றான் வள்ளுவன். கடந்த ஆண்டு இந்தக் கூட்டத் தொடர் நடந்துகொண்டு இருந்த நேரத்தில், மே தின விழா பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு சென்னைக்கு வருகிற நேரத்தில் மிகப் பெரிய கார் விபத்துக்கு உள்ளாகி மருத்துவமனையிலே நான் உணர்விழந்த நிலையில் இருந்த நேரத்தில், ஜீவ மரண போராட்டத்தில் இருந்த நேரத்தில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேரடியாக வந்தார்கள். நான் இருக்கிறேன் கவலைப்பட வேண்டாம், தைரியமாக இருங்கள் என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகள்தான் இன்றைக்கு என்னை இங்கே நின்று பேச வைத்திருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கு தாய் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் நல்ல கருத்துகளை, நல்ல ஆலோசனைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிற நல்ல கருத்துகளையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனமாகப் பரிசீலித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படைக் கருவாக அமைவது வேளாண்மை. அந்த



வேளாண்மையிலே ஏதாவதொரு தடை ஏற்படுமேயானால், தளர்ச்சி ஏற்படும் என்று சொன்னால், அது சமூகப் பொருளாதாரத்திலே மிகப் பெரிய ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்திவிடும். ஆகவே, வேளாண்மைத் துறையில் ஒரு தளர்ச்சி ஏற்படாமல், வீழ்ச்சி ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய ஒரு நிலை இன்றைக்கு இருக்கிறது. அந்த நிலையை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

இன்றைக்கு பெருகி வரக்கூடிய மக்களினுடைய தொகை; நகரமயம் ஆகிற காரணத்தினால் குறைந்து வரக்கூடிய நிலத்தினுடைய பரப்பு; இதனால் வேளாண்மை செய்யக்கூடிய நிலத்தினுடைய பரப்பு குறைந்து வருகிற காரணத்தினால் பண்ணக்கூடிய உணவு உற்பத்தி குறைந்து விடாமல் பார்க்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு வேளாண்மையிலே புதிய தொழில்நுட்பங்களையும், மண்ணின் தன்மை மற்றும் தட்ப வெப்ப நிலை ஆகியவற்றுக்குத் தகுந்தாற்போல பயன்படுத்த வேண்டிய நிலையிலே நாம் வந்திருக்கிறோம்.

வேளாண் பொருள்களினுடைய வர்த்தகம் பற்றியும், தாராளமயமாக்கல் கொள்கையைப் பற்றியும் இங்கே பேசுகிறபோதுகூட சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அவர்களுடைய அச்சத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு மாறி வருகிற உலகத்தில் வேளாண் பொருட்களைப் பொறுத்த அளவிலே வர்த்தகம் என்பது உலகமயம் ஆக்கப்பட்டுவிட்டது. உணவுப் பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளெல்லாம் இன்றைக்கு அகற்றப்பட்டுவிட்டன. இதன் மூலம் தரமான உணவுப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்கிற ஒரு சூழ்நிலை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகி கிடைக்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக, குறைந்து வரக்கூடிய மழையினுடைய அளவு, மாசுபட்டுவரும் வேளாண்மை வளங்கள், அதிகரித்து வரக்கூடிய வேளாண்மை உற்பத்திச் செலவு இப்படிப்பட்ட பிரச்சினைகளை இன்றைக்கு வேளாண்மைத் துறை சந்திக்க வேண்டிய நிலையிலே இருக்கிறது.

வெள்ளத்திற்கும், வறட்சிக்குமிடையே மிகப் பெரிய போராட்டத்தை நம்முடைய விவசாயிகள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் சந்திக்கிறபோதெல்லாம் அவர்களுடைய வாழ்க்கை மிகப்பெரிய கேள்விக்குறியாக அமைந்துவிடுகிறது. குறிப்பாக, 2002-ல் தமிழகம் இயற்கையான

வறட்சியையும் சந்தித்தது, செயற்கையான வறட்சியையும் சந்தித்தது. இந்த இயற்கை இடர்ப்பாடுகளால் மிகப் பெரிய ஒரு நெருக்கடியை தமிழ்நாடு சந்தித்தக் காரணத்தினால், இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வளர்ச்சி விகிதம் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்பட்டுவிட்ட வறட்சியின் காரணமாக திட்டமிட்ட வளர்ச்சியை அடைய முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தினால்தான், நாம் திட்டமிட்ட இலக்கை அடைய முடியவில்லை என்பதை இந்தநேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரியிலே, தமிழகத்திற்குரிய நீரைக் கர்நாடகம் திறந்துவிடாததால் குறுவைச் சாகுபடி மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. பொதுவாக, டெல்டா மாவட்டங்களில், குறுவையினுடைய இயல்பான சாகுபடியினுடைய பரப்பு 2 இலட்சத்து 7 ஆயிரத்து 400 ஹெக்டேர். இதில் சாகுபடி செய்யப்பட்டது 51 ஆயிரத்து 200 ஹெக்டேர் மட்டுமே. நிலத்தடி நீரை அதிகமாகப் பயன்படுத்திதான் அந்தச் சாகுபடியும் செய்யப்பட்டது. இதனால் நாட்டிற்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு என்பது 496.7 கோடி ரூபாயாகும். இதனால் இப்படி இழப்பு ஏற்பட்டிருக்கிற இந்தநேரத்திலே காவிரி டெல்டா பகுதியிலே உரிய தண்ணீர் கிடைக்காத காரணத்தினால் அங்கே இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கிற ஒரு நிலை ஏற்பட்டது. இந்த நிலையிலிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்தார்கள். எப்படி எடுத்தார்கள் என்று சொன்னால், எந்தப் பகுதியிலே பிரச்சினையோ அந்தப் பகுதிக்கே நேரடியாக வருகிறார்கள். அதிகாரிகளை அழைத்துப் பேசுகிறார்கள். அழைத்துப் பேசி வேலைவாய்ப்பு இல்லாமலிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுடைய பிரச்சினையைப் போக்குவதற்காக 164.18 கோடி ரூபாய் செலவில் உடனடியாக வேலைவாய்ப்பை அளிக்க வேண்டுமென்று உத்தரவை இட்டு, உத்தரவை வழங்கிவிட்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துவிட்டார்கள்.

பிற்பகல் 1-15

அதுமட்டுமல்ல; தொடர்ந்து பருவ மழை பெய்யாத காரணத்தினாலும், காவிரியிலிருந்து தண்ணீர் வராத காரணத்தினாலும், சம்பா சாகுபடி மிகப் பெரிய பாதிப்பிற்கு



உள்ளானது. இதனால், நிலவிய கடுமையான வறட்சியால் அங்கே மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும் அனைத்துப் பயிர்களுடைய உற்பத்தியும் குறைந்து போனது. அதுமட்டுமல்ல; அருமை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக எவ்வளவு பெரிய பாதிப்பு உணவு உற்பத்தியிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். மொத்த சாகுபடிப் பரப்பு 59 இலட்சத்து 20 ஆயிரம் ஹெக்டேர். சாகுபடி செய்த பரப்பு 42,96,100 ஹெக்டேர். சாகுபடி செய்யாத பரப்பு 16,23,900 ஹெக்டேர். இதனால் பொருளாதார இழப்பு 3710.5 கோடி ரூபாய். சாகுபடியில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு 1574.47 கோடி ரூபாய். தென்னை மர பாதிப்பினால் ஏற்பட்ட இழப்பு ரூ. 30.5 கோடி. தோட்டக்கலை பயிரினால் ஏற்பட்ட இழப்பு ரூ. 374.5 கோடி. ஆகமொத்த இழப்பு 5,690.0 கோடி ரூபாய் அளவிற்கு பொருளாதார இழப்பைத் தமிழ்நாடு சந்தித்திருக்கிறது. பெற்ற தாய்க்குத்தான் தெரியும் பிறந்த குழந்தை பசியினால் அழுகிறதா, நோயால் அவதிப்படுகிறதா என்பது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அந்த டெல்டா பகுதியிலே இருக்கிற விவசாயிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதற்காக அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் யாரும் கேட்காமல்— ஒன்று சொல்வார்கள், "தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று. யாரும் தட்டவும் இல்லை; யாரும் கேட்கவும் இல்லை—அங்கே இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலையைப் பார்த்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீபாவளி பரிசாக 21 கோடி ரூபாயைத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள்கூட எதிர்பார்க்கவில்லை; புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கேட்கவில்லை. காரணம், இருக்கிற நிதி நெருக்கடி; எப்படி எதைச் சொல்வது என்று நாங்களே அச்சப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு அன்றைக்கு 21 கோடி ரூபாயைத் தந்தார்கள்.

அதுமட்டுமல்ல; அதற்குப் பிறகு சம்பா பயிரிலே ஏற்பட்ட இழப்பினால் விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு 217 கோடி ரூபாய் அளவிலே வறட்சி

நிவாரண நிதியாக அறிவித்து, அங்கே பணிகள் நடைபெறுவதற்கான உத்தரவினைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கினார்கள். அதுமட்டுமல்ல; இன்றைக்கு இந்த நிலையிலே தமிழ்நாட்டிலே நிலவிய வறட்சி நிலையை நாம் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து விவசாயப் பெருமக்களைக் காப்பாற்றுவதற்காகவும், விவசாயிகளைக் காப்பதற்காகவும் ஒரு நீண்ட நெடிய தொலைநோக்கோடு செயல்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதன்முதலாக, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய—நம்முடைய மாண்புமிகு பழனிசாமி போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே இருக்கிற—தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்ற கோரிக்கையை அவர்கள் மட்டும் வைக்கவில்லை, நாங்களும் வைத்தோம். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே முதன் முறையாக ரூ.164.18 கோடி, அந்த மாவட்டத்தினுடைய வேலை வாய்ப்புக்காக, 3 மாவட்டத்தினுடைய வேலைவாய்ப்பிற்காக மட்டும் தந்தார்கள். காவிரி டெல்டா மாவட்டங்களிலே வாழக்கூடிய 10 இலட்சம் விவசாயிகளுக்காக நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, 21 கோடி ரூபாயைப் பரிசாகத் தந்தார்கள். டெல்டா மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு வேலைக்கு உணவுத் திட்டத்திலே 217.09 கோடி ரூபாயைத் தந்தார்கள். பட்டுப்போன தென்னை மரங்களுக்காக நிவாரண நிதியாக 30.50 கோடி ரூபாயைத் தந்தார்கள்.

அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை. அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 163.41 கோடி ரூபாயைத் தந்தார்கள். அதற்குப் பிறகு தற்போது நில வரியைத் தள்ளுபடி செய்வதற்காக ரூ.50 கோடியை ஒதுக்கித் தந்தார்கள். நிவாரண உதவியாக ரூ.250 கோடி; வட்டி தள்ளுபடியாக ரூ.50 கோடி; வறட்சி நிவாரணம் என்று சொன்னால், மொத்தத்தில் ரூ.946.18 கோடி; வெள்ள நிவாரணமாக ரூ.49 கோடி; கூட்டுறவு வட்டி மற்றும் அபராத வட்டித் தள்ளுபடியாக ரூ.310.5 கோடி; பயிர் காப்பீட்டுத் திட்ட பிரீமியத் தொகையாக ரூ.6.61 கோடி; ஆக, மொத்த உதவியாக 1312.29 கோடி ரூபாயைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இதையெல்லாம் எதற்காக நான் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த ஆட்சி விவசாயிகளுடைய பிரச்சினைகள்மீது எவ்வளவு



அக்கறை கொண்டு, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எவ்வளவு மனிதாபிமானத்தோடு, தாய் உள்ளத்தோடு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

*பிற்பகல் 1-20*

கடந்தகாலத்திலே நம்முடைய விவசாயிகள் பல்வேறு போராட்டங்களைத் தங்களுடைய பிரச்சினைக்காக எடுத்து வைத்திருக்கிறார்கள். நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.பழனிசாமி அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபொழுது, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் பிறகு அதற்கு வருகிறேன். அன்றைக்கு நீங்கள் மட்டுமல்ல, எல்லோருமே வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டீர்கள். இதே மன்றத்திலே நீங்கள் கேட்ட கேள்விக்கு அப்பொழுது முதல்வராக இருந்த திரு. கருணாநிதி அவர்கள் என்ன சொன்னார்? வட்டியையும், அபராத வட்டியையும் நாங்கள் தள்ளுபடி செய்ய முடியாது. அதற்கு என்ன காரணம் என்றால் நபார்டு வங்கி ஒத்துக்கொள்ளவில்லை; நபார்டு வங்கி ஒத்துக் கொள்ளாததற்கு என்ன காரணம் என்றால் முன்னாள் இருந்த முதலமைச்சர் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார் என்று இப்படி ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே சொன்னார்கள். ஆக, இப்படி விவசாயிகளுடைய பிரச்சினைகளை அன்றைக்கு மனிதாபிமானத்தோடு அணுகவில்லை. 4 ஆண்டு காலம் போராடினார்கள். மிகப் பெரிய வறட்சி, வெள்ளம். அது எங்களுக்குத் தெரியும். டெல்டா பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தெரியும். அவ்வளவு பெரிய போராட்டமான வாழ்க்கையை 4 ஆண்டு காலம் சந்தித்துக் கொண்டிருந்தோம். ஆனால், 4 ஆண்டு காலத்திற்குப் பிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன், நீங்களும் கேட்கவில்லை, நாங்களும் கோரிக்கை வைக்கவில்லை. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 310.5 கோடி ரூபாயை விவசாயிகளுடைய வட்டிக்காகவும், வரிக்காகவும் தள்ளுபடி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல இதைச் சொல்ல வேண்டியது என்னுடை கடமை என்பதற்காக நான் சொல்கிறேன். பதிவு செய்ய வேண்

என்பதற்காக நான் சொல்கிறேன். நீலகிரி மாவட்டத்திலே தேயிலைத் தொழிலாளர்களுடைய பிரச்சினைகள். தேயிலைத் தொழிலாளர்கள், தங்களுடைய பிரச்சினைகளை தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை, எடுத்து வைப்பதற்காகச் சாலைகளிலே மறியல் ஆர்ப்பாட்டம் செய்து இருக்கிறார்கள். ஊர்வலமாகச் சென்றார்கள். ஊர்வலமாகச் சென்றவர்களை அன்றைக்கு இருந்த காவல் துறை என்ன செய்தது? அடித்தார்களா, இல்லையா? எப்படி அடித்தார்கள்? அவர்களை நிர்வாணப்படுத்தினார்களா, இல்லையா? அமைக்கப்பட்ட One Man Commission அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லி 33.30 இலட்சம் ரூபாயை அவர்களுக்கு நஷ்ட ஈடாகக் கொடுக்க வேண்டுமென்று அன்றைக்குச் சொன்னார்களே! அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி அவர்கள் அதைக் கொடுத்தாரா? இல்லை. கொடுக்கவேயில்லை. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்துதான் அந்த நஷ்ட ஈட்டையும் வழங்கினார்கள்.

அதுமட்டுமல்ல; இன்னொன்றையும் நான் சொல்லுகிறேன். இன்றைக்கு இலவச மின்சாரத்திற்காக நிறையப் போராட்டத்தையெல்லாம் நடத்துகிறார்கள். வெளியிலே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த அரசுக்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. இதுகுறித்து டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக விளக்கமாக அவையிலே பலமுறை, ஒருவர் இல்லை என்று சொன்னாலும்கூட, அவர் திரும்பி வந்து உட்கார்ந்தவுடன், அவர்கள் கேட்கிற கேள்விக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே எழுந்து, பொறுமையாக பதிலைச் சொன்னார்கள். ஆனால் ஒரு காலத்திலே விவசாயிகள் ஒரு பைசா குறைக்க வேண்டுமென்பதற்காகப் போராட்டத்தை நடத்தினார்கள். அப்படிப் போராட்டத்தை நடத்தியபோது, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள் என்ன செய்தார்கள்? அன்றைக்கு ஒரே நாளிலே மட்டும் 17 விவசாயிகளைச் சுட்டுக் கொன்று, தன்னுடைய வக்கிரத்தைத் தீர்த்துக்கொண்டாரா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல; அப்பொழுது கட்டை வண்டிப் போராட்டம் என்று நாராயணசாமி நாயுடு அவர்கள் அறிவித்தார்கள். அப்படி அறிவித்தபொழுது, அன்றைக்கு முதலமைச்சர் என்ன சொன்னார் தெரியுமா? ஏதோ சட்டப்படி காவல் துறை நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னால் பரவாயில்லை, ஏற்றுக்கொள்ளலாம்.



ஆனால் அப்படிச் சொல்லவில்லை. விவசாயிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று சொன்னவர்கள் இன்றைக்கு விவசாயிகளுக்கு நண்பர்கள் என்று சொன்னால், விவசாயிகளுக்காக இன்றைக்குப் பேசுகிறார்கள் என்று சொன்னால், எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இங்கே ஒரு வேடம்; டெல்லிக்குச் சென்றால் அங்கே ஒரு வேடம். அங்கே எல்லாவற்றிலும் ஒத்துக்கொண்டு கையெழுத்தைப் போட்டுவிட்டு வரவேண்டியது. இங்கே வந்தவுடன் எதிர்க்க வேண்டியது. இப்படி இரட்டை நிலையினை இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்து வருகிறது.

அதுமட்டுமல்ல; இங்கே நம்முடைய நன்மாறன் அவர்கள் இருப்பார்கள் என்றுகூட நான் நினைத்தேன். (குறுக்கீடு) வந்து விட்டீர்களா? ரொம்ப நன்றி. வட்டிக்காகவும், அபராத வட்டிக்காகவும் நீங்கள் Memorial Hall-க்குப் பக்கத்திலே ஒரு போராட்டம் நடத்தினீர்கள்; நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்தப் போராட்டம் நடந்தபொழுது, விவசாயிகள் தங்களுடைய உணர்வுகளை, நாங்கள் 4 ஆண்டு காலமாக மிகப்பெரிய பிரச்சினையிலே இருக்கிறோம்; தாங்க முடியாத கடன் சுமையைச் சுமந்துகொண்டிருக்கிறோம்; எங்களுடைய கடன் சுமையைக் கொஞ்சம் இறக்கி வையுங்கள் என்று அன்றைக்குக் கேட்டார்கள். அப்படிக் கேட்டதற்கு உங்களுக்கு என்ன பரிசு கிடைத்தது? சொல்லுங்கள். உங்களை அடித்தார்களா, இல்லையா? நீங்கள் இந்த மன்றத்திலே பேசினீர்களா, இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) என்ன சொன்னீர்கள். Memorial Hall -க்கு அருகிலே நடைபெற்ற அந்த நிகழ்ச்சி, தமிழ்நாடு விவசாயிகளுடைய வாழ்க்கையிலே memory-யாக, மறக்க முடியாத நிகழ்ச்சியாக இருந்து வருகிறது என்று சொன்னீர்களே, அது உங்களுக்கு memory-யில் இருக்கிறதா என்பதற்காகத்தான் உங்களைப் பார்த்தவுடன் கேட்டேன்.

பிற்பகல் 1-25

இப்படி விவசாயிகளினுடைய போராட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி, அதை அடக்கியே பழக்கப்பட்டவர்கள் இன்றைக்கு ஏதோ அவர்களுக்காகப் பேசுவது என்பது எவ்வளவு பெரிய வேடிக்கை? அதுமட்டுமல்ல; இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொரு நிகழ்ச்சி

நடந்தது; திருநெல்வேலியிலே, தாமிரபரணி ஆற்றில் நடந்த நிகழ்ச்சி. அங்கே மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள்—தோட்டத் தொழிலாளர்களைப் பற்றி இன்றைக்குப் பேசினார்கள்—அவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? ஏதோ கூலி உயர்விற்காக, ஏதோ ஒரு பிரச்சினைக்காக ஊர்வலமாகச் செல்கிறார்கள். காவல் துறை அன்றைக்குக் கண்முடித்தனமாக அடித்த காரணத்தால், அவர்கள் அடிதாங்க முடியாமல், சிதறி ஓடியவர்களில் 17 பேர் தாமிரபரணி ஆற்றிலே மூழ்கி இறந்துபோன கொடுமையான நிகழ்ச்சி அன்றைக்கு நடந்தது. இன்றைக்கு தினம் ஒரு போராட்டம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. என்ன நடக்கிறது? தினம் ஒரு போராட்டம். அவர்களுடைய உரிமைக்காகப் போராடுகிற யாரையும் இன்றைக்கு அடக்கி ஆளவேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நினைக்கவில்லை. அதுமட்டுமல்ல; நான் subject-க்கே வந்துவிடுகிறேன். நேரமாகி விட்டது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், என்ன?

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் Memorial Hall சம்பவத்தைப் பற்றிய memory இருக்கிறதா என்று கேட்டார்கள். அந்தச் சம்பவம் எந்த ஆட்சியிலும் தொடரக்கூடாது என்பதுதான் எங்களுடைய memory-யிலே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இதுபோன்ற நிலைமை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைபெறாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன் அவர்கள் ரொம்ப ஞாபக சக்தி உள்ளவர். எல்லாவற்றையும் ஞாபகம் வைத்திருப்பார். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூட காவல் துறை என்று சொன்னேன். அந்தக் காவல் துறை என்பது முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியினுடைய காவல் துறையைத்தான் நான் சொன்னேன்.



இன்றைக்கு, 17-4-2003 பத்திரிகையிலே ஒரு செய்தி. வானிலை விஞ்ஞானிகள் 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்யக்கூடிய மழை குறைவாக இருக்கும் என்று ஆய்வறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதைக்கூட இங்கே இருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நிலையிலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, இயற்கை இடர்பாடுகளைச் சந்திக்கிற முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக Rain Water Harvesting--மழை நீர் சேகரிப்புத்--திட்டத்திற்கு இன்றைக்கு முன்னுரிமை தந்து, பண்ணைக் குட்டைகள் அமைத்தல், குளங்கள் வெட்டுதல், ஏரிகளைத் தூர் வாருதல், வாய்க்கால்களைச் சீரமைத்தல், மதகுகள் மற்றும் ஷட்டர்களைப் பழுது நீக்கம் செய்தல் போன்ற பணிகளுக்கு இப்போது அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து, இந்தப் பணிகள் எல்லாம் நடைபெறுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல; இப்போது நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து, மைய அரசு பல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிச் செயல்படுத்தியிருக்கிறது. Primary Sector என்று சொல்லக்கூடிய வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. Secondary Sector என்று சொல்லக்கூடிய தொழில் துறைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. ஒரு அரசினுடைய கடமை என்னவென்று சொன்னால், வேலைவாய்ப்பை எல்லோருக்கும் உருவாக்கித் தரவேண்டும். அனைத்து மட்டங்களிலும் வறுமையை அகற்றிட அதற்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கவேண்டும். இன்றைக்கு 65-லிருந்து, 70 சதவிகித மக்கள் கிராமங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய வாழ்வாக, தொழிலாக இருப்பது வேளாண்மை. விவசாயக் குடும்பங்களுடைய வாழ்க்கைத் தரம் உயராவிட்டால், நமது நாடு வளரும் நாடு என்று எண்ணிப் பெருமிதம் கொள்ளமுடியாது. இந்தியாவினுடைய வளர்ச்சி கிராமங்களிலேதான் உள்ளது என்றார் காந்தி. கிராமப் பொருளாதார வளர்ச்சிதான் நாட்டினுடைய உண்மையான வளர்ச்சி என்பதால், வேளாண்மைத் துறைக்கு முன்னுரிமை தந்து, இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இதுதான் புரட்சித் தலைவி அம்மாவினுடைய புதிய வேளாண்மை அணுகுமுறை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற

பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால்தான் நாட்டினுடைய பொருளாதாரம் வளர்ச்சியடைய முடியும் என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சியை உழைக்கும் தொழிலாளர்கள் மத்தியிலும், விவசாயிகள் மத்தியிலும் ஒரு குறுகிய காலகட்டத்தில் உருவாக்க வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொருளாதார அணுகுமுறை.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** அதையொட்டிதான் வேளாண்மைத் துறையில் பல புதிய திட்டங்களை இப்போது அறிமுகப்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய வருவாயை 2010 ஆம் ஆண்டுக்குள் இரண்டு மடங்காக உயர்த்தும் நோக்கத்துடன் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அதிகமான உற்பத்தி--more yield--more income, more employment வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் குறித்து, இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே பல்வேறுபட்ட சந்தேகங்களை இன்றுவரை கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டத்தினுடைய நோக்கத்தை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் நிலையான தோட்டப் பயிர்களை தமிழ்நாட்டிலே உருவாக்க வேண்டும்; பசுமையை உருவாக்க வேண்டும்: சுற்றுச்சூழலை மேம்படுத்த வேண்டும்; கிராமப்புற வேலைவாய்ப்பினை அதிகரிக்க வேண்டும்; கிராம மக்களுடைய சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்த வேண்டும்; மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை கிராமப்புறங்களிலே துவங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற நல்ல குறிக்கோள்களோடுதான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போதுகூட இந்த விரிவான தரிசு நிலத்



திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்தவகையிலே இப்போது ஏற்பட்டிருக்கிற கடுமையான வறட்சியிலும்கூட 55,000 எக்டர் நிலத்தில், தனியார் நிலங்களை மேம்படுத்துகிற திட்டத்தின் மூலமாக 21,465 எக்டர் தரிசு நிலங்கள் இப்போது மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் பற்றி இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே சொன்னதன் காரணமாக, நான் இதைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன் நேரம் கருதி. ஆகவே, இப்போது இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக இந்தத் தமிழ்நாடு மிக:; பெரிய ஒரு மாற்றத்தைக் காண இருக்கிறது என்பது மட்டுமல்ல; தமிழகத்தில் இருக்கிற கிராமங்கள் மிகப் பெரிய வளர்ச்சியை எதிர்நோக்கியிருக்கின்றன. அதுதான் காந்தியார் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அந்த வகையிலே இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாகத் தோட்டக்கலை வளர்ச்சிக்கு என்று தனிக் கொள்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையினைச் செயல்படுத்த Misson-mode approach அடிப்படையில் தமிழ்நாடு சிறப்பு இயக்க தோட்டக்கலை இயக்கம் Tamilnadu Horticulture Mission ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுடைய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான பயிர் வாரியான சிறப்பு வளர்ச்சி இயக்கங்கள் மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது. மாம்பழ வளர்ச்சி இயக்கம், வாழை வளர்ச்சி இயக்கம். முந்திரி வளர்ச்சி இயக்கம், வீரிய ஒட்டுக் காய்கறிகள் வளர்ச்சி இயக்கம், மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம், வணிக மலர்கள் வளர்ச்சி இயக்கம்.

தமிழ்நாட்டில் தற்போது மாம்பழ உற்பத்தி; அதனுடைய திறன் ஒரு எக்டருக்கு 3.69 டன்கள் ஆகும். இதனை மூன்று ஆண்டு காலத்திற்குள் எக்டர் ஒன்றிற்கு 8 டன்கள் அளவுக்கு உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. வாழையினுடைய உற்பத்தித் திறன் எக்டருக்கு 42 டன்கள் ஆகும். வரும் மூன்று ஆண்டுகளில் இந்த வளர்ச்சி இயக்கத்தின்மூலம் வாழையின் உற்பத்தித் திறனை எக்டருக்கு 50 டன்களாக உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் எக்டருக்கு 40 டன்கள் உற்பத்தி செய்து, தமிழ்நாடு அகில இந்திய அளவிலே முதலிடம் வகிக்கிறது. காய்கறிகள் வளர்ச்சி இயக்கத்தின்

திட்டங்களைச் செயல்படுத்தி காய்கறி மற்றும் மரவள்ளிப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்திரியின் தற்போதைய மகசூல் எக்டருக்கு 420 கிலோ மட்டும்தான். உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் நவீன தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி, வரும் 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டினுடைய முந்திரி உற்பத்தித் திறனை எக்டருக்கு 800 கிலோவாக அதிகரித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக மலர்கள் மற்றும் கொய் மலர்களான ரோஜா, ஆர்க்கிட்ஸ், கார்னேஷன், ஜெர்பரா, சாமந்தி, கிளாடியோலஸ் முதலியவற்றினுடைய உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்திட வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சமீபத்தில் ஓசூர் மற்றும் நீலகிரி பகுதிக்கு அனுமதிக்கப்பட்ட மலர் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கி, அந்தத் திட்டங்களெல்லாம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 1-35

தற்போது தமிழ்நாட்டிலே சுமார் 5,000 எக்டர் பரப்பில் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. சென்னா, ஆவரம்பூ, நித்யகல்யாணி, மருந்து கூர்க்கன், அஸ்வகந்தா, கீழாநெல்லி, பச்செளலி, பாமாரோசா, சிட்ரொனெல்லா, எலுமிச்சைப்புல் போன்ற மூலிகை மற்றும் நறுமணப் பயிர்களை அதிக அளவிலே தமிழ்நாட்டில் சாகுபடி செய்ய இப்போது திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வளர்ந்து வரக்கூடிய அறிவியல் முன்னேற்றங்களையும், புதிய வேளாண் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களினுடைய உற்பத்தித் திறனை அதிகப்படுத்த அரசு பல்வேறுபட்ட சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் அங்கமாக உயர் தொழிநுட்பத் தோட்டக்கலை தற்போது ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூன்று அங்கங்களாக உயர் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படும். முதலாவதாக, தொழில்நுட்ப ஆய்வு மற்றும் வளர்ச்சி; இரண்டாவதாக தொழில்நுட்பத்தேர்வு; மூன்றாவதாக, தொழில்நுட்ப விரிவாக்கம்; இந்த அடிப்படையில் வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறையினுடைய உயர் தொழில்நுட்பங்கள்



கையாளப்படவுள்ளன. உலக வர்த்தக நிறுவனத்தின் செயலாக்கத்திற்கு உட்பட்டு, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் உலக அரங்கிலே போட்டியிடும் அளவிற்கு உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை என்பது, திசு வளர்ப்பு மூலமாக தேவையான கன்றுகளை பெருமளவிலே உற்பத்தி செய்தல்; மரபு வழி உயர் பாரம்பரியமிக்க கன்றுகளைத் தேர்வு செய்து அவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல்; வீரிய ஒட்டு விதைகள் மற்றும் வீரிய ஒட்டுச் செடிகளை நடவு செய்தல், நீர்ப்பாசனத்தில் சிக்கனத்தைக் கருத்தில்கொண்டு சொட்டு நீர்ப்பாசனம், தெளிப்பு நீர்ப்பாசனம் ஆகிய முறைகளைக் கடைப்பிடித்தல், நீர் வழி உரம் இடுதல், பசுமைக் குடில்களில் பயிர் வளர்த்தல், நிழல் வலையில் பயிர் வளர்த்தல், இலைகள், தழைகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைக் கொண்டு நிலப் போர்வையை ஏற்படுத்தல், உயர் அடர்த்தி நடவு செய்தல், உதாரணமாக, சாதாரணமாக ஒரு எக்டேர் பரப்பில் 100 மாங்கன்றுகள் நடவு செய்வது என்றால், அதற்குப் பதிலாக ஒரு எக்டேர் நிலத்தில் 625 மாங்கன்றுகளை நடவு செய்து, அதன் மூலமாக அதிக மகசூலைப் பெறுதல், நவீன உழவுக் கருவிகளைப் பயன்படுத்துதல், மண்ணில்லா வேளாண்மை ஆகிய தொழில் நுட்பங்கள் உயர் தொழில்நுட்பத் தோட்டக் கலையிலே அடங்கும். இத்தகைய உயர் தொழில்நுட்பத் தோட்டக் கலையை தமிழ்நாட்டிலே அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் இஸ்ரேல் நாட்டினுடைய உயர் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு உயர் தொழில்நுட்பத் தோட்டக்கலை மற்றும் நுண்ணியல் பண்ணையின் அடிப்படையில் 1,000 ஏக்கர் நிலங்களில் ஏற்றுமதிக்கான பேபிகார்ன், கெர்க்கின்ஸ் போன்ற காய்கறிகள், திசு வளர்ப்பு, வாழை மற்றும் உயர் ரக திராட்சை ஆகியவற்றை விவசாயிகளினுடைய நிலங்களில் மாதிரிப் பண்ணையாக அமைத்து, அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் புரட்சிக்கு வழிகோலும் சிறப்புத் திட்டம் ஒன்றை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். விரைவிலே அது தருமபுரி மாவட்டத்திலே நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

20-11-2001-ல் வழங்கப்பட்ட அரசாணையில்—இங்கே கேட்டார்கள்; நான் கடைசியாகப் பதில் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். என்னாச்சு; இது என்னாச்சு; அது என்னாச்சு என்று இங்கே கேட்டார்கள்—வேளாண் விற்பனைத் துறையானது, சில புதிய பொறுப்புகளுடன் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை எனப் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டது. இந்தத் துறை சந்தை வாய்ப்பை உருவாக்கி, வேளாண் பொருள்களை நேரடியாகவும், பதப்படுத்தியும், ஏற்றுமதி செய்வதை அதிகரிக்கும் நோக்கிலே செயல்பட்டு வருகிறது. மத்திய அரசினுடைய தாராளமயமாக்கல் கொள்கை புதிய சவால்களையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. வாழை, மா, மஞ்சள், திராட்சை, தேயிலை மற்றும் மூலிகைப் பொருட்கள் முதலிய விளை பொருட்களுடைய ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. உலகச் சந்தைகளுக்கு ஏற்ற தரத்திலே நாம் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். உற்பத்தியை மட்டும் அதிகரித்தால் போதாது, உற்பத்தித் திறனையும், உற்பத்தியினுடைய தரத்தையும் பெருக்கும் வகையிலே, அதற்காக இப்போது ஏற்றுமதி மண்டலங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

*பிற்பகல் 1-40*

Cut flowers என்று சொல்லக்கூடிய, ஏற்கெனவே குறிப்பிட்ட அந்தக் கொய் மலர்கள் உலக வர்த்தகத்திலே எவ்வளவு என்று சொன்னால், இரண்டு இலட்சம் கோடிக்கு நடைபெறுகின்றது. அதனுடைய தேவை ஒவ்வோர் ஆண்டும் 10 முதல் 15 சதவிகிதம் வரை உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால், இந்தியாவினுடைய ஏற்றுமதி எவ்வளவு என்று சொன்னால் 200 கோடி ரூபாய் அளவிற்குதான் இங்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்காக, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கட்-பிளவர்ஸ் என்ன தேவை என்பதை நெதர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளிலே முன்னாலேயே சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, இதுபோன்ற ஏற்றுமதி மண்டலங்கள் அமைப்பதன் மூலமாக, இந்த கட்-பிளவர்ஸ் உற்பத்தி செய்வதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனைக் கருத்தில் கொண்டுதான். இப்போது அதிகமான ஏற்றுமதி செய்கின்ற வாய்ப்புள்ள இந்த நிலையில் நம்முடைய நாட்டிற்குத் தேவையான இந்த கொய் மலர்கள், --cut flowers--ஐக்கூட நாம் போன ஆண்டு



ஜனவரி மாதம் இறக்குமதி செய்து இருக்கிறோம். ஆகையினாலேதான், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.24.85 கோடி செலவில் ஓசூரில் டிட்கோ மற்றும் டேன்ஃப்ளோரா என்ற நிறுவனத்துடன் சேர்ந்து ரோஜா மலருக்கான ஓர் ஏற்றுமதி மண்டலத்தை, நடத்திச் செயல்படுத்தி வருகிறார்கள்.

24.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேனியில், மாம்பழத்திற்கான ஓர் ஏற்றுமதி மண்டலம் அமைக்கவும், 15.89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதகமண்டலத்தில் மலர்களுக்கென ஓர் ஏற்றுமதி மண்டலம் அமைக்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம்—Memorandum of understanding மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலே 'அபிடா' நிறுவனத்துடன் கையெழுத்திடப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003-2004 ஆம் ஆண்டில் திருச்சியிலே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழைக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலமும், விருத்தாச்சலத்தில் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் முந்திரிக்கென வேளாண் ஏற்றுமதி மண்டலமும் அமைக்கப்படவுள்ளன என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தேனி மாவட்டம், கம்பத்தில் திராட்சைக்கும், கோவை மாவட்டம், பல்லடம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் வெங்காயத்திற்கும், தூத்துக்குடி மாவட்டத்தில் மூலிகைச் செடிகளுக்கும், திருநெல்வேலி மாவட்டத்தில் வாழைக்கும், ஈரோடு மாவட்டத்தில் மஞ்சளுக்கும் ஏற்றுமதி மண்டலங்கள் அமைப்பது குறித்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆய்வு செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மனிதனுக்கு அடிப்படைத் தேவை ஒரு நல வாழ்வு ஆகும். தமிழகத்திலே பிணி தீர்க்கும் மருத்துவ முறையில் முக்கியமானவையாக, சித்தாவும் ஆயுர்வேதமும் இருந்து வருகிறது. சித்தா மற்றும் ஆயுர்வேத மருந்துகளினால், பக்கவிளைவுகளும் எதிர்விளைவுகளும் இல்லை. எனவே, மண்ணின் மருத்துவமான சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவங்கள் இப்போது முக்கியத்துவம் பெற்று வருகின்றன. நம்முடைய நாட்டிலே இரண்டாயிரம் மூலிகைகள் இனம் கண்டறியப்பட்டுள்ளன. அதிலே 500 மூலிகைகள் சித்தா மருத்துவத்திலே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மூலிகை

ஏற்றுமதியைப் பொறுத்தளவில் இந்தியா 15-வது இடத்திலே இருக்கிறது. அவுரி ஏற்றுமதியிலே இப்போது முதலிடத்தை நாம் பெற்று இருக்கிறோம். மூலிகை ஏற்றுமதியின் மூலமாக, ஆண்டு ஒன்றிற்கு 200 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்து வருகிறது. நித்தியகல்யாணி, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, ஹங்கேரி போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. நித்தியகல்யாணியிலிருந்து எடுக்கப்படுவது வின்பிளாஸ்டின்; வின்கோபின் நல்ல மருத்துவ குணம் உடையது; புற்று நோய்களை எல்லாம் தீர்க்கக்கூடிய அளவிற்கு அதற்கு சக்தி இருக்கிறது.

இந்தியாவினுடைய தனிச்சிறப்பு வாய்ந்தது வேப்ப மரம், அதிலேயிருந்து உற்பத்தி செய்யப்படும் உரம் மற்றும் மருத்துவப் பொருட்களுக்கு உலகம் முழுவதும் வரவேற்பு வளர்ந்து வருகிறது. வேம்பு சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு பிரகாசமான எதிர்காலம் காத்துக்கொண்டிருக்கிறது. வேம்பு உற்பத்தியில் இந்தியா முன்னிலையில் உள்ளது. இதை எவ்வளவு உற்பத்தி செய்தாலும், விற்பனை வாய்ப்பு உள்ளது. இதைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருக்கின்ற காரணத்தால் இந்தத் தொழிலில் பிரமிக்கத்தக்க அளவிற்கு வளர்ச்சியை அடைய முடியாத நிலை ஏற்பட்டு தடையாக உள்ளது. வேம்பு சம்பந்தப்பட்ட தொழிலுக்குரிய மூலப் பொருட்கள் உலகிலேயே அதிகமாகக் கிடைக்ககூடிய பகுதி இந்தியா ஆகும். அதுபோல சென்னா, ஆவரம்பூ, நித்தியகல்யாணி போன்ற மருத்துவப் பயிர்களுக்கு பெரிய வளங்கள் இந்திய நாட்டிற்கு இருக்கிறது. இந்த வளங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

*பிற்பகல் 1-45*

நாட்டினுடைய ஏற்றுமதி உயர்ந்திட, உணவுப் பொருட்களைப் பதப்படுத்துவது அவசியம். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள், பிரேசில் போன்ற நாடுகளில், மொத்த விளைபொருட்களில் 70 சதவிகிதம் பதப்படுத்தப்படுகிறது என்று. ஆனால், இந்தியாவில், தோட்டக்கலை தொழிலில் அதன் உற்பத்தியில் மொத்தம் 2 சதவிகிதம் மட்டுமே பதப்படுத்தப்படுகிறது. இந்தியாவினுடைய மொத்த உற்பத்தியில், 7 சதவிகிதம் மட்டுமே விலை மதிப்பூட்டப்படுகிறது. இஸ்ரேல், பிரேசில் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உற்பத்தியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகள், விற்பனைக்கு வருவதற்கு முன்னாலேயே விவசாயிகள் தங்களுடைய பண்ணைகளிலேயே தாங்கள்



விளைவித்த பொருட்களுக்கு மதிப்பூட்டி, பின் விற்பனைக்கு அனுப்புகிறார்கள். மேலும், இந்தியாவில் போதுமான அளவு பதப்படுத்தும் வசதிகள் இல்லாததால், அறுவடைக்குப் பின் இருப்பு வைக்க தேவையான வசதிகள் இல்லாத காரணத்தினாலும், உற்பத்தியாகும் பழங்கள் மற்றும் காய்கறிகள் 30 சதவிகிதம் வீணாகின்றன. இதுபோலவே, உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருட்கள் 10 முதல் 20 சதவிகிதம் வரை அறுவடைக்கு முன்னும் பின்னும் சேதம் அடைகின்றன. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணவு பதப்படுத்துகிற அந்தத் தொழிலில் தனிக் கவனம் செலுத்தினார்கள். அப்படிச் செலுத்திய காரணத்தினால்தான், விருதுநகரில் தனியார் உணவுப் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, அதுமட்டுமல்ல; நிலக்கோட்டையிலே, இன்னொரு உணவுப் பூங்காவும் அமைக்கப்பட இருக்கிறது என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றைச் செயல்முறைப்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருந்தார்கள். அதை நான் இங்கே குறிப்பிடுவது அவசியம் என்றே கருதுகிறேன். காரணம் என்னவென்று சொன்னால், புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்த அளவில், சொன்னதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறவர்; சிலர் சொன்னதைச் செய்யக்கூடாது என்று நினைத்தவர்களும் உண்டு. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படி இல்லை என்பதற்காக இந்த வேளாண்மைத் துறையில், சொன்னதை எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக சில நிகழ்ச்சிகளை மட்டும் உங்கள் முன்னால் வைக்கிறேன்.

ரூபாய் 10 கோடி மதிப்பில், 20 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதாக அறிவித்து, இப்போது அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. 3 கோடி ரூபாய் மதிப்பில், ஆண்டிப்பட்டி, எழுமத்தூர் மற்றும் தாரமங்கலம் தந்தையார்பேட்டை ஆகிய 3 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் புதிய உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அரசாணை வெளியிடப்பட்டு, இன்றைக்குப் பணிகள் முடிவடைகின்ற நிலையில் இருக்கின்றன. ரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டில், செம்பனார்கோயில், கம்பம், கொடுமுடி மற்றும் சேவூர் ஆகிய 4 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், ஊரகக் கிட்டங்கிகள் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

தமிழகத்திலே, தகவல் மையங்களைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். தமிழகத்தில், தகவல் மையங்கள் துவங்கியதன் மூலமாக, இரகத் தேர்வு, பூச்சிநோய் அறிகுறிகள் மற்றும் கடன் வசதி, சேமிப்பு, சந்தை நிலவரம் போன்ற தகவல்களை உடனுக்குடன் விவசாயிகளுக்கு வழங்கிடும் நோக்கில், ரூபாய் 45.45 இலட்சம் ஒதுக்கீட்டில் 15 ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், வேளாண் விளைபொருள் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்கள் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

உங்கள் முன்னால் பல ஏடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே எவையெல்லாம் இருக்கும் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவற்றை எதற்காக வைத்தோம் என்று சொன்னால், ஓராண்டு காலத்தில், இந்த ஆட்சியில், எப்படியெல்லாம் சொன்னதைச் செய்திருக்கிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான் உங்கள் முன்னாலே அதை வைத்திருக்கிறோம். 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 100 இடங்களில் உலர் களங்கள் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

9 இடங்களிலே, குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டார்கள். ஆனால், இந்தத் திட்டம் இப்போது பரிசீலிக்கப்பட்டு, ஒட்டன்சத்திரம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் தனியார் நிறுவனங்கள் மூலமாகக் குளிர்பதனக் கிடங்குகள் அமைப்பதற்கு ஒப்புதல அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சந்தானம் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். தென்னையைத் தாக்கக்கூடியது Eriophydemite, அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். Eriophydemite என்கிற அந்த நுண்கிருமி, காற்றிலே இருந்து பரவுகிற ஒரு நோய். ஆக, அதற்கு இதுவரை பல்வேறு நாடுகள் தாக்கப்பட்டிருந்தாலும்கூட, இதுவரை உலகத்தில் எந்த நாடும், அந்த Eriophydemite-க்கு உரிய மருந்துகளைக் கண்டுபிடிக்கவில்லை. இப்போது, நம்முடைய கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம், அதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டு, மிக விரைவிலே, அதற்குரிய மருந்துகளை விவசாயிகளுக்கு, நீங்கள் விரும்பியதைப்போல, மானிய விலையிலே, புரட்சித் தலைவி அம்மா



அவர்களுடைய ஆட்சி கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, சில நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டிவிடுகிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள்--இந்த அவைக்கு வரவில்லை; மு.க. ஸ்டாலின் அவர்கள்--இங்கே பேசுகிறபொழுது, சிலவற்றைக் குறிப்பிட்டு இது என்னாச்சு; அது என்னாச்சு; வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவதுபோல இருந்தது என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், நாங்கள் சொன்னதை எல்லாம் செய்து இருக்கிறோம் என்பதற்காக இங்கே சொல்லி இருக்கிறேன். கடந்த ஐந்து ஆண்டு காலம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆண்டபோது என்னென்ன சொன்னார்கள்? அவர்கள் எதைச் செய்து இருக்கிறார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும்; உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இஸ்ரேல் நாட்டினுடைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தருமபுரியிலே ஒரு ஆயிரம் ஏக்கர் நிலங்களை மேம்படுத்துகிற புதிய தொழில்நுட்பங்களை அங்கே உட்படுத்துகிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1997 ஆம் ஆண்டு அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே 254 ஆம் பக்கத்தில் நீங்கள் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். இஸ்ரேல் நாட்டு வேளாண் தொழில்நுட்பங்களைக் கொண்டு தமிழகத்தில் தருமபுரி, காமராசர், பசும்பொன், இராமநாதபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் இஸ்ரேல் நாட்டின் தஹால் நிறுவனத்துடன் நம்முடைய முதலமைச்சர் ஒப்பந்தத்தை செய்ய அனுமதித்து உள்ளார் எனக் குறிப்பிட்டு, இந்தத் திட்டம் மிக விரைவிலே நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது என்று சொன்னார்களே, அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதுவும் 1997 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை. கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே பக்கம் 261-லே இது இருக்கிறது; நான் மிகவும் சுருக்கமாகப் படித்து விடுகிறேன்; கிருஷ்ணகிரி, திருச்சி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்க முடிவு செய்துள்ளார்கள். அந்த முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டதா? அதுமட்டுமல்ல, அந்த 3 குளிர்பதனக் கிடங்குகள் மட்டுமல்ல,

ஒரு கோடி ரூபாய் செலவில் தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில், ரூ.22.75 இலட்சம் செலவில் ஒட்டன்சத்திரத்தில், ரூ. 427.60 இலட்சம் செலவில் திருச்சியில், ரூ. 440.60 இலட்சம் செலவில் கிருஷ்ணகிரியில் குளிர்பதனக் கிடங்குகள் அமைப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அன்றைக்கு அறிவித்த அந்தத் திட்டங்கள் என்ன ஆயிற்று என்று நாங்கள் கேட்கமாட்டோமா? (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து இன்னும் ஒன்றையும் சொல்கிறேன்; அதுவும் 1997 ஆம் ஆண்டுதான். கிட்டத்தட்ட 4 ஆண்டுகள் அதற்குப் பிறகு ஆண்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில் கழகத்தின் மூலமாகக் கூட்டு முயற்சியாக ரூ.125 இலட்சம் செலவில் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நான் கேட்கிறேன் இப்போது. இந்தத் திட்டம் என்னாயிற்று? மாண்புமிகு உறுப்பினர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே நம்முடைய மாண்புமிகு பழனிசாமி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், அன்றைக்கு இருந்த முதலமைச்சரைப் பார்த்துக் கேள்வி கேட்டபோது, கரும்புக்கு விலை நிர்ணயம்பற்றி நீங்கள் சொன்னீர்கள், அப்போது நீங்கள் சொன்னீர்களே. இது என்ன ஆயிற்று என்று கேட்டபோது, என்ன சொன்னார்கள்; (குறுக்கீடு) நான் மறுக்கவில்லை, மறுக்கவில்லை, ஆளும் கட்சியைப் பார்த்து நாங்கள் கேட்டோம்; அப்போது நாங்கள் ஆளும் கட்சியைப்பார்த்து கேட்டோம் எதிர்க்கட்சியாக இருக்கும்போது. ஆளும் கட்சியாக இப்போது நாங்கள் வந்துவிட்டோம். வந்த உடனேயே எதைச் செய்ய முடியும்? 2, 3 ஆண்டுகளில் எதையும் செய்யமுடியாது; 5 வருடங்கள் நீங்கள் ஆள விடுங்களய்யா; எங்களை ஆளை விடுங்கள் என்று சொன்னார்கள் நம்முடைய முன்னாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்; அதேபோல் சொன்னாரா, இல்லையா? ஆனால், இப்போது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இருந்து அப்படிப்பட்ட ஒரு வார்த்தையை நீங்கள் எதிர்பார்க்க முடியுமா? புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் எந்தக் கோரிக்கை வைத்தாலும்சரி, நியாயம் என்று சொன்னால் உடனே அதை ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல; இன்னும் நிறைய இருக்கிறது. தேனியிலே பருத்தி வணிக வளாகம். மேட்டுப்பாளையத்திலே காய்கறி வணிக வளாகம், உடுமலைப்பேட்டையிலே காய்கறி வணிக வளாகம், பட்டுக்கோட்டையிலே



தேங்காய் வணிக வளாகம் இதெல்லாம் எங்கே இருக்கிறது என்று கேட்டால், 1997 ஆம் ஆண்டு புத்தகத்திலே இருக்கிறது; பட்டுக்கோட்டையிலே தேங்காய் வணிக வளாகம் என்பது 1998 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அடுத்து, செங்குன்றத்தில் நெல் வணிக வளாகம், இது 1997 ஆம் ஆண்டு புத்தகத்தில் பக்கம் 394-ல் இருக்கிறது; வேலூரில் வணிக வளாகம், இது 1997 ஆம் ஆண்டு புத்தகத்தில் பக்கம் 395-ல் இருக்கிறது; சென்னையில் பன்னாட்டு மலர் ஏல மையம், ஈரோட்டில் மஞ்சள் வணிக வளாகம், சின்னமனூரில் திராட்சை பழம் குளிர்பதனக்கூடம் இப்படி ஐந்து ஆண்டுகாலம் எவ்வளவு அறிவிப்புகள்? (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ சொன்னதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன் என்று சொல்லி ஐந்து ஆண்டு காலம் ஆண்டு இருக்கிறார்கள். ஓர் ஆண்டு எனக்கு நினைவு இருக்கிறது: வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது எங்கள் காதிலே பூ சுற்றாதீர்கள் என்று சொன்னார்கள்.

ஐந்து ஆண்டுகாலம் இங்கே இருந்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி போன்றவர்களின் காதிலே எப்படி பூவைச் சுற்றியிருந்தார்கள் என்பதை இந்தப் பேரவைக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கானல் நீரிலே கப்பலை ஓட்ட முடியுமா?

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி போன தேர்தலிலே பூவை எடுத்துவிட்டார். (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலே இருந்து பிறகு ஆளும் கட்சிக்காரர்களாக வரும்போது பேசுவது புரியாத புதிராக இருக்கிறது. அவர்கள் ஆளும் கட்சியாக வந்தால் நீங்கள் ஆண்ட காலத்திலே செய்யவில்லை என்று சொல்வதும், நீங்கள் ஆளும் கட்சியாக வந்தால் அவர்கள் செய்யவில்லை என்று சொல்வதும் எங்களுக்குப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் இல்லை. ஆகவே, file-ஐக் காண்பிப்பதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள். நாங்களும் தெரிந்துகொண்டு பேசுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, போன சட்டமன்றக் கூட்டத் தொடரில் உங்களுக்கு அப்போதிருந்த

முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைத்தான் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வாசித்தார்கள். நீங்கள்தான் கேட்டீர்கள், கரும்புக்கு 1000 ரூபாய் என்று சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று என்று கேட்டதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் சொன்ன பதிலை அவர்கள் வாசித்தார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கானல் நீரில் கப்பல் ஓட்ட முடியுமா? எறும்பு ஏரோபிளேன் ஓட்டுமா? ஓட்டும். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எறும்பு ஏரோபிளேன் ஓட்டியது. கானல் நீரிலே கப்பலை ஓட்டிச் சென்றார்கள். இதுதான் அந்த அறிவிப்புகள். இத்தனையும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் 5 ஆண்டுகாலம் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் அவர்கள் காதிலே பூவைச் சுற்றாமல், தமிழ்நாட்டு மக்களுக்கே காதிலே பூவைச் சுற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் 2001-லே மக்கள் அப்படிப்பட்ட ஒரு...

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a point of order. (interruption) I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், Point of order என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் என்னென்ன உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லை என்கிற கருத்தினை பட்டியலிட்டார்கள். இங்கே ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் இருந்ததா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்ததா என்று கருதுவதைவிட ஒரு ஆட்சியிலே, இந்த அவையிலே ஒரு உறுதிமொழியைக் கொடுத்துவிட்ட பின்னால், அந்த ஆட்சிக்காரார்கள் அதைச் செய்யாவிட்டாலும்கூட, தொடர்ந்து ஆட்சிக்கு வந்திருக்கிற இன்றைய முதலமைச்சரும், இன்று இருக்கக்கூடிய அமைச்சரவையும்தான் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும். ஆகவே, அதை நீங்கள் நடத்துவீர்களா? இதே அமைச்சர்கூட நான் கேட்ட கேள்விக்குப் பரிசீலிக்கப்படும், கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்குக் கொடுக்கப்படும் என்று கூறி இருக்கிறார்கள். அதற்கு விடை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிசீலித்துத்தான் பதில் சொல்கிறார்கள். சட்டியில் இல்லாததால் அகப்பையில் வரவில்லை என்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்கள். அந்த ஆட்சியில் செய்யாததை நீங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் நாங்கள் வந்து இப்போது மக்களுக்குச் செய்ய வேண்டியதை, எது தேவையோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். உணவுப் பூங்கா அமைக்கப்பட வேண்டும்; உணவுப் பொருளைப் பதப்படுத்த வேண்டும்; அழிந்து வருகிற உணவுப் பொருள்களைப் பாதுகாக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற முறையில் விருதுநகரிலே இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே அங்கே ஒரு உணவுப் பூங்கா அமைக்கப்பட்டு விட்டதே! தற்போது நிலக்கோட்டையிலும் அமைக்கப்பட இருக்கிறதே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கரும்பைப் பற்றிக் கேட்டார்கள். அதற்குப் பதில் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** கரும்பு என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். ஏற்கெனவே கரும்பைப் பிழிந்தாயிற்றே, இன்னும் போட்டு ஏன் பிழிகிறீர்கள்? (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** இதே அமைச்சர் அவையில், கரும்புக்கு 1000 ரூபாய் கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் பதில் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மூலிகைகளினுடைய வளர்ச்சி மிக அதிகமாகிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூலிகை வளர்ச்சிக்கென ஒரு மண்டலத்தினை உருவாக்க இருக்கிறார்கள். அப்படி உருவாக்குகிறபோது இப்போது கரும்பை விட இனிக்கக்கூடிய இன்னொன்று இருக்கிறது. ஸ்டீவியா என்று சொல்லக்கூடிய ஒரு தாவரம் இருக்கிறது. கரும்பைவிட 10 மடங்கு இனிக்கக்கூடியது. அது Diafree.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்தபிறகு என்னென்ன சொன்னார்களோ அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனக்குப் படிக்க நேரம் போதாது. இல்லாவிட்டால் நான் சொல்லிக் கொண்டே இருக்கலாம். ஆகவே, அரசு எதைச் சொல்லி இருக்கிறதோ அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய திரு. ராஜு அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நீலகிரியிலே தேயிலை தோட்டத் தொழிலாளர்களுடைய மிகப் பெரிய பிரச்சினை, மிகப் பெரிய போராட்டம், நடந்தபோது நிர்வாணமாக்கப்பட்டு, அடிக்கப்பட்ட கொடுமை நடந்தது. அவர்களுக்காக இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களைக் கூப்பிட்டு ஓர் ஆணை இட்டார்கள். அங்கே டீ தொழில் நசிந்துபோய் இருக்கிறது. அதற்கு மாற்றாக ஏதாவது நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். அதன் அடிபபடையிலேதான் அங்கே--உங்களுக்கு நன்றாகத் தெரியும்--Pruning போன்றவைகள் செய்வதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்கள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஊட்டியிலே ஒரு மலர் ஏற்றுமதி மண்டலத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதனுடைய நோக்கம் என்ன? ஊட்டியினுடைய தட்ப வெப்ப நிலையில் கொய் மலர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் அங்கே அதிகம் இருக்கிற காரணத்தினால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே அதைத் துவக்கி இருக்கிறார்கள். ஆகையினாலே நீலகிரி மாவட்டத்தினுடைய சமூகப் பொருளாதார நிலையிலே மிகப் பெரிய ஒரு மாற்றத்தை மாண்புமிகு நம்முடைய உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் எதிர்நோக்கி இருக்கிறார்கள். உங்களுக்கு மிகப் பெரிய எதிர்காலம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வெற்றியிலே உங்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது, என்பத்தை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



ஒவ்வொரு ஆண்டும் மழை குறைந்து கொண்டே வருவதால் நிலத்தடி நீரும் குறைந்து கொண்டே போகிறது. எனவே இப்போது பாசன நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு துளி நீருக்கு அதிகமான வருவாயை விவசாயிகளுக்கு பெற்றுத் தரவேண்டுமென்ற நோக்கத்தினைக் கருத்திலே கொண்டு சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்திற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் கொடுத்து உள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத் திட்டம் ரூ.30 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கு மகிழ்ச்சி. நான் பழைய வேளாண்மைத் துறை அமைச்சர் அல்லவா!

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** ஆமாம். இப்போது கொஞ்சம் தமிழ்நாடு பூராவும் ஒரே drought. ஆகையினாலே இந்த subject-ம் கொஞ்சம் dry ஆகத்தான் இருக்கும். என்ன செய்வது. என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய நிதிநிலையைச் சீராக்குவதற்கு கசப்பான மருந்தைத் தருகிறார்கள். நீங்கள் அதை உண்டே ஆக வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார்கள். அதேபோலத்தான் பசி வந்தால் பத்தும் பறந்து போகும். நீங்கள் கொஞ்சம் பசியோடு இருந்துதான் ஆகவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு, நேரம் இல்லாததால் நம்முடைய வேளாண் உற்பத்தியைப் பற்றி நிறைய நான் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. வேளாண் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதில் நம்முடைய நாட்டு விவசாய விஞ்ஞானிகள் குறிப்பாக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்றவர்களுடைய பங்கு மிகவும் முக்கியமானது. ஆராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிற நவீன தொழில் நுட்பங்கள் உடனடியாக விவசாயிகளைச் சென்று அடைவது மிகவும் அவசியம் ஆகும். அதற்கு விவசாயிகளுக்குச் சிறந்த தரமான விவசாயக் கல்வி தரப்பட வேண்டும் என்பதற்காகப் பல்வேறுபட்ட நிலைகளை எடுத்து வருகிறார்கள்.

[திரு. இரா. ஜீவானந்தம்] [2003 ஏப்ரல் 24

இன்றைக்கு மனித வளத்தைக் குறைவாக மதிப்பிட்டு பொருட்களினுடைய வளத்தைப் பெரிதாக நினைக்கும் வரை வறுமை இருந்துகொண்டுதான் இருக்கும். இவ்வாறு வறுமையை ஒழிக்க நம்மிடம் இருக்கும் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி, தக்க திட்டங்களை உருவாக்கி, அதன்மூலம் வேளாண் குடும்பங்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்குதல், வளங்குன்றா நிலைத்த வேளாண்மையை முன்னேற்றுதல், ஊட்டச் சத்து பற்றாக்குறை இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை அடைதல் போன்ற முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் திட்டங்கள் அமையும் என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணம் ஆகும். அதனைக் கருத்திற்கொண்டுதான் கீழ்க்கண்ட திட்டங்களை எல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

பெண்களுடைய முன்னேற்றத்திற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறுபட்ட நல்லத் திட்டங்களை உருவாக்கித் தந்து இருக்கின்றார்கள். பெண்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு சிறப்பான பங்காற்றி வந்தாலும், அதற்கான ஆதாவும், உரிய அங்கீகாரமும் கிடைக்கவில்லை. ஆகையால் தமிழக அரசு 'வேளாண்மையின் மறுமலர்ச்சி இயக்கத்தில் பெண்களின் பங்கு' என்னும் புதிய திட்டத்தைக் கீழ்க்கண்ட முறைகளின்படி செயல்படுத்த உள்ளது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-05

பெண்களுக்கு ஏற்படக்கூடிய கடுமையான உழைப்பின் சிரமத்தைக் குறைப்பதற்கு, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வேலை நேரத்தைக் குறைத்து, வேலை செய்யும் ஒவ்வொரு மணிக்கும் அதிகமான உற்பத்தியைப் பெருக்க முன்னுரிமை வழங்கப்படும். இதற்கான சரியான பண்ணைக் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

மதிப்புமிக்க தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் கால்நடைகள் குறித்து மகளிர் விவசாயிகளுக்கு உதவ தனி பெண் வேளாண் விரிவாக்கத் துறை அலுவலர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகப் பட்டதாரிகளில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் பேர் பெண்கள் ஆவார்கள். கடந்த



2003 ஏப்ரல் 24] [திரு. இரா. ஜீவானந்தம்]

ஐந்து ஆண்டுகளில் மட்டும் 1307 பெண்கள் இளநிலை வேளாண் பட்டதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து படித்து வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பட்டதாரிகள் வேளாண் மற்றும் சத்துணவு, மருத்துவமனை, வேளாண் விற்பனை மையங்கள் மற்றும் இயற்கை வேளாண்மைத் தொழில் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கான தனித் திறனை வளர்த்துக் கொள்வதற்கு—அவர்களுக்கு உருவாக்க—சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் 9.02 இலட்சம் மெட்ரிக் டன் பயறு வகைகள் தேவைப்படுகின்றன. ஆனால் 3.2 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே தற்சமயம் உற்பத்தி ஆகிறது. அதுபோல 19.83 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வித்துக்கள் தேவைப்படுகின்றன. ஆனால் 9.2 இலட்சம் மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி ஆகிறது. பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் குறைந்த நீர்த் தேவை உள்ள அதிக மதிப்புள்ள பயிர்களாகும். தமிழ்நாட்டின் வேளாண்மைக்குத் தண்ணீர் மிகப் பெரிய பிரச்சினையாக இருப்பதால் ஒவ்வொரு துளி நீருக்கும் விவசாயிகளுடைய வருவாயைப் பெருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, மானாவாரி சாகுபடி அதிகமாக உள்ள மாவட்டங்களில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் கிராமங்கள் மூலம் ஊக்குவிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நுண் வேளாண்மை மற்றும் குறைந்த செலவிலான பசுமைக் குடில் தோட்டக்கலை குறித்து வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் நபார்டு மற்றும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனுடைய ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த கன்னிவாடியில் அமைந்துள்ள நுண் வேளாண்மை ஆதார மையத்தின் உறுதுணையோடும் இதற்கான பயிற்சியைப் பெரிய அளவில் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அறிவாற்றலை மூலதனமாகக் கொண்ட விவசாய முறையை உருவாக்க வேண்டுமென்பதற்காக, இருக்கக்கூடிய குறைந்த நில நீர் வளங்களில் சிறந்த முறையில் வேளாண்மை செய்ய அறிவாற்றலைச் சரியாகப் பயன்படுத்த தமிழக அரசு முன்னுரிமை அளிக்கும். இதற்காக வேளாண்மைத் துறையில் விரிவாக்க அலுவலர்களுக்கு விவசாயிகள் பல்வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யவும், தகுந்த பயிர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்தும் தக்க சமயத்தில் ஆலோசனைகள், பயிற்சிகள் வழங்கப்படும்.

[திரு. இரா. ஜீவானந்தம்] [2003 ஏப்ரல் 24

கிட்டத்தட்ட 70 விழுக்காடு மக்களுடைய வாழ்க்கை வேளாண்மையை நம்பியுள்ளது. ஆகையால் வேளாண்மையின் மூலம் பாதுகாப்பான, நிலைத்த மனித வாழ்வுக்கு உதவும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையிலே புதிய வேளாண்மைக் கொள்கை அறிவிக்கப்பட்டு அதன் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, ஒரே ஒரு செய்தியை மட்டும் சொல்லி, நான் அறிவிப்புக்கு வந்து விடுகிறேன். நேரமாகிவிட்டது.

20-4-2003 அன்று வேலூரில் பேசிய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், இந்த ஆட்சியில் எது நடக்க வேண்டுமோ அது நடக்கவில்லை; எது நடக்கக்கூடாதோ அது நடந்து வருகிறது என்று கூறினார்கள். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது; எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது; எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்க இருக்கும்' என்று கீதை அருளிய வரிகள் அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு உரிய வரிகள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்'

ஒருவர் ஒரு செயலைச் செய்வதற்கு ஏற்றவரா என்பதை ஆய்ந்து அவரை அதற்குரியவராக உயர்த்த வேண்டுமென்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப தமிழக மக்கள் தமிழகத்தை ஆள்வதற்கு இவர்தான் உகந்தவர் என்று தங்கள் மனதாரத் தேர்ந்தெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் மீண்டும் தீர்ப்பைத் தந்திருக்கிற மக்களுக்கு நன்றி கூறி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, அம்மா அவர்களுடைய ஆணையின்படி இங்கே வேளாண்மைத் துறையில் நடைபெறவுள்ள திட்டங்களுக்கான அறிவிப்புகளை உங்கள் முன்னாலே நான் படிக்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் கீழ்க்கண்ட அறிவிப்புகள் அறிவிக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. இயற்கை பண்ணையத்தினை விரிவுபடுத்த ரூ.6.85 இலட்சம் ஒதுக்கீட்டில், பண்ணைக் கழிவுகளிலிருந்து புளூரோபாஸ் பூஞ்சாணம்



2003 ஏப்ரல் 24] [திரு. இரா. ஜீவானந்தம்]

கொண்டு உரம் தயாரிக்க 2000 விவசாயிகளுக்கு சிறுதளைப் பைகள் வழங்கப்படும். மேலும் வேளாண் கழிவுகளிலிருந்து மண் புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்த மாநிலம் முழுவதும் 100 செயல் விளக்கங்கள் அமைப்பதோடு 5000 விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சியும் அளிக்கப்படும்.

பிற்பகல் 2-10

2. மண்வளத்தினைக் காக்க ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் முக்கியமானது. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே விரிவுபடுத்த 12 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக 27 மாவட்டங்களில் உள்ள 2700 விவசாயிகளுக்கு ரூ.8.64 லட்சம் ஒதுக்கீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

3. பருத்தி சாகுபடி பரப்பு குறைந்து வருவதால், அதனை அதிகரிக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும், பருத்திப் பயிரை கரும்பு மற்றும் வாழை முதலிய பயிர்களில் 1000 எக்டர் பரப்பில், ஊடுபயிராக சாகுபடி செய்திட, ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பருத்தி விதைகள் மற்றும் உயிர் உரம் முதலியன வழங்கப்படும்.

4. வேளாண்மை விரிவாக்க மையங்களில் விதைகளின் ஈரப்பதத்தினைக் கண்டறிய ஈரப்பதம் அறியும் கருவிகள் மற்றும் விதைகளின் முளைப்புத் திறன் பாதிக்காமல் பாதுகாத்து வைக்க மர அட்டகங்கள் முதலியன ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 200 வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு வழங்கப்படும்.

5. விதைத் தரத்தினை மேம்படுத்தி, தரமான விதைகளை உறபத்தி செய்வதற்கு ரூ.21 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் தருமபுரி, ஈரோடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்படுத்தப்படும்.

6. ரூ.4.36 இலட்சம் ஒதுக்கீட்டில் விதைச் சான்றளிப்புத் துறையின்கீழ் கண்ணம்பாளையம் அரசுப் பண்ணையில் உள்ள கிணற்றுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல், விதைச் சான்றுத் துறையின் பயிற்சிப் பிரிவுக்கு நகல் எடுக்கும் இயந்திரம் வழங்குதல், தருமபுரி விதை பரிசோதனை நிலையத்துக்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் அமைத்தல், சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியும் பிரிவு அமைத்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

7. தோட்டக் கலைத் துறையின்கீழ் தமிழ்நாட்டில் தற்பொழுது 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் மா, புளி, முந்திரி, கொய்யா, நெல்லி, எலுமிச்சை போன்ற பழ ஒட்டுக் கன்றுகளும் இதர வகைக் கன்றுகளும், சுமார் 75 இலட்சம் கன்றுகள், உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களின் மூலம் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் போதிய பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ள 26 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் உள்ளீட்டு வசதிகளான ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், கிணறுகளை ஆழப்படுத்துதல், மின்மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குதல், மின் இணைப்பு பெறுதல் போன்ற அத்தியாவசியப் பணிகளுக்காக ரூ. 1 கோடி செலவில் பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

8. ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கண்ணம்பாளையத்தில் தோட்டக்கலைத் துறைக்கென ஒதுக்கப்பட்ட நிலம் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு புதிய அரசு தோட்டக்கலைப் பண்ணை நிறுவப்படும். அங்கு உயர் ரக ஒட்டுக் கன்றுகள் உற்பத்தி செய்யப்படும்.

9. உலகின் பல பகுதிகளில் மக்டேமியா மற்றும் பீகாநட் ஆகிய தோட்டக்கலை மாவகைப் பயிர்கள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பயிர்கள் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைக் கொடுப்பதால், இந்தப் பயிர்களின் செயல்விளக்கத் திடல்கள் ரூ. 5 இலட்சம் செலவில் நஞ்சநாடு மற்றும் படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் அமைக்கப்படும்.

10. வேளாண் பொறியியல் துறைக்கு ரூ. 13.25 இலட்சம் செலவில் ஆழ் உழவு வேளாண் உபகாணங்கள், சட்டிக் கலப்பைகள் மற்றும் நில அளவைக் கருவிகள் வாங்கப்படும்.

11. தேனி மாவட்டத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நில நீர்வள ஆதாரங்களின் அடிப்படை விவரங்களைத் தயாரிக்கவும், அந்தப் பகுதிகளில் ஏற்படும் முன்னேற்றத்தினைக் காணவும், ரூ. 10 இலட்சம் செலவில் நிலவியல் தகவல் கணினிகள் அமைக்கப்படும்.

12. கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உயர் விளைச்சல் தருவதும் மற்றும் பல்வேறு பயன்பாட்டிற்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் ஏற்ற ஸ்பானிஷ் மற்றும் விர்ஜினியா கொத்து நிலக்கடலை இரகத்தை உருவாக்க ரூ. 4.55 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.



13. மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தரிசு நில காடு வளர்ப்புத் திட்டத்துக்கு சொர்க்க மரம் என்றழைக்கப்படும் சைமரூபா மரக்கன்றுகள் ரூ. 8.78 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் உற்பத்தி செய்து பரவலாக விரிவுபடுத்தப்படும்.

14. ரூபாய் 9.32 இலட்சம் செலவில் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தென் மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளுக்கேற்ற ஏற்றுமதி மற்றும் பதனிடுதலுக்கான மிளகாய் ரகத்திற்கான தொழில்நுட்ப ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளுதல், அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் மானாவாரி பழப் பயிர்களின் ஒட்டு மொட்டுச் செடிகளை வணிக ரீதியில் அதிக அளவில் உற்பத்தி செய்தல், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் மானாவாரி சாகுபடியில் காய்கறிப் பயிர் உற்பத்தியை மேம்படுத்துதல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

15. ரூபாய் 5.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் முறை மேம்படுத்தப்படுவதுடன் கோவில்பட்டி, வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், மானாவாரி கரிசலில் நிரந்தரமான வேளாண்மைக்கேற்ற ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணையமும் அமைக்கப்படும்.

16. அருப்புக்கோட்டை மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் வறட்சிக்கு இலக்காகும் மானாவாரி கரிசலுக்கேற்ற உயர் விளைச்சல் கம்பு, கூட்டுரகம் உருவாக்குதல், சோதனைக்கு உட்படுத்துதல் மற்றும் தேர்வு செய்தல் முதலிய பணிகள் ரூ.2.8 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

17. ரூபாய் 15.6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திருப்பதிசாரம் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் சீரக சம்பா நெல் சாகுபடியை மேம்படுத்துதல் குறித்து ஆராய்ச்சியும் இருவழி மரபு முறையில் வீரிய ஒட்டு நெல் உருவாக்குதல் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படும்.

18. ரூபாய் 3.6 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஏத்தாப்பூர் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் மரவள்ளி பயிருக்கு சொட்டுநீர் பாசன மாதிரி திடல்கள் அமைக்கப்படும்.

[திரு. இரா. ஜீவானந்தம்] [2003 ஏப்ரல் 24

*பிற்பகல் 2-15*

*19.* தேசிய எண்ணெய் வித்து மற்றும் தாவர எண்ணெய் வளர்ச்சி வாரிய நிதி உதவியுடன் ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் காட்டாமணக்கு (ஜாட்ரோபா) மற்றும் சைமரூபா (சொர்க்க மரம்) பயிர்களின் கன்றுகளை அரசு தோட்டக்கலை மற்றும் வேளாண் துறைப் பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்து விவசாயிகளின் நிலத்தில் மாதிரி நடவு செய்யப்படும்.

*20.* ரூபாய் 13 கோடி செலவில் நிலக்கோட்டை சிப்காட் வளாகத்தில் 100 ஏக்கர் பரப்பில் தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் மற்றும் சிப்காட் நிறுவனம் இணைந்து மத்திய அரசு உதவியுடன் உணவுப் பூங்கா அமைக்கப்படும்.

*21.* வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலமாக சேலத்தில் ரூ 2 கோடி செலவில் மத்திய உணவு பதனிடும் அமைச்சகத்தின் நிதி உதவியுடன் உணவு பதனிடும் பயிற்சி நிலையம் துவங்கப்படும்.

*22.* வேளாண் விற்பனை வாரிய நிதியிலிருந்து ரூ 3 கோடி நிதி ஒதுக்கீட்டில் தலா ரூ 2 இலட்சம் மதிப்பீட்டில் 150 உலர் களங்கள் அமைக்கப்படும்.

*23.* வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக ரூ. 10.36 கோடி மதிப்பீட்டில் கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் முந்திரிக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படும்.

*24.* வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக ரூ. 10 கோடி மதிப்பீட்டில் திருச்சி ... ப்பள்ளியில் வாழைக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்படும்.

*25.* வேளாண் விற்பனை வாரிய நிதியிலிருந்து ரூ. 3.55 கோடி ஒதுக்கீட்டில் புதுக்கோட்டை, திருவாரூர், தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய விற்பனைக் குழுக்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்படும். மேலும் காஞ்சிபுரம், ஈரோடு, நாகப்பட்டினம் மற்றும் திருச்சி ஆகிய விற்பனைக் குழுக்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் வாங்கப்படும்.



2003 ஏப்ரல் 24] [திரு. இரா. ஜீவானந்தம்]

*26.* அகில இந்திய அளவில் மத்திய அரசு ரூ. 2.25 கோடி முதலீட்டில் "தேசிய சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு" அமைத்துள்ளது. அதேபோல நமது மாநிலத்திலும் ரூ.1 கோடி முதலீட்டில் "சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு" இந்த ஆண்டில் தோற்றுவிக்கபபடும். இதனை மாநில அரசும், தேசிய சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பும் இணைந்து செயல்படுத்தும்.

*27.* காவிரி டெல்டா மாவட்டங்களில் ரூ. 20 கோடி ஒதுக்கீட்டில் 6,700 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும்.

*28.* காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 21 மாவட்டங்களில் களர் நிலச் சீர்திருத்தத் திட்டம் 50,000 எக்டர் பரப்பில் மத்திய அரசு நிதி உதவியுடன் 10-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயல்படுத்தப்படும். இதில் 2003-2004 மற்றும் 2004-2005 ஆண்டுகளில் 5,000 எக்டர் பரப்பில் நிலச் சீர்திருத்தப் பணிகள் ரூ.6.90 கோடி செலவில் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

*29.* நாகபபட்டினம் மற்றும் வேதாரண்யம் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதியில் உவர்ப்புத் தன்மை மற்றும் மணல் மேடுகளால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீர்திருத்த ரூ. 1200 கோடி செலவில் திட்ட மதிப்பீட்டில் (குறுக்கீடு) மிகவும் மன்னிக்கவும். நீங்கள் எல்லாம் பசியிலே இருக்கிறீர்கள்; வேகமாகப் படிக்க வேண்டும் என்பதற்காகப் படித்தேன். நிலங்களைச் சீர்திருத்த ரூ. 1.20 கோடி *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் இந்த நேரத்திலும் இவ்வளவு கவனமாக இருப்பதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** ரூபாய் 1.20 கோடி திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்துடன் இணைந்து வேளாண் பொறியியல் துறை, இந்தத் திட்டத்தினை 3 ஆண்டுகளில் நிறைவேற்றும்.

[திரு. இரா. ஜீவானந்தம்] [2003 ஏப்ரல் 24

30. சேலம், நாமக்கல், தருமபுரி, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், திருவண்ணாமலை, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 16 மாவட்டங்களிலும் தமிழ்நாட்டில் பயறு வகைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயறு கிராமங்கள் மூலம் பயறு வகைப் புரட்சித் திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 கிராமங்களில் 10,000 எக்டர் வீதம் ரூ.1 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்படும்.

31. நவீன வேளாண் உத்திகள் மற்றும் வேளாண் பெருமக்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளை, விவசாயிகளுக்கு தகவல் தொழில் நுட்பம் மூலம் உடனுக்குடன் தெரிவிக்க, 10 மாவட்டங்களில் உள்ள வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களில், மாவட்ட தகவல் மையங்கள் அமைக்கப்படும். இந்த மையங்களில் கணினி வசதிகளை மேம்படுத்தவும் தொடுதிரை வசதியை ஏற்படுத்தவும் ரூ.20 இலட்சம் செலவிடப்படும். வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் ரூபாய் 20 இலட்சம் செலவில் 5 மையங்களில் மாவட்ட தகவல் மையங்கள் அமைக்கப்படும்.

32. வேளாண்மை ஆணையர் அலுவலகம் மற்றும் 10 மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களில் உள்ள கணினிகள் ரூ.17.50 இலட்சம் செலவில் நவீனப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

பிற்பகல் 2-20

33. வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகிய மூன்று துறைகளில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் 1,400 பேருக்கு ரூ.15 இலட்சம் செலவில் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனையின் பேரில் நவீன வேளாண் தொழில்நுட்பம் குறித்து புத்தூட்டப் பயிற்சி வழங்கப்படும்.

34 தாமிரபாணி ஆற்றுப்படுகை மற்றும் காவேரி ஆற்றுப்படுகையில் ஜூன் 2003 முதல் பிப்ரவரி 2004-க்குள் நெல் தீவிர சாகுபடி திட்டம் குறித்த 330 பண்ணைப் பரிசோதனை தளைகள் ரூ.25 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

35. மழைநீர் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் 1,59,000 பயன்படுத்தப்படாத கிணறுகளில், முதல் கட்டமாக ரூ.100 கோடி



2003 ஏப்ரல் 24] [திரு. இரா. ஜீவானந்தம்]

மதிப்பீட்டில் 50,000 கிணறுகளில், ஒரு கிணற்றுக்கு ரூ.20,000 வீதம் மண் வளப் பாதுகாப்பு மற்றும் நீர்வடிப் பகுதி மேம்படுத்துதல் மூலம் மழைநீர் சேகரிக்கவும் மற்றும் புதுப்பிக்கவும் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.75 கோடி மதிப்புக்கு அரிசியாகவும், ரூ.25 கோடி பணமாகவும் வழங்கப்படும்.

36. ஒருங்கிணைந்த உயர் தொழில்நுட்ப செயல் விளக்கத் திட்டத்தின்கீழ், 20 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 25 எக்டர் வீதம், மொத்தம் 500 எக்டர் பரப்பில் ரூ.3.25 கோடி செலவில் நில மேம்பாடு, நவீன சொட்டு நீர்ப் பாசனம்/தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்தல், நுண்ணிய வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உயர் விளைச்சல் பெறுதல் பணிகள் மேற்கொள்ளப்படும்.

37. தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதால், ரூ.1.875 கோடி மதிப்பில், ஒவ்வொன்றும் ரூ.15000 மதிப்புள்ள 7.5 குதிரைத் திறன் கொண்ட 1250 பம்பு செட்டுகள், விவசாயக் குழுக்களுக்கு வழங்கப்படும். தமிழக அரசு இத்திட்டத்திற்கென ரூ.46.75 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உள்ளது. இதன் மூலம் பயன்பெறும் விவசாயக் குழுக்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயக் குழுக்கள் 50 சதம் மாநில அரசு மானியமும், 50 சதம் மைய அரசு மானியமும் பெறுவர். இதர விவசாயக் குழுக்கள் 25 சதம் மாநில அரசு மானியமும், 50 சதம் மைய அரசு மானியமும், 25 சதம் கடன் உதவியும் பெறுவர், என்ற அறிவிப்புகளை மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு வழங்குகிறேன்.

இன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 6 பேர் கலந்து கொண்டு தங்களுடைய நல்ல அரிய கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்கள். 46 மாண்புமிகு உறுப்பினர்கள் 225 வெட்டுத் தீர்மானங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தத்தம் கோரிக்கைகளை வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் கூறிய கோரிக்கைகளை எல்லாம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கவனமாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படுத்தும் என்பதைப் பணிவோடு

தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் 5--வேளாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை. திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"வேளாண்மைத் துறை பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.618,26,06,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,77,28,000/-, மற்றும் கடன் கணக்கில் ரூ.55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போர் அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போர் அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (25-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*82.* 20 வேளாண்மை விற்பனைக் குழுக்களுக்கு மற்றும் அங்காடி குழுக்களுக்கு உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளது குறித்து வேளாண்மைத் துறையின் 03-01-2003 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



*83.* வேளாண்மைத் துறையின் 04-01-2003 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட (2)/ஏஜி/ 20(சி-2)/2003 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வேளாண்மைத் துறையின் 04-02-2003 ஆம் நாளிட்ட 41 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

*84.* 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகளின் திருத்தங்கள் செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20-11-2002 ஆம் நாளிட்ட 164 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*194.* தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

*195.* மானியக் கோரிக்கை எண் 5—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

*196.* வேளாண்மைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம் 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

*197.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2003)

*198.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபதாவது அறிக்கை. (2001-2003)

*199.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

*200.* பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2003)

2003 ஏப்ரல் 24]

(382ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண்-5 வேளாண்மைத் துறை**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004**

## அத்தியாயம் - 1

**முகவுரை**

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி" -திருவள்ளுவர்

**1. வேளாண்மை - உலக மற்றும் தேசியக் கண்ணோட்டம்**

*1.1.* உலகமெங்கும் வேளாண்மை விரைவான மாறுதல்களை அடைந்து கொண்டு வருகிறது. வேளாண்மை மூன்று விதமான சவால்களை எதிர்நோக்கி உள்ளது. அவையாவன:

- உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்த செயல்பாடுகளும், உலக மயமாக்கலும்;
- புவியின் வெப்ப நிலை உயர்வு, கால நிலை மாறுபாடுகள், மண் மற்றும் நீர் மாசுபாடு போன்ற சுற்றுப்புறச் சூழல் பிரச்சனைகள்; மற்றும்
- அறிவு சார்ந்த கண்டுபிடிப்பு உரிமம் வழங்கப்படுவதால் உயிர் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் தனியார் துறையின் ஆதிக்கம்.

தேசிய அளவில், தாராளமயமாக்கல் கொள்கை புதிய சவால்களையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தி உள்ளது. உலக வர்த்தக உடன்படிக்கையின்படி, இறக்குமதி செய்யப்படும் பொருட்களால் உள்நாட்டு உற்பத்திக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள போதிலும், வேளாண்மை சார்ந்த ஏற்றுமதிக்கு வாய்ப்புகளும் அதிகரித்து உள்ளன. உதாரணமாக, வாழை, மா, திராட்சை, கரும்பு, மஞ்சள், தேயிலை, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றிற்கு ஏற்றுமதிக்கான வர்த்தக வாய்ப்புகள் சாதகமாக உள்ளன. மேலும் வருங்காலத்தில் மேற்கூறிய பொருட்களின் ஏற்றுமதி அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது. இருப்பினும், நிலக்கடலை, தேங்காய் மற்றும் பிற எண்ணெய்வித்துப் பயிர்கள், குறைவான இறக்குமதி வரி விதிப்பின்கீழ் கொண்டுவரப்பட்ட

[2003 ஏப்ரல் 24

எண்ணெய்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான சூழ்நிலையில், வேளாண் உற்பத்தித் திறனை உயர்த்துவது மட்டுமல்லாது, உலக சந்தையில் போட்டியிடும் அளவிற்கு வேளாண் துறையை வலுப்படுத்தும் நோக்குடன் தரமான உற்பத்திக்கு வழி வகுக்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

1.2. தமிழகத்தில் பயிராகும் சில முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறனை, உலக மற்றும் இந்தியாவின் பயிர் உற்பத்தித் திறனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நம் மாநிலத்தின் உற்பத்தித் திறனைப் பற்றி அறிய முடியும். உற்பத்தித் திறன் பற்றிய ஒப்பீட்டுத் தகவல் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

1.3. தமிழ்நாடு, இந்தியா மற்றும் உலக நாடுகளின் முக்கியப் பயிர்களின் உற்பத்தித் திறன் பற்றிய ஒப்பீடு.

(கிலோ/எக்டர்)

| பயிர் | உலக சராசரி | உயர்ந்த பட்ச மகசூல் | இந்தியா | தமிழ்நாடு |
|---|---|---|---|---|
| நெல் | 3545 | 8879 (எகிப்து) | 2929 | 3541 |
| மக்காச்சோளம் | 4313 | 9695 (இத்தாலி) | 1667 | 1717 |
| நிலக்கடலை | 1336 | 3038 (அமெரிக்கா) | 913 | 1942 |
| கரும்பு | 65689 | 119048 (எகிப்து) | 68012 | 116000 |

1.4. மேற்கூறிய புள்ளி விவரங்களைக் காணும்பொழுது, தமிழ்நாட்டின் நெல் உற்பத்தித் திறனானது சற்றேறக்குறைய உலக சராசரிக்கு இணைந்து உள்ளது. இந்தியாவின் சராசரியைவிட, தமிழ்நாட்டின் நெல் உற்பத்தித் திறன் அதிகமாக உள்ள போதிலும் இதனை மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. மக்காச்சோளத்தைப் பொருத்தமட்டில் தமிழகத்தின் உற்பத்தி திறனானது உலக சராசரியின் பாதியளவிற்கும் குறைவாக, ஆனாலும் இந்தியாவின் சராசரியைவிட அதிகமாகவும் உள்ளது. அமெரிக்க நாடுகளின் நிலக்கடலை உற்பத்திக்கும், தமிழ்நாட்டின் நிலக்கடலை உற்பத்தித் திறனுக்கும் இடையே பெரிய இடைவெளி காணப்பட்டாலும், தமிழ்நாடு இந்தியாவின் சராசரியைவிட 100 விழுக்காடும், உலக சராசரியைவிட 50 விழுக்காடும் அதிக உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது. மாநிலத்தின் கரும்பு உற்பத்தித் திறன் உலக மற்றும் இந்தியாவின் சராசரி உற்பத்தியைவிட 90 விழுக்காடு அதிகமாகவும், எகிப்தின் அதிகபட்ச உற்பத்தித் திறனுக்கு இணையாகவும் உள்ளது. தமிழ்நாட்டின் முக்கிய பயிர்களின் உற்பத்தித் திறன் இந்தியாவின் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தாலும், உலக நாடுகளின் சராசரியுடன் ஒப்பிடும்பொழுது உற்பத்தித் திறனில் இடைவெளி இருப்பது தெரிய வருகிறது. எனவே தமிழக அரசு, நம் மாநிலத்தின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி, அதன் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் வேளாண் ஏற்றுமதி வருமானத்தைப் பெருக்குவதை குறிக்கோளாய்க் கொண்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

## 2. தமிழக வேளாண்மை ஒரு கண்ணோட்டம்

2.1. தமிழக மக்கள் தொகையில் 60 சதவிகிதத்தினரின் வாழ்க்கைக்கு வேளாண்மையே ஆதாரமாக அமைந்துள்ளதால், வேளாண்மைக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மாநிலத்தின் நிகர உற்பத்தியில் 17 விழுக்காடு வேளாண்மை மூலம் பெறப்படுகிறது. 1960-களில் ஏற்பட்ட உணவு பற்றாக்குறை, பசுமைப் புரட்சியின் மூலம் நீக்கப்பட்டு, சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு உணவு பாதுகாப்பை உருவாக்கிய போதிலும், 1990 ஆம் ஆண்டுகளில் உணவுப் பயிர் வளர்ச்சி விகிதம் 0.84 சதவீதமாகவே இருந்தது. பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் குறைந்து வரும் விளை நிலங்களின் நிலையும், முன்னேற்றத்திற்கு பெரும் இடர்பாடாக உள்ளது. நமது நாட்டில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 4 சதவிகிதமும், நீர் ஆதாரத்தில் 3 சதவிகிதமும் மட்டுமே உடைய தமிழகத்தின் மக்கள் தொகையோ 7 சதவிகிதமாகும். சுமார் 52 சதவிகித நிலங்கள் மானாவாரி நிலங்களாகும். மேலும் பயிர் சாகுபடித் திறன் 120 விழுக்காடாகவே உள்ளது. பல்வேறு காரணங்களால், ஆண்டிற்கு ஆண்டு தரிசு நிலப்பரப்பு அதிகரித்து வருகிறது.

2.2. நகர விரிவாக்கத்தினால் விளை நிலங்கள் குறைந்து கொண்டே போனாலும் அதனால் ஏற்படும் வேளாண் இழப்பு பல்வேறு பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதன் மூலம் ஈடு செய்யப்படுகிறது. இத்தகைய பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையே பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் தமிழகம் பெரும் சாதனையை அடைந்துள்ளது. 1965-66 ஆம் ஆண்டு 52.52 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்த உணவுப் பயிர் உற்பத்தி 2001-2002 ஆம் ஆண்டு 84.72 இலட்சம் மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது.

[2003 ஏப்ரல் 24

*2.3.* தற்போது அரிசி உற்பத்தித் திறனில் நிரந்தர நீர்வளம் கொண்ட பஞ்சாப் மாநிலத்திற்கு இணையாக தமிழகம் முன்னணியில் உள்ளது. அகில இந்திய அளவில் கரும்பு மற்றும் நிலக்கடலை உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. பாசனப் பகுதிகளில் பயிரிடப்படும் பயிர்களின் உற்பத்தித் திறன் நிலையாக உள்ளது; மானாவாரிப் பயிர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் அதிக கவனம் தேவைப்படுகிறது.

*2.4.* மாண்புமிகு தமிழக முதல்வரின் 15 அம்சத் திட்டத்தில் அறிவித்துள்ளபடி தொடர் பசுமைப் புரட்சியினை அடைய மானாவாரி வேளாண்மை உற்பத்தியில் மேம்பாடு, ஒருங்கிணைந்த தீவிர வேளாண்மைத் திட்ட முறை செயலாக்கம், கூடுதல் மதிப்பு மிக்க வேளாண் விளை பொருட்கள், நீர்ப்பிடிப்பு பகுதி மற்றும் தரிசு நில மேம்பாடு, ஒருங்கிணைந்த உரம், பூச்சி மற்றும் நீர் வேளாண்மை மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஜெட்ரோபா மற்றும் பாரடைஸ் (சைம்ம ரூபா) மரங்களைப் பயிரிட்டு அதன் மூலம் தாவர எரிபொருள் மற்றும் எண்ணெய் உற்பத்தி மேற்கொள்வதை ஊக்குவித்து அதனை புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைத்து வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளைத் தொடங்கி விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், கிராமப்புறங்களில் அதிக அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*2.5.* மாநிலத்தின் பொருளாதாரத்தில் வேளாண்மையின் பங்கீடு மிகக் குறைவான வளர்ச்சி கொண்டிருப்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. உதாரணத்திற்கு, 1980களில் ஆண்டொன்றிற்கு 3.33 விழுக்காடாக இருந்த நிகர மாநில வேளாண் உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் 1991-96-களில் 4.33 விழுக்காடாக இருந்தது. பொருளியல் ஆய்வுகளின்படி, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டிற்காக அரசின் மூலதன செலவினங்களினால் அதிக மேம்பாட்டையும் அடைய முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது. வேளாண் துறையில் வேலைவாய்ப்புகள் பெருக்குவதாலும், வாழ்விற்கான பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதாலும், மாநில பொருளாதாரத்தில் வேளாண்மை முக்கிய பங்கு வகிப்பதாலும், நமது அரசு, வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்காக அதிகம் செலவிடுவதன் மூலம் அதிக உற்பத்தித் திறன் அடைவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

*2.6.* தமிழக வேளாண்மை எதிர்நோக்கியுள்ள சவால்களைச் சந்திக்க பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2002-2007) கீழ்க்கண்ட குறிக்கோள்கள் வரையறுக்கப்பட்டுள்ளன:—

* வேளாண்மை 4 விழுக்காடு வளர்ச்சியையும், தோட்டக்கலைத் துறை 8 விழுக்காடு வளர்ச்சியினையும் அடைவது;
* தரிசு மற்றும் பயன்பாட்டில் இல்லாத நிலங்களின் மேம்பாட்டின் மூலம் நிகர சாகுபடி நிலப்பரப்பை அதிகப்படுத்துதல்;
* மண் மற்றும் ஈரப்பதம் பாதுகாப்பு;
* சொட்டு நீர், தெளிப்பு நீர் போன்ற மேம்படுத்தப்பட்ட பாசன முறைகளின் மூலம், நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல்;
* அதிக விளைச்சலுக்கான தரமான மற்றும் உயர் ரக விதைகள், தாவர உரங்கள் ஆகியவற்றின் விநியோகத்திற்கு முன்னுரிமை அளித்தல்;
* பயிர் இழப்புகளை குறைக்க ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையை ஊக்குவித்தல்;
* அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப மேலாண்மை மற்றும் கட்டமைப்பிற்கான முதலீடுகளை உயர்த்துதல்;
* சந்தை நுண்ணறிவு மற்றும் தகவல் வலுப்படுத்துதல் மூலம் சிறந்த சந்தை அமைப்புகளை ஏற்படுத்துதல், உற்பத்திக்கான பயிரை தேர்ந்தெடுக்க திட்டமிடுதல் மற்றும் அதன் மூலம் சாகுபடியாளருக்கு நல்ல விலை கிடைக்கச் செய்தல்;
* இயற்கை வழி வேளாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், உயிர் உரம் மற்றும் பூச்சிக் கொல்லி உபயோகத்தை மேம்படுத்துதல்;
* தோட்டக்கலை மற்றும் வேளாண் வணிகத்தை அரசு மற்றும் தனியார் முதலீட்டின் மூலம் ஊக்கப்படுத்துதல்;
* வேளாண் ஏற்றுமதி மையங்களை உருவாக்குவதன் மூலம் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்;
* ஒருங்கிணைந்த தொழில்நுட்பங்கள், சேவைகள், விதை உள்ளிட்ட இடுபொருள் விநியோகம் மற்றும் அரசின் கொள்கைகள் மூலம் வெளிக்கொணரப்படாத வேளாண் வளங்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்;

மேற்கூறிய குறிக்கோள்களை அடைய வகுக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் பகுதிகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 24

## கோரிக்கை எண்-5 வேளாண்மைத் துறை

## 2003-04-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2003-04 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 618,26,06 | 5,77,28 | 55 | 624,03,89 |
| மொத்தத் தொகை சாட்டியது | 3 | – | – | 3 |

| கணக்குத் தலைப்பு | 2001-02 கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2002-03 | திருத்த மதிப்பீடு 2002-03 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2003-04 |
|---|---|---|---|---|
| 2059 பொதுப்பணிகள் | – | – | – | 84,59 |
| 2401 பயிர் வளர்ப்பு | 294,36,20 | 330,10,85 | 307,52,19 | 348,61,76 |
| 2402 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 75,26,89 | 83,79,19 | 66,28,34 | 76,60,73 |
| 2415 வேளாண் ஆராய்ச்சியும் கல்வியும் | 62,11,20 | 61,30,53 | 62,47,92 | 64,61,82 |
| 2435 ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 32,88,81 | 34,53,16 | 33,11,84 | 37,04,08 |
| 2501 ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | 3,44,25 | 9,71,18 | 9,71,18 | 11,00,00 |
| 2551 மலைப் பகுதிகள் | 11,40,57 | 12,83,32 | 12,80,96 | 14,20,51 |
| 2702 சிறுபாசனம் | 8,92,88 | 10,34,02 | 8,54,15 | 9,52,34 |
| 2705 பாசனப் பகுதி மேம்பாடு | 38,80,69 | 48,97,79 | 46,39,97 | 50,12,09 |
| 3451 தலைமைச் செயலகம்-பொருளாதாரப் பணிகள் | 3,34,12 | 3,95,58 | 3,35,08 | 3,77,89 |
| 4401 பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 5,49,31 | 3,69,84 | 4,47,69 | 5,77,26 |
| 4415 வேளாண்மை ஆராய்ச்சி, கல்வி குறித்த மூலதனச் செலவு | 38 | – | 30,65 | 1 |
| 4435 ஏனைய வேளாண் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | – | – | 35 | – |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 49,30 | 2 | 2 | 1 |
| 6401 பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | 12,00,33 | – | 2,96,00 | 55 |



2003 ஏப்ரல் 24]

## 2003-04 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2003-04 ஆம் ஆண்டு திட்ட செலவினம் |
|---|---|---|
| | **வேளாண்மை ஆணையர்** | |
| 1 | பண்ணைக் கழிவிலிருந்து புளுரோட்டஸ் பூஞ்சாணம் கொண்டு உரம் தயாரித்தல் | 2.80 |
| 2 | வேளாண் கழிவுகளிலிருந்து மண்புழு உரம் தயாரித்தல் | 4.05 |
| 3 | உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிருவாகத்தினை பிரபலப்படுத்துதல் | 8.64 |
| 4 | கரும்பு மற்றும் வாழைப் பயிரில் ஊடுபயிர் சாகுபடி | 5.00 |
| 5 | வேளாண் விரிவாக்க மையங்களுக்கு ஈரப்பதம் அறியும் கருவி வழங்குதல் | 15.00 |
| 6 | வேளாண் விரிவாக்க மையங்களுக்கு மர அட்டகங்கள் வழங்குதல் (200 மையங்களுக்கு) | 30.00 |
| 7 | விதைகளின் தரத்தினை மேம்படுத்த விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்படுத்துதல் | 21.00 |
| | மொத்தம் .. | 86.49 |
| | **விதைச்சான்றுத் துறை** | |
| 8 | கண்ணம்பாளையம் அரசுப் பண்ணையில் உள்ள கிணற்றுக்கு சுற்றுச் சுவர் அமைத்தல் | 1.25 |
| 9 | விதைச்சான்றுத் துறையின் பயிற்சிப் பிரிவிற்கு நகல் எடுக்கும் இயந்திரம் வழங்குதல் | 1.75 |
| 10 | தருமபுரி விதைபரிசோதனை நிலையத்திற்கு பாதுகாப்பு சுற்றுச் சுவர் அமைத்தல் | 0.36 |
| 11 | அங்காடி விவரங்களையும், சந்தை நிலவரத்தில் முன்கூட்டியே அறியும் பிரிவு அமைத்தல் | 1.00 |
| | மொத்தம் .. | 4.36 |

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2003–04 ஆம் ஆண்டு திட்ட செலவினம் |
|---|---|---|
| | **தோட்டக் கலைத் துறை** | |
| 12 | அரசு தோட்டக்கலை பண்ணைகளுக்கு மற்றும் இயக்குநரகத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 100.00 |
| 13 | கோவை மாவட்டம், கண்ணம்பாளையத்தில் அரசு தோட்டக்கலை பண்ணை புதியதாக அமைத்தல் | 15.00 |
| 14 | நஞ்சநாடு மற்றும் படசோலை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் முக்டேமியா மற்றும் பீகாநட் செயல் விளக்கம் அமைத்தல் | 5.00 |
| | மொத்தம் .. | 120.00 |
| | **வேளாண்மை பொறியியல் துறை** | |
| 15 | ஆழ் உழவு வேளாண் உபகரணங்கள், சட்டி கலப்பை மற்றும் நில அளவை கருவிகள் வாங்குதல் | 13.25 |
| 16 | தேனி மாவட்டத்தில் நீர்ப்பிடிப்பு பகுதி மேம்பாட்டிற்காக நிலவியல் தகவல் அமைப்பு உருவாக்குதல் | 10.00 |
| | மொத்தம் .. | 23.25 |
| | **வேளாண் பல்கலைக்கழகம்** | |
| 17 | கோயம்புத்தூர், எண்ணெய்வித்துக்கள் துறை சி.பி.பி.ஜி. பல்நோக்கு வெளிநாட்டு வர்த்தகத்திற்கு உகந்த உயர் விளைச்சல் ஸ்பேனிஷ், வெர் குறித்து மதிப்பிட | 4.55 |
| 18 | மேட்டுப்பாளையம், எப்.சி.(ம)ஆர்.ஐ. துரித நிலக்காடு வளர்ப்பு திட்டத்திற்கு சைமரூபாக்குவா மரக்கன்றுகள் உற்பத்தியைப் பெருக்கி, பிரபலப்படுத்துதல் | 8.78 |
| 19 | தென்மாவட்ட வறட்சிப் பகுதிகளுக்கேற்ற மிளகாய் இரகத்தை வளர்த்து, பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்குரிய தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் | 4.15 |
| 20 | அருப்புக்கோட்டை, புன்செய் நில ஒருங்கிணைந்த பண்ணையம்– விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் | 1.72 |
| 21 | அருப்புக்கோட்டை, மானாவாரி பழப் பயிர்களின் ஒட்டு மொட்டுச் செடிகளை வணிக ரீதியில் அதிக அளவில் உற்பத்தி செய்தல் | 2.00 |
| 22 | அருப்புக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் வறட்சிக்கு இலக்காகும் மானாவாரி கரிசலுக்கேற்ற உயர் விளைச்சல் கம்பு கூட்டுரகம் உருவாக்குதல், சோதனைக்குட்படுத்துதல் மற்றும் தெரிவு செய்தல் | 2.80 |
| 23 | உயர் விளைச்சலுக்காகவும், ஆதாயத்திற்காகவும் சிரக சம்பா நெல் சாகுபடியை மேம்படுத்துதல் | 5.80 |
| 24 | திருப்பதிசாரம், வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இருவழி மரபு முறையில் வீரிய ஒட்டுநெல் இரக சாகுபடியை மேம்படுத்தல் | 9.80 |
| 25 | எத்தாபூர், மரவள்ளியில் சொட்டு நீர் உரப்பாசன முறையை பிரபலப்படுத்துதல் | 3.60 |
| 26 | கோவில்பட்டி, வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், மானாவாரி கரிசலில் நிரந்தரமான வேளாண்மைக்கேற்ற ஒருங்கிணைந்த விவசாயப் பண்ணை முறை | 3.63 |
| 27 | பரமக்குடி, ஆராய்ச்சி நிலையம், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் மானாவாரி சாகுபடியில் காய்கறி பயிர் உற்பத்தியை மேம்படுத்துதல் | 3.17 |
| | மொத்தம் .. | 50.00 |
| | மொத்த திட்டப் பணிகள் .. | 284.10 |

[2003 ஏப்ரல் 24

## அத்தியாயம் - 2

## வேளாண்மை

### 1. பருவநிலை மற்றும் பயிர் விவரம்:

தமிழக வேளாண்மை பருவ மழையையே பெருமளவிற்குச் சார்ந்து உள்ளது. தென்மேற்கு மற்றும் வடகிழக்கு ஆகிய இரு பருவ காலங்களும் நம் மாநிலத்தின் வெற்றிகரமான பயிர் சாகுபடிக்கு மிகவும் முக்கியமானவைகளாகும். தமிழகத்தில் பாயும் பெரும்பாலான நதிகளும் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகிற காரணத்தினால் தமிழக வேளாண்மையானது நமது மாநிலத்தில் மட்டுமல்லாது அண்டை மாநிலங்களின் பருவகால மாறுபாடுகளையும் பெரிதும் சார்ந்துள்ளது.

### 2. மழை விவரம்:

தமிழகத்தின் இயல்பான மழை அளவு, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட மழை விவரம் வருமாறு:—

(மில்லி மீட்டரில்)

| பருவம்/மாதம் | இயல்பான மழை | பெய்தமழை 2001 | 2002 | வேறுபாடு இயல்பு மழையுடன் | (விழுக்காடு) கடந்த ஆண்டு மழையுடன் |
|---|---|---|---|---|---|
| குளிர்காலம் (ஜனவரி–பிப்ரவரி) | 47.3 | 16.8 | 70.0 | +47.9 | +416.7 |
| கோடை (மார்ச்–மே) | 134.2 | 118.5 | 82.4 | –38.5 | –30.5 |
| தென்மேற்குப் பருவம் (ஜூன்–செப்டம்பர்) | 329.4 | 260.0 | 178.5 | –45.8 | –31.3 |
| வடகிழக்குப் பருவம் (அக்டோபர்–டிசம்பர்) | 468.0 | 379.4 | 399.5 | –14.7 | +5.3 |
| மொத்தம் | 978.9 | 774.7 | 730.4 | –25.4 | –5.7 |
| | | 2002 | 2003 | | |
| (ஜனவரி – பிப்ரவரி 2003) | 36.7 | 70.0 | 8.7 | –76.3 | –87.5 |



2003 ஏப்ரல் 24]

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற மழையளவு விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| இயல்பான மழையளவு | - | 978.9 மி.மீ. |
| 1998 | - | 1036.4 மி.மீ. |
| 1999 | - | 837.3 மி.மீ. |
| 2000 | - | 847.5 மி.மீ. |
| 2001 | - | 774.7 மி.மீ. |
| 2002 | - | 730.4 மி.மீ. |

2002 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் குளிர்காலப் பருவத்தில் தமிழகம் கூடுதலான மழையினைப் பெற்றுள்ளது. கோடைப் பருவத்தில் இயல்பான மழை அளவினை விட 38.5 சதம் குறைவாகவும் தொடர்ந்து தென்மேற்கு பருவத்திலும் இயல்பான மழை அளவினை விட 45.8 சதம் குறைவாகவும் மழை பெறப்பட்டுள்ளது.

வடகிழக்குப் பருவ மழை நன்கு தொடங்கி அக்டோபர் 2002-ல் இயல்பான மழை அளவினை விடக் கூடுதலாக பெற்றாலும், நவம்பர் 2002 மற்றும் டிசம்பர் 2002-ல் இயல்பை விட குறைவாகப் பெய்து, வடகிழக்கு பருவத்திலும் இயல்பான மழையளவைவிட 14.7 சதம் குறைந்துள்ளது. கோடை, தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ காலங்களில் தொடர்ந்து குறைவாக மழை பெறப்பட்டதால் மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. ஜனவரி மற்றும் பிப்ரவரி 2003 மாதங்களிலும் மழை இயல்பைவிட—76.3 சதம் குறைவாகப் பெறப்பட்டுள்ளது.

### 3. தமிழ்நாட்டில் வேளாண் தட்ப வெப்ப மண்டலங்கள்:

3.1. தமிழகத்தின் பல பகுதிகளில் பெய்யும் மழையின் அளவு, நீர்ப்பாசன ஆதாரங்கள், மண்ணின் தன்மை, பயிரிடப்படும் பயிர்களின் தன்மை மற்றும் பல காரணிகளின் அடிப்படையில் தமிழ்நாடு ஏழு வேளாண் தட்ப வெப்ப மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வடகிழக்கு மண்டலம், வடமேற்கு மண்டலம், மேற்கு மண்டலம், காவிரி பாசன மண்டலம், தெற்கு மண்டலம், அதிக மழை பெறும் மண்டலம் மற்றும் மலை மண்டலம் முதலியவை ஆகும்.

[2003 ஏப்ரல் 24

தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு கீழ்க்கண்டவாறு பயன்பாட்டில் உள்ளது:

| வ.எண் | விவரம் | பரப்பு (இலட்சம் எக்டரில்) |
|---|---|---|
| 1 | வனங்கள் | 21.3 |
| 2 | சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்கள் | 4.8 |
| 3 | வேளாண்மை பிற பயன்பாட்டில் உள்ளவை | 19.8 |
| 4 | சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்கள் | 3.5 |
| 5 | நிரந்தரப் புல்வெளி மற்றும் இதர மேய்ச்சல் நிலங்கள் | 1.2 |
| 6 | தோப்புகள் மற்றும் மரங்கள் உள்ள நிலங்கள் | 2.4 |
| 7 | நடப்பு தரிசு | 10.9 |
| 8 | இதர தரிசு நிலங்கள் | 11.4 |
| 9 | நிகர சாகுபடி பரப்பு | 54.6 |
| 10 | மொத்த நிலப்பரப்பு | 129.9 |
| 11 | ஒரு முறைக்குமேல் விதைக்கப்பட்ட பரப்பு | 10.6 |
| 12 | மொத்த சாகுபடி பரப்பு | 65.2 |



2003 ஏப்ரல் 24]

**3.2. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களின் முக்கிய பயிர்களின் சராசரி சாகுபடி பரப்பு (எக்டரில்)**

| பயிர்கள் | வடகிழக்கு மண்டலம் (சென்னை, காஞ்சி, திருவள்ளூர், வேலூர், தி.மலை, கடலூர், விழுப்புரம்) | வடமேற்கு மண்டலம் (சேலம், நாமக்கல், தர்மபுரி) | மேற்கு மண்டலம் (ஈரோடு, கோயம்புத்தூர்) | காவிரி பாசன மண்டலம் (தஞ்சை, நாகை, திருவாரூர், திருச்சி, கரூர், பெரம்பலூர்) | தெற்கு மண்டலம் (புதுக் கோட்டை, மதுரை, திண்டுக் கல், தேனி, இராமநாத புரம், சிவகங்கை, விருதுநகர், தி.வேலி, தூத்துக்குடி) | அதிக மழை பெறும் மண்டலம் (கன்னியா குமரி) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| நெல் | 721844 | 122941 | 78784 | 636000 | 576982 | 33661 | 2170212 |
| சோளம் | 22022 | 69762 | 101169 | 92312 | 99238 | 0 | 384503 |
| கம்பு | 80674 | 11943 | 2899 | 25617 | 47103 | 0 | 168236 |
| கேழ்வரகு | 20110 | 80850 | 12881 | 482 | 5680 | 0 | 120003 |
| பாசிப் பயறு | 12359 | 16426 | 9249 | 21465 | 23584 | 3 | 83086 |
| உளுந்து | 35349 | 23864 | 4852 | 64065 | 34463 | 1507 | 164100 |
| கரும்பு | 136029 | 40674 | 38106 | 46572 | 41795 | 0 | 303176 |
| பருத்தி | 23281 | 43077 | 28242 | 39007 | 98558 | 1 | 232166 |
| நிலக் கடலை | 383529 | 212990 | 96224 | 85343 | 121698 | 139 | 899923 |
| வாழை | 14959 | 3961 | 10868 | 19319 | 30478 | 4479 | 84064 |
| மா | 19523 | 34364 | 2824 | 4422 | 26572 | 1754 | 89459 |
| பிறபயிர்கள் | 191121 | 468070 | 300790 | 222751 | 501724 | 61300 | 1745756 |
| மொத்த பயிரிட்ட பரப்பு | 1660800 | 1128922 | [illegible] | 1257355 | 1607875 | [illegible] | [illegible] |

[2003 ஏப்ரல் 24

**மலை மண்டலம் (நீலகிரி)**

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) |
|---|---|---|
| 1 | தேயிலை | 54237 |
| 2 | காபி | 8623 |
| 3 | காய்கறிகள் (பட்டாணி, முட்டை கோஸ், கேரட், குடை மிளகாய், டர்னீப், நூல்கோல், முள்ளங்கி, பீட்ரூட், லெட்டூஸ், காளிஃப்ளவர்) | 2742 |
| 4 | வாசனை திரவிய பயிர்கள் | 4145 |
| 5 | உருளைக்கிழங்கு | 2666 |
| 6 | தானியம் மற்றும் பருப்பு | 2132 |
| 7 | உணவு அல்லாத பிற பயிர்கள் | 1538 |
| 8 | பழங்கள் | 688 |
| 9 | இதர பயிர்கள் | 264 |
| 10 | எண்ணெய்வித்துக்கள் | 71 |
| 11 | மலர்கள் | 1 |
| | மொத்தம் | 77107 |

3.3. தமிழ்நாட்டில் நெல் 21,70,212 எக்டர் பரப்பிலும், மக்காச்சோளம் 3,84,503 எக்டர் பரப்பிலும், கம்பு 1,68,236 எக்டர் பரப்பிலும், கேழ்வரகு 1,20,003 எக்டர் பரப்பிலும், பாசிப்பயறு 83,086 எக்டர் பரப்பிலும், உளுந்து 1,64,100 எக்டர் பரப்பிலும், கரும்பு 3,03,176 எக்டர் பரப்பிலும், பருத்தி 2,32,166 எக்டர் பரப்பிலும், நிலக்கடலை 8,99,923 எக்டர் பாப்பிலும், வாழை 84,064 எக்டர் பரப்பிலும், மா 89,459 எக்டர் பாப்பிலும், இதர பயிர்கள் 17,45,756 எக்டர் பரப்பிலும், நீலகிரி மலை மண்டலத்தில் பல்வேறு பயிர்கள் 77,107 எக்டர் பரப்பிலும் சராசரியாக பயிரிடப்படுகிறது.

### 4. நீர்ப்பாசனத் திட்டங்களின் செயல்பாடு மற்றும் பயிர் சாகுபடி

4.1. வழக்கமாக ஜூன் 12 ஆம் தேதி திறந்து விடப்படும் மேட்டூர் அணை, நீர் இருப்பு குறைவாக இருந்ததால் கர்நாடகாவிலிருந்து நீர் திறந்துவிடப்படும் என்று எதிர்பார்த்து 6-9-2002 அன்று திறக்கப்பட்டது.



2003 ஏப்ரல் 24]

கர்நாடகாவிலிருந்து நீர் திறந்து விடப்படாததால் காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை நெல் சாகுபடி இயல்பான 2.07 இலட்சம் எக்டர் பரப்பிற்கு பதில் 0.51 இலட்சம் எக்டர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது.

குறுவையில் ஏற்பட்ட நெல் சாகுபடிப் பரப்பு இழப்பினை சம்பாப் பருவத்திலும் ஈடுசெய்ய முடியவில்லை. மேட்டூர் அணையின் குறைவான நீர் இருப்பினாலும் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததாலும் காவிரி டெல்டா பகுதிகளில் நடவு செய்யப்பட்ட சம்பா நெல் பயிரினைக் காப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது. இத்தகைய கடும் வறட்சி தாக்குதலினால் நெல் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி ஆகிய இரண்டிலும் தமிழகம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய வாய்ப்பில்லை என்பதுடன் இலக்கிற்கும் சாதனைக்கும் இடையிலான இடைவெளியும் குறிப்பிடத்தக்க அளவு இருக்கும். இதேபோல பயறுவகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருத்தி ஆகிய பயிர்களிலும்கூட பரப்பளவு மற்றும் உற்பத்தி ஆகியவற்றின் இலக்கு மற்றும் சாதனை ஆகியவற்றிற்கிடையிலான இடைவெளி குறிப்பிடத்தக்க அளவு இருக்கும். மேற்பரப்புப் பாசனத் திட்டங்களில் குறைவான நீர்த்தேக்கம் இருந்ததுடன் மிகவும் குறைவான மழைப் பொழிவின் காரணமாக அனைத்து நீர் ஆதாரங்களும் திருப்தியளிக்கக்கூடிய அளவு செயல்படவில்லை.

4-2-2002—2003-ம் ஆண்டின் பயிர்வாரியான சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி இலக்கு விவரம் பின்வருமாறு:

| பயிர் | 2002–2003 பரப்பு (இல.ஏக்டர்) | | 2002–2003 உற்பத்தி (இல.மெ.டன்) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| அரிசி | 22.00 | 14.893 | 80.50 | 48.600 |
| சிறுதானியங்கள் | 11.00 | 10.476 | 13.00 | 13.618 |
| பயறுவகைகள் | 10.00 | 7.735 | 6.50 | 2.970 |
| மொத்த உணவு தானியங்கள் | 43.00 | 33.104 | 100.00 | 65.188 |
| பருத்தி (இல.பொதிகள்) | 3.00 | 0.889 | 6.13 | 1.550 |
| கரும்பு (வெல்லமாக) | 2.75 | 2.464 | 34.40 | 30.820 |
| எண்ணெய்வித்துக்கள் | 10.86 | 6.396 | 17.87 | 10.668 |

## 5. 2003-2004 ஆம் ஆண்டில் உற்பத்தி இலக்கு

5.1 இயல்பான மழை, சாதகமான பருவ நிலை மற்றும் காவிரியில் உரிய நீர் திறந்துவிடுவதை எதிர்நோக்கி 2003-2004ம் ஆண்டிற்கு பயிர்வாரியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி இலக்கு விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | பயிர் | பரப்பு (இல.எக்டர்) | உற்பத்தி இலக்கு (இலட்சம் டன்) |
|---|---|---|---|
| 1. | அரிசி | 20.00 | 73.58 |
| 2. | சிறுதானியங்கள் | 10.00 | 13.15 |
| 3. | பயறுவகைகள் | 7.20 | 3.12 |
| | மொத்த உணவுதானியங்கள் | 37.20 | 89.85 |
| 4. | எண்ணெய்வித்துக்கள் | 9.50 | 16.07 |
| 5. | பருத்தி (இலட்சம் பேல்கள்) | 2.50 | 5.40 |
| 6. | கரும்பு (வெல்லமாக) | 3.00 | 33.65 |

5.2 வேளாண்மையில் நீடித்திருக்கக்கூடிய வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் பல்வேறு அரசுத் துறைகளின் இடையறாத முயற்சி மிகவும் இன்றியமையாதவையாகும். இத்தகைய நோக்கத்தை அடையும் பொருட்டு, வரும் ஆண்டுகளில் கீழ்க்காணும் குறிப்பான திட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட்டு மிகுந்த கவனத்துடன் செயல்படுத்தப்படும்.

**மாநிலத் திட்டங்கள்:**

### 6. இடுபொருட்கள் வழங்கும் திட்டம்:

### 6.1 விதைகள்

பயிர்களில் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் விதை பெரும் பங்கினை ஆற்றுகின்றது. அரசால் அனுமதிக்கப்பட்ட விதை மாற்று விகிதப்படி தரமான சான்றுபெற்ற விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதில் வேளாண்மைத் துறை முதன்மையான பங்கினை ஆற்றி வருகின்றது. விதை உற்பத்தி மூன்று நிலைகளில் மேற்கொள்ளப்படுகிறது. அவை வல்லுநர் விதை உற்பத்தி, ஆதார விதை உற்பத்தி மற்றும் சான்று விதை உற்பத்தி ஆகும்.





வேளாண்மைத் துறையின் பல்வேறு பயிர்களுக்குத் தேவைப்படும் வல்லுநர் விதையினை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றது. இதுவன்றி தேசிய இரக வல்லுநர் விதைகள் மத்திய அரசின் ஒதுக்கீட்டின்படி இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக மையங்களின் மூலமாக பெறப்படுகின்றது. இவ்வாறு பெறப்பட்ட வல்லுநர் விதைகளைக் கொண்டு ஆதார விதை உற்பத்தி இத்துறையின்கீழ் இயங்கும் 39 அரசு விதைப்பண்ணைகள், 5 எண்ணெய்வித்துப் பண்ணைகள் மற்றும் வம்பன் பயிறு விதைப் பண்ணை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அரசுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் ஆதார விதைகளைக் கொண்டு விவசாயிகளின் நிலங்களில் சான்று விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு விதைச்சான்றுத் துறையின் தரச்சான்று பெற்று சான்றுவிதை உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.

6.2 இவ்விதைகளை சுத்திகரிப்பு செய்ய 16 பெரிய, 3 நடுத்தர மற்றும் 51 சிறிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டுதோறும் 28,500 மெடன் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்படுகின்றது. இவ்விதைகள் மாநிலம் முழுவதும் உள்ள 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

2003-2004-ம் ஆண்டில் பின்பற்றப்படும் விதைமாற்று விகிதம் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பயிர் | மாநில அரசு பின்பற்றும் விதை மாற்று விகிதம் |
|---|---|---|
| 1 | நெல் | 17 |
| 2 | சிறுதானியங்கள் | 7 |
| 3 | பயறு வகைகள் | 12.5 |
| 4 | பருத்தி—மானாவாரி | 10 |
| | பருத்தி—இறவை | 15 |
| 5 | நிலக்கடலை | 5 |
| 6 | எள் | 15 |
| 7 | சூரியகாந்தி | 50 |
| 8 | ஆமணக்கு | 30 |
| 9 | சோயாமொச்சை | 20 |

[2003 ஏப்ரல் 24

6.3 மாநில அரசின் நிதி உதவியுடன் பல்வேறு பயிர்களுக்கான விதைப்பெருக்குத் திட்டங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது. 2002-2003-ம் ஆண்டில் பல்வேறு பயிர்களுக்கான விதைப்பெருக்குத் திட்ட நிதி ஒதுக்கீடும் சாதனை விவரமும் பின்வருமாறு:

(ரூ.இலட்சத்தில்)

| வ.எண் | பயிர் | நிதி | சாதனை |
|---|---|---|---|
| 1 | நெல் | 1705.66 | 1809.871 |
| 2 | சிறுதானியங்கள் | | |
| 3 | பயறு வகைகள் | 114.73 | 114.31 |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 709.99 | 704.896 |
| 5 | பருத்தி | 89.16 | 85.95 |

6.4 இத்திட்டம், கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்டாலும், குறிப்பிடத்தக்க அளவு சாதனை ரபி பருவ விதைப்பண்ணைகளின் அறுவடை மூலம் அடையப்பட்டது. 2002-2003-ம் ஆண்டின் விதை கொள்முதல், விநியோக இலக்கு சாதனை மற்றும் 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டம் வருமாறு:

(அலகு: மெட்ரிக் டன்கள்)

| வ. எண் | பயிர் | 2002–2003 இலக்கு | 2002–2003 சாதனை | 2003–2004 இலக்கு |
|---|---|---|---|---|
| அ. | கொள்முதல் | | | |
| 1. | நெல் | 18000 | 15008.6 | 17000 |
| 2. | சிறு தானியங்கள் | 400 | 341.4 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1288.2 | 1900 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 9097 | 3615.8 | 9097 |
| 5. | பருத்தி | 322 | 166.6 | 322 |
| ஆ. | விநியோகம் | | | |
| 1. | நெல் | 18000 | 15483.5 | 17000 |
| 2. | சிறு தானியங்கள் | 400 | 366.5 | 400 |
| 3. | பயறு வகைகள் | 2600 | 1144.6 | 1900 |
| 4. | எண்ணெய் வித்துக்கள் | 9097 | 4269.1 | 9097 |
| 5. | பருத்தி | 322 | 124.1 | 322 |



2003 ஏப்ரல் 24]

## 7. மண்ணின் தரம், உர விநியோகம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை

7.1 வேளாண் உற்பத்தித்திறனை நிர்ணயிப்பதில் மண்ணின் தரம் மிகவும் முக்கியமான காரணியாகும். புள்ளி விவரங்களின்படி தமிழகத்தில் வேளாண் நிலங்களிலிருந்து பயிர்ச் சாகுபடியினால் வெளியேற்றப்படும் ஊட்டச்சத்துக்களின் அளவு 8.92 இலட்சம் டன்னாக இருந்தபோதிலும் உரமிடுதலின் மூலம் மண்ணிற்குச் செலுத்தப்படும் ஊட்டச் சத்துக்களின் அளவு 7.91 இலட்சம் டன் மட்டுமே ஆகும். செறிவான பயிர்ச்சாகுபடி மற்றும் மக்கட்தொகைப் பெருக்கம் ஆகிய காரணங்களினால் பயிர் ஊட்டச் சத்துக்களின் எதிர் மறை இடைவெளி இருப்பதையே இப்புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. எனவே, மண்ணின் வளத்தைப் பேண வேண்டுமானால் ஒரு சிறப்பான ஊட்டச்சத்து மேலாண்மைக் கொள்கை மிகவும் அவசியமாகும். வேதி உரங்களை பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் அதே வேளையில், இயற்கை உரங்கள், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதற்கும், களர் மற்றும் உவர் நிலங்களை சீர்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் மட்டுமே ஒரு சிறப்பான ஊட்டச்சத்து மேலாண்மையை நிறுவ முடியும். இத்தகைய நோக்கத்தை அடையும்பொருட்டு தமிழக அரசின் வேளாண்மைத் துறை எடுத்துள்ள பல்வேறு முயற்சிகளும், திட்டங்களும் பின்வரும் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

### 7.2 மண் அளவை மற்றும் நில உபயோக அமைப்பு

கள ஆய்வுகள் மற்றும் பரிசோதனைக் கூட ஆய்வுகள் மூலம் மண்ணின் தன்மை, அதன் பௌதிக மற்றும் இரசாயன குணங்கள் ஆகியவைகள் கண்டறியப்பட்டு சர்வதேச தரத்திற்கு ஏற்ப மண்ணை வகைப்படுத்தி, நில அமைப்பியலின்படி வரைபடம் தயாரித்து பல்வேறு வகையான உபயோகங்களுக்கு பயன்படுதலை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இவ்வமைப்பு கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகிறது. 2002-2003-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட கள ஆய்வு இலக்கான 1.10 இலட்சம் எக்டருக்கு 1.14 இலட்சம் எக்டர் சாதனை அடையப்பெற்றுள்ளது. வரும் 2003-2004-ம் ஆண்டில் விரிவான மண் வகையீட்டுப் பணியாக 1.10 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்பட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

### 7.3 களர் உவர் நிலச் சீர்திருத்தம்

தமிழகத்தில் உள்ள களர் உவர் நிலங்களைக் கண்டறிந்து அதனை சீர்திருத்தம் செய்ய நாகப்பட்டினம், திருவாரூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் ஆகிய 8 மாவட்டங்களில் ஆண்டிற்கு 4000 ஏக்கர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் ஜிப்சம் மற்றும் சிங்க் சல்பேட் வழங்கப்படுகிறது. மேலும் நீர் வடிகால்வாய்கள் அமைப்பதற்கு ஏக்கருக்கு ரூ.1000/- மானியமாக நிதி உதவி வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 3952 ஏக்கர் பரப்பில் களர் உவர் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. 2003-2004-ம் ஆண்டில் 4000 ஏக்கர் பரப்பில் இத்திட்டம் செயல்பட உள்ளது.

### 7.4 மண் பரிசோதனை நிலையங்கள்

மண்பரிசோதனை மூலம் மண்ணில் என்னென்ன சத்துக்கள் எந்த அளவில் உள்ளன என்பதனை அறிந்து அதன் அடிப்படையில் என்னென்ன உரங்கள் இடவேண்டும் என்பது குறித்த பரிந்துரைகள் வழங்கப்படுகிறது. இதனால் தேவையான உரங்களை மட்டுமே இட்டு செலவைக் குறைப்பதுடன் தேவையற்ற உரங்களை இடுவதைத் தவிர்த்து மண்வளத்தைப் பாதுகாக்கலாம்.

தமிழகத்தில் உள்ள 19 மண் மாதிரி ஆய்வுக் கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் மாதிரி ஆய்வகங்கள் மூலமாக மண்ணின் வளத்திற்கேற்ப உர சிபாரிசுகளை வழங்கி உழவர்கள் பயனடையும் வகையில் இயங்கி வருகின்றது. இவ்வாண்டில் மொத்தம் 6.83 இலட்சம் மண் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. 2003-2004-ம் ஆண்டில் மண் மாதிரி ஆய்வகங்கள் மற்றும் நடமாடும் மண் மாதிரி ஆய்வகங்கள் மூலம் மண் பகுப்பாய்வு மேற்கொள்ள 8.1 இலட்சம் மண் மாதிரிகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. களர்/உவர் நிலங்களுக்கான சீர்திருத்த முறைகள், கிராம அளவிலான மண்வள அட்டவணை தயாரித்தல் மற்றும் பாசன நீர்த்தன்மையை அறிதல் போன்ற பணிகளையும் இந்த ஆய்வகங்கள் மேற்கொண்டு உரிய சிபாரிசினை வழங்கி வருகின்றன. கிராம ஏற்புத் திட்டம், மண் பரிசோதனை முகாம், கருத்துக் காட்சிகள் மூலம் மண், உயிர் உரம் மற்றும் நுண்ணூட்ட உரத் தொழில்நுட்பங்களைப் பரவலாக்குவதில் நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் உறுதுணை புரிகின்றன. குடுமியான்மலையில் உள்ள "மத்திய தரக் கட்டுப்பாட்டு



2003 ஏப்ரல் 24]

ஆய்வகம்" வேளாண்மைத் துறையின் கீழ் உள்ள அனைத்து ஆய்வகங்களின் பகுப்பாய்வின் பரிசோதனைத் தரத்தினை துல்லியமாகக் கண்காணிக்கவும், பரிசோதனைக்கூட ஆய்வாளர்களுக்கு உரிய பயிற்சி அளித்திடும் பொருட்டும் இயங்கி வருகிறது.

### 7.5 உரப் பரிசோதனை நிலையங்கள்

உரக்கட்டுப்பாடு ஆணை 1985 விதிமுறைகளுக்கு ஏற்ப, தரமான உரங்கள் மற்றும் கலப்பு உரங்களை விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை நிலையங்கள் மற்றும் கலப்பு உர உற்பத்தி மையங்கள் ஆகியவைகளிலிருந்து உர ஆய்வாளர்களால் மாதிரிகள் எடுக்கப்பட்டு உரங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மாநிலத்தில் 14 உரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. 2002-2003-ம் ஆண்டில் ;7681 உரப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2003-2004-ம் ஆண்டில் 16,800 உர மாதிரிகள் பகுப்பாய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் வழங்கப்படும் உரங்களின் தரத்தினை உரக்கட்டுப்பாடு ஆணை 1985-ன் விதிமுறைகளுக்கு ஏற்ப உறுதி செய்யும் பொருட்டு தரக்கட்டுப்பாட்டுப் பிரிவும் ஒன்று இத்துறையின் கீழ் இயங்கி வருகிறது.

### 7.6 உரங்கள்

விவசாயிகளின் தேவைக்கேற்ப உரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தினை கண்காணிக்கும் பொறுப்பினை இத்துறை மேற்கொண்டுள்ளது. உரக்கட்டுப்பாடு ஆணையினை அமல்படுத்தவும், தரமான உரங்கள் விவசாயிகளுக்கு சென்றடைதலை உறுதிப்படுத்தவும் தரக்கட்டுப்பாட்டுக்கென தனிப் பிரிவு இத்துறையில் இயங்கி வருகிறது.

2002-2003-ம் ஆண்டின் இரசாயன உர விநியோகம் மற்றும் 2003-2004-ம் ஆண்டிற்கான திட்டம் பின்வருமாறு:

(இல.மெ.டன்கள்)

| சத்துக்கள் | 2002–2003 | | 2003–2004 |
|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு |
| தழை | 5.30 | 4.36 | 5.35 |
| மணி | 2.30 | 1.57 | 2.28 |
| சாம்பல் | 2.11 | 1.75 | 2.22 |
| மொத்தம் | 9.71 | 7.68 | 9.85 |

[2003 ஏப்ரல் 24

### 7.7 நுண்ணூட்ட உரம்

மண்ணின் வளத்தினை பெருக்குவதிலும் உற்பத்தியினை அதிகரிப்பதிலும் நுண்ணூட்ட உரம் முக்கியப் பங்கினை ஆற்றுகின்றது. பல ஆண்டு காலமாக தீவிர சாகுபடி முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதால் மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்களின் அளவு குறைந்துள்ளது. பயிர்களின் உற்பத்தி மற்றும் விளைபொருட்களின் தரத்தினை மேம்படுத்துவதில் நுண்ணூரம் முக்கியப் பங்கினை ஆற்றி வருகின்றது. எனவே, பல்வேறு பயிர்களுக்குத் தேவைப்படும் நுண்ணூட்ட உரங்களை சமச்சீர் அளவில் இட இத்துறை பரிந்துரை செய்கின்றது. நெல், சிறுதானியம், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பயறு வகைகளுக்குத் தேவைப்படும் நுண்ணூட்ட உரங்கள் ஆண்டுதோறும் 1250 மெ.டன்கள் குடுமியான்மலையில் உள்ள நுண்ணூட்ட உரக்கலவை நிலையம் மூலம் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 1120 மெட்ன் நுண்ணூட்ட உரக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு 1181.3 டன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.8 இயற்கைப் பண்ணையம்

தொடர்ந்து தமிழகத்தில் தீவிர சாகுபடி முறையினைக் கையாளுவதாலும், அளவிற்கு அதிகமாக இரசாயன உரங்களை உபயோகிக்கின்ற காரணத்தினாலும் மண்ணின் வளம் குறைந்துள்ளது. மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் செயல்பாடு அதிகமாக இருந்தால் மட்டுமே மண் வளமானதாக இருக்கும். இதற்கு மண்ணில் போதிய அளவு இயற்கை உரங்கள் தேவைப்படுகிறது. இயற்கை உரங்கள் இடுவதனால் பயிர்களுக்குத் தேவைப்படும் சத்துக்கள் கூடுதலாகக் கிடைப்பதுடன் மண்ணில் உள்ள சத்துக்களை பயிர் எடுத்துக்கொள்ளும் நிலைக்கு மாற்றி வழங்கவும் இயலும். இம்முக்கியத்துவத்தை உணர்ந்து ஒருங்கிணைந்த உர மேலாண்மைத் தொழில்நுட்பத்தின்கீழ் உயிர் உரங்கள், பசுந்தாள் உரம், மண்புழு உரம் மற்றும் புளூரோட்டஸ் மூலம் தொழுஉர உற்பத்தி ஆகிய முறைகள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. இயற்கைப் பண்ணையத்தினை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



2003 ஏப்ரல் 24]

### 7.8.1 உயிர் உர உற்பத்தி மற்றும் விநியோகம்

உயிர் உரங்களான ரைசோபியம், அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஆகியவை கடலூர், இராமநாதபுரம், சேலம், குடுமியான்மலை, சாக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 இடங்களில் இயங்கும் உயிர் உர உற்பத்தி மையங்கள் மூலம் ஆண்டுக்கு 1400 மெடன் என்ற அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் உயிர் உரங்களின் தரத்தினைக் கண்காணிக்க உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் திருச்சியில் இயங்கி வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ள உயிர் உரங்களின் உற்பத்தி பின்வருமாறு:

| வ.எண் | பெயர் | உற்பத்தி அளவு (மெ.டன்) |
|---|---|---|
| 1 | ரைசோபியம் | 280 |
| 2 | அசோஸ்பைரில்லம் | 800 |
| 3 | பாஸ்போ பேக்டீரியம் | 320 |
| | மொத்தம் | 1400 |

2002-2003 ஆம் ஆண்டில் 1401 மெடன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து 1400 மெடன் உயிர் உரங்கள் உற்பத்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.8.2 உயிர் உரங்கள் 25 சத மானிய விலையில் வழங்கும் புதிய திட்டம்

சட்டப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில் உயிர் உரங்கள் பயன்படுத்துவதை விவசாயிகளிடையே ஊக்குவிக்கும் பொருட்டு 2002-2003 ஆம் ஆண்டு ரூ.7.50 இலட்சம் செலவில் 25 சத மானிய விலையில் 5 இலட்சம் உயிர் உரப் பொட்டலங்கள் விவசாயிகளுக்கு வழங்கிடத் திட்டம் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.8.3 நீலப்பச்சை பாசி மற்றும் அசோலா

நீலப்பச்சை பாசி மற்றும் அசோலா போன்றவை காற்றிலுள்ள தழைச்சத்தை ஈர்த்து பயிர்களுக்குக் கூடுதலாக தழைச்சத்தினை வழங்கும் தன்மை உடையன. எனவே, ஆண்டுதோறும் 500 மெ.டன் நீலப்பச்சை பாசி மற்றும் 500 மெ.டன் அசோலா உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 7.8.4. பசுந்தாளுர விதை உற்பத்தி மற்றும் விநியோகம்

விவசாயிகள் பசுந்தாள் உரத்தினைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் 125 மெ.டன் பசுந்தாளுர விதை உற்பத்தி செய்யப்பட்டு 25 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கிட ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 155.5 மெ.டன் பசுந்தாளுர விதை உற்பத்தி செய்யப்பட்டு 150.8 டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. பயிர்ப் பாதுகாப்பு

### 8.1. பூச்சிக் கட்டுப்பாடு

பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலிலிருந்து பயிர்களைப் பாதுகாப்பதன் மூலம் 20 சதவீத உற்பத்தி சேமிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதால் முன்தடுப்பு நடவடிக்கையாக பூச்சி மருந்துகள் தெளிக்கும் முறை பின்பற்றப்படுவதில்லை. உணவுப் பொருட்களில் பூச்சி மருந்துகளின் விஷத்தன்மையைக் குறைத்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டங்களை மேற்கொள்வதில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி மேலாண்மைத் திட்டத்தில் உயிரியல் காரணிகள் மற்றும் உயிரியல் கொல்லிகள் பயன்படுத்துதல் மற்றும் பூச்சி நோய் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாப்பதுடன் சுற்றுச்சூழல் கெடாத வகையில் பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளப்படுகிறது.



ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன்மூலம் இரசாயனப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தும் அளவு தமிழகத்தில் கணிசமாகக் குறைந்துள்ளது என்பது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினை செம்மையாகச் செயல்படுத்துவதின் காரணமாக தமிழகத்தில் பரவலாக பயிர்களில் காணப்படும் பூச்சிகளான நெல் தண்டுப்புழு, இலைச்சுருட்டுப்புழு, புகையான், நிலக்கடலை சிகப்பு கம்பளிப்புழு, புரோடீனியா போன்றவை பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### 8.2. பூச்சிநோய்க் கண்காணிப்பு

பூச்சிநோய்க் கண்காணிப்புப் புள்ளிவிவரங்கள் வாரந்தோறும் 7356 இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு தாக்குதல் விவரம் கண்டறிந்து பொருளாதார சேத நிலைக்கு ஏற்ப பயிர்ப் பாதுகாப்பு குறித்து விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 8.3. பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

8.3.1 ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டக் குறிக்கோளின்படி பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்குக் கூடுதலாக காணப்படும் நிலைகளில் மட்டும் பூச்சி மருந்து பயன்படுத்துதல் சிபாரிசு செய்யப்படுகிறது. உயிரியல் காரணிகள் மற்றும் தாவர பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றின் மூலம் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

8.3.2. 2002-2003 ஆம் ஆண்டில் உணவுப் பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 50.7 இலட்சம் எக்டர் பரப்பிலும், உணவு அல்லாத பயிர்களில் 28.0 இலட்சம் எக்டர் பரப்பிலும் மற்றும் [illegible] நேர்த்தி 22.0 இலட்சம் எக்டர் பரப்பிலும் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 8.4. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்ட நோக்கத்தினை விவசாயிகளிடையே பரவலாக்குவதில் வயல்வெளிப் பள்ளிகள் பெரும்பங்கினை வகிக்கின்றன. மத்திய அரசின் சிறப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம், தேசிய பயறுவகைப் பெருக்குத் திட்டம், எண்ணெய்வித்து உற்பத்தி பெருக்குத் திட்டம் மற்றும் தீவிர பருத்தி சாகுபடித் திட்டம் ஆகியவற்றின் மூலமாக வயல்வெளிப் பள்ளி மற்றும் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

*2002-2003* ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பின்வரும் திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டன:

| வ.எண் | திட்டம் | பொருள் குறியீடு 2002–2003 | சாதனை |
|---|---|---|---|
| 1 | தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் மற்றும் பயிற்சி செயல்விளக்கம் மற்றும் பயிற்சி (எண்கள்) | 1278 | 1262 |
| 2 | பருத்தி தொழில்நுட்பவியல் குழு 2 திட்டத்தின்கீழ் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் (எண்கள்) | 55 | 55 |
| 3 | தேசிய பயறு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்டர்) | 1210 | 1143.25 |
| 4 | எண்ணெய்வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்ட செயல்விளக்கம் (எக்டர்) | 3000 | 2978 |

இத்திட்டம் *2003-2004* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 8.5. பயறு வகைகளுக்கான ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு உழவர் வயல்வெளிப் பள்ளி

சட்டமன்றப் பேரவை அறிவிப்பின்படி பயறு வகைகளில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றி விவசாயிகளுக்கு வயல்வெளிப் பள்ளி மூலம் பயிற்சி அளிக்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது. இப்பயிற்சி நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும்





செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயறு வகைகளுக்கான *100* வயல்வெளிப் பள்ளிகள் நடத்தப்பட்டு மொத்தம் *3,000* விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டன.

### 8.6. உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மற்றும் மாநில ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையம்

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பை மேற்கொள்வதில் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் முக்கியப் பங்கினை ஆற்றுகின்றன. இதனை உற்பத்தி செய்து விநியோகிக்கும் பொருட்டு *8* உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்களும், *2* மாநில கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்களும் மற்றும் *49* ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு மையங்களும் மற்றும் *49* ஒட்டுண்ணி உற்பத்தி மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் வாரியான உற்பத்தி மையங்களின் எண்ணிக்கை, கட்டுப்பாட்டுப் பரப்பு மற்றும் *2003-2004* ஆம் ஆண்டின் இலக்கு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

| பயிர்/பூச்சிகள் | மையங்களின் எண்ணிக்கை. | 2002–2003 பரப்பு (எக்டர்) | | 2003–2004 |
|---|---|---|---|---|
| | | குறியீடு | சாதனை | இலக்கு |
| விநியோக விவரம் | | | | |
| டிரைக்கோகிராமா (கரும்பு இடைக்கணுப்புழு) | 21 | 10500 | 13518 | 10500 |
| பெத்திலிட்ஸ், பிரகோனிட்ஸ் யூகோபிட்ஸ் (தென்னை கருந்தலைப்புழு) | 19 | 10250 | 9838 | 10250 |
| என்பிவி (பருத்தி காய்புழு) | 3 | 1500 | 1556 | 1500 |
| என்பிவி (மணிலா சிகப்பு கம்பளிப்புழு மற்றும் புரோடினியா) | 4 | 480 | 480 | 480 |
| பச்சை மஸ்கார்டின் பூஞ்சாணம் (தென்னை காண்டாமிருக வண்டு) | 2 | 10000 (குப்பிகள்) | 10040 | 10000 |
| டிரைக்கோகிராமா, என்பிவி, சூடோமோனாஸ், டிரைகோடெர்மா விரிடி (பருத்தி, நெல், பயறுவகை மற்றும் மணிலா) | 9 | 60000 | 60000 | 60000 |

இத்திட்டம் *2003-2004* ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

[2003 ஏப்ரல் 24

**8.7. பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள்**

தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு வழங்குவதை உறுதி செய்யும் நோக்கோடு தமிழகத்தில் 9 பூச்சி மருந்து பரிசோதனை ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 16513 பூச்சி மருந்து மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. 2003-2004 ஆம் ஆண்டில் 13,860 பூச்சி மருந்து மாதிரிகள் பகுப்பாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**8.8. நெய்வேலி காட்டாமணக்கு ஒழிப்புத் திட்டம்**

2002-2003 ஆம் ஆண்டில் நெய்வேலி காட்டாமணக்கு ஒழிப்புத் திட்டம் காவேரி டெல்டா பகுதி மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூரில் ரூ.200 இலட்சம் செலவில் 2000 எக்டரில் செயல்படுத்தப்பட்டது.

**9. பயிர்களின் மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டங்கள்**

**9.1. வீரிய ஒட்டு நெல் பரவலாக்கும் திட்டம்**

தமிழகத்தில் வீரிய ஒட்டு நெல் இரகங்களைப் பரவலாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் அரிசி உற்பத்தித் திறனை அதிகரிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். 567 பண்ணை மேம்பாட்டுத் தளைகள் அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ.1500 வீதம் ரூ.8.5 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் பகுதிக்கு ஏற்ற வீரிய ஒட்டு நெல் இரகங்கள் கண்டறியப்படும்.

**9.2. தென்னை மேம்பாட்டுத் திட்டம்**

9.2.1. தேவையான பரப்பிற்கு தென்னை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இப்பரப்பினை மேலும் அதிகரிக்க வாய்ப்பு குறைவாக உள்ளது. எனினும் உரம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த நவீன தொழில்நுட்பங்களைக் கையாள்வதன்மூலம் தென்னை உற்பத்தித் திறனை கணிசமான அளவு பெருக்க திட்டமிடப்பட்டுள்ளது. நோய்த் தாக்குதல் காரணமாக பாதிப்படைந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி அப்பகுதிகளில் தரமான தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்க பல்வேறு தென்னை மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகிறது.



2003 ஏப்ரல் 24]

நெட்டை மற்றும் நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் 26 தென்னை நாற்றுப் பண்ணைகள் மூலமாகவும், 2 தாய்மரத் தோட்டம் மூலமாகவும் உற்பத்தி செய்யப்பட்டு தேவையான அளவிற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. நெட்டை தென்னங்கன்றுகள் ஒன்று ரூ.12 வீதமும், நெட்டை X குட்டை தென்னங்கன்றுகள் ஒன்று ரூ. 20 வீதமும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

9.2.2. 2002-2003 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்ட தென்னை நெற்றுக்கள், விநியோகிக்கப்பட்ட தென்னங்கன்றுகள் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவை பின்வருமாறு:

(அலகு:இலட்சம் எண்கள்)

| வ.எண் | இரகங்கள் | 2002-2003 இலக்கு. | சாதனை | 2003-2004 இலக்கு. |
|---|---|---|---|---|
| 1. | நெற்றுகள் கொள்முதல் | | | |
| | அ) நெட்டை | 9.00 | 6.23 | 7.00 |
| | ஆ) நெட்டை X குட்டை | 6.45 | 3.88 | 6.45 |
| | மொத்தம் | 15.45 | 10.11 | 13.45 |
| 2 | தென்னங்கன்றுகள் விநியோகம் | | | |
| | அ) நெட்டை | 6.75 | 6.83 | 4.90 |
| | ஆ) நெட்டை X குட்டை | 4.90 | 4.41 | 4.90 |
| | மொத்தம் | 11.65 | 11.24 | 9.80 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டமும் இவ்வாண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது. தென்னை அதிக நீர் ஆதாரத்தில் வளரக்கூடிய பயிர் என்பதால் பாதிப்பிற்குள்ளான மரங்களை அப்புறப்படுத்தி அவ்விடங்களில் புதிய மரங்கள் நடலாம். நீர் ஆதார மேம்பாடு மற்றும் நிலத்தடி நீர் தேவையான அளவு பெறப்பட்ட பின்னர் தென்னங்கன்றுகள் கூடுதல் பரப்பில் சாகுபடி செய்வது நடைமுறைப்படுத்த முடியும்.

[2003 ஏப்ரல் 24

**9.2.3 வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட தென்னை மரச் சாகுபடி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்**

கடும் வறட்சியின் காரணமாக 11 இலட்சம் தென்னை மரங்கள் முழுமையாக பாதிப்பு அடைந்ததாகவும், 28 இலட்சம் தென்னை மரங்கள் பகுதி பாதிப்பு அடைந்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் மூலம் கணக்கிடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிவாரண நிதி உதவி கேட்டு மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளார்கள். இதன் பலனாக மத்திய அரசு இயற்கைச் சீற்ற பாதிப்பு நிதியிலிருந்து ரூ.30.50 கோடி வழங்கியது. அரசு ஆணை (நிலை) எண் 44, வருவாய்த் துறை, நாள் 25-1-2003 மூலம் 2002 ஆம் ஆண்டின் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ வறட்சியின்போது முழுமையாக பாதிக்கப்பட்ட 11 இலட்சம் தென்னை மரங்களுக்கு, மரத்திற்கு ரூ.150 வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட 28 இலட்சம் தென்னை மரங்களுக்கு, மரத்திற்கு ரூ.50 வீதமும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ஆணை இடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**9.3. பருத்தி மேம்பாட்டுத் திட்டம்**

9.3.1 தரமான விதைகளை வழங்குதல் மற்றும் விரிவாக்கப் பண்ணைகள் மூலம் பருத்தி சாகுபடி பரப்பினை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காஞ்சிபுரம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் மாநிலத் திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது.

9.3.2 2002-2003 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2003-2004 ஆம் ஆண்டின் இலக்கு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:



2003 ஏப்ரல் 24]

| வ. எண் | இனங்கள்/அலகு | 2002-2003 இலக்கு | 2002-2003 சாதனை | 2003-2004 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | உயர் மற்றும் வீரிய இரக சாகுபடி பரப்பு (இல.எக்.) | 3.00 | 0.889 | 2.50 |
| 2. | உற்பத்தி (இல.பொதி) | 6.13 | 1.55 | 5.40 |
| 3. | சான்று பெற்ற விதை உற்பத்தி (குவி) | 3220 | 1666 | 3220 |
| 4. | சான்று பெற்ற விதை விநியோகம் சாதனை (குவி) | 3220 | 1247 | 3220 |
| 5. | விதை கொள்முதல் (நிதி ரூ. இலட்சம்) | 98.94 | 85.95 | 98.94 |
| 6. | என்.பி.வி.நச்சுயிரி விநியோகம் (எக்) | 1500 | 1556 | 1500 |
| 7. | என்.பி.வி. நச்சுயிரி விநியோகம் (ரூ. இலட்சம்) | 0.60 | 0.579 | 0.60 |

**9.4. பருத்தித் தொழில்நுட்பவியல் குழுத் திட்டம்**

பருத்தி உற்பத்தி அதிகரிக்க, பருத்தி பயிர்ப் பாதுகாப்பு, அறுவடை தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப விளக்கம் போன்றவை பருத்தி விளையும் மாவட்டங்களுக்கு வழங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். அரசு செயலர், வேளாண்மைத் துறை அவர்களின்கீழ் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண்விற்பனை, ஜவுளி, விதைச்சான்று, மத்திய பருத்தி ஆராய்ச்சிக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தென்னிந்திய நூற்பாலை உரிமையாளர்கள் சங்கம், தென்னிந்திய பருத்தி உற்பத்தியாளர்கள் சங்கம், இந்தியப் பருத்தி குழுமம், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை இணையம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகிய துறைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இக்குழு செயல்படுகிறது.

மாநில பருத்திக் குழுமத்திற்கு உதவிடும் வகையில் வேளாண்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு "உள்ளடக்கிய குழுமம்" ஒன்றும் செயல்படுத்தப்படுகின்றது.

**9.5. கரும்பு பெருக்குத் திட்டம்**

9.5.1. உலக அளவில், பிரேசில் நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவதாக அதிக அளவில் கரும்பு உற்பத்தி செய்கிறது. தற்போது இந்தியாவில் 43 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் கரும்பு

[2003 ஏப்ரல் 24

பயிரிடப்படுகிறது. தேசிய அளவில் கரும்பு உற்பத்தி 3010 இலட்சம் டன்களாகவும், சராசரி உற்பத்தித் திறன் எக்டருக்கு 70 டன்களாகவும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வணிகப் பயிர்களில் கரும்பு முக்கிய இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் சுமார் 3 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு பயிரிடப்படுகிறது. மாநிலத்தில் மொத்த கரும்பு உற்பத்தி 320 இலட்சம் டன்கள் ஆகும். தமிழ்நாட்டில், ஆண்டின் 12 மாதங்களிலும் கரும்பு உற்பத்திக்கு உகந்த வேளாண் தட்பவெட்ப நிலை இருந்த போதிலும், கரும்பு பயிரிடப்படும் பரப்புகளில், உற்பத்தித் திறன் மாறுபட்ட நிலையிலேயே உள்ளன. கரும்பு நிலப்பரப்பை அதிகப்படுத்தும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. எனவே உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி 320 இலட்சம் டன் இலக்கை அடைய வேண்டும்.

9.5.2. கரும்பு உற்பத்தியில் தமிழகம் முதன்மையான இடத்தில் இருப்பினும், உற்பத்தித் திறனை நிலை நிறுத்தும் பொருட்டு இத்திட்டம் தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுரம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2003-2004 ஆம் ஆண்டின் இலக்கு பின்வருமாறு:-

| வ. எண் | இனங்கள்/அலகு | 2002-2003 இலக்கு. | சாதனை | 2003-2004 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | சாகுபடி பரப்பு (இல. எக்) | 2.75 | 2.464 | 3.00 |
| 2. | உற்பத்தி (இல.மெ.டன்) (வெல்லமாக) | 34.40 | 30.82 | 33.65 |
| 3. | ஒட்டுண்ணி விடுதல் (எக்டர்) | 10,500 | 13,518 | 10,500 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படும்.

## 10. பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்:

### 10.1. 2003-2004 ஆம் ஆண்டிற்கான கரும்பு பயிரிடுதல் மற்றும் உற்பத்தித் திறன்

பொதுத் துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 2003-2004 ஆம் ஆண்டிற்கு சுமார் 82,120 எக்டரில் கரும்பு பதிவு செய்யப்படவுள்ளது. 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில் 60.15 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளதைக் காட்டிலும்,



2003 ஏப்ரல் 24]

2003-2004 ஆம் அரவைப் பருவத்தில் சுமார் 67.80 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் சர்க்கரை ஆலைகளில் 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில் 101 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளதைக் காட்டிலும் 2003-2004 ஆம் அரவைப் பருவத்தில் சுமார் 115 இலட்சம் டன் கரும்பு அரவை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், தற்போது நிலவும் வறட்சி மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைக்கப்பெறாததாலும், இதே நிலைமை மே திங்கள்வரை நீடிக்குமேயானால் கரும்பு பதிவு மற்றும் அரவைக்குத் தேவையான கரும்பின் அளவும் குறைய வாய்ப்புள்ளது. கரும்பு சராசரி உற்பத்தித் திறன் ஒரு எக்டருக்கு சுமார் 70 டன்கள் ஆகும். இருப்பினும் உற்பத்தித் திறனை ஒரு எக்டருக்கு 100 டன்களாக அதிகப்படுத்த வாய்ப்புள்ளது. மாநிலத்தில் பெறப்படும் சராசரி விளைச்சலைக் காட்டிலும் குறைவாக விளைச்சல் பெறப்படும் ஆலைப் பகுதிகளில் விளைச்சலை அதிகப்படுத்த கரும்பு இனப் பெருக்கு நிலையம் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிலையங்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 10.2. சர்க்கரை கட்டுமானத்தை அதிகப்படுத்த செயல் திட்டம்

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 2001-2002 அரவைப் பருவத்தில் கிடைக்கப்பெற்ற எக்டருக்கு 80 டன்கள் கரும்பு மகசூல், 9.49 சதவீதச் சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் அரவை செய்த 64.2 இலட்சம் டன்கள் என்ற நிலையிலிருந்து 2004-2005 கரும்பு அரவைப் பருவத்தில் எக்டருக்கு 100 டன்கள் கரும்பு மகசூலும் 10 சதவீத சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் 100 சதவீத பயன்பாட்டுத் திறனுக்கு தேவையான 76 இலட்சம் டன்கள் கரும்பினைப் பெற ஐந்தாண்டு செயல் திட்டம் தீட்டபபட்டுள்ளது. மேற்கண்ட இலக்கினை அடைய பண்ணை அளவில் பின்வரும் யுக்திகளை கடைபிடிக்க திட்டமிடப்பட்டுள்ளன:

1. உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல் மற்றும் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் பயிரிடப்படும் பரப்பை அதிகப்படுத்துதல்.
2. சொட்டு நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல்.
3. உயிரின உரங்கள் மற்றும் உயிரின பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துதல்.

[2003 ஏப்ரல் 24

4. உயிர் உரம், மண்புழு கழிவு உரம், ஆலை அழுக்கினை பயன்படுத்துதல்.

**10.2.1. சர்க்கரை கட்டுமானமும் அதிக சர்க்கரைச் சத்துள்ள ரகங்களும்**

ஆலைகளின் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்துவதில், அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு ரகங்கள் முக்கிய பங்கு வகித்து உற்பத்திச் செலவினை குறைக்கின்றன. 2002-2003 ஆம் அரவைப் பருவத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள், அதிக சர்க்கரை சத்துள்ள கரும்பு இரகங்கள் சுமார் 74 சதவீத அளவிற்கு அரவை செய்யப்பட்டன. 2003-2004 அரவைப் பருவத்தில் அதிக சர்க்கரைச் சத்துள்ள கரும்பின் அரவை 90 சதவீதம் அளவிற்கு உயருமென்றும், 2002-2003 அரவைப் பருவத்தில் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 9.80 என்ற சதவீதத்தைக் காட்டிலும், 2003-2004 அரவைப் பருவத்தில் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் 9.90 சதவீதமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது அரவை செய்யப்படவுள்ள கரும்பின் அளவான 60.15 இலட்சம் டன் கரும்பினை அதிகரித்து அடுத்த அரவைப் பருவத்தில் மொத்தம் 67.80 லட்சம் டன்கள் அரவை செய்யப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**10.3. கரும்பு பயிரிட சொட்டுநீர் பாசனம்**

நீர்வளம் தற்போது அரிதாகி விட்டதாலும் வழக்கமான நீர்ப்பாசன முறைகளால் அதிக அளவு தண்ணீர் செலவாவதால், தண்ணீரை சேமித்து அதிகப் பரப்பளவில் கரும்பு பயிரிடுவதற்கு ஏதுவாக கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் முறையை பின்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக அடுத்து வரும் மூன்று பருவங்களில் கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் 1000 ஏக்கர் அளவில் மத்திய அரசின் கரும்பு வளர்ச்சி திட்டத்தின்கீழ் இதற்கான மானியத்தைப் பெற்று சொட்டு நீர்ப் பாசன வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சொட்டு நீர்ப் பாசன முறையை அமைத்திட கரும்பு மேல்வரி நிதியிலிருந்து விவசாயிகளுக்கு மானியம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**10.4. உயிரின உரங்கள் மற்றும் உயிரினப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துதல்**

தாவரங்கள் பெரும் நுண்ணுயிர் சத்துக்களை அதிகப்படுத்த உயிர் உரங்கள் பயன்படுகின்றன. அசிடோபாக்டர் மற்றும் பாஸ்போபாக்டீரியம் ஆகிய உயிர் உரங்களை பயன்படுத்தி முறையே



2003 ஏப்ரல் 24]

வான் வெளியிலுள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ்சை நிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிர் உரங்களை பயன்படுத்துவதால் இரசாயன உரங்களின் தேவை குறைந்து அதன் மூலம் உற்பத்திச் செலவு குறைகிறது. போதுமான அளவில் உயிர் உரங்களை வழங்குவதை உறுதி செய்ய பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளில் உயிர் உர அலகுகள் ஆரம்பிக்கப்படும்.

அனைத்து பொதுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கும் 'ட்ரைகோகிராமா' மற்றும் 'என்பிவி' போன்ற உயிரினப் பூச்சிக்கொல்லிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உயிரினப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதால், கரும்பு பயிரிடுவதில் பொருளாதார நிலைத் தன்மையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஏற்படும். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி ஆய்வகத்தை வலுப்படுத்துவதன் மூலம் போதுமான அளவில் உயிரினப் பூச்சிக் கொல்லிகள் வழங்குவது உறுதி செய்யப்படும்.

**10.4.1. உயிர் உரம்**

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளில் கிடைக்கும் ஆலைக் கழிவு மண் சுமார் 2 இலட்சம் டன்கள் ஆகும். வடிப்பகங்களில் கிடைக்கும் ஆலைக்கழிவு நீர் (spent wash) மற்றும் சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கழிவு மண் (press mud) கொண்டு உயிர் உரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது சேலம் மற்றும் அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மட்டுமே உள்ள வடிப்பகங்களில் மொத்தமுள்ள 25,000 டன்கள் ஆலைக் கழிவு மண், உயிர் உரமாக மாற்றப்பட்டு (அதாவது 11,000 டன் உயிர் கலப்பு உரம்) விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

**10.4.2. மண்புழு கழிவு உரம்**

வடிப்பகங்கள் இல்லாத மற்ற கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஆலைக் கழிவு மண்ணை பயன்படுத்தி மண்புழு கழிவு உரமாக தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆராய்ச்சி மண்புழுக் கழிவு உரம், கரும்பு உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதில், நல்ல விளைவை ஏற்படுத்துவதை காட்டியுள்ளது. நிலத்தைப் பண்படுத்துவதற்கும் நிலத்தின் ஈரத்தன்மையைப் பாதுகாக்கும் திறனை அதிகப்படுத்துவதற்கும்

[2003 ஏப்ரல் 24

மண்புழு கழிவு உரம் பயன்படுகிறது. இத்திட்டத்தை திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை வெற்றிகரமாக கையாண்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை பிற ஆலைகளுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆலைக்கழிவு மண்ணுடன் உயிர் உரத்தைக் கலந்து ஊட்டமேற்றிய கழிவு மண்ணாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் இத்திட்டத்தை மேற்கொண்டு சத்தூட்டப்பட்ட கழிவு மண்ணை விவசாயிகளுக்கு விநியோகித்து கரும்பின் தரமும் மகசூலும் உயர்த்தப்படவுள்ளன.

### 10.5 கரும்பு விலை நிர்ணயம்

*2002-2003* ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு மைய அரசு *8.5* சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.*695* என சட்டபூர்வ குறைந்தபட்ச விலையாக நிர்ணயித்துள்ளது. மேலும் ஒவ்வொரு *0.1* சதவீத சர்க்கரை கட்டுமானத்திற்கும் டன் ஒன்றுக்கு ரூ.*8.20* வீதம் ஊக்கத்தொகையாக அளிக்கப்படுகிறது. *2001-2002* அரவைப் பருவத்திற்கு மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டியதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. மேலும் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயம் செய்யும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை முதற்கண் வழங்க வேண்டும் என்றும் அதன்பின் அவ்வரவைப் பருவத்தின் பின் பகுதியில் கிடைக்கும் சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் வெளிச்சந்தை விலை ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீட்டு இலாபத் தொகைக்கேற்ப கரும்பு கட்டுப்பாடு ஆணை பிரிவு *5* ஏ-யின் கீழ் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய தொகையை முன்பணமாக வழங்கலாம் என்றும் அரசு கருதியுள்ளது.

### 10.6 கரும்பு மேல்வரி வசூல் மற்றும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்

*10.6.1* மாநில அரசால் செயல்படுத்தப்படும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கும் கரும்பு பயிரிடும் பகுதிகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதன்மூலம் கரும்பு போக்குவரத்து எளிதாக இருக்கவும் முறையாக சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பினை ஏற்றிச் செல்லவும் விவசாயிகளுக்கு வசதிகள் செய்து



2003 ஏப்ரல் 24]

தரப்பட்டுள்ளன. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு சட்டம் *1949*-ன்படி உள்ளூர் பகுதியைத் தவிர வெளியிலிருந்து ஆலைகளுக்கு அரவைக்காக கொண்டு வரப்படும் கரும்பின் மீது கரும்பு மேல்வரியாக டன் ஒன்றுக்கு ரூ.*5* வீதம் வசூலித்து இந்நிதியை கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்திற்கு பயன்படுத்தப்படுகின்றது.

*10.6.2* கடந்த ஐந்தாண்டுகளின் கரும்பு மேல்வரி வசூலிக்கப்பட்ட விவரம், சாலை பராமரிப்புக்கு மேற்கொண்ட செலவு விவரம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் லட்சத்தில்)

| வருடம் | கரும்பு மேல்வரி வசூலித்தது | புதிய சாலைகள் அமைக்க | சாலையின் நீளம் (கி.மீ). | பராமரிப்பு பணிகள் செய்ய. | மொத்தச் செலவினம். |
|---|---|---|---|---|---|
| 1996-97 | 630.29 | 436.89 | 35.650 | 425.00 | 861.89 |
| 1997-98 | 393.98 | 411.30 | 34.900 | 475.12 | 886.42 |
| 1998-99 | 522.22 | 258.80 | 25.050 | 324.58 | 583.38 |
| 1999-2000 | 654.25 | 338.78 | 31.170 | 200.40 | 539.18 |
| 2000-2001 | 997.29 | 500.07 | 59.000 | 231.36 | 751.43 |
| 2001-2002 | 872.94 | 236.45 | 62.440 | 97.54 | 333.99 |
| 2002-2003 | 620.44 | 500.00 | 68..595 | 200.00 | 700.00 |

## 11. வேளாண் விரிவாக்கம்

### 11.1 உழவர் பயிற்சி நிலையங்கள்

*11.1.1* உழவர்கள், பண்ணை மகளிர் மற்றும் உழவர் விவாதக்குழு அமைப்பாளர்களுக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்து அதன் மூலம் பயிர் உற்பத்தியைப் பெருக்க காஞ்சிபுரம், திண்டிவனம், நவ்லாக், சேலம், தர்மபுரி, பவானி, இலால்குடி, குடுமியான்மலை, சாக்கோட்டை, பரமக்குடி, பாளையங்கோட்டை மற்றும் திருப்பதிசாரம் ஆகிய *12* இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் கிராம அளவில் அடிப்படைப் பயிற்சி, களப்பயிற்சி செயல் விளக்கங்களும் அளிக்கப்படுகின்றன. மேலும் பண்ணைச் செய்திகள், வானொலி

மற்றும் தினசரிகள் மூலம் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் உழவர் தினவிழா நடத்தப்பட்டு விவசாயிகள், ஆராய்ச்சி வல்லுநர்கள் மற்றும் வேளாண் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள வல்லுநர்கள் கலந்து கொண்டு உழவர்கள் பயனடைய வழி வகுக்கப்படுகிறது. மேலும் வருடந்தோறும் உழவர்கள் சுற்றுலாவாக ஆராய்ச்சி நிலையங்கள், முன்னோடி விவசாயிகளின் வயல்கள் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சியை நேரில் கண்டறிந்து அனுபவம் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் 40,000 உழவர்கள் இதன் மூலம் பயனடைகின்றனர்.

*11.1.2.* இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற சாதனை மற்றும் 2003-2004 ஆம் ஆண்டிற்கான இலக்கு விவரங்கள் பின்வருமாறு:-

| வரிசை எண் | இனங்கள்/ அலகு | 2002-2003 இலக்கு | 2002-2003 சாதனை | 2003-2004 இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | ஆண். பெண் விவசாயிகளுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 264 | 273 | 264 |
| 2 | உழவர் விவாதக் குழு அமைப்பாளர் களுக்கான கிராம அளவிலான பயிற்சி (எண்) | 120 | 120 | 120 |
| 3 | களப்பயிற்சி மற்றும் இரண்டாம் நிலை செயல் விளக்கம் (எண்) | 1,320 | 1,335 | 1,320 |
| 4 | வயல்வெளிச் செயல்விளக்கம் (எண்) | 528 | 546 | 528 |
| 5 | நிதி (ரூபாய் இலட்சத்தில்) | 5.650 | 5.650 | ... |

இது மட்டுமன்றி தேசிய அளவில் நடைபெறும் பணிமனைக் கூட்டங்கள் மற்றும் இதர சிறப்புப் பயிற்சிகளில் இத்துறையின் அலுவலர்கள் கலந்துகொண்டு பயன் அடைகின்றனர்.

## 11.2 மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்

வேளாண் துறையின் கீழ் பணியாற்றி வரும் விரிவாக்க அலுவலர்கள் மென்மேலும் சிறந்த முறையில் பணியாற்றிட நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பு மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளித்திடும் நோக்கோடு



குடுமியான்மலையில் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் இயங்கி வருகிறது. இந்நிலையத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட பயிற்சி விவரங்கள் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டின் இலக்கு விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | இனங்கள்/ அலகு | 2002-2003 ஆண்டில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் எண்ணிக்கை இலக்கு | 2002-2003 சாதனை | 2003-2004 இலக்கு |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக நிர்வாகம் | 244 | 245 | 150 |
| 2 | அலுவலக வேளாண்மைப் பயிற்சி | - | - | 150 |
| 3 | கணிப்பொறிப் பயிற்சி | 136 | 134 | 200 |
| 4 | திறன் மேம்பாடு | - | - | 300 |
| 5 | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பயிற்சி | 270 | 225 | 300 |
| | மொத்தம் | 650 | 604 | 1,100 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

## 11.3 பயிர் விளைச்சல் போட்டி

உயர் வேளாண் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்து உற்பத்தியை உயர்த்த பயிர் விளைச்சல் போட்டி மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல் அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய பயிர் விளைச்சல் போட்டித் திட்டம், மாநில மற்றும் மாவட்ட அளவில் செயல்படுத்தப்படுகிறது. நெல், மணிலா, சோளம், கம்பு, பச்சைப்பயறு மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

வழங்கப்படும் பரிசுத் தொகை பின்வருமாறு:

(அலகு ரூபாயில்)

| பயிர்கள் | மாநில அளவில் முதல் பரிசு | மாநில அளவில் இரண்டாம் பரிசு | மாவட்ட அளவில் முதல் பரிசு | மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு |
|---|---|---|---|---|
| நெல் மற்றும் மணிலா | 25,000 | 15,000 | 8,000 | 4,000 |
| இதர பயிர்கள் | 8,000 | 4,000 | 4,000 | 2,000 |

[2003 ஏப்ரல் 24

மாநில அளவு போட்டிக்கு நுழைவுக் கட்டணமாக நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.100 ஆகவும் மற்றும் இதர பயிர்களுக்கு ரூ.50 ஆகவும் மாவட்ட அளவில் நெல் மற்றும் மணிலா பயிர்களுக்கு ரூ.50 ஆகவும், இதர பயிர்களுக்கு ரூ.25 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.14.95 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

### 12. மைய அரசின் முழு நிதியுதவி பெறும் திட்டங்கள்

#### 12.1 உழவர்கள் பரிவர்த்தனைத் திட்டம்

இதர மாநில உழவர்கள் கடைப்பிடிக்கும் சாகுபடி முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை நமது மாநில உழவர்கள் அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு செயல்படுத்தப்படுகிறது. குழு ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் செலவிட மத்திய அரசு நிதி வழங்குகிறது. 2002-2003 ஆம் ஆண்டு பல்வேறு பயிர்களின் சாகுபடி முறைகளை அறிந்துவரும் பொருட்டு ஆந்திரம், மகாராஷ்டிரம் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களுக்கு தலா ஒரு குழு வீதம் இதுவரை 3 குழுக்கள் சென்று பயனடைந்துள்ளன. மைய அரசின் இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 13. மத்திய அரசு சார்புத் திட்டங்கள்

#### 13.1 பேரியல் மேலாண்மைத் திட்டம்

பயிர்வாரியான திட்டங்களுக்கு 2000 ஆம் ஆண்டுவரை மத்திய அரசு நிதியுதவி அளித்து வந்தது. 1-4-2000 முதல் மைய அரசு இம்முறையினை மாற்றி புதிய திட்டமாக பேரியல் மேலாண்மைத் திட்டத்தினை அமல்படுத்தி வருகின்றது. இதன் மூலம் மாநிலங்களின் தேவைக்கேற்ப திட்டங்களை வகுக்க மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது. உழவர்கள் பயனடையும் வகையில் திட்டங்களைத் தெரிவு செய்ய, முழு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் பேரியல் மேலாண்மை திட்டத்தின்கீழ் 4 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டச் செலவினில் 90 சதம் மைய அரசும், 10 சதம் மாநில அரசும் ஏற்கின்றன. மைய அரசின் 90 சத நிதிப் பங்கீட்டில் 80 சதம் மானியமாகவும் 20 சதம் மாநில அரசுக்கு கடனாகவும் வழங்கப்படுகின்றது.



2003 ஏப்ரல் 24]

பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களும் அவற்றின் விவரங்களும் வருமாறு :

##### 13.1.1 தானிய அபிவிருத்தித் திட்டம்

2000-2001 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி) பேரியல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தானிய அபிவிருத்தித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அரிசி உற்பத்தித் திறனில் மாநில/தேசிய சராசரி அளவிற்குக் குறைவாகப் பெறப்பட்ட 140 வட்டாரங்கள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்கவல்ல இடுபொருட்கள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் இனவாரியான இலக்கு மற்றும் சாதனை விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | சான்று விதை விநியோகம் (மெ.டன்) | 63231.50 | 6223.2 | 124.630 | 126.461 |
| 2. | சிறுதானிய விதை விநியோகம் (மெ.டன்) | 309.75 | 295.5 | 12.39 | 11.82 |
| 3. | வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கம் (எண்) | 2420 | 2471 | 24.20 | 24.71 |
| 4. | உற்பத்தித் தொழில் நுட்ப நிருபணம் (எக்) | 1600 | 637 | 40.00 | 40.042 |
| 5. | உயிர் உரங்கள் விநியோகம் (எக்) | 44443 | 45218 | 20.00 | 20.51 |
| 6. | ஜிப்சம் விநியோகம் (எக்) | 2359 | 2498 | 11.795 | 12.49 |
| 7. | நுண்ணூட்ட சத்து விநியோகம் (எக்) | 17443 | 16763 | 11.70 | 11.578 |
| 8. | ஐபிஎம் செயல் விளக்கம் (எண்) | 1278 | 1262 | 76.68 | 75.721 |
| 9. | உழவர் பயிற்சி (எண்) | 684 | 672 | 34.182 | 33.600 |
| 10. | விளம்பரம் | 0 | 0 | 21.26 | 24.235 |
| 11. | சில்லரை செலவினம் | 0 | 0 | 16.935 | 9.360 |
| | மொத்தம் | | | 393.237 | 390.526 |

[2003 ஏப்ரல் 24

2003-2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**13.1.2 கரும்பு மேம்பாட்டுத் திட்டம்**

2000-2001 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் மைய அரசின் ஒப்புதலோடு பேரியல் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 50.371 இலட்சம் செலவில் இத்திட்டம் (இதில் ரூ 35.37 இலட்சம் வேளாண்மைத் துறையினாலும், ரூ. 15.00 இலட்சம் வேளாண்மைப் பொறியியல் துறையினாலும்) செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாநிலத்தில் இராமநாதபுரம், தூத்துக்குடி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட இனவாரியான பொருள், நிதி இலக்கு மற்றும் சாதனை விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை 2002-03 |
|---|---|---|---|---|---|
| 1. | வயல் விளக்கம் (எக்.) | 350 | 350 | 17.50 | 17.497 |
| 2. | மாநில அளவில் பயிற்சி (எண்கள்) | 6 | 6 | 0.75 | 0.725 |
| 3. | விவசாயிகளுக்கான பயிற்சி (எண்கள்) | 170 | 170 | 8.5 | 8.463 |
| 4. | பெர்ரஸ் சல்பேட் விநியோகம் (எக்.) | 3250 | 3250 | 3.055 | 3.031 |
| 5. | கரும்பு ஒட்டுண்ணி | 10325 | 9993.4 | 2.065 | 1.961 |
| 6. | இதர செலவினம் | | | 3.50 | 3.48 |
| | மொத்தம் | | | 35.37 | 35.157 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்

**13.1.3 சமச்சீர் மற்றும் ஒருங்கிணைந்த உர உபயோகம்**

இத்திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை குறித்து 12 பயிற்சிகளும் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் ஓர் உர ஆய்வகக் கட்டடம் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென ரூ.32.051 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

வரும் 2003-2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**14. மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**14.1 தீவிர மக்காச்சோள அபிவிருத்தித் திட்டம்**

மக்காச்சோள சாகுபடிக்கு ஏற்ற மாவட்டங்களான தர்மபுரி, கோயமுத்தூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மக்காச்சோள உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கானச் செலவினை மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டத்தில் விதை சிறுதளைகள் இனத்திற்கான 100 சத செலவினை மத்திய அரசு முழுமையாக ஏற்கிறது. இத்திட்டத்தின் 2002-2003 ஆம் ஆண்டு சாதனை பின்வருமாறு :

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை 2002-03 |
|---|---|---|---|---|---|
| 1. | வயல் விளக்கம் (எண்) | 906 | 906 | 9.06 | 9.06 |
| 2. | ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு செயல்விளக்கம் (எண்) | 3.5 | 3.5 | 2.10 | 2.10 |
| 3. | உழவர்கள் பயிற்சி (எண்) | 36 | 36 | 1.80 | 1.80 |
| 4. | மேம்படுத்தப்பட்ட கருவிகள் விநியோக மானியம் | 0 | 0 | 1.05 | 1.05 |
| 5. | விளம்பரம் | 0 | 0 | 0.64 | 0.639 |
| 6. | சில்லறைச் செலவினம் | 0 | 0 | 0.57 | 0.564 |
| 7. | விதை சிறுதளை செயல் விளக்கம் | 666 | 663 | 0.80 | 0.80 |
| | மொத்தம் | | | 16.02 | 16.013 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**14.2 தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம்**

எளிய மக்களுக்குத் தேவையான புரதச் சத்து பயறு வகைகள் மூலம் கிடைப்பதால் அதன் அடிப்படையில் பயறு வகைகளுக்கு

[2003 ஏப்ரல் 24

முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். மேலும் தமிழ்நாட்டில் பயறு வகை உற்பத்தித் திறனை அதிகரிக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. இப்பயிர் ஒரு குறுகியக் கால, குறைந்த நீரைக் கொண்டு பலன் தாவல்ல நீர் குறைவான பகுதிகளில் சாகுபடி செய்ய மிகவும் ஏற்ற பயிராகும். இப்பயிர் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தையும் தரக்கூடிய பயிராகும். இதனைக் கருத்தில் கொண்டு தேவையான இடுபொருட்களை மானிய விலையில் இந்தத் திட்டத்தில் வழங்குவதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு, திட்டச் செலவினத்தை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 164 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்ட இனவாரியான செயல் மற்றும் நிதி சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | கருவிதை கொள்முதல் (குவி) | 113 | 117.1 | 4.90 | 4.844 |
| 2. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 1220 | 1477.2 | 6.10 | 7.304 |
| 3. | விதை கிராமம்/சான்றுவிதை உற்பத்தி (குவி) | 10200 | 9388.4 | 51.00 | 46.101 |
| 4. | பெருவிளக்க பண்ணை(எக்) | 992 | 1272 | 16.15 | 15.823 |
| 5. | ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் (எக்) | 1210 | 1143 | 18.15 | 17.357 |
| 6. | பயிற்சிகள் (எண்) | 34 | 32 | 5.10 | 4.70 |
| 7. | நுண்ணுயிர்ப் பொட்டல விநியோகம் (எக்) | 10200 | 31937 | 5.10 | 7.10 |
| 8. | நுண்ணூட்டச் சத்துக்கள் விநியோகம் (எக்) | 1750 | 3496 | 3.50 | 3.525 |
| 9. | பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் (எண்) | 578 | 1097 | 8.10 | 9.435 |
| 10. | விதைநேர்த்தி 50 ரூ. மானியம் (எக்) | 3100 | 3263 | 3.10 | 2.80 |
| 11. | ஜிப்சம் விநியோகம் (எக்) | 1640 | 7293 | 8.20 | 7.739 |
| 12. | என்.பி.வி. விநியோகம் (எக்) | 1210 | 1441 | 3.10 | 2.845 |
| 13. | தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் (எண்) | 163 | 148 | 23.50 | 23.043 |
| 14. | பணியாளர் சம்பளம் | | | 8.00 | 7.461 |
| | மொத்தம் | | | 164.00 | 159.777 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2003 ஏப்ரல் 24]

## 14.3 தீவிர பருத்தித் தொழில் நுட்பவியல் குழுத் திட்டம்

தற்போது தமிழகத்தின் பஞ்சுத் தேவையான 45 இலட்சம் பொதிகளுக்குப் பதிலாக, 45 இலட்சம் பொதிகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. முக்கிய இடுபொருட்கள், தொழில்நுட்ப நிருபணங்கள், பயிற்சி மற்றும் பயிர்ப் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கி பருத்தி உற்பத்தியை அதிகரிப்பதே பருத்தித் தொழில்நுட்பவியல் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் காஞ்சிபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.177.697 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டச் செலவினை மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் இனவாரியான செயல் மற்றும் நிதி சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | சான்று பெற்ற விதை விநியோகம் ரூ.1000/ குவிண்டால் | 7.50 | 838.9 | 7.50 | 8.388 |
| 2. | செயல் விளக்கம் ரூ.2500/எக்டர் | 400 | 463.65 | 10.00 | 9.967 |
| 3. | விரிவாக்கப் பணியாளர் பயிற்சி ரூ.15000 /பயிற்சி | 10 | 10 | 1.50 | 1.50 |
| 4. | உழவர்கள் பயிற்சி ரூ.1000/பயிற்சி | 14.5 | 141 | 14.50 | 14.10 |
| 5. | பூச்சி நோய் கண்காணிப்பு (மாவட்டங்கள்) | 10 | 10 | 25.00 | 24.999 |
| 6. | ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம் மற்றும் பயிற்சி ரூ.85000/-எண்கள் | 5.5 | 5.5 | 46.75 | 45.636 |
| 7. | இனக்கவர்ச்சி பொறி விநியோகம் ரூ.500 /எக்டர் | 3000 | 99.53 | 15.00 | 14.695 |
| 8. | உயிர்க் காரணிகள் விநியோகம் ரூ.300/ எக்டர் | 3000 | 3556.3 | 9.00 | 8.898 |
| 9. | கையால் இயக்கப்படும் தூவுவான் மற்றும் தெளிப்பான்கள் விநியோகம் ரூ.700/எண் | 400 | 913 | 2.80 | 4.912 |
| 10. | விசைத் தெளிப்பான் மற்றும் தூவுவான் ரூ.700/எண் | 400 | 244 | 6.00 | 3.885 |
| 11. | தெளிப்பு நீர்ப்பாசனக் கருவி விநியோகம் அ) ரூ.10000/எக்டர் ஆ) ரூ.15000/எக்டர் | 7.5 | 111.2 | 9.375 | 12.922 |
| 12. | சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள் விநியோகம் ரூ.25000/எக்டர் | 7.5 | 6.5 | 18.75 | 14.079 |
| 13. | இதர செலவினங்கள் | | | 14.08 | 13.716 |
| | மொத்தம் | | | 180.255 | 177.697 |

[2003 ஏப்ரல் 24

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 14.4 எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திட்டம்

எண்ணெய் வித்துகள் உற்பத்தியில் தன்னிறைவை எட்டும் வகையில், எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திட்டம் ஒரு தொழில்நுட்பவியல் குழுத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு அந்தச் செலவினை மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. இத்திட்டத்தில் முக்கியமான இடுபொருட்களை மானிய விலையில் வழங்குவதின் மூலம் எண்ணெய்வித்து சாகுபடியாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.622.714 இலட்சம் செலவில் கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.

2002-2003 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் இனவாரியான செயல் மற்றும் நிதி சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | வல்லுநர் விதை உற்பத்தி (குவி) | 1000 | 1223.9 | 15.00 | 16.344 |
| 2. | ஆதார விதை உற்பத்தி (குவி) | 4600 | 56.51.77 | 23.00 | 27.033 |
| 3. | சான்றுவிதை உற்பத்தி (குவி) | 20411 | 22768.34 | 163.29 | 122.601 |
| 4. | சான்றுவிதை விநியோகம் (குவி) | 14000 | 21334.06 | 70.00 | 10.5.506 |
| 5. | கட்டமைப்பு வசதிகள் | - | - | 6.71 | 5.00 |
| 6. | பெரு விளக்கப் பண்ணை அமைத்தல் (எக்) | 600 | 550 | 12.00 | 10.017 |
| 7. | விதை நேர்த்தி (எக்) | 12000 | 22456.7 | 12.00 | 11.096 |
| 8. | நுண்ணுயிர் விநியோகம் (எக்) | 14000 | 51892.2 | 9.632 | 19.060 |
| 9. | ஒருங்கிணைந்த பண்ணைப் பாதுகாப்பு நிருபணம் (எண்) | 3000 | 2977.75 | 45.00 | 42.834 |
| 10. | ஜிப்சம் விநியோகம் (எண்) | 19600 | 29458.5 | 126.025 | 107.957 |



2003 ஏப்ரல் 24]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 11. | வேளாண் கருவிகள் விநியோகம் (எண்) | 100 | 204 | 1.368 | 1.368 |
| 12. | பயிர் பாதுகாப்பு கருவிகள் விநியோகம் (எண்) | 8.57 | 2090 | 12.00 | 22.626 |
| 13. | நுண்ணூட்டச் சத்து விநியோகம் (எக்) | 7.500 | 14.595.95 | 15.00 | 19.077 |
| 14. | உழவர் பயிற்சி (எக்) | 167 | 167 | 25.00 | 25.05 |
| 15. | தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் விநியோகம் (எண்) | 256 | 242 | 32.00 | 31.725 |
| 16. | சம்பளம் மற்றும் இதர செலவினம் | - | - | 60.00 | 55.42 |
| | மொத்தம் | - | - | 628.025 | 622.714 |

2002-2003-க்கு இத்திட்டத்திற்கான முழு செலவினம் ரூ.600.00 இலட்சம் மற்றும் 1.4.2002 அன்று செலவிடப்படாத தொகை ரூ.28.025 இலட்சம் மைய அரசால் மீண்டும் செல்லுபடியாக்கம் செய்யப்பட்டது.

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 14.5 எண்ணெய்ப்பனை சாகுபடித் திட்டம்

மத்திய, மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் ஏற்கும் இத்திட்டம் ஒரு மத்திய அரசு சார்புத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. சமையல் எண்ணெய்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் எண்ணெய்ப்பனை சாகுபடியை ஊக்குவிக்க திருவள்ளூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், பெரம்பலூர், தேனி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 10 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடிப் பரப்பை அதிகரிக்க எக்டருக்கு 150 கன்றுகள் வீதம் மானிய விலையில் விநியோகிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் எண்ணெய்ப்பனை பிழிந்தெடுத்து சுத்திகரிப்பு செயல்பாடுகள் எண்ணெய்ப்பனை சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம் அரியலூர் வட்டத்தில் உள்ள வாரணவாசி கிராமத்தில் காவிரி பாமாயில் நிறுவனம் பரிசோதனை அடிப்படையிலான எண்ணெயை பிழிந்தெடுக்கும் ஆலை ஒன்றை அமைத்து வருகிறது. இதன் பிழிதிறன் ஒரு மணி நேரத்திற்கு 25 மெ. டன் என்ற அளவில் இருக்கும் இத்திட்டம் ரூ.210 இலட்சம் மத்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் இனவாரியான செயல் மற்றும் நிதி சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | திட்டமுன் நடவடிக்கைகள் (எக்டரில்)— | | | | |
| | முதல் தவணை மானியம் | 500 | 392.3 | 15.00 | 11.77 |
| | இரண்டாவது தவணை மானியம் | 725 | 570.3 | 17.40 | 12.99 |
| 2. | பரப்பு விரிவாக்கம் (எக்) | 725 | 570.3 | 50..75 | 39.73 |
| 3. | கல்வி சுற்றுலா பயிற்சி | .. | .. | 2.00 | 2.00 |
| 4. | விளம்பரம் | - | - | 3.65 | 3.65 |
| 5. | பராமரிப்புச் செலவு (எக்)— | | | | |
| | (அ) இரண்டாம் ஆண்டு | 772 | 453.5 | 18.91 | 11.12 |
| | (ஆ) மூன்றாம் ஆண்டு | 46.5 | 242 | 13.02 | 6.68 |
| | (இ) நான்காம் ஆண்டு | 27.5 | 200.7 | 8.94 | 3.97 |
| | மொத்தம் | | | 129.67 | 91.91 |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 15. தென்னை வளர்ச்சி வாரியத்தால் நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 15.1 தென்னை சாகுபடி பரப்பு விரிவாக்கத் திட்டம்

கொச்சியில் உள்ள தென்னை அபிவிருத்தி வாரியத்தின் முழு நிதியுதவியுடன் தென்னை சாகுபடி பரப்பை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்க இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தென்னை நடவு செய்ய முதலாண்டு ரூ.4000/-மும் இரண்டாம் ஆண்டு அதனைப் பராமரிக்க ரூ.4000/-மும் மொத்தம் எக்டர் ஒன்றுக்கு ரூ.8000/- மானியம் அளிக்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 24]

2002-2003 ஆம் ஆண்டு இத்திட்டம் ரூ.83 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டது. மேலும், தனியார் தென்னை நாற்றுப் பண்ணைகளை ஊக்குவிக்கும் வகையில் சிறிய நாற்றுப் பண்ணைகளுக்கு ரூ.3 இலட்சமும், பெரிய நாற்றுப் பண்ணைகளுக்கு ரூ.6 இலட்சமும் நிதியுதவிகளை தென்னை வளர்ச்சி வாரியம் அளிக்கிறது.

## 16. தென்னை வளர்ச்சி வாரியம் நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள்

### 16.1 தென்னையில் உற்பத்தித் திறனை அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணைய முறை

இத்திட்டத்தின் முழு நிதியுதவியினையும் மத்திய அரசு தென்னை வளர்ச்சி வாரியம் மூலமாக மேற்கொள்கிறது. முதிர்ந்த மற்றும் நோயுள்ள தென்னை மரங்கள் அகற்றுதல், நிருபணத் தளைகள் அமைத்தல் மற்றும் இயற்கை உரக் குழிகள் அமைத்தல் போன்ற திட்ட இனங்களின் மூலம் தென்னை உற்பத்தித் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் இனவாரியான செயல் மற்றும் நிதி சாதனை பின்வருமாறு:

| வ. எண் | இனம்/அலகு | பொருள் இலக்கு 2002-03 | பொருள் சாதனை | நிதி (ரூ. இலட்சத்தில்) இலக்கு 2002-03 | நிதி (ரூ. இலட்சத்தில்) சாதனை |
|---|---|---|---|---|---|
| 1. | முதிர்ந்த நோயுற்ற மரங்களை வெட்டி அகற்றுதல் (எண்) | 15000 | 37.50 | 15002 | 37.50 |
| 2. | செயல்விளக்கம் அமைத்தல் | 50 எக்டர் | 21.88 | 52 | 21.88 |
| 3. | இயற்கை உரம் தயாரித்தல் | 25 அலகு | 5.00 | 25 | 5.00 |
| | மொத்தம் | | 64.38 | | 64.38. |

இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 16.2 நவ்லாக்கில் நெட்டை X குட்டை இரக தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

ரூ.20.44 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் நெட்டை X குட்டை இரக தென்னங்கன்றுகள் உற்பத்தி மையம், வேலூர் மாவட்டம் நவ்லாக்கில்

செயல்பட்டு வருகிறது. இத்திட்டச் செலவினை மத்திய, மாநில அரசுகள் முறையே 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. வருடந்தோறும் 90,000 நெட்டை X குட்டை இரக தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் 72000 தென்னங்கன்றுகள் உற்பத்திச் செய்யப்பட்டு ரூ.20.10 இலட்சம் செலவில் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 16.3 தென்னையில் செம்பான் சிலந்திக் கட்டுப்பாடு

தென்னையைத் தாக்கும் செம்பான் சிலந்தியை கட்டுப்படுத்த ஒரு சிறந்த தொழில்நுட்பக் கட்டுப்பாட்டு முறையை இறுதி செய்ய, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூலம் ரூ.25 இலட்சம் செலவில் தாக்குதல் ஏற்பட்ட பகுதிகளில் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும்.

### 16.4 தென்னையைத் தாக்கும் சிகப்புக் கூன் வண்டு மற்றும் காண்டாமிருக வண்டு கட்டுப்பாட்டுக்கு புதிய திட்டம்

சட்டப்பேரவையில் அறிவித்தபடி, ரூ.25 இலட்சம் ஒதுக்கீட்டில் இனஈர்ப்புப் பொறிகள் இலவசமாக வழங்க தென்னை வளர்ச்சி வாரிய 100 சத நிதியுதவியுடன் புதியத் திட்டம் தென்னையைத் தாக்கும் சிகப்பு கூன் வண்டு மற்றும் காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 5000 எக்டர் பரப்பில் சிகப்புக் கூன் வண்டு கட்டுப்பாடும், 4000 எக்டர் பரப்பில் காண்டாமிருக வண்டு கட்டுப்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விவரம்—

(ரூ. இலட்சத்தில்)

| | | நிதி | செலவு |
|---|---|---|---|
| காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த | : | 15.00 | 14.95 |
| சிகப்பு கூன் வண்டைக் கட்டுப்படுத்த | : | 10.00 | 9.88 |
| மொத்தம் | : | 25.00 | 24.83 |





## 17. அயல்நாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

### 17.1 தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம்

சிறு மற்றும் மிகச்சிறு விவசாய பண்ணை மகளிருக்குப் புதிய வேளாண் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்தல், உற்பத்தியை அதிகரித்தல், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயக் குடும்பங்களின் உணவு உற்பத்தியை அதிகரித்தல், பண்ணை மகளிரின் மேம்பாட்டையும், உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கையும் ஏற்பது மற்றும் அவர்களின் முழுத் திறனையும் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் டென்மார்க் நாட்டு நிதியுதவியுடன் அயல்நாட்டு நிதி உதவி பெறும் திட்டமாகச் செயல்பட்டது. 1-4-1986 முதல் 31-3-2003 வரை 17 வருடங்கள் செயல்பட்டது. இத்திட்டத்தில் மொத்தம் ரூ.42,481 கோடி செலவிடப்பட்டு, மொத்தம் 6.42 இலட்சம் பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

2001-2002 ஆம் ஆண்டு முதல் ஊதியம் மற்றும் படிகள் 100 விழுக்காடு மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.602.80 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு மார்ச் 2003 வரை ரூ.524.281 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் செயலாக்கம்:

| வ. எண் | இனம் | இலக்கு (எண்ணில்) | சாதனை |
|---|---|---|---|
| 1. | தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி | 388 | 388 |
| 2. | சக பண்ணை மகளிர் பயிற்சி | 310 | 310 |
| 3. | பண்ணை மகளிர் ஒருங்கிணைப்பு கருத்தரங்கு | 57 | 57 |
| 4. | குழு உறுதிப்படுத்தும் பயிற்சி | 370 | 370 |
| 5. | குழு சார்ந்த சிறப்புப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் பயிற்சி | 413 | 413 |
| | நிதி (ரூ. லட்சத்தில்) | 602.80 | 524.281 |

[2003 ஏப்ரல் 24

*17.2 31-3-2003* இல் இத்திட்டம் முடிவடைந்தாலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான பண்ணை மகளிருக்கு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கும் பணியினைத் தொடர்ந்து நிலைநிறுத்த வேளாண் துறையில் பணியாற்றும் *300* ஆண் அலுவலருக்கு திறன்கூட்டும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 18. வேளாண்மை விரிவாக்கப் பிரிவு

*18.1.* தமிழக அரசு எடுத்த கொள்கை முடிவின்படி முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையத்தின் வேளாண்மை விரிவாக்கப் பிரிவு இணையத்திலிருந்து பிரிக்கப்பட்டு வேளாண்மைத் துறை ஆணையின்கீழ் *151* பணியாளர்கள் பணி மாற்றம் செய்யப்பட்டு அரசு ஆணை எண் *142*, வேளாண்மை (எண்ணெய்வித்துக்கள்) துறை, நாள் *4-6-2002*-ன்படி பணிபுரிந்து வருகிறது. வேளாண்மை விரிவாக்கப் பிரிவு வேளாண்மைத் துறை ஆணையரின்கீழ் பல்வேறு எண்ணெய்வித்துத் திட்டங்களை அமல்படுத்தும் விரிவாக்கப் பிரிவாக துணைப் பொது மேலாளரின்கீழ் ஒரு வட்டார உழவியல் மையம், ஒரு பயிற்சி மையம் மற்றும் *6* வட்டார அலுவலகங்களை உள்ளடக்கி *21* மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

## 18.2 வட்டார உழவியல் மையம் மற்றும் பயிற்சி மையம்

இந்த விரிவாக்கப் பிரிவின்கீழ் ஒரு வட்டார உழவியல் மையம் மற்றும் ஒரு பயிற்சி மையம் *120* எக்டர் நிலப்பரப்பில் மாநிலத்தின் வல்லுனர் விதை தேவையினை உற்பத்தி செய்து பூர்த்தி செய்து வருகிறது. இந்த மையம் தேசிய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுமம் அங்கீகாரத்துடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு வேளாண்மைத் துறையின் அடிப்படை விதைத் தேவையினை அளித்து வருகிறது. நடப்பு வருடத்தில், மானாவாரி பருவத்தில் *135.60* குவிண்டால் மணிலா வல்லுனர் விதை *14.06* எக்டர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்துள்ளது. மேலும் வரும் *2003-2004* ஆம் வருடத்தில் மானாவாரி பருவத்தில் *16.00* எக்டர் நிலப்பரப்பில், மணிலா வல்லுனர் விதை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் நெய்வேலியில் ஒரு பயிற்சி மையம் எண்ணெய்வித்துக்கள் உற்பத்தியினை அதிகரிக்க,



2003 ஏப்ரல் 24]

எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின் பயிற்சிகளை இந்த விரிவாக்கப் பிரிவின்கீழ் செயல்படும் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. நடப்பு வருடத்தில் எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் விதை உற்பத்தியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதில் நிர்ணயிக்கப்பட்ட *1750* விவசாயிகளுக்கான இலக்கில், *1500* விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பயிற்சி மையம் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புதிய நீர்பிடிப்பு மற்றும் பனைமர உற்பத்தியாளர்கள் பயிற்சிகளை எடுத்து அரசு அங்கீகாரத்துடன் எடுத்து செயல்படுத்தி வருகின்றது. தற்போது எண்ணெய்ப்பனை பயிற்சிகளை எடுத்து செயல்படுத்தும் அமைப்பாக எண்ணெய்பனை சாகுபடி செய்யும் மாவட்டங்களில் இருந்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் மையமாக செயல்படுத்த உள்ளது.

*18.3.* தற்போது ஆறு வட்டார அலுவலகங்கள் மூலம் மத்திய மற்றும் மாநில அரசின் எண்ணெய்வித்து திட்டங்களை அமல்படுத்தும் பிரிவாக வேளாண்மைத் துறையின்கீழ் ஒரு அங்கமாக செயல்பட்டு வருகின்றது. நடப்பு வருடத்தில் எண்ணெய்வித்து உற்பத்தி திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ரூ.*52.175* இலட்ச இலக்கில், ரூ.*45.147* இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. தற்போது எண்ணெய்ப்பனை திட்டம் அமல்படுத்தும் குழுவின் (PMC FOR OIL PALM) பரிந்துரையின்படி வேளாண்மை விரிவாக்கப் பிரிவின் ஒரு பகுதி அலுவலர்கள் தஞ்சை மாவட்டத்தை மையமாகக் கொண்டு வட்டார அலுவலகத்தினை தொடங்கி எண்ணெய்ப்பனை விரிவாக்கப் பணியினை திருச்சி, பெரம்பலூர், கரூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, தேனி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் எடுத்துச் செயல்படுத்த உள்ளது.

*18.4.* அத்துடன் தற்போது தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புதிய நீர்பிடிப்புத் திட்டங்களை அமல்படுத்தும் வகையில் வட்டார உழவர் அமைப்பின் மூலம் இந்த வட்டார அலுவலகங்கள் செயல்பட உள்ளது. முதற்கட்டமாக வேலூர் மாவட்டத்தில் ஜோலார்பேட்டை வட்டத்தில் புதிய நீர்பிடிப்பு திட்டத்தில் செய்யார் வட்டார விரிவாக்கப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

[2003 ஏப்ரல் 24

## அத்தியாயம்-3

### தோட்டக்கலை

தோட்டக்கலை வணிக நோக்கில் வளர்ச்சியடைவதற்கு ஏற்ற வாய்ப்புகள் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாடு பலவித வேளாண் தட்ப வெப்பப் பகுதிகளை தன்னகத்தே கொண்டுள்ளதால் பல்வேறு வகையான தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய உகந்ததாக உள்ளது. தமிழக விவசாயிகளிடையே தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி குறித்து மிகுந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அளவில் தோட்டக்கலைப் பயிர்களின் மொத்தப் பரப்பில் 5.4 விழுக்காடு கொண்ட தமிழ்நாடு தேசிய அளவில் 7.6 விழுக்காடு உற்பத்தியை பங்களிப்பு செய்கிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் தோட்டக்கலையில் 8 விழுக்காடு வளர்சசி எய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

தோடடக்கலைப் பயிர்கள் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தருவதோடு வேலை வாய்ப்பினையும், ஊட்டச்சத்து பாதுகாப்பினையும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப்பொருட்களையும் வழங்குகிறது. மேலும் தோட்டக்கலைப் பொருட்களின் ஏற்றுமதி வாயிலாக கணிசமான அந்நிய செலாவணியையும் பெற முடிகிறது.

தமிழ்நாட்டில் 2002-03 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 9.15 இலட்சம் எக்டர் என திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டில் நிலவிய கடும் வறட்சியால் சாகுபடி பரப்பளவு குறைந்து, சுமார் 8.15 இலட்சம் எக்டர் பரப்பில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த ஒரு இலட்சம் எக்டர் இழப்பு காய்கறி மற்றும் வாழைப் பயிர்களில் ஏற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் சாகுபடி பழங்கள் 2.27 இலட்சம் எக்டர், காய்கறிகள் 1.78 இலட்சம் எக்டர், வாசனை திரவியப் பயிர்கள் 1.52 இலட்சம் எக்டர், மலைப்பயிர்கள் 2.38 இலட்சம் எக்டர் மற்றும் மலர்கள் 0.20 இலட்சம் எக்டரும் அடங்கும்.

2002-03 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் மொத்த உற்பத்தி 112 இலட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் பழப்பயிர்கள் 46 இலட்சம் டன்கள், காய்கறிகள் 50 இலட்சம் டன்கள், வாசனை திரவியப் பயிர்கள் 6.50 இலட்சம் டன்கள்,



2003 ஏப்ரல் 24]

தோட்டப்பயிர்கள் 7.90 இலட்சம் டன்கள், மலர்கள் 1.60 இலட்சம் டன்கள் என்ற அளவில் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

2003-04 ஆம் ஆண்டில் மொத்தம் 9.30 இலட்சம் எக்டர் பரப்பு தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடிக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில் பழப்பயிர்கள் 2.40 இலட்சம் எக்டர், காய்கறிப் பயிர்கள் 2.30 இலட்சம் எக்டர், வாசனை திரவியப் பயிர்கள் 1.86 இலட்சம் எக்டர், மலைப் பயிர்கள் 2.48 இலட்சம் எக்டர், மலர்கள் 0.21 இலட்சம் எக்டர் மற்றும் மூலிகை-நறுமணப்பயிர்கள் 0.05 இலட்சம் எக்டர் பரப்பு அடங்கும்.

2003-04 ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களின் மொத்த உற்பத்தி 135 இலட்சம் டன்கள் எய்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதில் பழப்பயிர்கள் 46 இலட்சம் டன்கள், காய்கறிகள் 69 இலட்சம் டன்கள், வாசனை திரவியப் பயிர்கள் 8.30 இலட்சம் டன்கள், மலைப்பயிர்கள் 9.60 இலட்சம் டன்கள், மலர்கள் 1.80 இலட்சம் டன்கள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் 0.30 இலட்சம் டன்கள் என்ற அளவில் உற்பத்தி செய்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### 2. தோட்டக்கலை வளர்ச்சி இயக்க அணுகுமுறை

கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் தோட்டக்கலையின் வளர்ச்சி மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. விரிவான தரிசு நில திட்ட செயல்பாட்டின் மூலமாக தனியார் நிலங்களில் நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி ஊக்குவிக்கப்படும். இவ்வாறு ஒட்டுமொத்தப் பரப்பில் சாகுபடியினை மேற்கொள்வதால் வேளாண் பொருள் சார்ந்த தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உரிய வாய்ப்பு உருவாகும்.

தோட்டக்கலை வளர்ச்சி இயக்கத்தின் மூலம் தற்போது நிலவும் சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி மா, வாழை, முந்திரி, மரவள்ளி, மூலிகைச் செடிகள் மற்றும் மலர் வகை சாகுபடி தீவிரமாக மேற்கொள்ளப்படும். இதற்குத் தேவையான தரமான செடிகள், புதிய தொழில்நுட்பங்கள், தரமான பொருளின் உற்பத்தியினை மேம்படுத்துதல், அறுவடைக்குப்பின் தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல், விற்பனைத் திறனை அதிகப்படுத்துதல் ஆகிய கூறுகள் உருவாக்கப்படும்.

[2003 ஏப்ரல் 24

அதிக அளவில் தனியார் பங்கீட்டினை ஊக்குவிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்படும். அரசு துறை மற்றும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் அமைப்புகள் ஒருங்கிணைக்கப்படும். இவ்வாறாக ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறையில் உள்ள திட்டங்களின் வாயிலாக கிடைக்கப் பெறும் உதவிகளைக் கொண்டு, உயர் தொழில்நுட்பங்களை அதிகப் பரப்பில் மேற்கொள்வதற்கு வகை செய்யப்படும்.

மாதிரிப் பண்ணைகள் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்பட்டு, இப்பண்ணைகள் மூலம் விரிவாக்கப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வகை செய்யப்படும். ஏற்கெனவே நிரூபிக்கப்பட்ட உயர் தொழில்நுட்பங்களில் அதிகமான விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கவும், விளக்கம் அளிக்கவும் இந்த அணுகுமுறை உதவிகரமாக இருக்கும். இவ்வாறு அமைக்கப்படும் மாதிரிப் பண்ணைகள், "நேரில் காண்பதே நம்பிக்கை தரும்" என்ற கூற்றின் அடிப்படையில் அமையும். இவைகள் உண்மையாகவே, உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கத் தேவையான உயர் தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்திட வழிவகுக்கும்.

**2.1. தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (Tamil Nadu Horticulture Development Mission)**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில், தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்திக்கு மாநிலத்திலுள்ள சாதகமான சூழ்நிலைகளை உரிய முறையில் பயன்படுத்திடவும், பயிர் சாகுபடியில் மட்டுமின்றி அறுவடைக்குபின் மேலாண்மை மற்றும் சேமிப்பு ஆகிய இனங்களிலும் அதிகக் கவனம் செலுத்திடவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்குறிக்கோளை அடைந்திட அரசு சென்ற ஆண்டு, "தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம்" ஒன்றை அறிவித்தது. இதற்கான நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 24]

**2.2. தோட்டக்கலைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம்**

இவ்வியக்கம் பின்வரும் ஆறு பயிர்வாரியான இயக்கங்களைக் கொண்டதாகும்:

**2.2.1. மாம்பழ வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் 1.11 இலட்சம் எக்டரில் 'மா' சாகுபடி செய்யப்பட்டு ஆண்டிற்கு 4.39 இலட்சம் டன்கள் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் தற்போதைய மாம்பழ உற்பத்தித் திறன் எக்டருக்கு 3.96 டன்கள் ஆகும். தமிழ்நாட்டில் மா பயிரின் உற்பத்தித் திறனை மூன்று ஆண்டு காலத்திற்குள் எக்டர் ஒன்றிற்கு 8 டன்கள் அளவிற்கு உயர்த்திட திட்டமிடப்பட்டுள்ளது. மாம்பழ ஏற்றுமதிக்கு தேனி மாவட்டம் மற்றும் அதன் அருகாமையிலுள்ள தென் மாவட்டங்களை உள்ளடக்கி 'வேளாண் ஏற்றுமதி மண்டலம்' அமைத்தல் மற்றும் 'மாம்பழ வளர்ச்சி இயக்கம்' செயல்படுத்துதல் போன்ற அணுகுமுறை மூலம் இக்குறியீடு எட்டப்படும்.

**2.2.2. வாழை வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் வாழை 0.85 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டிற்கு 35.44 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் தற்போதைய உற்பத்தித் திறன் எக்டருக்கு 42 டன்கள் ஆகும். வரும் மூன்று ஆண்டுகளில் இந்த வளர்ச்சி இயக்கத்தின் மூலம் வாழையின் உற்பத்தித் திறனை எக்டருக்கு 50 டன்கள் ஆக உயர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2.3. காய்கறி வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் மரவள்ளி 1.08 இலட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டிற்கு 41.53 இலட்சம் டன்கள் கிழங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கு உற்பத்தியில் எக்டருக்கு 38 டன்கள் உற்பத்தி செய்து தமிழ்நாடு அகில இந்திய அளவில் முதலிடம் வகிக்கிறது. காய்கறி வளர்ச்சி இயக்கத்தின் திட்டங்களை

செயல்படுத்தி காய்கறி மற்றும் மரவள்ளி பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2.4. முந்திரி வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் முந்திரி 0.93 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டிற்கு 0.39 இலட்சம் டன் முந்திரிக் கொட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போதைய உற்பத்தி திறன் எக்டருக்கு 0.42 டன் ஆகும். உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வரும் மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டின் உற்பத்தித் திறனை எக்டருக்கு 0.80 டன் ஆக அதிகரித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2.5. மலர்கள் வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் மலர்கள் 0.19 இலட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு ஆண்டிற்கு 1.47 இலட்சம் டன் மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வணிக மலர்கள் மற்றும் கொய் மலர்களான ரோஜா, ஆர்க்கிட்ஸ், கார்னேஷன், ஜெர்பரா, சாமந்தி, கிளாடியோலஸ் முதலியவற்றின் உற்பத்தியும், உற்பத்தித் திறனும் அதிகரித்திட வணிக மலர்கள் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சமீபத்தில் ஓசூர் மற்றும் நீலகிரி பகுதிக்கு அனுமதிக்கப்பட்ட "மலர்கள் ஏற்றுமதி மண்டலங்களை" பயன்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.2.6. மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம்**

தமிழ்நாட்டில் மூலிகை மற்றும் நறுமணப் பயிர்களின் சாகுபடியினை மேற்கொள்ள விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. தமிழக அரசு மூலிகை மற்றும் நறுமணப் பயிர்களின் அபிவிருத்திக்காக ஏற்கெனவே மாநில மூலிகைப் பயிர்கள் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. தற்பொழுது மூலிகைப் பயிர்கள் தமிழ்நாட்டில் சுமார் 5,000 எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேலும் சென்னா, நித்யகல்யாணி, மருந்து கூர்க்கன், அஸ்வகந்தா, கீழாநெல்லி, பச்சௌலி, பாமாரோசா, சிட்ரொனெல்லா, எலுமிச்சைப்புல் போன்ற மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் அதிக அளவில் தமிழ்நாட்டில் சாகுபடி மேற்கொள்ள இத்திட்டத்தின் மூலம் ஊக்குவிக்கப்படும்.



**3. பயிற்சிகள்**

**3.1. விவசாயிகளுக்கான பயிற்சிகள்**

இத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின்கீழ் நவீன தொழில்நுட்பங்கள் விவசாயிகட்கு சென்றடையும் வண்ணம் பயிற்சியுடன் கூடிய சுற்றுலா நடத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் வேளாண் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், வயல்வெளிகள் ஆகிய இடங்களுக்கு 1,200 விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இவ்விவசாயிகளுக்கு மகாராஷ்டிரா, கர்நாடகம், உத்திரப்பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்களில் உள்ள தோட்டக்கலைப் பயிர் உயர் தொழில்நுட்பம், சொட்டுநீர்ப் பாசனம், திசு வளர்ப்பு மற்றும் வறண்ட நிலத்தில் தோட்டக்கலை சாகுபடி போன்றவை நேரில் காண்பிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் 500 விவசாயிகளுக்கு தமிழ்நாடு வேளாண் பலகலைக்கழகம், வேளாண் அறிவியல் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் பயிற்சி வழங்கப்பட்டது.

இவையன்றி முந்திரி, கோக்கோ, மா போன்ற குறிப்பிட்ட பயிர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2002-03ஆம் ஆண்டில் 5,800 விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

**3.2. விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி**

நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க ஏதுவாக, இத்துறையின் விரிவாக்க அலுவலர்களுக்கு இம்மாநிலம் மற்றும் வெளி மாநிலங்களில் உள்ள பல்வேறு பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் 38 அலுவலர்கள் கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளா மற்றும் ஹரியானா போன்ற மாநிலங்களிலும் 100 அலுவலர்கள் இம்மாநிலத்திலுள்ள பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெற்றனர். இதுபோன்ற திட்டங்கள் 2003-04 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**4. நிலம் மற்றும் நீர் பயன்பாடு தொடர்பான கருத்தரங்கம்**

2002-03 ஆம் ஆண்டில் மாவட்ட அளவில் நிலம் மற்றும் நீர் பயன்பாடு தொடர்பான கருத்தரங்கம் 28 மாவட்டங்களிலும், மாநில அளவிலான கருத்தரங்கம் சென்னையிலும் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்குகளில் பெருமளவில் விவசாயிகள் பங்கேற்றனர்.

## 5. 2003-04 ஆம் ஆண்டுக்கான முக்கியக் கொள்கைகள்

(1) பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் 8 விழுக்காடு ஆண்டு வளர்ச்சி எய்திடும் நோக்குடன் தோட்டக்கலை கொள்கைக்கான வரைவு தீட்டப்பட்டுள்ளது. தோட்டக்கலை இயக்கத்தின் (Horticulture Development Mission) மூலம் இந்த இலக்கினை எய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க 8 வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இதுவரை கீழ்க்கண்ட 3 வேளாண் ஏற்றுமதி மண்டலங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(i) மாம்பழத்திற்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம்—தேனி

(ii) பூக்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம்—நீலகிரி

(iii) பூக்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம்—ஓசூர்

(3) புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள 385 வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு 3 அல்லது 4 சிறு வேளாண்சார் தொழிற்சாலைகள் அமைய ஏற்பாடு செய்தல்.

(4) விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் தரிசு நிலங்களில் தகுந்த தோட்டக்கலைப் பயிர்களை பயிரிட நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

(5) சிறந்த உர மேலாண்மை மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்க வகை செய்தல்.

(6) ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கறிகள் உற்பத்தி செய்தல், அதன் மூலம் காய்கறிகள் நுகர்வோருக்கு தொய்வின்றி கிடைக்கச் செய்தல்.

(7) அழுகும் தன்மையுடைய தோட்டக்கலைப் பொருட்களின் சேதத்தினை குறைத்திட அறுவடைக்குப்பின் மேலாண்மையில் அதிகக் கவனம் செலுத்துதல்.





(8) தோட்டக்கலையில் நவீன தொழில்நுட்பம் மற்றும் நவீன முன்னேற்றங்கள் விவசாயிகட்கு சென்றடையும் நோக்கில் விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு உரிய பயிற்சி வழங்குதல்.

(9) அதிக அளவில் பயன்படுத்தப்படும் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை தடுக்கும் வகையில் "இயற்கை வேளாண்மை" மற்றும் "ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை" முறைகளை பின்பற்றுதல்.

(10) பெருமளவிலான தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் தரமான செடிகள் அரசு பண்ணைகளில் மட்டுமின்றி தனியார் பண்ணைகளிலும் உற்பத்தி மேற்கொள்ள ஊக்கமளித்தல்.

(11) அதிக அளவில் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனையும், தரத்தையும் மேம்படுத்திட உயர் தொழில்நுட்பங்கள், நுண் பாசனம் மற்றும் உர பாசனம் ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

(12) வணிக மலர்கள், கொய் மலர்கள், மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் உற்பத்தியில் உள்ளூர் தேவையை பூர்த்தி செய்வதோடல்லாமல் ஏற்றுமதி மேற்கொள்ளவும் சிறப்பு கவனம் செலுத்துதல்.

கீழ்க்கண்ட மாநிலத் திட்டங்கள் மற்றும் மைய மற்றும் மாநில அரசுகளிடையே பகிர்வு பெறும் திட்டங்களை 2003-04 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:

## 6. மாநிலத் திட்டங்கள்

2002-03 ஆம் ஆண்டில் மாநிலத் திட்டங்கள் மூலம் 24,764 எக்டரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டன. 2003-04 ஆம் ஆண்டிலும் அதே அளவில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

## 6.1. ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம்

### அ. பரப்பு விரிவாக்கம்

இத்திட்டத்தின் மூலம் பழங்கள், காய்கறிகள், நறுமண சுவைப் பயிர்கள் மற்றும் மலர்கள் ஆகியவற்றின் சாகுபடி பரப்பினை விரிவாக்கம் செய்திடவும் நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு உற்பத்தித் திறனை உயர்த்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 50 விழுக்காடு மான்யத்தில் தரமான நடவுச்செடிகளும் உயர் விளைச்சல் இரக விதைகளும் விநியோகிக்கப்படுகின்றன. பழவகையில் அதிகபட்சமாக ஒரு எக்டர் பரப்பளவு, காய்கறி மற்றும் மலர்கள் பயிரிட அதிகபட்சமாக ஒரு பயனாளிக்கு 0.5 எக்டர் பரப்பளவு என்ற வீதத்தில் மான்யம் வழங்கப்படும். 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.293.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து ரூ. 254.35 இலட்சத்தில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆ. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள்

2,593 எக்டர் பரப்பளவில் அமையப் பெற்றுள்ள 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலிருந்து தரமான மற்றும் தாய்வழி நடவுச்செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இப்பண்ணைகள் நிலமற்ற விவசாயக் கூலிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் விவசாயிகளுக்கு முன்மாதிரி விளக்கப் பண்ணைகளாகவும் திகழ்கின்றன. 2002-03 ஆம் ஆண்டில் 75 இலட்சம் தோட்டக்கலைச் செடிகள் உற்பத்தி செய்ய வேண்டி, ரூ. 477.34 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி இலக்கும் எட்டப்பட்டுவிட்டது. 2003-04 ஆம் ஆண்டிற்கு ரூ. 459.83 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 75 இலட்சம் தோட்டக்கலைச் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

### இ. தோட்டக்கலை பயிற்சி மையம்

குடுமியான்மலை மைய தோட்டக்கலை பயிற்சி மையத்தில் ஒவ்வோர் ஆண்டும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வயல் விளக்க அலுவலர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களில் பயிற்சிகள் வழங்கி, மேற்படி அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட வழி வகுக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் 2002-03 ஆம் ஆண்டில் 603 விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அமைந்துள்ள மாதவரம் தோட்டக்கலைப் பயிற்சி மையத்தில் ஈராண்டுப் பட்டயப்படிப்பில் ஒவ்வோர் ஆண்டும் 40 மாணவர்கள் வரை சேர்க்கப்படுகின்றனர். 2002-03 ஆம் ஆண்டில், 36 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கென ரூ. 0.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2003-04 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்திட ரூ 0.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 6.2. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடி மக்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்திடுவதும், அப்பகுதியில் உள்ள வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் சேலம் மாவட்டத்தில் சேர்வராயன்மலை, அருநூத்துமலை, பச்சைமலை மற்றும் கல்ராயன்மலைப் பகுதியிலும், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலைப் பகுதியிலும், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதியிலும், தருமபுரி மாவட்டத்தில் சித்தேரிமலைப் பகுதியிலும், வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாதுமலைப் பகுதியிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதியிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பகுதிகளில் பல்லாண்டு பழவகைப் பயிர்களைப் பயிரிடத் திட்டமிடப்பட்டு, ஒரு பழங்குடி விவசாயிக்கு அதிகபட்சமாக 0.4 எக்டர் பரப்பிற்கு தரமான நடவுச் செடிகளை 75 விழுக்காடு மானிய விலையில் வழங்கப்படும். 2003-04 ஆம் ஆண்டில், ரூ. 40.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படவுள்ளது.

### 6.3. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுப்பதும், இயற்கைச் சூழலை பாதுகாப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் ஈரோடு, கோவை, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் *50* விழுக்காடு மானியத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியாளர்களுக்கு தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள், வேளாண் கருவிகள் மற்றும் இதர இடுபொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன, *2002-03* ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.*135.02* இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. *2003-04* ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து ரூ. *152.78* இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிமானத்தைப் தடுத்து இயற்கைச் சூழலைப் பாதுகாத்திட ஏதுவாக ஆண்டுப் பயிர்கள் சாகுபடியிலிருந்து நிரந்தர தோட்டக்கலைப் பயிர்களான தேயிலை, காபி, பழப் பயிர்கள், மா நறுமணப் பயிர் மற்றும் இதர பொருளாதார பயிர்களுக்கு மாற்றும் குறிக்கோளுட செயல்படுத்தப்படுகிறது. மலைச் சரிவுகளில் 10 விழுக்காட்டிற்கு குறைவாக சரிவு உள்ள இடங்களில் காய்கறிகள் சாகுபடியினை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தில் நடவுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானியத்தில் விநியோகிக்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 299.48 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 350.81 இலட்சத்தில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.





### 7. மைய மற்றும் மாநில அரசுகளினிடையே பகிர்வு பெறும் திட்டங்கள்

இத்திட்டத்தின்மூலம் *2002-03* ஆம் ஆண்டில் *9,465* எக்டர் பரப்பில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. *2003-04* ஆம் ஆண்டில் சாகுபடி பரப்பு *17,920* எக்டராக அமையும்.

### 7.1 ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தித் திட்டம்

தமிழ்நாட்டில் முந்திரியின் உற்பத்தியை உயர்த்திடும் நோக்கத்தில் மூன்று வழிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது, அவை உயர் விளைச்சல் இரகங்களை நட்டு பரப்பு விரிவாக்கம் மேற்கொள்ளுதல், நலிவடைந்த முந்திரித் தோட்டங்களுக்கு புத்துயிர் ஊட்டுதல் மற்றும் மேம்பட்ட சாகுபடி நுட்பங்களை கடைபிடித்தல் என்பதாகும். சாகுபடியாளர்கள் அறிந்துகொள்ளும் வகையிலும், சாகுபடி தொழில்நுட்பங்கள் பிரபலம் அடையும் வகையிலும் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்படுகின்றன. பரப்பு விரிவாக்கம் மற்றும் புத்துயிர்ப்பு திட்டத்தில் விவசாயிகளுக்கு உயர் ரக வி.ஆர்.ஐ.2 மற்றும் வி.ஆர்.ஐ.3 முந்திரி ஒட்டுக் கன்றுகள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன இத்திட்டம் ரூ.233.57 இலட்சம் மதிப்பில் 2002-03-ல் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.349.50 இலட்சம் மதிப்பில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.2 ஒருங்கிணைந்த பழப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்

பழப்பயிரின் உற்பத்தியினையும், உற்பத்தித் திறனையும் அதிகரித்திட தரமான உயர்ரக பழக் கன்றுகள், விதைகள் மற்றும் இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பழ உற்பத்தியினை பெருக்கிடும் வகையில் ஆண்டுதோறும் பல்வேறு பழப் பயிர்களில் பரப்பு கூடுதலாக விரிவாக்கம் செய்யப்படுகின்றது. இதற்காக விவசாயிகளுக்கு நவீன உயர் தொழில் நுட்பங்களில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 160.57 இலட்சம் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 301.50 இலட்சம் மதிப்பில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

**7.3 ஒருங்கிணைந்த நறுமண சுவைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

மிளகு, மஞ்சள், மிளகாய் போன்ற நறுமண சுவைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம் மற்றும் அவற்றின் உற்பத்தியினை பெருக்கிட இத்திட்டத்தில் தரமான விதைகள் மற்றும் நடவுச் செடிகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. விவசாயிகள் உயர் தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளை காலத்தே கடைபிடிக்க ஏதுவாக செயல் விளக்க பாத்திகள் அமைத்து உயர் வருவாய் பெற்றிட வழிவகுக்கப்படுகின்றது. 2002-03 ஆம் ஆண்டில் ரூ. 264.40 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 220.75 இலட்சம் மதிப்பில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**7.4 வணிக மலரியல் அபிவிருத்தித் திட்டம்**

வணிக ரீதியில் மலர்களின் சாகுபடியை பெருமளவில் ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைத்து அவர்களுக்கு இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. உதகையில் ஒரு மாதிரி மலர் மையம் அமைக்கப்பட்டு அங்கு திசு வளர்ப்பு முறையில் செடிகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் 57.05 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 190 இலட்சத்தில் தொடர்ந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**7.5 ஒருங்கிணைந்த 'கோக்கோ' அபிவிருத்தித் திட்டம்**

நமது மாநிலத்தில் கோக்கோ பயிரின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகவே இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. சாகுபடியாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை கற்பிக்கும் நோக்கத்தில் உயர் விளைச்சல் இரகங்களைக் கொண்டு விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைக்கப்படுகின்றன. மேலும் பரப்பு விரிவாக்கம் பெற நடவுச் செடிகள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 5.50 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 9.48 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

**7.6. காய்கறிகள் அபிவிருத்தித் திட்டம்**

மாநிலத்தில் வேர், கிழங்கு உள்ளடக்கிய காய்கறி பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில் விவசாயிகளின் வயல்களில் செயல் விளக்கங்கள் அமைத்து இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 49.50 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டு 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 250.50 இலட்சத்தில் தொடர்ந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**7.7 காளான் அபிவிருத்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் காளான் சாகுபடியில் அதன் தரம் மற்றும் உற்பத்தியினை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். நவீன முறையில் சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக காளான் சாகுபடியாளர்களுக்கு இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 6.00 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**7.8 மூலிகை மற்றும் நறுமணப் பயிர் அபிவிருத்தித் திட்டம்**

தமிழகத்தில் முக்கிய மூலிகை மற்றும் நறுமணப் பயிர்கள் சாகுபடியை அறிமுகப்படுத்தி பரப்பு விரிவாக்கம் மற்றும் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் இதற்கான செயல்விளக்கப் பாத்திகள் விவசாயிகளின் வயல்களில் அமைத்து இடுபொருட்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் ரூ. 25.50 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 49.75 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

**7.9 தோட்டக்கலை விரிவாக்கத்தில் பிளாஸ்டிக்குகளின் உபயோகம்**

இத்திட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியில் பிளாஸ்டிக்கை பயன்படுத்துவது பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. 500 சதுர மீட்டர் அளவு கொண்ட ஒரு குறைந்த மதிப்பீட்டில் பசுமைக்குடில் அமைத்திட இத்திட்டத்தில் 40 விழுக்காடு மானியமாக அதாவது ரூபாய் 40,000 வரை வழங்கப்படுகின்றது. இத்திட்டம் ரூ. 30.50 இலட்சம் மதிப்பில்

[2003 ஏப்ரல் 24

2002-03 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. 2003-04 ஆம் ஆண்டில் ரூ. 46.00 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. முக்கிய அம்சங்கள்

### 8.1 வறட்சியின் தாக்கம்

நமது மாநிலம் 2002-03 ஆம் ஆண்டில் வரலாறு காணாத வறட்சியினை சந்தித்தது. முக்கிய மழைக்காலப் பருவங்களான தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவங்கள் இரண்டுமே பொய்த்துவிட்டமையினால் மழையளவில் பெரும் குறைவு ஏற்பட்டது. மேலும் கடந்த மூன்றாண்டு காலமாக தொடர்ந்து மழை அளவு குறைந்தமையினால் நிலத்தடி நீர் மட்டத்திற்கு அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கத்தில் குறிப்பாக காய்கறிகள், வாழை, நறுமண சுவைப் பயிர்கள் போன்றவற்றில் கணிசமான அளவு சரிவு ஏற்பட்டுள்ளது. அதாவது நடப்பு ஆண்டில் வழக்கமான நிலையில் எதிர்பார்த்த, மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பான 9.15 இலட்சம் எக்டரில் சுமார் ஒரு லட்சம் எக்டர் குறைவு ஏற்பட்டுள்ளது.

### 8.2 உயிரி எரிபொருள் அபிவிருத்தி - காட்டாமணக்கு (Jatropha) - சொர்க்க மரம் (PARADISE TREE)

இந்தியாவில் ஏற்கெனவே வேலிப் பயிராகத் தோன்றிய காட்டாமணக்கு எனும் பயிர் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் உற்பத்தியாகும் விதைகள் 30 விழுக்காடு எண்ணெய் சத்து கொண்டுள்ளது. வாகனங்களை இயக்க இதனை டீசலுடன் 15 விழுக்காடு என்ற அளவில் கலந்து ஒரு சிறந்த எரிபொருளாக பயன்படுத்தலாம். நடுத்தரப்பாங்கான தரிசு நிலங்களில் இப்பயிரை ஓரளவு பாசன வசதியுடன் சாகுபடி



2003 ஏப்ரல் 24]

செய்வதால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் நல்ல வருவாய் பெறலாம். இப்பயிரை அதிக அளவில் சாகுபடி மேற்கொள்வதால் அயல் நாடுகளிலிருந்து எரிபொருளாக இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் அளவினை குறைத்துக்கொள்ளலாம். நடப்பில் வசதிகளைப் பயன்படுத்தியே இப்பயிரிலிருந்து எண்ணெயை எளிதாக பிரித்தெடுக்கலாம்.

சொர்க்க மரத்தின் தாயகம் தென் அமெரிக்காவாகும். (எல்சல்வேடார், பிரேசில்), இப்பயிரின் விளைபொருளிலிருந்து பிரித்து எடுக்கப்படும் உணவு எண்ணெய், சோப்பு மற்றும் அழகு சாதனங்கள் தயாரிப்பில் பயன்படுத்த ஒரு சிறந்த பசைப்பொருளாக செயல்படுகின்றது, இம்மரம் வறட்சியை தாங்கி 12-லிருந்து 15 மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. இம்மரப் பயிர் ஐந்தாம் ஆண்டிலிருந்து பலன் கொடுக்கக்கூடியது.

மேற்படி இரு மரப் பயிரையும் 2003-04 ஆம் ஆண்டில் மூன்று அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் ஒவ்வொன்றும் சுமார் 8 எக்டர் பரப்பளவில் அறிமுகப்படுத்தி செயல்விளக்கப் பண்ணை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தாவர அடிப்படையிலான எரிபொருளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள 'கூர்கான் தேசிய எண்ணெய் வித்து மற்றும் காய்கறி எண்ணெய் வளர்ச்சி வாரியமானது', தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் காட்டாமணக்கு கன்றுகளை உற்பத்தி செய்து நடவு செய்திட ரூ. 12 இலட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கான தனது ஒப்புதலை தெரிவித்துள்ளது. காட்டாமணக்கு கன்றுகளை அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பண்ணைகளில் உற்பத்தி செய்து, அவற்றை அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மற்றும் விவசாயிகள் வயல்களில் 2003-04 ஆம் ஆண்டில் நடவு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

## 8.3 மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி

மகளிர் தங்களை சுயதொழிலில் ஈடுபடுத்திடும் வகையில் அவர்களுக்குகந்த பயிற்சிகள் பல்வேறு துறைகள் மூலம் வழங்கிட தமிழ்நாடு அரசு மாபெரும் திட்டம் ஒன்றினை அறிவித்துள்ளது. தோட்டக்கலையிலும் இதற்கான வாய்ப்புகள் சிறப்பாக உள்ளதைக் கருத்தில் கொண்டு *2002-03* ஆம் ஆண்டில் *2000* மகளிர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் உள்ள நிதியைப் பயன்படுத்தி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் தோட்டக்கலை தொடர்பான இனங்களான காளான் வளர்ப்பு, காய்கறிப் பயிர் சாகுபடி, மலரியல், மண்புழு உரம் தயாரித்தல் போன்றவற்றில் தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்படுகிறது.

## 8.4 நீலகிரி மாவட்ட தேயிலைப் பிரச்சினையும் அதற்கான அரசின் நடவடிக்கையும்

நீலகிரி மாவட்டத்தில் மொத்த தோட்டக்கலைப் பயிர்கள் பரப்பான *75290* எக்டரில் தேயிலை *56137* எக்டர் பரப்பில் பயிர் செய்யப்படுகிறது. இது *75* விழுக்காடு ஆகும். இதில் *20318* எக்டர் அளவு தேயிலை பயிரை சுமார் *65000* சிறு/குறு விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். இது மொத்த தேயிலை பரப்பில் *36* விழுக்காடு ஆகும்.

கடந்த ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தியாளர்கள் தங்களின் விளைபொருளான தேயிலைக்கு உரிய விலையின்மையாலும், தேயிலையின் விலை சரிவு நிலை ஏற்பட்டுள்ளமையாலும், தேயிலை விவசாயிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



2003 ஏப்ரல் 24]

இந்நிலையிலிருந்து தேயிலை விவசாயிகள் விடுபடவும், தரமான தேயிலையினை உற்பத்தி செய்து நல்ல விலை பெறும் வகையிலும் அரசு அவர்களுக்கு உரிய சாகுபடி தொழில்நுட்பங்களை வழங்கி உதவுகின்றது. *2002-03* ஆம் ஆண்டில் தேயிலை வாரிய உதவியுடன் கீழ்க்காணும் இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

(1) தரமான தேயிலை உற்பத்தி செய்ய விரிவான திட்டம் (ரூ. 19.00 இலட்சம்)

(2) கிராம விழிப்புணர்ச்சி முகாம்கள் (ரூ. 15.00 இலட்சம்)


மேற்படி திட்டங்கள் செம்மையாக செயல்பட *90* விரிவாக்கப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பணிகள் தோட்டக்கலைத் துறையினர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் செயல்படும் ஒரு பிரபலமான அரசு சாரா நிறுவனமான 'மைராடா' (Myrada) மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளிடையே இந்த முகாம்களுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

இது தவிர தேயிலை சாகுபடிக்கு மாற்றுப் பயிர் பரிந்துரைத்தல் மற்றும் பல அடுக்கு சாகுபடி முறை — அதாவது சில்வர் ஓக், மிள்கு, ஏலம், கமலா ஆரஞ்சு போன்ற இதரப் பயிர்களையும் தேயிலையுடன் ஊடு பயிராக சாகுபடி செய்ய பரிந்துரைக்கப்படுகின்றன். இம்மாதிரியான முயற்சிகளினால் தேயிலையின் விலை கடந்த சில மாதங்களில் உயர்ந்துள்ளது. நீலகிரியில் நிலவுகின்ற தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கேற்ப புதிய மாற்றுப் பயிர்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 'மெக்காடெமியா' மற்றும் 'பீக்கான்கொட்டை' மரப் பயிர்கள் முக்கியமானவைகளாகும். *2003-04* ஆம் ஆண்டில் இவ்விரு மரப் பயிர்களும் 'நஞ்சநாடு' மற்றும் 'கோல்கிரெய்ன்' பகுதிகளிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் பயிரிடப்படும். மேலும் ஒரு சில தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளின் வயல்களிலும்


[2003 ஏப்ரல் 24

இப்பயிர் சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக நடவுப் பொருட்கள் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 9.1 தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு 1999–2000 முதல் 2003–2004 வரை (இலட்சம் எக்டரில்)




### தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 1999–2000 முதல் 2003–2004 வரை (இலட்சம் மெட்ரிக் டன்களில்)






2003 ஏப்ரல் 24]

### 9.2 தமிழ்நாட்டில் தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன்

பரப்பு - இலட்சம் எக்டேரில், உற்பத்தி - இலட்சம் டன்களில்
உற்பத்தித் திறன் - டன்/எக்டேர்.

| வ. எண் | விவரம் | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 (தற்காலிகம்) | 2003-2004 (எதிர் நோக்கு) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பழங்கள் | | | | | |
| | பரப்பு | 2.23 | 2.23 | 2.29 | 2.27 | 2.40 |
| | உற்பத்தி | 38.56 | 40.06 | 43.74 | 46.00 | 46.00 |
| | உற்பத்தித் திறன் | 17.29 | 17.96 | 19.10 | 20.26 | 19.16 |
| 2. | காய்கறிகள் | | | | | |
| | பரப்பு | 2.02 | 2.20 | 2.18 | 1.78 | 2.30 |
| | உற்பத்தி | 48.90 | 59.39 | 57.53 | 50.00 | 69.00 |
| | உற்பத்தித் திறன் | 24.21 | 27.00 | 26.39 | 28.09 | 30.00 |
| 3. | வாசனைப்பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 1.78 | 1.68 | 1.61 | 1.52 | 1.86 |
| | உற்பத்தி | 3.19 | 6.62 | 6.37 | 6.50 | 8.30 |
| | உற்பத்தித் திறன் | 1.79 | 3.94 | 3.96 | 4.28 | 4.46 |
| 4. | மலைப்பயிர்கள் | | | | | |
| | பரப்பு | 2.13 | 2.20 | 2.26 | 2.38 | 2.48 |
| | உற்பத்தி | 7.26 | 7.73 | 8.01 | 7.90 | 9.60 |
| | உற்பத்தித் திறன் | 3.41 | 3.51 | 3.54 | 3.32 | 3.87 |
| 5. | மலர்கள் | | | | | |
| | பரப்பு | 0.18 | 0.19 | 0.19 | 0.20 | 0.21 |
| | உற்பத்தி | 1.37 | 1.45 | 1.47 | 1.60 | 1.80 |
| | உற்பத்தித் திறன் | 7.61 | 7.63 | 7.74 | 8.00 | 8.57 |
| 6. | மருத்துவப் பயிர்கள் | | | | | |
| | பரப்பு | | | | | 0.05 |
| | உற்பத்தி | | | | | 0.30 |
| | உற்பத்தித் திறன் | | | | | 6.00 |
| | மொத்தப் பரப்பு | 8.34 | 8.50 | 8.53 * | 8.15 | 9.30 |
| | மொத்த உற்பத்தி | 99.28 | 115.25 | 117.12 | 112.00 (வறட்சி ஆண்டு) | 135.00 |

## 9.3 தமிழ்நாட்டிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரங்கள்

| வ. எண் | மாவட்டம் | பண்ணை பெயர் | இடம் | பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | அதோப | ஆனைக்கட்டி | 12.00 |
| 2 | கோயம்புத்தூர் | அதோப | கல்லார் | 7.72 |
| 3 | கடலூர் | அதோப | நெய்வேலி | 40.48 |
| 4 | கடலூர் | அதோப | விருத்தாசலம் | 10.53 |
| 5 | தர்மபுரி | அதோப | திம்மாபுரம் | 9.89 |
| 6 | தர்மபுரி | அதோப | ஜீனூர் | 122.38 |
| 7 | திண்டுக்கல் | அதோப | கொடைக்கானல் | 5.16 |
| 8 | திண்டுக்கல | பிரையண்ட் பூங்கா | கொடைக்கானல் | 8.30 |
| 9 | திண்டுக்கல் | அதோப | தாண்டிக்குடி | 5.45 |
| 10 | திண்டுக்கல | அதோப | ரெட்டியார்சத்திரம் | 5.33 |
| 11 | திண்டுக்கல் | அதோப | சிறுமலை | 202.47 |
| 12 | காஞ்சிபுரம் | அதோப | ஆத்தூர் | 12.24 |
| 13 | காஞ்சிபுரம் | அதோப | விச்சந்தாங்கல் | 22.96 |
| 14 | காஞ்சிபுரம் | அதோப | மேல்கதிர்பூர் | 42.12 |
| 15 | காஞ்சிபுரம் | அதோப | மேலொட்டிவாக்கம் | 20.36 |
| 16 | கன்னியாகுமரி | அதோப | கன்னியாகுமரி | 12.80 |
| 17 | கன்னியாகுமரி | அதோப | பேச்சிப்பாறை | 6.07 |
| 18 | நாமக்கல் | அதோப | செம்மேடு | 11.62 |
| 19 | நாமக்கல் | அதோப | படசோலை | 28.14 |
| 20 | புதுக்கோட்டை | அதோப | குடுமியான்மலை | 118.68 |
| 21 | புதுக்கோட்டை | மாபெரும் பழப்பண்ணை | வல்லாத்திராக்கோட்டை | 521.20 |
| 22 | புதுக்கோட்டை | அதோப | நாட்டுமங்கலம் | 53.02 |
| 23 | சேலம் | அதோப | ஏற்காடு | 10.12 |
| 24 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை | கருமந்துறை | 419.77 |
| 25 | சேலம் | அதோப | மணியார்குண்டம் | 100.00 |
| 26 | சேலம் | காவிஉமை | கருமந்துறை | 5.49 |
| 27 | சேலம் | அதோப | கருமந்துறை | 39.35 |
| 28 | சேலம் | அதோப | முள்ளுவாடி | 48.20 |
| 29 | சேலம் | அதோப | சிறுமலை (அறுநாத்துமலை) | 8.10 |
| 30 | சிவகங்கை | அதோப | தேவக்கோட்டை | 81.20 |
| 31 | சிவகங்கை | அதோப | நேமம் | 38.77 |
| 32 | தஞ்சாவூர் | அதோப | ஆடுதுறை | 8.80 |
| 33 | தஞ்சாவூர் | அதோப | மருங்குளம் | 10.58 |
| 34 | உதகை | அதோப | பர்லியார் | 6.25 |
| 35 | உதகை | அதோப | காட்டேரி | 18.96 |
| 36 | உதகை | அதோப | குன்னூர் | 4.05 |
| 37 | உதகை | பழவியல் நிலையம் | குன்னூர் | 6.52 |
| 38 | உதகை | சிம்ஸ் பூங்கா | குன்னூர் | 12..14 |
| 39 | உதகை | அதோப | தொட்டபெட்டா | 4.00 |
| 40 | உதகை | அதோப | தும்மணட்டி | 9.80 |
| 41 | உதகை | அதோப | விஜயநகரம் | 14.40 |
| 42 | உதகை | அரசு தாவரவியல் பூங்கா | உதகை | 22.00 |
| 43 | உதகை | அதோப | நஞ்சநாடு | 85.18 |
| 44 | உதகை | அதோப | தேவாலா | 80.00 |
| 45 | தேனி | அதோப | பெரியகுளம் | 9.31 |
| 46 | திருவள்ளூர் | அதோப | மாதவரம் | 5.76 |
| 47 | திருவள்ளூர் | அதோப | பிச்சிவாக்கம் | 40.43 |
| 48 | திருநெல்வேலி | அதோப | குற்றாலம் | 14.89 |
| 49 | கரூர் | அதோப | முதலைப்பட்டி | 23.96 |
| 50 | வேலூர் | அதோப | தகரக்குப்பம் | 34.40 |
| 51 | வேலூர் | அதோப | கூடப்பட்டு | 10.40 |
| 52 | வேலூர் | அதோப | நவ்லாக் | 84.45 |
| 53 | விருதுநகர் | அதோப | பூவானி | 9.57 |
| 54 | விருதுநகர் | மாபெரும் பழப்பண்ணை | ஸ்ரீவில்லிபுத்தூர் | 46.27 |
| | | கூடுதல் | | 2593.04 |

அதோப - அரசு தோட்டக்கலைப் பண்ணை

காவிஉமை - காய்கறி விதை உற்பத்தி மையம்

[2003 ஏப்ரல் 24

## அத்தியாயம் - 4

### வேளாண்மைப் பொறியியல்

வேளாண்மைப் பொறியியல் துறை 'நிலம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புக்கென இயக்கம்' என்ற அடிப்படையில் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துகிறது.

நிலம் மற்றும் நீர்வளப் பாதுகாப்பை எய்திட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அடிப்படையிலும் நீர் மேலாண்மைப் பணிகள் மூலமாகவும் பல திட்டங்கள் செயல்படுத்தபடுகின்றன.

வறட்சி நிவாரணம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் சிறப்பு திட்டங்கள்.

**1. காவிரி டெல்டாப் பகுதியில் 1139 பண்ணைக் குட்டைகள் கட்டுதல்:-**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவிரி டெல்டாப் பகுதியில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்வகையில் ரூ.3.00 கோடி செலவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டமொன்றினை அறிவித்தார். வேளாண்மைப் பொறியியல் துறை இந்த ஆணையை போர்க்கால அடிப்படையில் செயல்படுத்தி, 90 நாட்களுக்குள் 5,70,073 மனித நாட்களை உருவாக்கிக் கீழ்க்கண்டவாறு பணிகளை நிறைவேற்றியது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | கட்டி முடிக்கப் பட்ட பண்ணைக் குட்டைகள் (எண்கள்) | செலவினம் (ரூபாய் இலட்சங்களில்) | உருவாக்கப்பட்ட மனித நாட்கள் |
|---|---|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | 479 | 127.50 | 241793 |
| 2. | திருவாரூர் | 399 | 109.50 | 201375 |
| 3. | நாகப்பட்டினம் | 261 | 62.99 | 126905 |
| | மொத்தம் | 1139 | 299.99 | 570073 |



2003 ஏப்ரல் 24]

**2. வேலைக்கு உணவுத் திட்டம்**

வறட்சியால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டாவில் உள்ள 9 மாவட்டங்களில் 6700 பண்ணைக் குட்டைகள் கட்டுதல்:—

தொடர்ந்து வரும் வறட்சி நிலையால் இதுவரை நிகழ்ந்திராத வகையில் விவசாயத் தொழிலாளர்கள் வேளாண் தொழிலை மேற்கொள்ள முடியாமல் பணியின்றி அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். விவசாயத் தொழிலாளர்களின் இந்த அல்லலைத் தணிக்கும்வகையில் தமிழக அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட காவிரி டெல்டாவின் 9 மாவட்டங்களில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் ரூபாய் 20 கோடி செலவில் 6700 பண்ணைக் குட்டைகள் கட்ட உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 37 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டு வேளாண் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க இயலும்.

**I நீர்வடிப் பகுதி மேலாண்மை**

**1. வைகை ஆற்றுப் பள்ளத்தாக்குப் பகுதியில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு**

மத்திய அரசின் வழிமுறைகளின்படி மிக அதிகமாகவும் மற்றும் அதிகமாகவும் பாதிக்கப்பட்ட நீர்வடிப் பகுதிகளில் மத்திய அரசு உதவியுடன் இயங்கும் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. மிக அதிக பாதிப்பிற்கு உள்ளான நீர்வடிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கை உரிய முறையில் தயார் செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னரே செயலாக்கப்படுகிறது. வைகை நீர்வடிப் பகுதியில் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட மொத்தம் 40 நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இதுவரை 33 நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 3057 எக்டரில் ரூ.494.66 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இத்திட்டம் வரும் ஆண்டில் (2003-2004-ல்) ரூ.600.00 இலட்சத்தில் செயலாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

**2. மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள்**

கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில்

[2003 ஏப்ரல் 24

மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பயனாளிகளிடமிருந்து 10 விழுக்காடு பங்குத் தொகையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரிடம் இருந்து 5 விழுக்காடு பங்குத் தொகையும் பெறப்பட்டு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. சமுதாயப் பணிகளுக்கும் 5 விழுக்காடு தொகை பயனாளிகளிடமிருந்து பெறப்படுகின்றன.

**3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்புப் பணிகள்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள், நிலச்சரிவுத் தடுப்புப் பணிகள், நீர்வழித் தடங்களை ஒழுங்குபடுத்தும் பணிகள் ஆகியன இத்திட்டத்தின் மூலம் செயலாக்கப்படுகின்றன.

**4. பழங்குடியினர் வாழும் மலைப்பகுதியில் மண்வளப் பாதுகாப்பு**

கொல்லி மலை, ஏற்காடு மலை, கல்ராயன் மலை, அறுனூத்து மலை, பச்சைமலை, சவ்வாது மலை மற்றும் சித்தேரி மலைப் பகுதிகளில் உள்ள மலைவாழ் பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் அரசு செலவில் பல்நோக்கு அடிப்படையில் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியும், பயிர் .விளைச்சலில் கூடுதல் உற்பத்தியினை அடையவும், பழங்குடியினருக்கு வருமானத்தை விரிவாக்க வழிவகுத்தும், வாழ்வாதாரப் பாதுகாப்பாக இத்திட்டம் அமைகிறது. நடப்பு ஆண்டில் 621 எக்டர் பரப்பில் ரூ.92.90 இலட்சம் செலவில் இத்திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் நடைபெற்றுள்ளன. 2003-2004-ம் ஆண்டில் ரூ.92.90 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

**5. நீர்வடிப் பகுதி மற்றும் தரிசு நில மேம்பாட்டுப் பணியில் தொலை உணர்வு தொழில் நுட்பத்தின் பங்கு**

வேளாண்மைப் பொறியியல் துறையில் இயங்கும் தொலையுணர்வுப் பிரிவு, நீர்வடிப் பகுதி மற்றும் தரிசுநில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளத் தேவையான தகவல்களை அளித்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள நீர்வடிப் பகுதிகளின் நிலை வரைபட அறிக்கைகளைக் கொண்டு பல துறைகள், நீர்வடிப் பகுதிகளை பிரித்தாய்வு செய்து, முன்னுரிமைப்



2003 ஏப்ரல் 24]

படுத்திட பயன்படுத்துகின்றன. இந்தப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக் கழகம் மற்றும் அண்ணா பல்கலைக் கழக தொலையுணர்வு மையத்துடன் இணைந்து நீர்வடிப் பகுதி மேம்பாட்டுக்கு புவியியல் தகவல் அறிக்கை தயாரிக்கிறது.

**6. டானிடா உதவியுடன் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டப் பணிகள் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், 120 கிராமங்களில் 42,500 எக்டர் நிலப்பரப்பில் ரூ.417 '.44 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட்டது.

1. தரம் இழந்த நிலப் பகுதிகளில், நிலப் பயன்பாட்டை திறமையுடன் செய்ய பயிற்சி அளித்தல்.
2. மானாவாரிப் பயிர்கள், தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் வனப் பயிர்கள் பயிர் செய்யச் செய்வதுடன், நிலப் பாதுகாப்புடன் நிரந்தர நீர் ஆதாரத்தைப் பாதுகாக்கச் செய்தல்.
3. முன்னுரிமைக்குட்பட்ட இடங்களில், குறுகிய மற்றும் நீண்ட கால வேலைவாய்ப்பை ஏற்படுத்தி குடும்ப வருவாயைப் பெருக்குதல்.

இந்த திட்டம், 5-8-1994-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ரூ. 3682.85 இலட்சம் செலவில் 34901 எக்டர் பரப்பில் கீழ்க்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

* 422 கி.மீ.க்கு தாவர அரண்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளன.
* 23175 ஹெக். பரப்பில் வேளாண் காடுகள் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.
* 2974 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.
* 16353 விவசாயக் குடும்பங்கள் பயன் பெறும்வகையில் தாவர அரண்களுக்கு இடைப்பட்ட இடை நடவுப் பகுதிகள் மேம்படுத்தப்பட்டன.

* 17665 ஹெக். பரப்பில் நிலம் - நீர் வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
* விவசாயப் பயனாளிகளின் தரத்தை உயரத்த 469 பயிற்சிகளும், கல்விப் பயணங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இத்திட்டம் 31-3-2003-ல் வெற்றிகரமாக நிறைவேறியது.

**II. பாசன நீர் மேலாண்மை**

**1. பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மத்திய அரசின் நிதியுதவியுடன் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் சம பங்கீட்டின் அடிப்படையில் (50 : 50) வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காவிரி பாசனப் பகுதி, கீழ்பவானி திட்டம், பரம்பிக்குளம் ஆழியார் திட்டம், அமராவதி நீர்த் தேக்கத் திட்டம், கோதையார் சித்தார் பட்டிணங்கால் திட்டம், கம்பம் பள்ளத்தாக்கு திட்டம், பெரியார் வைகை திட்டம், சாத்தனூர் நீர்த் தேக்கத் திட்டம், தாமிரபரணி நீர்த்தேக்கத் திட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம், தொப்பையார் திட்டம் மற்றும் பாலார் பொரந்தலார் திட்டம் முதலிய பகுதிகளில் திட்டங்கள் செயலாக்கப் படுகின்றன. கீழ்பவானித் திட்டம், கம்பம் பள்ளத்தாக்குத் திட்டம், அமராவதி நீர்த்தேக்கத் திட்டம், பெரியார் வைகை திட்டம் மற்றும் சாத்தனூர் திட்டம் ஆகிய திட்டங்கள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள திட்டங்கள், மத்திய அரசு அங்கீகரித்துள்ள கால அளவிற்குள் முடிவடையும். பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். தொப்பையார் திட்டம் மற்றும் பாலார் பொரந்தலார் திட்டம் போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசு சமீப காலத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.

**பண்ணை மேம்பாட்டுத் திட்டம்()**

மதகு (Sluice)-க்குக் கீழ் பாசனம் பெறும் நிலங்களுக்கு பாசன நீர் மேலாண்மைக் கொள்கையை வேளாண்மைப் பொறியியல் துறை வகுத்துள்ளது. நீர்ப் பங்கீட்டு தேவைக்கேற்ப பாசன நீரைப் பிரித்தளித்து, நீரோட்டத்தால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுத்து, நீர்த் தேவைக்கு அதிகமாக நிலங்களில் தேங்கி நிற்பதைத் தவிர்த்து விடுவதன்மூலம் பயிர் உற்பத்திப் பெருக்கம் உறுதிப்படுத்தப்படுகிறது.



10.97 இலட்சம் எக்டர் பரப்பில் உள்ள பாசனப் பகுதிகளில், 31-3-2003 வரை, 12 பாசனப் பகுதித் திட்டங்களில் ஏறத்தாழ 9.30 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணியுடன் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சுழற்சி முறை நீர்ப்பாசனம்**

சுழற்சி முறை நீர்ப்பாசனம் அல்லது வாரபந்தி என்பது, குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சதவிகிதத்தில் நீரை பகிர்ந்து பாசனம் செய்வது ஆகும்.

1984-85 ஆம் ஆண்டில், கீழ்பவானித் திட்டம் மற்றும் காவிரி பாசனப் பகுதித் திட்டம் மற்றும் பெரியாறு வைகை பாசனத் திட்டம் ஆகிய பகுதிகளில் முதன்முதலாக நீர் சுழற்சி முறைப் பாசனம் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழகத்தில் 31-3-2003 வரை ஒன்பது பாசனப் பகுதி திட்டங்களின்மூலம் 7.82 இலட்சம் எக்டர் நிலப்பரப்பில், சுழற்சி முறை நீர்ப்பாசனம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பங்கேற்புடன் பாசன மேலாண்மை**

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களை செயலாக்குவதற்கு விவசாயிகளின் பங்கேற்பு முக்கியமானது. பயிர்களின் தேவைக்கேற்ப, சரியான நாளில், சரியான நேரத்தில், சரியான அளவு நீர், சரியான இடத்திற்குப் பகிர்ந்தளிக்க விவசாயிகள் பங்கேற்பு அவசியம். விவசாயிகள் ஒருமித்த செயல்பாட்டினை நெறிப்படுத்த மூன்று அடுக்கு சங்கம் அமைக்கும் முறை நடைமுறையில் உள்ளது.

| | | |
|---|---|---|
| விவசாயிகள் சங்கம் | - | மதகு அளவில் |
| விவசாயிகள் சபை (Council) | - | பிரிவுக் கால்வாய் அளவில் |
| விவசாயிகள் பேரவை (Federation) | - | திட்ட அளவில் விவசாய சங்கங்கள் |

இதுவரை பதிவு செய்யப்பட்ட 632 சபை (Farmers Councils)களில் கட்டுமான பராமரிப்புக்காக, செயல்பாட்டு மானியமாக ரூ. 1309.55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 24

2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 5012.93 இலட்சம் செலவில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

55,905 எக்டர் பரப்பில் பண்ணை மேம்பாட்டுப் பணிகளும் 1,10,000 எக்டர் பரப்பில் சுழற்சி முறைப் பாசனமும் செயலாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பாசன வேளாண்மை செறிவூட்டும் திட்டம்**

உலக வங்கி உதவியுடன் செயல்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்ட அதிகாரக் குழு பாசன மேலாண்மை செயல் விளக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்த 400 செயல் விளக்கப் பண்ணைகள் வேளாண்மை பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10 எக்டர் கொண்ட ஒரு செயல் விளக்கப் பண்ணைக்கு ரூ. 55,000 வீதம் இதுவரை 401 செயல் விளக்கப் பண்ணைகளுக்கு ரூ.219.16 இலட்சம் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்திடமிருந்து வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

**குழாய்க் கிணறுகள் மூலம் கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்துதல்**

கூடுதல் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், ஏற்கெனவே பாசனத்தில் உள்ள நிலங்களுக்கு பாசனத்தை நிலை நிறுத்துதல், நிலம் மற்றும் நிலத்தடி நீரின் அத்தியாவசிய பயனை அதிகரிக்க நிலத்தடி நீர் சேமிப்பை ஏற்படுத்துதல் ஆகியன, குழாய்க் கிணற்றுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்மூலம் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே இருக்கும் கிணறுகளில் பக்கவாட்டில் துளையிட்டு சீரமைக்கப்படுகின்றன. நீர் ஆய்வுக் கருவிகள் மற்றும், மின்னணுக் கருவிகள் மூலம் விவசாயிகளுக்கு கிணறுகள் அமைக்கும் இடம் தேர்வு செய்திடப்படுகிறது. ஆழ்துளைக் கருவிகள், கைத்துளைக் கருவிகள், பாறை வெடிக் கருவிகள், நீள்துளைக் கருவிகள், காற்றமுத்தக் கருவிகள் போன்றவை விவசாயிகளுக்கு வாடகை அடிப்படையில் புதிதாக குழாய்க் கிணறு அமைக்கவும், திறந்த வெளிக் கிணற்றில் பக்கவாட்டில் துளையிட்டு புதுப்பிக்கவும் வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டு 5,606 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 2003-2004 ஆம் ஆண்டில் 5,000 குழாய்க் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 24]

**சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனங்கள்**

கிணற்றுப் பாசனத்தில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகள் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. கிணற்றுப் பாசனப் பரப்பு சீராக கூடுதலாகி வருகிறது. மொத்த பாசனப் பரப்பில் கிணற்றுப் பாசனம் 48 விழுக்காடு ஆகும். 57 விழுக்காடு நிலங்களில் இரண்டாம் முறையாக கிணறுகள் மூலமாக பாசனம் செய்யப்படுகிறது.

கிணற்றுப் பாசனப் பகுதிகளில் பாசன நீர் சிக்கனத்தை கருத்தில் கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறை சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, நுண் நீர்ப்பாசன முறைகளை வடிவமைத்தது. விவசாயிகளுக்கு தரமான பொருட்கள், சீரான செயல்திறன், பயிற்சி ஆகியவற்றை ஒருசேர வழங்கி நுண் நீர்ப்பாசன முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. களப் பணியாளர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் மூலம் உபகரணங்களுக்கு தர நிர்ணயம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

மொத்தப் பாசனப் பரப்பில் 48 விழுக்காடு கிணற்றுப் பாசனம் பெறுவதால், நீர் உபயோகத்தைத் திறம்பட நிர்வகிக்க வேண்டியுள்ளது. மாநிலத்தில் 18 இலட்சத்திற்கும் மேலாக கிணறுகள் உள்ளன. சராசரியாக ஒரு கிணறுமூலம் 1.28 எக்டர் நிலமே பாசனம் பெறுகிறது. கிணற்றுப் பாசனத்தின் மூலாதாரமான நிலத்தடி நீர்வளம் குறைந்து வருகிற சூழ்நிலையில், பம்புகள் மூலம் நீர் இறைக்கும் செலவு கூடிக்கொண்டே வருகிறது. 1986 ஆம் ஆண்டில் சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம் மூலம் பயனடைந்த நிலப்பரப்பு 294 எக்டர் மட்டுமே. 2002 ஆம் ஆண்டில் 72,816 எக்டராக இப்பரப்பு உயர்ந்துள்ளது. இத்திட்டத்தில் தென்னை, திராட்சை, வாழை, முந்திரி, எலுமிச்சை, கொய்யா, மா, மாதுளை, சப்போட்டா, காய்கறிகள், பூக்கள் மற்றும் கரும்பு ஆகிய பயிர்கள் அடங்கும். 2002-2003ஆம் ஆண்டில் தோட்டக்கலைப் பயிர்களுக்கான மைய அரசின் சொட்டு/ தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம் ரூ.1177.05 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 5,162 பயனாளிகள் பயன் பெறும் வகையில் 9673.5 எக்டரில் சொட்டு நீர்ப்பாசனமும் 2462 பயனாளிகள் பயன் பெறும் வகையில் 3342 எக்டரில் தெளிப்பு நீர்ப் பாசனமும் செயலாக்கப்பட்டுள்ளது. 106 பயனாளிகள் பயன்பெறும் வகையில்

[2003 ஏப்ரல் 24

ரூ.29.49 இலட்சம் செலவில் 152.85 எக்டரில் கரும்புக்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மானியமாக வழங்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் சொட்டு/தெளிப்பு நீர் பாசனத் திட்டத்திற்கு ரூ. 30.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சொட்டு/தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டச் செயல்பாட்டில் தனிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளது. வட்டங்கள் தோறும் இத்திட்டம் குறித்த விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தல், மாதிரி பண்ணைகளுக்கு களப்பணி பார்வைக்கு ஏற்பாடு செய்தல், சொட்டு நீர்ப்பாசன அமைப்பிற்கான பராமரிப்பிற்கு சிறப்புப்பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினால் செயல்படுத்தப்படும் குறிப்பிட்ட பயிர் வளர்ப்புத் திட்டங்களுக்கு நீர் மேலாண்மை ஆதாரம் வழங்கப்படும்.

**III. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்**

வேளாண் உற்பத்திக்கு பண்ணை சக்தி மிக முக்கியமான இடுபொருளாகும். வேளாண் இயந்திரங்களும், கருவிகளும் பண்ணை சக்தியினை வழங்கி சாகுபடிப் பணிகளை எளிதாக்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகள் நிறைவேற உதவுகின்றன. வேளாண்மையில் இயந்திரங்களைப் புகுத்திடும் முயற்சியில்:—

1. உழவர்களுக்கு டிராக்டர், பவர்டில்லர் மற்றும் கதிரடிக்கும் இயந்திரங்கள் வழங்குதல்;
2. வேளாண் மண்டலங்கள் முழுவதும் மேம்படுத்தப்பட இயந்திரங்கள் மற்றும் பண்ணைக் கருவிகளை செயல்முறை மூலம் விளக்குதல்;
3. உழவர்களுக்குத் தேவையான புல்டோசர், டிராக்டர் மற்றும் கதிரடிக்கும் கருவிகளை வாடகை மூலம் வழங்குதல் எனும் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண் துறையால் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2001-2002 வரை செயலாக்கப்பட்டு வந்த திட்டம் அரசாணை எண் 170, வேளாண்மை (வே.பொ.11) துறை, நாள் 27-6-2002-ன் படி வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 2002-2003-ல் மாற்றப்பட்டது.

2002-2003 ஆம் ஆண்டில் 50 டிராக்டர்கள் 415 பவர் டில்லர்கள் மற்றும் 60 கதிரடிக்கும் கருவிகளுக்கு மானியமாக ரூ. 145.56 இலட்சம்



2003 ஏப்ரல் 24]

ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதுவரை ஒப்பளிக்கப்பட்டு செலவிடப்படாமல் உள்ள ரூ.70.943 இலட்சம் மானியம் டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் கதிரடிக்கும் கருவிகள் வாங்க விழையும் விவசாயிகளுக்கு 2002-2003-ல் வழங்கப்படும். 31-3-2003 வரை 42 டிராக்டர்களும் 561 பவர் டில்லர்களும் 13 கதிரடிக்கும் கருவிகளும் வழங்க ரூ.182.85 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது.

விவசாயத்திற்குக் கொண்டுவரப்படாத நிலங்களை விளை நிலங்களாக மாற்ற, விவசாயிகளுக்கு உழுவைப் பணிகளை மேற்கொள்ள உழுவை சாதனங்கள், கருவிகள் மற்றும் கதிரடிக்கும் கருவிகளைத் தந்து வேளாண்மைப் பொறியியல் துறை உதவுகிறது. இம்மாதிரியான நிலங்களை விளை நிலங்களாக மாற்ற 122 மண் தள்ளும் இயந்திரங்கள், மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன. இது தவிர 122 உழுவை இயந்திரங்களும் நான்கு கதிரடிக்கும் கருவிகளும் உழுவை மற்றும் பிற பணிகளுக்குத் தேவையான கருவிகளும் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன.

**புதிய திட்டங்கள்**

**1. தென் பெண்ணை நீர்ப்பிடிப் பகுதித் திட்டம்**

மத்திய அரசின் உதவியுடன் செயல்படும் நதிப்பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ், தென் பெண்ணையாற்றுப் பகுதியினையும் கொண்டு வர வேண்டும் என மத்திய அரசிற்குக் கருத்துரு அனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் செயலாக்கப்படும்.

**2. களர் நிலச் சீர்திருத்தத் திட்டம்**

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 21 மாவட்டங்களில் களர் நிலச் சீர்திருத்தத் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது:

| | | |
|---|---|---|
| காஞ்சிபுரம் | திருவள்ளூர் | திருவண்ணாமலை |
| வேலூர் | விழுப்புரம் | கடலூர் |
| கோயம்புத்தூர் | ஈரோடு | சேலம் |
| நாமக்கல் | தர்மபுரி | திருச்சி |
| புதுக்கோட்டை | நாகப்பட்டினம் | கரூர் |
| பெரம்பலூர் | மதுரை | இராமநாதபுரம் |
| சிவகங்கை | திருநெல்வேலி | தூத்துக்குடி |

[2003 ஏப்ரல் 24

இத்திட்டத்தின்கீழ் மண் மற்றும் நில அளவை, சீர்திருத்தத் திட்டம் மற்றும் செயல் திட்டம் தயாரித்தல், பண்ணை அளவிலான மேம்பாட்டுப் பணிகள் (நிலம் சமன்படுத்துதல், பாசன வாய்க்கால் மற்றும் வடிகால் வசதிகள் அமைத்தல்), கிணறுகள் மற்றும் பம்புசெட்டுகள் அமைத்தல், மண்ணின் தன்மையினை மேம்படுத்த ஊக்கிகள் மற்றும் கரிம உரங்கள் பயன்படுத்துதல்.

இத்திட்டத்தின்கீழ், வரும் ஐந்தாண்டுகளில் ரூ.9600 இலட்சம் செலவில் 50,000 எக்டர் நிலங்கள் பயனடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், மத்திய அரசு 2003-2005 ஆண்டுகளுக்கு 5000 எக்டர் பரப்பில் ரூ.690 இலட்சத்திற்கு மிகாமல் செயலாக்க அனுமதி வழங்கியுள்ளது.

**3. பாசனப் பகுதித் திட்டங்கள்**

ரூ.4745 இலட்சம் செலவில் 47,072 எக்டர் பரப்பில் கீழ்க்கண்ட புதிய திட்டங்களைத் தொடங்க மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின் இவை செயலாக்கப்படும்.

1. கடானா மற்றும் இராமாநதித் திட்டம்.
2. நம்பியாறு நதிப் படுகைத் திட்டம்.
3. பச்சையாறு நதிப் படுகைத் திட்டம்.
4. மணிமுத்தாறு பாசனத் திட்டம்.
5. நெய்யாறு பாசனத் திட்டம்.
6. ஆனை மடுவுத் திட்டம்.
7. கரியகோவில் திட்டம்.
8. வட்டமலைக் கரை ஓடைத் திட்டம்.
9. சின்னாறு அணை பாசனத் திட்டம்.
10. மருதா நதித் திட்டம்.
11. நொய்யல் நதிப் பாசனத் திட்டம்.



2003 ஏப்ரல் 24]

**4. நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் உவர் நிலச் சீர்திருத்தம் மற்றும் மணல் மேடுகளால் பாதிக்கப்பட்ட நில மேம்பாட்டுத் திட்டம்**

நாகப்பட்டினம் மற்றும் வேதாரண்யம் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதி இயற்கை வளம் மிகுந்த பகுதியாக இருப்பினும், கடல் நீராலும், தட்ப வெப்ப நிலையாலும் பாதிக்கப்பட்ட நிலப் பரப்பாக உள்ளது. இப்பகுதியில் உள்ள, மணல் மேடிட்ட நிலங்கள் மற்றும் மணற்பாங்கான நிலங்களில், கடற்கரையினை ஒட்டி நீரூற்றுகள் உள்ளன. உவர் நிலங்களும், வடிகால் வசதியில்லாமல் உள்ள நிலங்களும் உள்ளன. இப்பிரச்சினைகளை அறிவியல் பூர்வமான அணுகுமுறையில் தீர்வு கண்டு இயற்கை வளத்தினை உபயோகித்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. தற்பொழுது பயிரிடப்படும் மணல் மேடிட்ட பகுதிகளை மேம்படுத்துதல்.
2. சாகுபடியில் உள்ள உவர் நிலங்கள் மேம்பாடு.
3. வடிகால் வசதியில்லாமையால் பாதிக்கப்பட்ட சதுப்பு நிலங்கள் மேம்பாடு.
4. காற்றரிப்பினால் பாதிக்கப்படும் நிலங்கள் மேம்பாடு.
5. கடல் நீர் நிலத்தடி நீரில் கலந்திடும் அபாயத்தைத் தடுக்கும் நடவடிக்கைகள் என செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய இத்திட்டத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தும் இத்திட்டத்திற்கென மத்திய அரசு ரூ.1.20 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**5. உழவர்களின் பங்கேற்போடு கூடிய நீர்வடிப்பகுதி மேம்பாடு**

பத்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், நீர்வடிப் பகுதி மேம்பாடு மற்றும் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு புதிய வடிவம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உழவர்களின் ஒருமித்த பங்கேற்போடு மானாவாரி நீர்வடிப் பகுதிகளில் மண் அரிமானத்தைத் தடுத்திடவும், மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாத்திடவும் மற்றும் மழை நீரைச் சேகரிக்க ஏதுவாகவும் வடிவமைக்கப்படும்.

**பங்கேற்பு அணுகுமுறை**

சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள பயனாளிகளைத் திட்டமிடல், செயலாக்கல், பராமரித்தல் மற்றும் எதிர்கால பயனைப் பகிர்தல் போன்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் ஈடுபடச் செய்திட, பங்கேற்பு அணுகுமுறையில் செயல்படுத்தப்படும். இந்த பங்கேற்பு அணுகுமுறையில், ஆண்டு வாரியான செயல்திட்டங்கள் உருவாக்கப்படும். மகளிர் மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கு இத்திட்டச் செயலாக்கத்தில் ஈடுபட சிறப்புக் கவனம் செலுத்தப்படும். தொழில் நுட்ப ஆலோசனை வழங்கி திட்டம் செயலாக்கத்திற்கு வகை செய்தல் வேளாண் பொறியியல் துறையின் பணியாகும். கிராம அளவில் கட்டமைப்புகளைத் தாமே உருவாக்கவும், பராமரிக்கவும், சமுதாயத்தின் திறனை வெளிக்கொணர வேளாண் பொறியியல் துறை செயல்படும். குறைந்த செலவில், உழவர்களால் எளிமையாகச் செயல்படுத்தப்படும் விதத்தில் பணிகள் வடிவமைக்கப்படும். தனியார் மற்றும் பொது நிலங்களில், நிலம் பயன்பாடு திறம்பட மேற்கொள்ளப்படும் வகையில் பயிற்சி அளிக்கப்படும். வேளாண் வளர்ச்சி அல்லது விவசாயின் குடும்ப வளர்ச்சியினை எட்டிடுவதை நோக்கமாகக் கொண்டு, குறைந்த செலவில் இப்புதிய அணுகுமுறையில் முயற்சி மேற்கொள்ளப்படும்.

**பிற மேம்பாட்டு முயற்சிகளின் ஒருங்கிணைப்பு**

அரசு வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை உருவாக்கி ஆணை பிறப்பித்துள்ளது. மலர்களுக்கு தருமபுரி மாவட்டமும், நீலகிரி மாவட்டமும், மாம்பழத்திற்கு தேனி மாவட்டமும், வேளாண் ஏற்றுமதி மண்டலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதே அடிப்படையில் திராட்சை, முந்திரி, வெங்காயம், வாழை, மாம்பழம், மருத்துவ குணம் கொண்ட பயிர்கள் மற்றும் மஞ்சள் ஆகியவற்றுக்கும் ஏற்றுமதி மண்டலங்கள் பரிசீலனையில் உள்ளன. இதல்லாமல் தோட்டக்கலைப் பயிர் மேம்பாட்டுக்கென இயக்கங்களும் பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றுக்கு தொழில் நுட்ப ரீதியான இயக்க அணுகுமுறைகளும் செயல்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறையினைப் பொறுத்தமட்டில் மேற்கண்ட புதிய அணுகுமுறை செயல்படும் இடங்களில் வேளாண் பொறியியல் தொழில் நுட்பங்களும், உதவிகளும் கிடைக்கப் பெற முயற்சி மேற்கொள்ளப்படும். இதனால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை வளர்ச்சி விரிவடையும்.



## அத்தியாயம் - 5

**விரிவான தரிசு நிலத் திட்டம்**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 130 இலட்சம் எக்டர் பரப்பில் 43% மட்டுமே பயிரிடுவதற்கு உகந்த நிலங்களாக உள்ளன. எனவே, விவசாயம் மற்றும் இதர காரணங்களுக்கான நிலத்தேவை அதிகரித்துக் கொண்டே உள்ளது. இது மட்டுமின்றி நீர் மற்றும் காற்றினால் ஏற்படும் அரிப்பு, இரசாயன மாற்றங்களினால் நேரிடும் மண் உவர்ப்பு, அதிக நீர் தேங்குதல், முறையின்றி மரங்களை வெட்டுதல், மேய்ச்சல் நிலங்களை அளவுக்கு அதிகமான முறைகளில் பயன்படுத்துதல் போன்ற காரணங்களினால் நிலத்தின் தரம் குறைந்து வருகிறது. மேற்கூறிய காரணங்களினால் நீர் ஊடுருவும் மற்றும் நீர் தக்க வைக்கும் தன்மை குறைந்து நிலத்தின் உற்பத்தித் திறன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிக மழைநீர் வெளியேறி நீரோடைகள், பள்ளத்தாக்குகள் ஏற்பட்டு, நீரோட்டத்தன்மை சுழற்சி தடைபட்டு அதிக நிலப்பரப்பு தரிசு நிலங்களாக மாற ஏதுவாகிறது.

வருவாய்த் துறையின் ஒன்பது வகையான நிலப்பாகுபாட்டின்படி தமிழ்நாட்டில் தற்போது 24 இலட்சம் எக்டர் பல்வேறு வகையான தரிசு நிலங்கள் உள்ளன. பெருகிவரும் மக்கள் தொகையின் தேவையை ஈடுசெய்வதற்கும் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கும் இத்தரிசு நிலங்களை பயன்பாட்டிற்குக் கொண்டு வருவது அவசியமாகிறது. எனவே இத்தருணத்தில் தரிசு நிலத்தை மேம்படுத்தவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் செயல்படுத்தப்படும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கங்கள்:—

(1) பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்கச் செய்வது மற்றும் மானாவாரி விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதன்மூலம் விவசாயத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை வருங்காலத்தில் பெருக்குவது.

(2) பயிரிடப்படாத தரிசு நிலங்களையும் மானாவாரி நிலங்களையும் மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதால் உள்ளூர் கிராம மக்கள் தங்களது தீவனம், விறகு மற்றும் மரத் தேவைகளை மூன்று முதல் ஏழு ஆண்டுகளில் பெறுவது.

[2003 ஏப்ரல் 24

(3) வேலை வாய்ப்புகளைப் பெருக்கி நிலமற்ற கூலித் தொழிலாளர்களின் தினக்கூலியை உயர்த்துவது/திட்டச் செயலாக்கத்தின்பொழுது வருமானத்தைப் பெருக்குவது.

தரிசு நிலங்களைச் சீரமைப்பது என்பது ஒரு சிக்கலான காரியமாகும். ஒவ்வொரு வகையான தரிசு நிலங்களும் அவை எவ்வாறு உருவாயின என்பதை ஆராய்ந்து அந்த இடத்தில் பெய்யும் மழையின் அளவு மண்ணின் தன்மை மற்றும் மேற்பரப்பு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அவற்றைச் சீர்திருத்த சிறந்த அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் தரிசு நில சீர்திருத்தத்திற்கு பல்வேறுபட்ட வழிமுறைகளை தனித் தனியாகச் செயல்படுத்துவதைவிட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப யுக்திகளை மக்களின் பங்கேற்போடு செயல்படுத்துவதே சிறந்ததாகும்.

தரிசு நில மேம்பாட்டிற்காக மாநில மற்றும் மத்திய அரசுகள் மக்களின் பங்கேற்புடன் விரிவான தரிசு நிலத் திட்டம் (வி.த.நி.தி.) வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வ.இ.ப.தி.), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (ஒ.த.நி.மே.தி), தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (தே.மா.நீ.மே.தி) போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

**நீர்வடிப்பகுதி மேம்பாடு**

தமிழ்நாட்டில் வேளாண் மொத்த உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பாதிப்பது பாசன நீர் பற்றாக்குறையாகும். மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுமையான அளவில் பயன்படுத்தப்பட்டுவிட்டன. நிகர நீர்பாசனப் பரப்பில் 67 சதவிகிதம் சிறு பாசனத் திட்டங்களின் கீழ் வருகிறது. தற்போது நீர்ப்பாசனப் பரப்பைப் பெருக்குவதற்கும் ஏற்கெனவே உள்ள பாசனப் பகுதிகளுக்கு சரியான அளவில் நீரை அளிக்கவும் நமது மாநிலம் நிலத்தடி நீரையே நம்பி உள்ளது. ஆயினும் தேவைக்கதிகமாக நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதால் சுற்றுச் சூழல் கேடு நேரிட வாய்ப்பு உள்ளது. எனவே நீண்டகாலத் திட்ட அடிப்படையில் நீர்வடிப்பகுதி அணுகுமுறை மூலம் நீர் ஆதாரங்களைப் பெருக்க வேண்டியுள்ளது.

விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், வறுமையைக் குறைக்கவும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நீர்வடிப்பகுதி



2003 ஏப்ரல் 24]

அணுகுமுறை மூலம் மேற்கூறிய மூன்று நோக்கங்களை அடையும்பொழுது சில உபரி ஆதாயங்கள் கிடைத்தாலும் நடைமுறையில் இத்திட்டங்களின் தொழில் நுட்ப மற்றும் சமூக பொருளாதார சாத்தியக் கூறுகளின் முரண்பாடுகளினால் ஏற்படும் பிரச்சினைகள் பெரும் சவாலாக உள்ளன.

அதிகரித்து வரும் உணவு தானிய உற்பத்தித் தேவையை ஈடுகட்ட இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று பயிரிடும் பரப்பை அதிகரித்தல், மற்றொன்று உற்பத்தித் திறனை அதிகரித்தல். பயிரிடும் பரப்பை அதிகரிக்க மிகவும் குறைந்த வாய்ப்பே உள்ளது. உண்மையில் பார்க்கப்போனால் நிலப் பரப்பிற்கு பல்வேறு போட்டித் தேவைகள் இருப்பதால், பயிரிடப்படும் நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. இந்நிலையில், பாசனப் பயிர்களின் அதிகபட்ச உற்பத்தித் திறன் ஏற்கனவே எட்டப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ளது மானாவாரி நிலங்களின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு மட்டுமே.

ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை அணுகுமுறையில் தரிசு மற்றும் மானாவாரி நிலங்கள் மேற்படுத்தப்படுகின்றன. அண்மைக் காலத்தில் வேளாண்மை வளர்ச்சியில் நீர் வடிப்பகுதி மேம்பாடு ஒரு முக்கியமான அங்கமாகக் கருதப்படுகிறது. மழை நீர் ஒன்றுசேர்ந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் வடியச் செய்யும் நிலப்பரப்பு நீர் வடிப்பகுதியாகும். இந்நீர்வடிப்பகுதிகள் பரப்பளவில் சிறிய மற்றும் பெரிய நீர்வடிப்பகுதிகளாகி இறுதியில் ஆற்றுப் படுகைகளாக மாறுகின்றன. நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் ஓராண்டு காலத்தில் செய்து முடிக்கக்கூடிய பணிகள் அல்ல. அதற்கு, குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது தேவைப்படும். முதலாம் ஆண்டில் சமுதாய அமைப்புகள் ஏற்படுத்துதல், விழிப்புணர்வு மற்றும் மக்கள் பங்கேற்பு முகாம்கள் நடத்துதல், திட்ட வரைவு தயாரித்தல், பயிற்சி அளித்தல் போன்ற பணிகளும், அடுத்த ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்படும். இவற்றில் மேற்கொள்ளப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகளாவன:—

1. மண்வளப் பாதுகாப்பு
2. நீர்வளப் பாதுகாப்பு
3. நீர் சேமிப்புக் கட்டுமானங்கள்

[2003 ஏப்ரல் 24

4. நீர் வடிகால் சீரமைப்பு

5. தோட்டக்கலை பயிர் வளர்ப்பு

6. வேளாண் காடு வளர்ப்பு

7. கால்நடைப் பராமரிப்பு

8. நிலம்சாரா வருவாய் பெருக்கும் பணிகள்

நீர்வடிப்பகுதி மேம்பாடு என்பது, நீர், நிலவள ஆதாரங்களைப் பெருக்கி தரிசு மற்றும் மானாவாரி நிலங்களில் உற்பத்தியை அதிகரித்து அதனை நிலை நிறுத்தும் ஒரு மக்கள் இயக்கமாகும்.

**விரிவான தரிசு நிலத் திட்டம்**

*2001-2002* ஆம் ஆண்டு வரவு-செலவு அறிக்கையின் போது, விரிவான தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள *20* இலட்சம் எக்டர் தரிசு நிலங்களைச் சீர்படுத்தி சாகுபடிக்குக் கொண்டுவரும் வகையில் சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் ஐந்து ஆண்டுகளில் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணுகுமுறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் மக்கள் பங்கேற்பாடு தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பு மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் ஐந்தாம் ஆண்டு முடிவில் சுமார் *10* இலட்சம் கிராம மக்கள் பயனடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்சொன்ன நோக்கங்களை அடையும் பொருட்டு மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**(அ) விவசாயிகள் பங்கேற்கும் நீர் வடிப்பகுதி மேம்பாடு.**—*18.5* இலட்சம் எக்டர் பட்டா தரிசு நிலங்களை, விவசாயிகள் பங்கேற்புடன் நீர்வடிப்பகுதி மேம்பாடு அணுகுமுறையில் மேம்படுத்தப்படவுள்ளது. இந்தத் தரிசு நிலங்களில் மானாவாரிக் கேற்ற வேளாண் காடுகள் மற்றும் தோட்டக்கலை சம்பந்தப்பட்ட மரக்கன்றுகளும் செடிகளும் நடப்படும்.

**(ஆ) கூட்டாண்மை நிறுவனங்களின் பங்கேற்பு.**—கூட்டாண்மை நிறுவனங்கள் (Corporate Sector) உதவியோடு சொட்டு நீர்/ தெளிப்பு



2003 ஏப்ரல் 24]

நீர் பாசன வசதியுடன் கூடிய பழத்தோட்டங்களை தரிசு நிலங்களில் மேம்படுத்தி அவை வேளாண் சார்ந்த பதப்படுத்தும் தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட உள்ளது.

**(இ) உவர் மண் நிலங்களைச் சீர்திருத்துதல்.**—களர் மற்றும் உவர்மண் கொண்ட நிலங்களைப் பகுதி பகுதியாகச் சீர் செய்து விளைச்சலுக்கேற்ற நிலங்களாக மேம்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.*1630* கோடி என மதிப்பிட்டுள்ளதால், வெளி நிதி நிறுவனங்களின் உதவி தேவைப்படுகிறது. அயல்நாட்டு நிதி உதவியைப் பெறும் பொருட்டு உலக வங்கியிடமிருந்து நிதி உதவி பெற ஒரு கொள்கை அறிக்கை தயார் செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கண்ட மூன்று பகுதிகளில் முதல் இரண்டு பகுதிகள் மட்டும் தற்போது மாநிலத்தில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**அ. விவசாயிகள் பங்கேற்கும் நீர்வடிப் பகுதி மேம்பாடு**

விரிவான தரிசு நில மேம்பாடு திட்டத்தை முதற்கட்டமாக (first phase) முன்னோடியாக (Pilot basis) தேர்ந்தெடுக்கப்பட்ட *10* மாவட்டங்களில், *29* வட்டாரங்களிலுள்ள, *360* கிராமங்களில், *55,000* எக்டர் பரப்பில் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணியினை (அட்டவணை-I) செயலாக்கும் வகையில் அரசு ஆணை எண் *338*, வேளாண்மைத் (WLD Cell) துறை, நாள் *27-11-2001*-ல், ஆணை வெளியிடப்பட்டு, இதற்காக *2002-2003* ஆம் ஆண்டிற்கு ரூ.*25.00* கோடி நிதி ஒதுக்கப்பட்டது. நடவு செய்யப்பட்ட செடிகளைப் பராமரிக்க, இத்திட்டத்திற்காக *2002-2003* ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.*5.00* கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் பங்கேற்பு நீர் வடிப்பகுதி அடிப்படையில் (1) சேலம், (2) நாமக்கல், (3) வேலூர், (4) புதுக்கோட்டை, (5) திருச்சிராப்பள்ளி, (6) இராமநாதபுரம், (7) திருநெல்வேலி, (8) திண்டுக்கல், (9) தேனி மற்றும் (10) திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், இத்திட்டத்தின் பொறுப்பாளராக அமர்த்தப்பட்டுள்ளார். இவர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையின்கீழ் பணியாற்றுவார். வேளாண் பொறியியல், வேளாண்மை, தோட்டக்கலை, வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத்

துறைகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வது இவரது பொறுப்பாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுத் துறைகளைச் சேர்ந்த திட்டச் செயலாக்க முகமை கண்டறியப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒவ்வொரு நீர்வடிப் பகுதியிலும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளது. இந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் விவசாய பயனீட்டாளர்களை ஒருங்கிணைத்து மக்கள் பங்கேற்புடன் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், பயிற்சி அளித்தல் போன்ற பணிகளைச் செய்து வருவார்கள்.

நடப்பு 2002-2003 ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட நீர் வடிப் பகுதிகளில், மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகளுடன், மாங்கள் நடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடவு செய்யத் தேவைப்படும் மரம் மற்றும் பழக் கன்றுகளை உற்பத்தி செய்யவும் கன்றுகளுக்குத் தேவையான இடுபொருள் உற்பத்தி செய்யவும் வனத் துறைக்கு ரூ.2.62 கோடியும், தோட்டக்கலைத் துறைக்கு ரூ. 1.20 கோடியும் அரசு வழங்கியுள்ளன. இத்திட்டத்திற்காக 54 இலட்சம் வேளாண் காடுகள் சம்பந்தப்பட்ட கன்றுகள் மற்றும் 1500 மெட்ரிக் டன் மண்புழு உரம், 400 மெட்ரிக் டன் வாம் உரம் உற்பத்தி செய்யும் பொறுப்பை வனத் துறைக்கும், 12.63 இலட்சம் பழச் செடிகள் உற்பத்தி செய்யும் பொறுப்பை தோட்டக்கலைத் துறைக்கும் நடப்பாண்டில் கொடுக்கப்பட்டு, அதன்படி கன்றுகள், இடுபொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

**செயல் சாதனை**

கடுமையான வறட்சி நிலவிய போதிலும் 31-03-2003 வரை, அதிகபட்ச அளவிலான (23,16,144) பழ மற்றும் வேளாண் மரக் கன்றுகள் பத்து மாவட்டங்களில் 21,304 ஹெக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 33,696 ஹெக்டேர் பரப்பு வரும் 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் வகையில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

விவசாய மேம்பாட்டுத் திட்டங்களின் வெற்றியானது சம்பந்தப்பட்ட விவசாயிகளின் முழு ஒத்துழைப்பையே சார்ந்துள்ளது. இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.8,500/- மானியமாக வழங்கப்படுகிறது. இதன் இனவாரியான விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:





**விவசாயிகள் பங்கேற்கும் நீர் வடிப் பகுதி மேம்பாடு இனவாரியான மானிய விவரங்கள்**

| வ. எண் | இனம் | ஒரு எக்டருக்கு ஒரு விவசாயிகளின் பங்கு (ரூபாயில்) | எக்டருக்கு மானியம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | ஆழ்குழாய் கிணறு கை பம்புடன் அமைக்க | - | 2,000 |
| 2 | இரும்பு கலப்பையினால் உழவு செய்ய | 200 | 1,000 |
| 3 | நடவு செய்வதற்கு மரக்கன்றுகள் | - | 1,200 |
| 4 | புதர்களை அழிப்பது மற்றும் நிலம் பண்படுத்துதல் | 500 | - |
| 5 | குழி எடுத்தல் மற்றும் நடவு செலவு | 600 | - |
| 6 | உரமிடல், ஆரம்ப நீர்ப் பாசனம் மற்றும் இதர பணிகள் | 500 | 300 |
| 7 | உயிரின உரம் | - | 600 |
| 8 | பராமரிப்பு ஊக்கத் தொகை (நீர் ஊற்றுதல்) முதல் ஆண்டு (100ரூ) | - | 1,800 |
| | இரண்டாம் ஆண்டு (50ரூ) | 900 | 900 |
| 9 | இரண்டாம் ஆண்டு உழவு செய்ய | 50 | 350 |
| 10 | உயிரிழந்த கன்றுகளுக்கு பதிலாக புதிய கன்றுகள் நட | 100 | 150 |
| 11 | உயிரின வேலி மற்றும் காவல் பராமரிப்பு | 900 | - |
| | மொத்தம் | 3,650 | 8,500 |
| | ஒட்டு மொத்தம் | 12,150/- | |

இத்திட்டத்தில் விவசாயிகளின் பட்டா நிலத்தில் உள்ள தரிசு பகுதிகளில் இதுவரை நடவு செய்யப்பட்டுள்ள கன்றுகளின் சாதனை முன்னேற்றம் பற்றிய விவரம் அட்டவணை-2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு மற்றும் செலவினம்**

இத்திட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூ.25.00 கோடியில் 31-03-2003 முடிய ரூ 21.37 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டும் ரூ.25.00 கோடி நிதி மதிப்பீட்டில் தொடர திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆ. அரசு தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடும் திட்டம்

தரிசு நில மேம்பாட்டுத் திட்டமானது மிகப் பெரிய அளவில் குறுகிய காலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கேற்பில் இத்திட்டம் குறிப்பிட்ட காலத்தில் விரைந்து முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அரசு தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேளாண் சம்மந்தப்பட்ட தொழிற்சாலை அமைக்க குத்தகைக்கு விடுவது சம்மந்தமான அரசு ஆணை மற்றும் தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் [அரசு ஆணை (நிலை) எண்.189, வேளாண்மைத் துறை, நாள் 02-07-2002] வழங்கப்பட்டுள்ளன.

**செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அளவிலான குழுவிற்கு 8 எக்டருக்கும் குறைவான பரப்பு கொண்ட அரசு தரிசு நிலங்களை குத்தகைக்கு விடுவது சம்மந்தமான விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முடிவெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 8 எக்டர் மற்றும் அதற்கும் மேலான பரப்பு கொண்ட அரசு தரிசு நிலங்களுக்கான நிறுவனங்களின் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட அளவிலான குழு பரிசீலனை செய்து, குத்தகைக்கு விடுவது பற்றி இறுதி முடிவிற்காக உயர்மட்டக் குழுவிற்குப் பரிந்துரை செய்யும்.

இத்திட்டம் பற்றிய விவரங்கள் அடங்கிய விளம்பரங்கள் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு, அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான விண்ணப்பங்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அவர்களால் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை விளக்கும் வகையில் மாவட்ட அளவிலான பத்திரிக்கை நிருபர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சியாளர்களால் 5-7-2002 அன்று நடத்தப்பட்டது. அரசு தரிசு நிலங்களை கூட்டாண்மை நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்புடன் மேம்படுத்துவது சம்மந்தமான ஒரு நாள் கருத்தரங்கு சென்ற 25-7-2002-ல் சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டு, மாண்புமிகு வேளாண் அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அரசு தரிசு நிலங்களை குத்தகைக்குப் பெற நிறுவனங்களிடமிருந்து





விண்ணப்பங்கள் பெறுவதற்கு காலக்கெடு 31-8-2002 என்று இருந்தது பின்னர் நீட்டிக்கப்பட்டது.

மாநில அளவிலான 'தரிசு நில மற்றும் நீர் வடிப் பகுதி மேம்பாட்டு ஆணைக் குழு' கூட்டத்திற்கு 13-12-2002 அன்று தலைமையேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பணிக்கப்பட்டதற்கேற்ப சிறந்த வகையில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு ஒன்றுசேர்ந்து, தரிசு நிலங்களை மேம்படுத்தும் வகையில் பொருளாதார ரீதியில் சிறந்து விளங்கும் திட்டங்களை 8 எக்டருக்கும் குறைவானத் தரிசு நிலப்பகுதியில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் கொடுத்த விவரங்களின்படி 56,265 எக்டர் அரசு தரிசு நிலங்கள் உள்ளன. அவற்றில் 8 எக்டருக்கும் குறைவான பரப்புப் பிரிவில் 74 சதவிகிதமும் (41,598 எக்டர்), 8 எக்டருக்கும் மேலான பரப்புப் பிரிவில் 13 சதவிகிதமும் (7137 எக்டர்) மற்றும் 40 எக்டருக்கும் மேலான பரப்புப் பிரிவில் 13 சதவிகிதமும் (7530 எக்டர்) உள்ளன.

பிரிவு வாரியாக அரசு தரிசு நிலங்களின் விவரங்கள் நில அளவு வாரியாகவும் மற்றும் கிராம வாரியாகவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் அலுவலகத் தகவல் பலகைகளில் ஒட்டப்பட்டுள்ளன. கூட்டாண்மை நிறுவனங்களும், சிறு நிறுவனங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இந்த நில விவரங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் உதவியுடன் அரசு தரிசு நிலங்களை பார்வையிட்டு, திட்ட விவரங்களுடன் (Project proposals) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு விண்ணப்பிக்கின்றன. மாவட்ட அளவிலான குழு, இந்த விண்ணப்பங்கள் மற்றும் திட்ட விவரங்களைப் பரிசீலனைச் செய்து, உயர்மட்டக் குழுவிற்கு இறுதி முடிவிற்காக பரிந்துரைச் செய்கிறது. தலைமைச் செயலர் அவர்களை தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழு இந்த விண்ணப்பங்களை மேலும் பரிசீலனைச் செய்து அரசு தரிசு நிலங்களை குத்தகைக்கு ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மாவட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசுக்கு சிபாரிசு செய்கிறது. தலைமைச் செயலர் அவர்களைத் தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழு இதுவரை நான்கு முறைக் கூடி அரசு தரிசு நிலங்களை குத்தகைக்கு விடுவது பற்றி அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

[2003 ஏப்ரல் 24

நிலச் சீர்திருத்தச் சட்டம் பிரிவு 37-Aன்படி உச்ச வரம்பிலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்ய ஏதுவாக, தலைமைச் செயலர் அவர்களைத் தலைவராக கொண்ட விரைவில் செயல்படும் குழு (Fast Tract Committee) ஒன்று அரசு ஆணை 2டி எண் 68, வேளாண்மை (தநிமே) துறை, நாள் 10-04-2002-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் செயல்படும் குழுவின் (Fast Tract Committee) பரிந்துரையைப் பரிசீலித்து, நிலச் சீர்திருத்தச் சட்டம், பிரிவு 37-A-ன்படி உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிப்பது அல்லது மறுப்பது பற்றிய இறுதி உத்தரவு அரசால் வருவாய்த் துறையின் மூலமாக வெளியிடப்படும்.

## அட்டவணை-1

### விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மாவட்ட மற்றும் வட்டாரங்களின் விவரங்கள்



2003 ஏப்ரல் 24]

| வ. எண் (1) | மாவட்டம் (2) | வட்டாரத்தின் பெயர் (3) | எண்கள் (4) | கிராமங்கள் (5) | எடுத்துக் கொள்ள இருக்கும் பரப்பு (எக்டர்) (6) |
|---|---|---|---|---|---|
| 1. | சேலம் | தாரமங்கலம், ஓமலூர் மற்றும் கொளத்தூர் | 3 | 110 | 7000 |
| 2. | நாமக்கல் | நாமக்கல், மோகனூர், எருமைப்பட்டி மற்றும் பரமத்தி | 4 | 25 | 5000 |
| 3. | வேலூர் | காவேரிப்பாக்கம், நெமிலி மற்றும் பேரணாம்பட்டு | 3 | 38 | 6000 |
| 4. | புதுக் கோட்டை | பொன்னமராவதி மற்றும் அன்னவாசல் | 2 | 41 | 4500 |
| 5. | திருச்சி | வையம்பட்டி, மணப்பாறை மருங்காபுரி மற்றும் தொட்டியம் | 4 | 29 | 6500 |
| 6. | இராம நாதபுரம் | கமுதி | 1 | 24 | 2500 |
| 7. | திருநெல் வேலி | பாளையங்கோட்டை, , மானூர், மேலநீலிதநல்லூர் மற்றும் ஆலங்குளம் | 4 | 40 | 8000 |
| 8. | திண்டுக் கல் | நிலக்கோட்டை மற்றும் தொப்பம்பட்டி | 2 | 9 | 4500 |
| 9. | தேனி | ஆண்டிப்பட்டி, பெரியகுளம் மற்றும் கே. மயிலாடும்பாறை | 3 | 14 | 3500 |
| 10. | திருவண் ணாமலை | தண்டராம்பட்டு, ஆரணி மற்றும் ஆரணி (மேற்கு) | 3 | 30 | 7500 |
| | | மொத்தம் | 29 | 360 | 55000 |

## அட்டவணை-2

### உழவுப்பணி, குழி தோண்டுதல் மற்றும் செடிகள் நடும் பணிக் குறித்த முன்னேற்ற அறிக்கை (31-03-2003-ன்படி)

| | | | | நடப்பட்ட செடிகளின் எண்ணிக்கை | | | மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்ட பரப்பு (எக்டரில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டத்தின் பெயர் (1) | இலக்கு (எக்டரில்) (2) | இரும்புக் கலப்பையினால் உழவு செய்த பரப்பு (எக்டரில்) (3) | தோண்டப்பட்ட குழிகளின் எண்ணிக்கை (4) | வேளாண் காடுகளுக்கான மரக்கன்றுகள் (5) | தோட்டக்கலைக்கான கன்றுகள் (6) | மொத்தம் (7) | வேளாண் காடுகளுக்கான மரக்கன்றுகள் (8) | தோட்டக்கலைக்கான கன்றுகள் (9) | மொத்தம் (10) | சாதனை விழுக்காடு (%) செடிகள் நடுதல் (11) |
| வேலூர் | 6000 | 2480 | 144200 | 51400 | 88800 | 140200 | 514 | 888 | 1402 | 23.4 |
| தி. மலை | 7500 | 2138 | 404100 | 337200 | 66300 | 403500 | 3372 | 663 | 4035 | 53.8 |

[2003 ஏப்ரல் 24

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேலம் | 7000 | 2966 | 303944 | 165863 | 133531 | 299394 | 1606 | 1332 | 2938 | 42.0 |
| நாமக்கல் | 5000 | 4438 | 316833 | 174900 | 66000 | 240900 | 1749 | 660 | 2409 | 48.2 |
| திண்டுக்கல் | 4.500 | 3825 | 1876.50 | 21096 | 1218.54 | 1429.50 | 211 | 1218 | 1429 | 31.8 |
| தேனி | 3.500 | 1465 | 10.52.50 | 39.500 | 3.5000 | 74.500 | 39.5 | 3.50 | 74.5 | 21.3 |
| திருச்சி | 6.500 | 33.57 | 3.56860 | 27.5470 | 36230 | 311700 | 2096 | 362 | 24.58 | 37.8 |
| புதுக் கோட்டை | 4.500 | 1784 | 279026 | 190390 | 74636 | 265026 | 789 | 720 | 1.509 | 33.5 |
| இராமநாத புரம் | 2.500 | 1.528 | 182.54.5 | 97.53.5 | 40339 | 137874 | 975 | 403 | 1378 | 55.1 |
| திருநெல் வேலி | 8000 | 242.5 | 331920 | 164100 | 136000 | 300100 | 1641 | 1360 | 3001 | 37.5 |
| மொத்தம் | 55000 | 26406 | 2612328 | 15174.54 | 798690 | 2316144 | 13348 | 79.56 | 21304 | 39.0 |

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (வஇபதி) ஒரு ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டமாகும். இத்திட்டம் 1972-73 முதல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தின் முக்கிய நோக்கம் நீர்வடிப்பகுதிகளிலுள்ள இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவைகளைச் சீரிய முறையில் பயன்படுத்தி வறட்சியின் சீற்றத்தை குறைப்பதும், நில வளம் மேலும் சீர்கெடாமல் தவிர்ப்பதுமாகும். மேலும், இத்திட்டம் வேளாண்மைச் சாராப் பணிகளின் மூலம் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவுகிறது. இத்திட்டம் நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் மக்களின் பங்கேற்போடு மத்திய அரசின் திருத்திய வழிகாட்டின்படி 1995-96 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நீர்வடிப்பகுதியும் தோராயமாக 500 ஹெக்டேர் நிலப்பரப்பைக் கொண்டது.

தற்பொழுது இத்திட்டம் தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் 80 ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டச் செலவை 31-3-1999 வரை மைய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தன. 1-4-1999 முதல் மைய அரசு மாநில அரசுகளின்



2003 ஏப்ரல் 24]

பங்கு முறையே 75:25 என்ற விகிதத்தில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1-4-2000 முதல், ஒரு ஹெக்டேருக்கான நீர் வடிப்பகுதி மேம்பாட்டுச் செலவு ரூ.6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்ட காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ் நீர்வடிப் பகுதிகள் மத்திய அரசால் அணி வாரியாக ஒப்பளிப்புச் செய்யப்படுகின்றன. முதல் அணியில் 297 நீர்வடிப் பகுதிகள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு 1995 முதல் 2000 வரை ரூ.5920.25 இலட்சங்கள் செலவில் 1,48,911 ஹெக்டேர் நிலப்பரப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. (இரண்டு, மூன்று மற்றும் ஆறாவது அணிகளில் தமிழகத்திற்கென நீர்வடிப் பகுதிகள் திட்டம் எதுவும் ஒப்பளிப்பு செய்யப்படவில்லை).

ஒவ்வொரு அணியிலும் ஒப்பளிப்பு செய்யப்பட்ட நீர்வடிப்பகுதிகள், மொத்த நிதி ஒதுக்கீடு, மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்பட்ட நிதி மற்றும் செலவினத் தகவல்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| அணி மற்றும் திட்ட காலம் | நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு | | | நிதி வழங்கியது | | | மார்ச் 2003 முடிய செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 4-ம் அணி (1998-99 முதல் 2002-03 வரை) | 103 | 1030.00 | 1030.00 | 2060.00 | 672.950 | 672.950 | 1345.90 | 1139.90 (8.5%) |
| 5-ம் அணி (1999-2000 முதல் 2003-04 வரை) | 299 | 4485.00 | 1495.00 | 5980.00 | 1992.450 | 664.150 | 2656.60 | 2317.45 (87%) |

[2003 ஏப்ரல் 24

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7-ம் அணி (2001-02 முதல் 2005-06 வரை) | 61 | 1372.50 | 457.50 | 1830.00 | 212.625 | 70.875 | 283.50 | 126.35 (45%) |
| 8-ம் அணி (2002-03 முதல் 2006-07 வரை) | 144 | 3240.00 | 1080.00 | 4320.00 | 486.000 | 162.000 | 648.00 | 169.42 (26%) |
| மொத்தம் | 607 | 10127.50 | 4062.50 | 14190.00 | 3364.025 | 1569.975 | 4934.00 | 3753.12 (76%) |

ஏழு மற்றும் எட்டாம் அணி நீர்வடிப்பகுதிகளில் தொடக்க கட்டப் பணிகள் (பயனாளி குழுக்கள், சுய உதவிக் குழுக்கள், நீர்வடிப்பகுதிச் சங்கங்கள், நீர்வடிப்பகுதிக் குழுக்கள் அமைத்தல், வங்கிகளில் நீர்வடிப்பகுதி திட்டக் கணக்கு, நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டக் கணக்கு தொடங்குதல் முதலியன) நடைபெற்று வருகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளின் திட்டத்திற்காக 2002-03 ஆம் ஆண்டில் மைய அரசு ரூ.1067.40 இலட்சங்களும், மாநில அரசு ரூ.538.85 இலட்சங்களும் விடுவித்துள்ளன.

### ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் 1993-94 முதல் செயல்படுத்தப்படுகிறது. நீர்வடிப்பகுதி அணுகுமுறையில் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் செயல்படுத்தப்படாத வட்டாரங்களில் வனம் அல்லாத தரிசு நிலங்களை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஒரு எக்டருக்கான செலவினம் ரூ.4000 என இருந்தது. 1-4-2000 முதல் ரூ.6000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசு, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் நிலவள ஆதாரங்கள் துறையின் 100 சதவீத மானியத்தில் இத்திட்டம் 31-3-2000 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. 1-4-2000 முதல் இத்திட்டத்திற்கானச்



2003 ஏப்ரல் 24]

செலவினத்தை மத்திய மற்றும் மாநில அரசுகள் 11:1 (ஒரு எக்டருக்கான செலவினத்தில் மத்திய அரசின் பங்கு ரூ.5,500 மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.500) என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

மைய அரசு இத்திட்டத்தின்கீழ் 1993-94 முதல் 2001-02 வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்த 30 ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் மூன்று திட்டங்கள் (1) புதுக்கோட்டை (2) கடலூர் மற்றும் (3) திருவண்ணாமலை இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. ஐந்து திட்டங்கள் (1) ஈரோடு-I (2) சிவகங்கை-I (3) வேலூர்-I (4) கோயம்புத்தூர்-I மற்றும் (5) திண்டுக்கல்-I முடிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது செயலாக்கத்தில் இருக்கும் 22 திட்டங்களின் விவரங்கள் அட்டவணை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 2002-03 ஆம் ஆண்டில் திட்டங்கள் ஒப்பளிப்பு செய்வதற்காக பின்வரும் 11 மாவட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்துள்ளது.

(1) கோயம்புத்தூர் (2) தருமபுரி (3) திண்டுக்கல்

(4) காஞ்சிபுரம் (5) மதுரை(மேற்கு) (6) இராமநாதபுரம்

(7) சேலம் (8) தேனி (9) திருவள்ளூர்

(10) திருவண்ணாமலை (11) விழுப்புரம்(மேற்கு).

22-11-2002-ல் புதுடெல்லியில் நடைபெற்ற திட்ட ஒப்பளிப்புக் குழுக் கூட்டத்தில் மைய அரசுக்கு அனுப்பப்பட்ட 11 திட்டக் கருத்துருக்களில் (1) கோயம்புத்தூர்-III (2) தருமபுரி-II (3) சேலம்-II மற்றும் (4) திருவள்ளூர் ஆகிய 4 திட்டங்களுக்கு ரூ.1205.40 இலட்சங்கள் செலவில் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த குழுக் கூட்டத்தில் மீதமுள்ள திட்டக் கருத்துருக்களுக்கு ஒப்புதல் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை-3**

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம். | நிதி ஒதுக்கீடு | | | | விடுவிக்கப்பட்ட நிதி. | | | | 31.03.2003 வரை செலவு செய்யப் பட்ட தொகை. | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டப் பரப்பு (ஹெ) | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | தவணை பெ.வே./பெ. | மாநில அரசு | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 1. | கோயம்புத்தூர்-II 98-99 to 2002-03 | 9058 | 362.32 | - | 362.32 | 232.07 | VII/IV | - | 232.07 | 161.03 | 69 |
| 2. | சேலம் 99-2000 to 2002-03 | 5000 | 200.00 | .. | 200.00 | 129.06 | VII/IV | - | 129.06 | 112.50 | 87 |
| 3. | நாமக்கல்-I 99-2000 to 2002-03 | 5105 | 204.20 | - | 204.20 | 131.56 | VII/IV | - | 131.56 | 124.93 | 95 |
| 4. | தேனி 99-2000 to 2002-03 | 5156 | 206.24 | - | 206.24 | 133.32 | VII/IV | - | 133.32 | 92.768 | 70 |
| 5. | கரூர்-I 99-2000 to 2003-04 | 11606 | 464.24 | - | 464.24 | 297.87 | VI/IV | - | 297.87 | 195.324 | 66 |
| 6. | கடலூர்-II 99-2000 to 2003-04 | 5590 | 223.20 | - | 223.20 | 143.75 | VI/IV | - | 143.75 | 94.00 | 65 |
| 7. | விருதுநகர் 99-2000 to 2003-04 | 5300 | 212.00 | - | 212.00 | 94.57 | VI/III | - | 94.57 | 73.74 | 78 |
| 8. | இராமநாதபுரம் 99-2000 to 2003-04 | 5060 | 202.40 | - | 202.40 | 90.96 | VI/III | - | 90.96 | 87.81 | 97 |
| 9. | திருநெல்வேலி 99-2000 to 2003-04 | 10000 | 400.00 | - | 400.00 | 179.83 | VI/III | - | 179.83 | 99.396 | 56 |
| 10. | மதுரை 2000-01 to 2004-05 | 5100 | 280.50 | 25.50 | 306.00 | 42.08 | V/I | 3.82 | 45.90 | 44.260 | 96 |
| 11. | பெரம்பலூர் 2000-01 to 2004-05 | 10000 | 550.00 | 50.00 | 600.00 | 82.50 | V/I | 7.50 | 90.00 | 12.778 | 14 |
| 12. | தருமபுரி 2000-01 to 2004-05 | 9500 | 522.50 | 47.50 | 570.00 | 155.99 | V/II | 14.19 | 170.178 | 115.28 | 68 |



(ரூ. இலட்சத்தில்)

| வ.எண் | மாவட்டம் மற்றும் திட்ட காலம். | நிதி ஒதுக்கீடு | | | | விடுவிக்கப்பட்ட நிதி. | | | | 31.03.2003 வரை செலவு செய்யப் பட்ட தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டப் பரப்பு (ஹெ) | மைய அரசு | மாநில அரசு | மொத்தம் | மைய அரசு | தவணை பெ.வே./பெ. | மாநில அரசு | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| 13. | புதுக்கோட்டை II 2000-01 to 2004-05 | 11685 | 642.675 | 58.425 | 701.00 | 96.40 | V/I | 8.77 | 105.17 | 64.70 | 62 |
| 14. | திருச்சி 2000-01 to 2004-05 | 12100 | 665.50 | 60.50 | 726.00 | 99.83 | V/I | 9.07 | 108.90 | 41.947 | 39 |
| 15. | ஈரோடு II 2000-01 to 2004-05 | 5529 | 304.095 | 27.645 | 331.740 | 45.61 | V/I | 4.15 | 49.76 | 45.609 | 92 |
| 16. | திண்டுக்கல் II 2000-01 to 2004-05 | 10045 | 552.475 | 50.225 | 602.700 | 247.81 | V/III | 22.53 | 270.34 | 195.93 | 72 |
| 17. | சிவகங்கை II 2000-01 to 2004-05 | 10000 | 550.00 | 50.00 | 600.00 | 82.50 | V/I | 7.50 | 90.00 | 55.16 | 61 |
| 18. | தூத்துக்குடி 2000-01 to 2004-05 | 7500 | 412.50 | 37.50 | 450.00 | 61.88 | V/I | 5.62 | 67.50 | 39.71 | 59 |
| 19. | கரூர் II 2001-02 to 2005-06 | 6016 | 330.88 | 30.08 | 360.96 | 49.63 | III/I | 4.51 | 54.14 | 37.54 | 69 |
| 20. | விழுப்புரம் 2001-02 to 2005-06 | 4668 | 256.74 | 23.34 | 280.08 | 38.50 | III/I | 3.50 | 42.00 | 12.913 | 31 |
| 21. | வேலூர் II 2001-02 to 2005-06 | 6500 | 357.50 | 32.50 | 390.00 | 53.63 | III/I | 4.87 | 58.50 | 31.81 | 54 |
| 22. | நாமக்கல்-II 2001-02 to 2005-06 | 6159 | 338.74 | 30.80 | 369.54 | 50.81 | III/I | 4.62 | 55.43 | 47.15 | 85 |
| | மொத்தம் | 166887 | 8238.705 | 524.015 | 8762.72 | 2540.16 | | 100.65 | 2640.81 | 1786.29 | 68 |

**தேசிய மானாவாரி நீர் வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தேசிய மானாவாரி நீர் வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மைய அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தில் 1990-91 முதல்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீர் வடிப் பகுதிகளில் இயற்கை தாவர வளங்களை அதிகரிப்பதும் சுற்றுப்புறச் சூழ்நிலையினை மேம்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தமிழகத்தில் இத்திட்டம் (1) கடலூர், (2) விழுப்புரம், (3) வேலூர், (4) திருவண்ணாமலை, (5) சேலம், (6) நாமக்கல், (7) தர்மபுரி, (8) கோயம்புத்தூர், (9) ஈரோடு, (10) திருச்சி, (11) கரூர், (12) பெரம்பலூர், (13) புதுக்கோட்டை, (14) மதுரை, (15) தேனி, (16) திண்டுக்கல், (17) சிவகங்கை, (18) விருதுநகர் மற்றும் (19) திருநெல்வேலி ஆகிய 19 மாவட்டங்களிலுள்ள 84 வட்டாரங்களில் ரூ.73.923 கோடி செலவில் 2,26,645 ஹெக்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 'வாராசா (நீர் வடிப் பகுதிகளில் மானாவாரி வேளாண்மை அணுகுமுறை) ஜனசபா கிதா' என்கின்ற மாற்றி அமைக்கப்பட்ட தேசிய மானாவாரி நீர் வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டமாக 2002-2003 முதல் 2006-2007 வரை ஐந்தாண்டுகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய வழிகாட்டியின்படி, நீர் வடிப் பகுதி சமுதாயத்தினர், அவர்களின் நீர் வடிப் பகுதி மேம்பாட்டிற்கான திட்டமிடுதல், செயலாக்கம், கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு போன்ற பணிகளை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:-

1. இயற்கை வளங்களையும் அதன் பயன்பாட்டையும் பாதுகாத்து, வளர்த்து மேம்படுத்துதல்.
2. வேளாண்மை உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் உயர்த்தி நிலைப்படுத்துதல்.
3. பசுமைக் காடுகள், புதர்கள், புல்தரைகள் ஏற்படுத்தி வளமற்ற மானாவாரி நிலப்பகுதிகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்துதல்.
4. நிலமற்றவர் உள்ளிட்ட கிராமப்புற மக்களுக்கு நிலைத்த வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

பேரியல் மேலாண்மையில் தேசிய மானாவாரி நீர் வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் பெரும் பங்கினை வகிக்கிறது. இத்திட்டம் மைய அரசின் 90 சதவிகித நிதி உதவியுடனும் மாநில அரசின் 10 சதவிகித நிதி உதவியுடனும் செயல்படுத்தப்படுகிறது. மைய



அரசின் நிதிப் பங்கேற்பில் 80 சதவிகிதம் மானியமாகவும், 20 சதவிகிதம் மாநில அரசுக்குக் கடனாகவும் அளிக்கப்படுகின்றது. 30 சதவிகிதத்திற்கும் குறைவாகப் பாசன ஆதாரமுள்ள மானாவாரி நிலங்களுள்ள வட்டாரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் தஞ்சாவூர், நாகை, திருவாரூர், கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக இதர 23 மாவட்டங்களில் இம்மாற்றியமைக்கப்பட்ட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 23 மாவட்டங்களில் 763 நீர் வடிப் பகுதிகளில் (500 எக்டர் வீதம்) 3,81,500 எக்டர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 8 சதவிகிதத்திற்கும் குறைவான சரிவு உள்ள நிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு ஒரு ஹெக்டேருக்கு ரூ.4,500 ஆகவும் 8 சதவிகிதத்திற்கும் அதிகமாகச் சரிவு உள்ள நிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு ஒரு எக்டருக்கு ரூ.6,000 ஆகவும் உள்ளது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத்திட்டத்திற்கு ரூ.171.589 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் (2002-03 ஆண்டு) 10 சதவிகிதப் பங்காக ரூ.1715.889 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டு 38,131 ஹெக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படுகிறது. இதோடு சென்ற ஆண்டின் செலவிடா நிதியான ரூ.162.498 இலட்சங்களும் இவ்வாண்டுப் பயன்பாட்டிற்கென மீண்டும் செல்லுபடியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

2002-2003-ம் ஆண்டில் திட்ட இலக்கு மற்றும் சாதனை விவரம்.

| வ. எண் | பொருள் | 2002-2003 இலக்கு | 2002-2003 சாதனை | 2003-2004 இலக்கு |
|---|---|---|---|---|
| 1. | செயலாக்க பரப்பு (எக்டரில்) | | | |
| | (அ) நடப்பு ஆண்டு | 38,131 | 31,296 | 38,623 |
| | (ஆ) சென்ற ஆண்டு | 4,643 | 3,700 | |
| | மொத்தம் | 42,774 | 34,996 | |
| 2. | நிதி ஒதுக்கீடு(ரூபாய் இலட்சத்தில்) | | | |
| | (அ) நடப்பு ஆண்டு நிதி | 1715.889 | 1408.330 | 1738.04 |
| | (ஆ) சென்ற ஆண்டின் செலவிடா நிதி | 162.498 | 129.496 | |
| | மொத்தம் | 1878.387 | 1537.826 | |

[2003 ஏப்ரல் 24

## அத்தியாயம்-6

## வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 1971-ல் ஆரம்பிக்கப்பட்டது. வேளாண் பெருமக்களுக்கான சேவையை கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய மூன்று முறைகளில் செயல்படுத்தி வருகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பணிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### வேளாண்மைக் கல்வி

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் கோயமுத்தூர், மதுரை, கிள்ளிகுளம், குமுளூர், பெரியகுளம், திருச்சிராப்பள்ளி மற்றும் மேட்டுப் பாளையம் ஆகிய ஊர்களிலுள்ள பத்துக் கல்லூரிகளிலும் இளமறிவியல், மூதறிவியல் மற்றும் முனைவர் பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இளமறிவியல் பட்டப் படிப்புகளான பி.எஸ்ஸி. (வேளாண்மை), பி.எஸ்ஸி. (தோட்டக்கலை), பி.எஸ்ஸி. (வனவியல்), பி.டெக். (வேளாண் பொறியியல்), பி.எஸ்ஸி. (மனையியல்), பி.டெக் (உணவு பதப்படுத்துதல்), பி.டெக். (தாவர மூலக்கூறு) மற்றும் பி.டெக். (தோட்டக்கலை) ஆகியவற்றிலும், மூதறிவியலில் 22 துறைகளில் பட்டப் படிப்பும், 20 துறைகளில் முனைவர் ஆராய்ச்சிப்படிப்பும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. பி.டெக். பட்டப் படிப்பு தாவர மூலக்கூறு பிரிவிலும் மற்றும் தோட்டக்கலையிலும் 2002-2003 ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளது.

இளமறிவியல் பட்டப்படிப்பில் 549 மாணவர்களும், மூதறிவியல் பட்டப்படிப்பில் 246 மாணவர்களும், முனைவர் பட்டப்படிப்பில் 148 மாணவர்களும், 2002-2003 ஆம் கல்வி ஆண்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். நடப்பு கல்வியாண்டில் பெண்களின் சேர்க்கை 46.44 விழுக்காடு ஆகும்.

மாணவர்கள் கிராமப்புற உண்மை நிலைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, அவர்கள் 105 நாட்கள் கிராமங்களிலேயே தங்கி இருந்து ஊரக செயல் அனுபவக்கல்வி பெற்று வருகிறார்கள். மாணவர்களின் செயல் திறமையை மேம்படுத்த "வணிக வேளாண்மை" என்ற ஒரு பாடத்தில் அவர்களின் விருப்பத்திற்கேற்ப ஒரு பிரிவில் அரை ஆண்டு செய்தொழில் பயிற்சி பெற்று நல்ல திறமை பெற்று வருகின்றனர்.



2003 ஏப்ரல் 24]

அகில இந்திய அளவிலான இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தினால் நடத்தப்பட்ட தேர்வில் 2002 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் 17 பேர் இளநிலை கல்வி நிதிக்காகவும் மற்றும் 45 பேர் நிதியில்லா இடத்திற்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### வேளாண்மை ஆராய்ச்சி

பல்வேறுபட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கைகளையும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதி (2002-2003) பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| நிதி உதவி வழங்குவோர் | திட்டங்களின் எண்ணிக்கை | நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| இந்திய அரசு | 38 | 450.11 |
| இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் | 171 | 2269.71 |
| மாநில அரசு (திட்டங்கள்) | 105 | 1700.93 |
| தனியார் நிறுவனங்கள் | 31 | 233.05 |
| அயல்நாட்டு நிறுவனங்கள் | 26 | 595.47 |
| இதர நிறுவனங்கள் | 24 | 357.35 |
| மொத்தம் | 395 | 5606.62 |

இந்திய வேளாண்மை தொழில் நுட்பத்திட்டத்தின்கீழ், சுமார் 19.20 கோடி ரூபாய் நிதியுதவியில் 79 திட்டங்களை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகத்திலிருந்து இதுவரை 403 பயிர் இரகங்கள் உழவர் பெருமக்களின் நலனுக்காக வெளியிடப்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தியை உயர்த்திட தற்பொழுது வீரிய ஒட்டு விதை உற்பத்தி ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 30 வீரிய ஒட்டு இரகங்கள் பத்து பயிர்களில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் கொள்கைப்படி வீரிய ஒட்டு நெல் சாகுபடிக்கு

முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கோஆர்எச் 2 மற்றும் ஏடிடீஆர்எச் 1 நெல் வீரிய ஒட்டு விதைகள் உற்பத்திக்கு கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்கள் மிகவும் ஏற்றவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இது தவிர சோளம், கம்பு, மக்காச்சோளம், துவரை, சூரிகாந்தி, ஆமணக்கு, தென்னை, பருத்தி, தீவனப்பயிர்கள், காய்கறி மற்றும் பழப்பயிர்களில் வீரிய ஒட்டு இரகங்கள் உருவாக்கும் ஆராய்ச்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக நிறைய ஒட்டு வளர்ப்புகள் ஆய்வில் உள்ளன.

காவிரிப் பாசனப் பகுதியில் பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்திட உத்திகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் உழவர் பெருமக்களிடையே பயறு சாகுபடி செய்யும் ஆர்வத்தை தூண்டுவதற்காக நெல் தரிசில் அதிக விளைச்சல் உற்பத்தி செய்த மூன்று உழவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

ஒவ்வொரு பயிரின் விளைச்சல் திறனையும் மேம்படுத்துவதற்காக இரசாயன மற்றும் இயற்கை உரங்களை சமச்சீரான அளவில் இடுவதற்காக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துக்கள் இடும் முறைகளை வேளாண்மைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்துள்ளது. சேற்றில் நேரடி நெல் விதைப்பு சாகுபடியில் நெல் உற்பத்தியை உயர்த்திட பச்சை இலை வண்ண அட்டை மூலம் தழைச் சத்தை நிர்வகிக்கும் உத்தி வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

உழவர்கள் தங்களிடம் உள்ள நில, நீர் மற்றும் பல்வேறு வளங்களைப் பயன்படுத்தி தங்கள் பண்ணையின் இலாபத்தை அதிகரிக்க உதவும் பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நன்செய், தோட்டக்கால் மற்றும் புன்செய் பண்ணையங்களுக்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணைய அமைப்பு மாதிரித் திட்டங்கள் உருவாக்கியுள்ளது.

மானாவாரியில் வேளாண்மை, தரிசு நில மேம்பாடு மற்றும் வேளாண் காடுகள் பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. நாவல், சீத்தாப்பழம், சொர்க்கமரம், காட்டாமணக்கு போன்ற பயிர்கள் தரிசு நில மேம்பாட்டிற்கு உகந்தது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

நீர் நிர்வாகம், நீர்ப்பாசனமுறை மற்றும் மண் மற்றும் ஈரம் காத்தல் போன்ற ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. மரவள்ளிப் பயிரில் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 28.3 சதவிகித அளவிற்குப் பாசன நீரைச்





சேமிக்க முடியும் என்றும் இதனால் நீர் உபயோகத்திறன் 133.6 சதம் உயர்ந்துள்ளது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஏரிப் பாசனப் பகுதி நீர் பயன்படுத்துவோர் சங்கம் நல்ல முறையில் செயல்படுவதால் கடைமடைப் பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு குறைந்ததோடு மட்டுமல்லாமல், நிலத்தில் நீர் தேங்கி நிற்பதும் குறைந்துள்ளது. இதனால் பயிர் சாகுபடியில் மாற்றங்களும் அதிக உற்பத்தி மற்றும் அதிக வருமானமும் கிடைத்துள்ளது.

உயிரியல் நுட்ப ஆராய்ச்சிகள் மூலம் மரபணு மாற்று மூலம் நோய் மற்றும் பூச்சி தாக்காத இரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. குறைந்த செலவில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செய்யும் முறைகள் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கரும்பில் சிகப்பு அழுகல் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட இரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சி தமிழ்நாடு அரசு நிதியுதவியுடன் நடைபெற்று வருகிறது. தென்னை சிலந்திப் பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்த பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. டிரைகோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் உயிர்க் கொல்லிகளை அதிக அளவில் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வேளாண் விளை பொருட்கள். விற்பனை மற்றும் சந்தை நிலவரங்கள் பற்றிய ஆராய்ச்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மாறிவரும் உலகச் சந்தையின் தேவைக்கேற்ப மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் அறுவடைக்குப் பின் தொழில் நுட்பங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் தோட்டக்கலைப் பயிர்களில் செயல்படுத்தப்படுகிறது. பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 400-க்கும் மேலான மூலிகைச் செடிகள் கொண்ட தோட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கோவை, ஏற்காடு மற்றும் பேச்சிப்பாறையில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களிலும் மூலிகைத் தோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. வீடுகளின் பின்புறம் அமைக்க ஏதுவாக மாதிரி ஊட்டச்சத்து காய்கறித் தோட்டத்தினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கி அனைவரும் கடைப்பிடிக்கும் வகையில்

ஊக்குவித்து வருவது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். கரும்புச் சாறு பாட்டில்களில் அடைத்தல், பழங்கள் மற்றும் காய்கறிகளை உலரவைத்தல், தக்காளிச் சாறு இருக்கம் தயாரித்தல் போன்ற பல மதிப்பூட்டப்படும் செய்நேர்த்தித் தொழில் நுணுக்கங்களையும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

பண்ணைக் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் பல்வேறு தொழில் நுட்பங்கள் உருவாக்கும் ஆராய்ச்சிகள் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் நடைபெறுகின்றன. இதுவரையில் 109 பண்ணைக் கருவிகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கருவிகளின் பயனை உழவர் பெருமக்களிடையே பிரபலப் படுத்துவதற்காக நிறைய செயல் விளக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. வேளாண்மையில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் மற்றும் உபரி பொருட்களை பயனுள்ள வகையில் லாபகரமாக உழவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பயன்படுத்த வழி முறைகள் கண்டறிய ஆராய்ச்சி நடைபெறுகிறது.

ஆராய்ச்சி நிறுவனங்களின் திறமையை மேம்படுத்த வேளாண்மை ஆராய்ச்சி தகவல் தொடர்பு அமைப்பு, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தகவல் தட்டு, தகவல் வலை, மின் அஞ்சல் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் இத்தகவல்களைப் பயன்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது.

**வல்லுநர் விதை உற்பத்தி**

உயர் விளைச்சல் இரகங்களின் உற்பத்தியை உயர்த்திட, சுமார் 217.7 டன்கள் வல்லுநர் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு ஆதார விதைப் பெருக்கத்திற்காக வேளாண்மைத் துறை மற்றும் தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் உழவர்களுக்கு தரமான விதைகள் கிடைக்கப்பெற்று விளைச்சல் அதிகரிக்கும். வல்லுநர் விதைகள் உற்பத்தி மற்றும் விநியோக விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



| பயிர் | உற்பத்தி குறியீடு 2002-03 | | | விநியோகம் 28-2-2003 முடிய | | |
|---|---|---|---|---|---|---|
| | துறை | தனியார் | மொத்தம் | துறை | தனியார் | மொத்தம் |
| நெல் | 27146 | 27110 | 54256 | 30291 | 38488 | 68779 |
| சிறுதானியங்கள் | 170 | 60 | 230 | 258 | 94 | 352 |
| பயறுவகைகள் | 9669 | 106 | 9775 | 11394 | 2656 | 14050 |
| எண்ணெய்வித்து | 106901 | 22555 | 1294556 | 129875 | 3437 | 133312 |
| பருத்தி | 441.20 | 65 | 506.20 | 406 | 363 | 769 |
| கால்நடைப் பயிர்கள் | 8 | 475 | 483 | 10 | 440 | 450 |
| மொத்தம் | 144335.20 | 50371 | 194706.20 | 172234 | 45478 | 217712 |

**வேளாண்மை விரிவாக்கம்**

வேளாண் கல்வி மற்றும் ஆய்வுகள் மூலம் வெளிவரும் கண்டுபிடிப்புகள் வேளாண்மைத் துறையின் மூலம் உழவர்களுக்குச் சென்றடையச் செய்யவும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் விரிவாக்க கல்வி இயக்ககம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றது. ஒரு தகவல் தொடர்பு மையம், 8 வேளாண் அறிவியல் மையங்கள், 5 பயிர் மருத்துவ மையங்கள் மற்றும் ஒரு பயிற்சி மையம், நிறுவன-கிராம இணைப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் ஆகியவை இந்த இயக்ககத்தின்கீழ் வேளாண் விரிவாக்கப் பணிகளைத் தமிழகமெங்கும் செயல்படுத்துகின்றன. வானிலைப் பள்ளி, தொடர்தூரக்கல்வி கேள் காண் நாடாப் பாடங்கள் தயாரித்தல், உழவர்களுக்கும், வேளாண் விரிவாக்க அலுவலர்களுக்கும் பயிற்சி அளித்தல், உழவர் தின விழா மற்றும் கிராமக் கூட்டங்கள் நடத்துதல், ஒருங்கிணைந்த கிராம மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்துதல், உழவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளைக் கூறுதல் போன்ற பல விரிவாக்கப் பணிகளையும் இந்த இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. இது தவிர தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிலையங்களும் தொழில்நுட்பப் பரிமாற்றங்கள் செய்து வருகின்றன.

இதுவரையில், தகவல் தொடர்பு மையத்தின் மூலம் 21 கேள் காண் நாடாக்கள், 1 வானொலிப் பாடம் மற்றும் தொலை தூரக் கல்வி மூலம் ஒரு பாடத்திட்டமும் கற்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 630 பயிற்சிகள், 220 செயல் விளக்கங்கள், 198 கிராமக் கூட்டங்கள், 1312 வேளாண் ஆலோசனைகள், 88 கருத்துக் காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. செய்தி மற்றும் வெளியீடுகள் வாயிலாக 315 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இது தவிர 143 வானொலி/ தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் 98 சிறு புத்தகங்களும் வெளியிடப்பட்டன. 20 பயிற்சிகள் 272 பயனாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. வேளாண் தகவல் தொடர்பு மையம் மூலம் இதுவரை 315 தொழில் நுட்பச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**கணிப்பொறி வாயிலாக தொழில்நுட்பப் பரிமாற்றம்:**

கணிப்பொறி வாயிலாக தொழில் நுட்பங்களை விரைவாக உழவர்களுக்கு பரப்பிடும்வண்ணம் தகவல் தொடர்புத் திட்டம் ஒன்று விரிவாக்கக் கல்வி இயக்ககமும் மற்றும் இ.ஐ.டி. பாரி நிறுவனமும் இணைந்து செயல்படுத்திட ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக பயிர் சாகுபடியின் அனைத்து நுட்பங்களையும் உள்ளடக்கிய இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. வானிலை மற்றும் இதர தொழில் நுட்பங்களை உழவர்கள் இந்தத் தளத்தின் வாயிலாக அறிந்து கொண்டு கடைப்பிடிக்கலாம். கடலூர் மாவட்டத்தில் 44 மையங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

**ஞானவாணி ஒலிபரப்புத் திட்டம்**

புதுடில்லியில் உள்ள இந்திரா காந்தி தேசிய திறந்தவெளி பல்கலைக்கழகமும், அகில இந்திய வானொலி நிலையமும் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஞானவாணி என்ற ஒலிபரப்புத் திட்டத்தை துவக்கியுள்ளன. இத்திட்டத்தின் மூலம் உழவர்கள் உள்பட அனைத்து தரப்பினர்களும் பயன் பெறும்வண்ணம் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.





**வரையறுக்கப்பட்ட எல்லை தொலைகாட்சி ஒளிபரப்பு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், சென்னை தொலைகாட்சி நிலையமும் இணைந்து கோவைப் பகுதியில் வரையறுக்கப்பட்ட எல்லை ஒளிப்பரப்பின் மூலம் புதிய தொழில் நுட்பங்களை கோவை மற்றும் அருகில் உள்ள மாவட்ட உழவர்களின் நன்மைக்காக ஒளிபரப்பி வருகின்றது.

**இணையதளம் வாயிலாக தொழில் நுட்பப் பரிமாற்றம்**

உழவர்கள் பயன் பெறும்வண்ணம் பல்கலைக்கழகத்தின் பணிகள், வேளாண்மை வானிலை, சந்தை நிலவரங்கள் உள்ளிட்ட தொழில் நுட்பங்களைக் கொண்ட இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முகவரி www.tnauniv.org என்பதாகும். இத்தளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களால் நடத்தப்படும் மாதாந்திர மண்டல பணிமனைக் கூட்டங்களின் பரிந்துரைகளும் உழவர்கள் பயன் பெறும்வண்ணம் சேர்க்கப்பட்டுள்ளன.

**வேளாண்மை தொழில்நுட்பத் தகவல் மையம்:**

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒப்புதலின்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின்கீழ் வேளாண்மை தொழில்நுட்பத் தகவல் மையம் செயல்பட்டு வருகின்றது. இத்தகவல் மையத்தின் குறிக்கோள்கள்:

பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்களின் பயனாக கிடைக்கப் பெறும் புதிய பயிர் இரகங்களின் விதைகள், நாற்றுகள், உயிர் உரங்கள், உயிரியல் கொல்லிகள், பிற இடு பொருட்கள் மற்றும் தேவையான வேளாண் தொழில் நுட்பங்களை ஒற்றைச் சாளர முறையில் பயனாளிகளான உழவர்கள் மற்றும் தேவைப்பட்டோருக்கு வழங்குதல்.

வேளாண் பல்கலைக்கழகத்திற்கு வருகை தரும் உழவர்கள், வேளாண்மை சார்ந்த தொழில்முனைவோர், மாற்ற முகவர்கள், வளர்ச்சி முகவர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழில் முதலீட்டாளர்கள் தங்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் உடனுக்குடன் பெறுதல்.

## அத்தியாயம்-7

### விதைச் சான்றளிப்புத் துறை

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க விதை அடிப்படையான மற்றும் மிக முக்கிய இடுபொருளாகும். தரமான விதை உற்பத்திக்கு அரசால் ஆண்டுதோறும் அளிக்கப்படும் கூடுதல் முக்கியத்துவம் காரணமாக மாநிலத்தில் விதைத் தொழில் வேகமாக வளர்ந்து வருகிறது. உழவர்களின் நலன் காக்க ஒரு வலுவான விதை உற்பத்தி மற்றும் விதைத் தரக்கட்டுப் பாட்டுத் திட்டம் மிகவும் அவசியமானது. வேளாண்மை உற்பத்தியை கணிசமாக அதிகரிக்க போதிய அளவு தரமான விதைகளை உரிய காலத்தில் விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்வது அவசியம். இதனை அடைய இத்துறை விதைச் சான்றளிப்பு, விதை தரக்கட்டுப்பாடு, விதைப் பரிசோதனை மற்றும் பயிற்சி ஆகிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**விதைச் சான்றளிப்பு**

தரமான மற்றும் இனத்தூய்மை கொண்ட விதை உற்பத்தியை தேவையான அளவில் குறிப்பாக உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களில் மேற்கொள்ள ஊக்குவிப்பதே விதைச் சான்றிளிப்புத் திட்டத்தின் முக்கிய பணியாகும். இக்குறிக்கோளை அடைய விதைச் சான்றளிப்புத் துறை இந்திய விதைகள் சட்டம் 1966-ன்கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட இரக விதைகளில் சான்றளிப்புப் பணிகளை விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் மேற்கொண்டு, மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் சான்று விதைகளின் தரத்தை உறுதி செய்கிறது.

முன்னர் 1980- ஆண்டுகள் முற்பகுதியில் தமிழகத்தில் 18,000 மெட்ரிக் டன்கள் செய்யப்பட்டது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் சான்று விதை உற்பத்தி 24,452 மெட்ரிக் டன்களாக அதிகரித்தது. பின்னர் இது மேலும் அதிகரித்து 2002-2003 ஆம்ஆண்டில் 41,325 மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் சான்று விதை உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளபோதிலும் மொத்த விதைத் தேவையில் பத்து சதம் மட்டுமே பூர்த்தி செய்யப்படுகிறது. சுமார் ஆறு சதவீதப் பரப்புக்கு உண்மை நிலை விதைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே விதைத் தேவைக்கும் விதை உற்பத்திக்கும் இடையே அதிக இடைவெளி .காணப்படுகிறது. கடந்த கால அனுபவங்களின்படி



தனியார் சான்று விதை உற்பத்தி அதிகரிப்பு மூலம் மொத்த சான்று விதை உற்பத்தியை கணிசமாக அதிகரிக்க இயலும் என அறியப்படுகிறது. எனவே, சான்று விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை அதிகரிக்கச் செய்ய தனியார் விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க கவனம் செலுத்தப்படும்.

**விதை தரக்கட்டுப்பாடு**

விதைத் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் விதை வணிகத்தைக் கண்காணித்து தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். எனவே விதை விற்பனை நிலையங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்து, விநியோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் விதைகளில் மாதிரிகள் எடுத்து விதைப் பரிசோதனை செய்து உழவர்களுக்கு வழங்கப்படும் விதைகளின் தரத்தை உறுதி செய்ய வேண்டியது முக்கியமானதாகும். விதை மாதிரிகள் எடுத்து அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது. விதைப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தரக்குறைவான விதை விநியோகம் காணப்படும் நிகழ்வுகள் கண்டறியப்பட்டு உரியவர்கள் மீது துறை மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

விதைகள் சட்டம், 1966, விதை விதிகள், 1968 மற்றும் விதை (கட்டுப்பாடு) ஆணை, 1983 ஆகியவற்றின் அடிப்படையில் இத்துறை விதை தரக்கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் விதை (கட்டுப்பாடு) ஆணை, 1983-ன்படி விதை விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை உரிமங்களும் வழங்கப்படுகின்றன.

விதை ஆய்வுத் திட்டத்தின்கீழ் 1990-1991 வரையான காலக்கட்டத்தில் சுமார் 10,000 விதை விற்பனை நிலைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் விற்பனை நிலைய ஆய்வுகள் 26,322 ஆக அதிகரித்துள்ளது. இதே நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு விதை விற்பனை நிலையமும் இரண்டு முறை மட்டுமே ஆய்விடப்பட்டு வந்த நிலையிலிருந்து தற்சமயம் ஆண்டு ஒன்றுக்கு ஐந்து முறை ஆய்வு செய்யப்படுகிறது. 2002-2003 வருடத்தில் விதை விற்பனை நிலையங்களில் 29,371 எண்ணிக்கை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 20,775 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 24

**விதைப் பரிசோதனை**

நவீன வேளாண்மையில் விதைப் பரிசோதனைத் திட்டம் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இத்திட்டத்தில் விதைகளின் தரத்தை அறிய முளைப்புத்திறன், புறச்சுத்தம், ஈரப்பதம், விதை நலம் மற்றும் பிற ரக கலவன்கள் கண்டறியப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. விதைப் பரிசோதனை அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. விதைச்சான்றளிப்பு மற்றும் விதைத் தரக்கட்டுப்பாட்டுப் பணிகளை உரிய முறையில் செயல்படுத்த விதைப் பரிசோதனைத் திட்டம் அவசியமானது. தமிழகத்தில் தற்சமயம் எட்டு அறிவிக்கப்பட்ட விதைப் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவை வருடத்திற்கு 42,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யும் திறன் கொண்டுள்ளது. விதைப்பரிசோதனை நிலையங்களில் சான்று விதை மற்றும் ஆய்வு விதை மாதிரிகள் மட்டுமன்றி உழவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்தும் பெறப்படும் பணி விதை மாதிரிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 51,193 விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

விதைகளின் இனத்தூய்மையை அறிய பயிர் வளர்ப்புப் பரிசோதனை விதைச்சான்று இயக்ககத்திலுள்ள கண்ணாடி ஆய்வகத்திலும், கண்ணம்பாளையம் (கோயமுத்தூர்) பண்ணையிலும் செய்யப்படுகிறது. இப்பரிசோதனையானது தாயாதி, வீரியபருத்தி, ஆதாரநிலை பருத்தி மற்றும் வீரிய ஆமணக்கு ஆகிய பயிர் விதைகளின் சான்றளிப்புக்கு முன்னதாகச் செய்யப்படுகிறது. விதை ஆய்வுப் பிரிவிலிருந்து பெறப்படும் விதை மாதிரிகளும் இனத்தூய்மைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறது.

**பயிற்சி:**

தரமான விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்க இத்துறையின் பயிற்சிப் பிரிவின் மூலமாக கீழ்க்குறிப்பிட்ட பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

**ஆற்றுப்படுத்தும் பயிற்சி:** இத்துறையில் புதிதாகப் பணியேற்கும் அலுவலர்களுக்கு விதைச் சான்று நடைமுறை, வயல் ஆய்வுகள், பயிர் இரக குணாதிசயங்கள் கண்டறிதல், விதைச்சுத்தி, விதை மாதிரி எடுத்தல், சான்றளிப்பு, விதைப் பரிசோதனை மற்றும் விதைத் தரக்கட்டுப்பாடு குறித்து பயிற்சியளிக்கப்படுகிறது.



2003 ஏப்ரல் 24]

**புத்தூட்டப் பயிற்சி:** இத்துறையில் பணியாற்றும் அலுவலர்களுக்கு புதிய விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் புதிதாக வெளியிடப்பட்ட இரகங்களின் புறத்தோற்ற குணாதிசயங்கள் கண்டறிதல் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.

**விதை உற்பத்தியாளர் பயிற்சி:** விதை உற்பத்தியாளர்களுக்கு விதை உற்பத்தி குறித்த தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.

**விதை விற்பனையாளர்களுக்கு தரக்கட்டுப்பாட்டுப் பயிற்சி:** விதை விற்பனையில் விதைத் தரம் பேணிக்காத்தல் தொடர்பாகவும், விதை இருப்பு வைப்பதிலும் விற்பனை செய்வதிலும் கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்தும், விதை தொடர்பான சட்டங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பல்வேறு பயிற்சிகளின்கீழ் பயனடையும் நபர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் 25,591 நபர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. 2002-2003-ல் 27,706 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-1**

**சான்று செய்த விதை அளவு மெட்ரிக் டன்**

| வ. எண் | பயிர் | 2001-02 இலக்கு | 2001-02 சாதனை | 2002-03 இலக்கு | 2002-03 சாதனை | 2003-04 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நெல் | 33700 | 35249 | 35570 | 34824 | 36750 |
| 2 | ரக சிறு தானியம் | 580 | 433 | 450 | 543 | 450 |
| 3 | வீரிய சிறு தானியம் | 20 | 20 | 30 | 10 | 50 |
| 4 | ரக பருத்தி | 3000 | 2111 | 1900 | 1197 | 2000 |
| 5 | வீரிய பருத்தி | 180 | 107 | 150 | 263 | 150 |
| 6 | பயறு வகை | 1620 | 1641 | 1700 | 1353 | 1800 |
| 7 | எண்ணெய்வித்து | 3800 | 3588 | 3600 | 3056 | 3700 |
| 8 | காய்கறிகள் | 100 | 67 | 100 | 79 | 100 |
| | மொத்தம் | 43000 | 43216 | 43500 | 41325 | 45000 |

[2003 ஏப்ரல் 24

## அட்டவணை-2

### விதை ஆய்வு

| வ. எண் | பயிர் | 2001-02 இலக்கு | 2001-02 சாதனை | 2002-03 இலக்கு | 2002-03 சாதனை | 2003-04 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | விற்பனை நிலைய ஆய்வுகள் | 26000 | 27967 | 27000 | 293721 | 27600 |
| 2 | விதை மாதிரிகள் எடுத்தது | 19000 | 20767 | 20500 | 20775 | 21000 |

## அட்டவணை-3

### விதைப் பரிசோதனை

| வ. எண். | பயிர் | 2001-02 இலக்கு | 2001-02 சாதனை | 2002-03 இலக்கு | 2002-03 சாதனை | 2003-04 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | விதைப் பகுப்பாய்வு பரிசோதனை செய்தது | 50000 | 59216 | 52000 | 51193 | 56000 |

## அட்டவணை-4

### விதைச் சான்று பயிற்சி

| வ. எண். | பயிர் | 2001-02 இலக்கு | 2001-02 சாதனை | 2002-03 இலக்கு | 2002-03 சாதனை | 2003-04 திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பயனாளிகள் | 24500 | 25591 | 25000 | 27706 | 26000 |



2003 ஏப்ரல் 24]

### விதை ஆய்வு பகுதிகள்

| வ.எண் | அமைவிடம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோவை | கோவை,மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு, நாமக்கல் |
| 3 | சேலம் | சேலம், மற்றும் தர்மபுரி |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சை | தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | கடலூர் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | வேலூர் | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |

### விதைச்சான்று பகுதிகள்


| வ.எண் | அமைவிடம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோவை | கோவை,மற்றும் நீலகிரி |
| 2 | ஈரோடு | ஈரோடு |
| 3 | சேலம் | சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் |
| 4 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் |
| 5 | தஞ்சை | தஞ்சை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |
| 6 | மதுரை | மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் |
| 7 | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை |
| 8 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 9 | விழுப்புரம் | கடலூர் மற்றும் விழுப்புரம் |
| 10 | திருவண்ணாமலை | வேலூர் மற்றும் திருவண்ணாமலை |
| 11 | சென்னை | காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் |


### விதைப்பரிசோதனை நிலையங்கள்


| வ.எண் | அமைவிடம் | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | கோவை | கோவை,ஈரோடு,மற்றும் நீலகிரி |
| 2 | மதுரை | மதுரை, தேனி,திண்டுக்கல்,விருதுநகர்,இராமநாதபுரம், சிவகங்கை |
| 3 | திருச்சி | திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் |
| 4 | தருமபுரி | தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் |
| 5 | தஞ்சை | தஞ்சை, நாகப்பட்டினம், மற்றும் திருவாரூர் |
| 6 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி |
| 7 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, சென்னை, திருவள்ளூர் |


[2003 ஏப்ரல் 24

## விதைச்சான்றளிப்புத்துறை திட்டங்கள்செயலாக்கங்கள்






2003 ஏப்ரல் 24]

## அத்தியாயம்-8

### வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

கிராமங்களின் நிலையான பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதில், வேளாண் விளைபொருள் அங்காடிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. விவசாயத்தின் சாகுபடி செயல் திறன் மேம்படுவதற்கு அங்காடி விற்பனை அடிப்படை வசதிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனைக் கருத்தில்கொண்டு விற்பனைக்கான அடிப்படை வசதிகளை உருவாக்கும்பொருட்டும், தேவையான அமைப்புகள் மற்றும் வேளாண் விளைபொருள் வியாபாரத்தை ஒழுங்குபடுத்தும்பொருட்டும், தமிழ்நாடு அரசு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 மற்றும் விதிகள் 1991, 1959 ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்ட சட்டத்திற்கு மாறுதலாகக் கொண்டு வரப்பட்டது.

### வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

தமிழ்நாட்டில் வேளாண்மை விற்பனைத் துறை 1977 முதல் தனித் துறையாக செயல்பட்டு வருகின்றது. வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதோடு மட்டுமின்றி உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ஆகிய பொறுப்புகள் கூடுதலாக வழங்கப்பட்டு இத்துறையின் பெயர் 2001 முதல் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையென மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கிய செயல்பாடுகள்:

1. விவசாயிகள் நலன் கருதி, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி வேளாண் விளைபொருள் விற்பது மற்றும் வாங்குவது போன்ற செயல்களை ஒழுங்குபடுத்துதல்.

2. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வரப்படும் விளைபொருட்கள் மற்றும் பண்ணை அளவில் விளைபொருட்களைத் தரம் பிரித்து கூடுதல் விலை கிடைத்திட உதவுதல்.

3. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை

[2003 ஏப்ரல் 24

விற்பனைக்கூடத்தின் மூலமாக விற்பனை செய்வதனால் அடையும் பயன்களை விளம்பரம் மற்றும் பிரச்சார பணி மூலம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

4. வேளாண் பொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் பொருட்கள், வனப்பொருட்கள் ஆகியவற்றிற்கு நுகர்வோர் பயன்பெறும் வகையில் அக்மார்க் தர முத்திரை வழங்கும் திட்டத்தினை அமலாக்குதல்.

5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை அமைப்பதன் மூலம் ஏற்றுமதி செய்யும் விளைபொருட்களின் பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய மேலாண்மை குறித்த விவரங்களை அளித்தல், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சர்வதேச சந்தையில் நிலவும் விலை விவரத்தை ஒருங்கிணைத்து அளித்தல்.

6. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இருப்பு வைத்து சரியான விலையில் விற்பனை செய்ய ஏதுவாக நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய குளிர் பதன கிட்டங்கிகளை அமைத்தல்.

7. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவப்பட முயற்சிகள் மேற்கொள்ளுதல்.

**விற்பனைக் குழுக்கள்**

ஏற்கெனவே செயல்பட்டு வந்த 16 விற்பனைக் குழுக்களுடன், 2002-2003-ம் நிதியாண்டில் அரசால் தேனி, திண்டுக்கல், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 4 விற்பனைக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டு, தற்போது 20 விற்பனைக் குழுக்கள் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக செயல்பட்டு வருகின்றன. இந்த விற்பனைக் குழுக்கள் சனவரி 2003-ம் மாதம் முதல் புதியதாக நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுடனும் மற்றும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்**

தமிழ்நாட்டிலுள்ள 20 விற்பனைக் குழுக்களின் கட்டுப்பாட்டில் 272 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், 15 துணை விற்பனைக்



2003 ஏப்ரல் 24]

கூடங்கள், 15 சோதனைச் சாவடிகள், 108 ஊரக கிட்டங்கிகள், 108 தரம் பிரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை ஒரு சேர விற்பனைக் கூட வளாகத்தில் கூடி விளைபொருள் விற்கும் செயல்களை முறைப்படுத்தி மறைமுக ஏல முறையில் போட்டி விற்பனையை ஏற்படுத்தி அதிகபட்ச விலை பெற்று தருவது, இலவசமாக விளைபொருளின் தரத்தினை விவசாயிகள் அறிந்துகொண்டு தரத்திற்கேற்ற விலை கிடைப்பதை அவர்களுக்கு உறுதி செய்வது போன்ற பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

விற்பனைக் குழுக்கள் விளைபொருள் மதிப்பில் 1 சதவீதத்தினை விற்பனைக் கட்டணமாக வியாபாரிகளிடம் வசூலிக்கப்படுகிறது. வியாபாரிகள் மற்றும் எடையாளர்களிடமிருந்தும் உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. உற்பத்தியாளர்/விற்பனை செய்வோரிடம் எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. விற்பனைக்குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் தரம் பிரிப்பு மையங்கள் விவரம் அட்டவணை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினால் கிடைக்கும் பயன்கள்**

சரியான எடை, கிட்டங்கி வசதி, வங்கி வசதிகள், உடனடி பணம் பட்டுவாடா, அங்காடி விலை விவர நிலவரம் அறிய வாய்ப்பு, விவசாயிகளுக்கு ஓய்வறை வசதி, குடிநீர் வசதி, வண்டி மாடுகள் நிறுத்துவதற்கு இட வசதி, இலவச மருத்துவ வசதி, இடுபொருள் மையம், பணப்பட்டுவாடா செய்திட வசதி, தொலைபேசி மற்றும் நிகரி வசதி போன்ற பல வசதிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனைக் குழு வாரியாக அமைக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளின் விவரங்கள் அட்டவணை 2ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**விலைபொருட்கள் அறிவிக்கை செய்தல்**

இதுவரை நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மஞ்சள் போன்ற 40 வேளாண் விளைபொருட்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

**வணிகமுறை தரம் பிரித்தல்**

உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கு தரத்திற்கேற்ற சரியான விலை கிடைக்க உதவும் நோக்கத்துடன் 96 வணிகமுறை தரம் பிரிப்பு மையங்கள், 11 பருத்தி தரம் பிரிப்பு மையங்கள் மற்றும் 1 புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பணி கிராமங்களில் விவசாயிகளின் பொருட்களுக்கும் செய்து தரப்படுகிறது. இம்மையங்கள் தற்போது 'அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி தொழில் நுட்ப மையம்' என பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் தொழில் நுட்பப் பணியாளர்கள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய தொழில் நுட்பப் பணி பற்றி விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்கிறார்கள்.

**விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன்**

சிறு/மிகச்சிறு விவசாயிகள் தங்கள் விலைபொருட்களை அறுவடைக் காலங்களில் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பொருளீட்டுக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் 6 மாதம் வரை இருப்பு வைத்து, விளைபொருளின் மொத்த மதிப்பில் 75 விழுக்காடு வரை பொருளீட்டுக் கடனாக, அதிகபட்சமாக ரூ. 50,000 வரை பெறலாம்.

**வியாபாரிகளுக்குப் பொருளீட்டுக் கடன்**

விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டபின்னர் அவர்களுக்கு உடனடியாக பணப்பட்டுவாடா செய்திடும் வகையில் வியாபாரிகளுக்கு பொருளீட்டுக் கடன் வசதி செய்து தரப்படுகின்றது. கொள்முதல் செய்யப்படும் விளைபொருட்களின் மதிப்பில் 50 விழுக்காடு அல்லது ஒரு இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை பொருளீட்டுக் கடனாக வழங்கப்படுகின்றது. அதிகபட்சமாக 3 மாத காலத்திற்கு பொருள்களை இருப்பு வைத்திடலாம்.

**தமிழ்நாடு உழவர் நல நிதி திட்டம்**

இத்திட்டத்தின்படி, ஒரு வருடத்திற்கு 1 மெட்ரிக் டன் அல்லது அதற்குமேல் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விற்பனை செய்யும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் விபத்தின் காரணமாக உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது நிரந்தர ஊனமுற்றாலோ ரூ. 75,000 வரை உதவி வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, உயிர் இழக்கும் விவசாயிகள்/குத்தகைதாரர்கள் குடும்பத்தில் உள்ள சட்ட பூர்வமான வாரிசுதாரருக்கு மானியத்தொகை வழங்கப்படும். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. இத்திட்டத்தில், நபரொன்றுக்கு வருடத்திற்கு தவணைக் கட்டணமாக ரூ. 10-ஐ உரிய விற்பனைக் குழுவும் தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியமும் சமபங்காக செலுத்துகின்றன.



**அக்மார்க் தரம் பிரித்தல்**

அக்மார்க் முத்திரை உணவுப் பண்டங்களின் தரத்தின் உத்திரவாதம். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நுகர்வோருக்குத் தரமான கலப்படமற்ற உணவுப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதேயாகும். தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும் மற்றும் ஒரு முதன்மை ஆய்வகமும், 15 வேளாண்மை அலுவலர் (விற்பனை) மையங்களும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம் பிரிப்பின் கீழ், மைய தொகுப்பிற்கு உட்பட்ட உணவு பண்டங்களுக்கும், மையத் தொகுப்பிற்கு உட்படாத உணவு பண்டங்களுக்கும், பயிற்சி பெற்ற தொழில் நுட்ப அலுவலர்களால் தரம் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு அக்மார்க் முத்திரை சீட்டுகள், உணவுப் பண்டங்கள் தரம் மற்றும் தன்மை அடிப்படையில் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகிறது.

**வேளாண் ஏற்றுமதி மண்டலம்**

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் குறிப்பிட்ட வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக கீழ்க்கண்ட இடங்களில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தர்மபுரி மாவட்டத்தில் ரோஜா மலர் ஏற்றுமதி மண்டலம்**

ரோஜா மலருக்கென தர்மபுரி மாவட்டம் ஓசூரில் ரூ. 2485 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்

[2003 ஏப்ரல் 24

துறையின் மூலமாக ஓர் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டுள்ளது. டிட்கோ நிறுவனமும் மற்றும் தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள டேன்ஃப்ளாரா என்ற கூட்டு நிறுவனம் பொதுவான வசதிகளான பதப்படுத்தும் தொழிலகம், விற்பனை வசதியினை ஏற்படுத்தி தருதல், மலர் மையங்களுக்கான நிலத்தினை குத்தகைக்கு அளித்தல் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை அளிக்கும். இந்த மையம் அனைத்து வசதிகளை உள்ளடக்கியதாக செப்டம்பர் 2003-ம் மாதம் முதல் செயல்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கான ஏற்றுமதி மண்டலம்**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் பங்கேற்பில் நீலகிரி மாவட்டத்தில் மலர்களுக்கென ரூ. 15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6-2-2003-ல் கையெழுத்திட்டன. இந்த ஏற்றுமதி மண்டலத்தில் குளிர் பதன கிட்டங்கிகள், குளிரூட்டப்பட்ட லாரி, பொதுவான அங்காடி வசதிகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**தேனி மாவட்டத்தில் மாம்பழத்திற்கான ஏற்றுமதி மண்டலம்**

மாம்பழத்திற்கென தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கி ரூ. 24.00 கோடி மதிப்பீட்டில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மூலமாக தனியார் பங்கேற்பில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதற்கான உடன்பாட்டுக் குறிப்பில் அபிடா நிறுவனமும் தமிழ்நாடு அரசு வேளாண் துறையும் 6-2-2003-ல் கையெழுத்திட்டன. இந்த வேளாண் ஏற்றுமதி மண்டலத்தில் சேகரிப்பு மையங்கள், பதப்படுத்தும் நிலையங்கள், குளிர் பதன கிட்டங்கி அமைத்தல் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இத்துறையின் மூலமாக வேளாண் மற்றும் தோட்டக்கலை உற்பத்தி பொருட்களுக்கு வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் கீழ்குறிப்பிட்ட இடங்களில் அமைப்பது குறித்த சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.



2003 ஏப்ரல் 24]

| வேளாண் விளைபொருள் | இடம்/மாவட்டம் |
|---|---|
| திராட்சை | தேனி மாவட்டத்தில் கம்பம் |
| முந்திரி | தஞ்சாவூர்/புதுக்கோட்டை/சிவகங்கை மற்றும் கடலூர். |
| வெங்காயம் | கோவை மாவட்டத்தில் பல்லடம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் |
| வாழை | திருச்சி மற்றும் திருநெல்வேலி |
| மாங்காய்/மாம்பழம் | தர்மபுரி மாவட்டம் |
| மூலிகை செடிகள் | தூத்துக்குடி மாவட்டம் |
| மஞ்சள் | ஈரோடு மாவட்டம் |

**குளிர் பதன கிட்டங்கிகள் அமைத்தல்**

வேளாண் விளை பொருட்களில், குறிப்பாக பழங்கள் மற்றும் காய்கறிகளில் அறுவடைக்குப்பின் ஏற்படும் சேதாரத்தினை குறைத்திடும் நோக்கில் கீழ்க்கண்ட இடங்களில் தனியார் மூலம் குளிர் பதன கிட்டங்கிகள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

* திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம்.
* திருச்சிராப்பள்ளி.
* வேலூர்.
* சேலம் மாவட்டத்தில் தலைவாசல்.
* கோவை மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை.
* திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலகுண்டு.
* விருதுநகர்.
* தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திகுளம்.
* தேனி மாவட்டத்தில் சின்னமனூர்.

**உலர் களங்கள்**

அறுவடைக்குப் பின் ஏற்படும் தானிய இழப்பினை குறைக்கும் வகையில் இத் துறையின் மூலமாக கிராமங்களில் உலர் களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் திட்டமாகும். இது வரை ரூ.8.24 கோடி செலவில் 480 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, 2002-2003-ம் நிதியாண்டில் ரூ.2.00 கோடி செலவில் 100 உலர் களங்கள் அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது.

**வணிக வளாகங்கள் அமைத்தல்.**

1. நெல் வணிக வளாகம்: ரூ. 12.60 கோடி செலவில் மதுரையில் நெல் பயிருக்கென விவசாயிகள் மற்றும் வணிகர்கள் பயன் பெறும் வகையில் நெல் வணிக வளாகம் கட்டுமான பணி நடைபெற்று வருகின்றது.

2. மஞ்சள் வணிக வளாகம்: தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டம் மஞ்சள் பயிருக்கான முக்கிய அங்காடியாக விளங்குவதினால் இங்கு ரூ.32.30 கோடி செலவில் அமைக்கப்படவுள்ள மஞ்சள் வணிக வளாகம் இம்மாநிலம் மற்றும் இந்நாட்டு விவசாயிகள், வணிகர்கள் பயன் பெறும் வகையில் அமையும்.

3. வெல்ல வணிக வளாகம்: ரூ. 10.00 கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் வெல்லம் உற்பத்தி செய்வோர் மற்றும் வணிகர்கள் பயன் பெறும் வகையில் வெல்ல வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது.

**வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையம்**

வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்வதில் சந்தை நிலவாம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. விவசாயிகள் பல்வேறு சந்தைகளில் வேளாண் விளைபொருட்களுக்கு நிலவும் விலை விபரத்தினை அறிவதன்மூலம் அவர்களின் விளைபொருட்களுக்கு



கூடுதல் விலை பெற ஏதுவாகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு, அனைத்து வசதிகளுடன் கூடிய வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை தகவல் மையங்கள் ரூ. 30.00 இலட்சம் செலவில் 9 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டில் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இம் மையங்கள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் வெற்றி மற்றும் பயனின் அடிப்படையில் இத்திட்டமானது விரிவுப்படுத்தப்படும்.

**தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம்**

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியத்தின் முக்கிய பணிகள் வருமாறு:

**1. விளம்பர மற்றும் பிரச்சாரம்**

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் தனது கட்டுப்பாட்டிலுள்ள சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள மையங்கள் மூலமாக வேளாண் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனை செய்வதால் கிடைக்கும் ஆதாயங்கள் குறித்த விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளை செய்து வருகிறது.

**2. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளித்தல்**

திருச்சிராப்பள்ளியை மையமாகக் கொண்டு மாநில விலைபொருள் விற்பனை வாரியத்தின் பயிற்சி மையம் செயல் பட்டு வருகிறது. விற்பனைத் துறை மற்றும் விவசாயிகள் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பயிற்சி மையத்தின்மூலம் தரம் பிரிப்பாளர் பயிற்சி, விற்பனைக்குழு பணியாளர்களுக்கான புத்தாட்டப் பயிற்சி மற்றும் விவசாயிகள் நேரடித் தொடர்புத் திட்டம் என மூன்று வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

[2003 ஏப்ரல் 24

### 3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் அறக்கட்டளை இருக்கை

தமிழ்நாடு மாநில விளைபொருள் விற்பனை வாரியம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி மையத்திற்கு ரூ. 50 இலட்சம் வைப்பு நிதியாக கொடுத்து ஒரு அறக்கட்டளை இருக்கையை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறக்கட்டளை மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் 200 வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அதிகாரிகள் வேளாண்மை விற்பனை விரிவாக்கத்தில் பயிற்சி பெற்றனர்.

### 4. கட்டுமானப் பணிகள்

வாரியத்தின் பொறியியல் பிரிவு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அடிப்படை வசதிகளான அலுவலகக் கட்டிடங்கள், ஊரகக் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், வணிக வளாகங்கள், இடுபொருள் கடைகள், பணப்பட்டுவாடா அறைகள், ஓய்வறைகள், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள், உள் சாலை வசதிகள், அலுவலகத்துடன் இணைந்த கிட்டங்கிகள், சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. 2002-2003-ஆம் ஆண்டில் ரூ.566.65 இலட்சம் செலவில் 263 பணிகள் செயல்படுத்தப்பட்டன.

### 5. விற்பனை அபிவிருத்தி நிதி

தமிழ்நாடு மாநில விலைபொருள் விற்பனை வாரியம் தமக்குத் தேவையான நிதியை விற்பனைக் குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. விற்பனைக் குழுக்கள் தங்களது மொத்த வருவாயில் 15 விழுக்காடு தொகையை வாரியத்திற்கு பங்குத் தொகையாக அளிக்கின்றன. இவ்வாறாகப் பெறப்படும் மொத்த தொகையில் 50 விழுக்காடு, சந்தை அபிவருத்தி நிதிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதிலிருந்து விற்பனை அபிவிருத்திகளுக்கான விளம்பரம் மற்றும் பிரச்சாரம், பயிற்சி போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன.



2003 ஏப்ரல் 24]

## அட்டவணை– 1

மாநிலத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், சோதனைச் சாவடிகள், ஊரகக் கிட்டங்கிகள், வணிகமுறை தரம்பிரிப்பு மையங்கள், பருத்தி தரம்பிரிப்பு மையங்கள் மற்றும் புகையிலை தரம்பிரிப்பு மையம் விவரங்கள்.

(எண்களில்)

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் | துணை விற்பனை கூடங்கள் | சோதனை சாவடிகள் | ஊரகக் கிட்டங்கிகள் | வணிகமுறை தரம்பிரிப்பு மையம் | பருத்தி தரம்பிரிப்பு மையம் | புகையிலை தரம்பிரிப்பு மையம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 14 | 1 | 2 | 5 | 7 | 1 | 1 |
| 2 | வேலூர் | 12 | - | - | 4 | 5 | - | - |
| 3 | தி.மலை | 16 | — | — | 7 | 10 | — | — |
| 4 | கடலூர் | 10 | 1 | — | 5 | 6 | — | — |
| 5 | விழுப்புரம் | 18 | — | — | 7 | 13 | 1 | — |
| 6 | சேலம் | 19 | — | — | 2 | 6 | — | — |
| 7 | தர்மபுரி | 16 | — | 2 | 4 | 5 | — | — |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 5 | — | 12 | 2 | 3 | — |
| 9 | ஈரோடு | 25 | 6 | 1 | 7 | 10 | 2 | 1 |
| 10 | திருச்சி | 19 | 2 | 4 | 10 | 4 | — | — |
| 11 | தஞ்சாவூர் | 13 | — | 2 | 4 | 3 | — | — |
| 12 | புதுக்கோட்டை | 10 | — | 1 | 2 | 2 | — | — |
| 13 | மதுரை | 6 | — | — | 2 | 2 | — | — |
| 14 | இராமநாதபுரம் | 20 | — | 1 | 10 | 6 | 1 | — |
| 15 | திருநெல்வேலி | 19 | — | — | 13 | 6 | 3 | — |
| 16 | கன்னியாகுமரி | 6 | — | 2 | 5 | 2 | — | — |
| 17 | தேனி | 7 | — | — | 1 | 1 | 1 | — |
| 18 | திண்டுக்கல் | 8 | — | — | 5 | 4 | — | — |
| 19 | நாகப்பட்டிணம் | 8 | — | — | 1 | 1 | — | — |
| 20 | திருவாரூர் | 8 | — | — | 2 | 1 | — | — |
| | மொத்தம் | 272 | 15 | 15 | 108 | 96 | 11 | 1 |

[2003 ஏப்ரல் 24

## அட்டவணை-2

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் அமைந்துள்ள அடிப்படை வசதிகள்**

*(எண்களில்)*

| வ. எண் | விற்பனைக் குழுக்கள் | சொந்த நிலம் | கிட்டங்கி | ஊரக கிட்டங்கி | பரிவர்த்தனை கூடம் | உலர் களம் | விவசாயிகள் ஓய்வறை | சுகாதார வசதி | குடிநீர் வசதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 7 | — | 5 | 4 | 7 | 2 | 6 | 5 |
| 2 | வேலூர் | 9 | 6 | 4 | 6 | 4 | 2 | 7 | 7 |
| 3 | தி.மலை | 13 | 5 | 7 | 14 | 11 | 6 | 10 | 9 |
| 4 | கடலூர் | 5 | 2 | 3 | 11 | 5 | 3 | 9 | 5 |
| 5 | விழுப்புரம் | 12 | 4 | 9 | 26 | 13 | 10 | 22 | 12 |
| 6 | சேலம் | 5 | 1 | 2 | 4 | 4 | — | 4 | 3 |
| 7 | தர்மபுரி | 9 | 1 | 4 | 7 | 7 | 3 | 11 | 7 |
| 8 | கோயம்புத்தூர் | 18 | 58 | 11 | 19 | 21 | 6 | 14 | 12 |
| 9 | ஈரோடு | 14 | 12 | 8 | 19 | 16 | 3 | 14 | 14 |
| 10 | திருச்சி | 12 | 13 | 10 | 24 | 13 | 3 | 19 | 11 |
| 11 | தஞ்சாவூர் | 10 | 11 | 3 | 17 | 7 | 6 | 9 | 9 |
| 12 | புதுக்கோட்டை | 3 | 1 | 2 | 3 | 2 | 1 | 3 | 2 |
| 13 | மதுரை | 4 | — | 2 | 1 | 3 | 3 | 2 | 3 |
| 14 | இராம்நாதபுரம் | 14 | 8 | 10 | 12 | 10 | 2 | 12 | 13 |
| 15 | திருநெல்வேலி | 15 | 3 | 13 | 9 | 13 | 10 | 14 | 15 |
| 16 | கன்னியாகுமரி | 5 | 2 | 5 | 6 | 7 | 5 | 5 | 5 |
| 17 | தேனி | 4 | — | 1 | 3 | 6 | 1 | 3 | 4 |
| 18 | திண்டுக்கல் | 6 | 1 | 5 | 6 | 7 | — | 5 | 5 |
| 19 | நாகப்பட்டினம் | 1 | 1 | 1 | 2 | 1 | — | 1 | 1 |
| 20 | திருவாரூர் | 1 | — | 2 | 1 | 1 | 2 | 1 | 1 |
| | மொத்தம் | 167 | 129 | 108 | 194 | 158 | 48 | 171 | 143 |



2003 ஏப்ரல் 24]

## அட்டவணை-3

**விற்பனைக்குழு வாரியாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்**

| 1. காஞ்சிபுரம் | 2. வேலூர் | 3. திருவண்ணாமலை |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. வேலூர் | 1. திருவண்ணாமலை |
| 2. திருத்தணி | 2. திருப்பத்தூர் | 2. ஆரணி |
| 3. திருவள்ளூர் | 3. ஆற்காடு | 3. வந்தவாசி |
| 4. செங்குன்றம் | 4. அரக்கோணம் | 4. சேத்துப்பட்டு |
| 5. மதுராந்தகம் | 5. வாணியம்பாடி | 5. செய்யார் |
| 6. உத்திரமேரூர் | 6. காவேரிப்பாக்கம் | 6. போளூர் |
| 7. பொன்னேரி | 7. குடியாத்தம் | 7. செங்கம் |
| 8. திருக்கழுக்குன்றம் | 8. கலவை | 8. புதுப்பாளையம் |
| 9. சுங்குவார்சத்திரம் | 9. அம்மூர் | 9. வாணாபுரம் |
| 10. பள்ளிப்பட்டு | 10. காட்பாடி | 10. வேட்டவலம் |
| 11. ஊத்துக்கோட்டை | 11. ஆம்பூர் | 11. தெள்ளார் |
| 12. அச்சிறுப்பாக்கம் | 12. திமிரி | 12. மங்கல மாமண்டூர் |
| 13. கும்மிடிப்பூண்டி | | 13. தேசூர் |
| 14. நசரத்பேட்டை | | 14. பெரணமல்லூர் |
| | | 15. தூசி |
| | | 16. கீழ்பென்னாத்தூர். |

| 4. கடலூர் | 5. விழுப்புரம் | |
|---|---|---|
| 1. விருத்தாசலம் | 1. திண்டிவனம் | 11. மணலூர்பேட்டை |
| 2. கடலூர் | 2. திருக்கோவிலூர் | 12. அவலூர்பேட்டை |
| 3. பண்ருட்டி | 3. உளுந்தூர்பேட்டை | 13. மரக்காணம் |
| 4. திட்டக்குடி | 4. விழுப்புரம் | 14. விக்கிரவாண்டி |
| 5. காட்டுமன்னார் கோவில் | 5. சின்னசேலம் | 15. அனந்தபுரம் |
| 6. சிதம்பரம் | 6. கள்ளக்குறிச்சி | 16. வளத்தி |
| 7. குறிஞ்சிப்பாடி | 7. செஞ்சி | 17. மூங்கில்துரைப்பட்டு |
| 8. சேத்தியாதோப்பு | 8. தியாகதுர்கம் | 18. கிளியனூர் |
| 9. ஸ்ரீமுஷ்ணம் | 9. சங்கராபுரம் | |
| 10. புவனகிரி | 10. திருவெண்ணெய் நல்லூர் | |

| 6. சேலம் | 7. தர்மபுரி | 8. கோயம்புத்தூர் |
|---|---|---|
| 1. சேலம் | 1. தர்மபுரி | 1. திருப்பூர் |
| 2. ஆத்தூர் | 2. கிருஷ்ணகிரி | 2. அவிநாசி |
| 3. நாமக்கல் | 3. ஒசூர் | 3. சேவூர் |
| 4. இராசிபுரம் | 4. கெலமங்கலம் | 4. அன்னூர் |
| 5. திருச்செங்கோடு | 5. பாலக்கோடு | 5. காரமடை |
| 6. சங்ககிரி | 6. பென்னாகரம் | 6. கோயம்புத்தூர் |
| 7. கொங்கணாபுரம் | 7. போச்சம்பள்ளி | 7. சூலூர் |
| 8. கொளத்தூர் | 8. காவேரிப்பட்டினம் | 8. பல்லடம் |
| 9. வேலூர் | 9. ஊத்தங்கர | 9. உடுமலைப்பேட்டை |
| 10. மேச்சேரி | 10. அரூர் | 10. ஆனைமலை |
| 11. வாழப்பாடி | 11. பாப்பிரெட்டிப்பட்டி | 11. பொள்ளாச்சி |
| 12. தம்மம்பட்டி | 12. கொளத்தூர் | 12. மலையடிப்பாளையம் |
| 13. நாமகிரிப்பேட்டை | 13. பர்கூர் | 13. நெகமம் |
| 14. தலைவாசல் | 14. இராயகோட்டை | 14. கிணத்துக்கடவு |
| 15. ஓமலூர் | 15. தென்கனிக்கோட்டை | 15. தொண்டாமுத்தூர் |
| 16. காடையம்பட்டி | 16. பாப்பாரப்பட்டி | 16. மடத்துக்குளம் |
| 17. கெங்கவல்லி | | 17. பெதப்பம்பட்டி |
| 18. கருமந்துறை | | 18. பொங்கலூர் |
| 19. சோளக்காடு | | |





| 9. ஈரோடு | 10. திருச்சிராப்பள்ளி | 11. தஞ்சாவூர் |
|---|---|---|
| 1. ஈரோடு | 1. ஜெயங்கொண்டம் | 1. அதிராம்பட்டினம் |
| 2. அவல்பூந்துறை | 2. கரூர் | 2. அம்மாப்பேட்டை |
| 3. கொடுமுடி | 3. அரியலூர் | 3. பூதலூர் |
| 4. சிவகிரி | 4. மணப்பாறை | 4. கும்பகோணம் |
| 5. சித்தோடு | 5. ஆண்டிமடம் | 5. மதுக்கூர் |
| 6. பவானி | 6. துறையூர் | 6. ஒரத்தநாடு |
| 7. பூதப்பாடி | 7. பெரம்பலூர் | 7. பட்டுக்கோட்டை |
| 8. அந்தியூர் | 8. லால்குடி | 8. பாபநாசம் |
| 9. மயிலம்பாடி | 9. திருச்சிராப்பள்ளி | 9. பேராவூரணி |
| 10. கவுந்தப்பாடி | 10. தொட்டியம் | 10. தஞ்சாவூர் |
| 11. கோபி | 11. மணச்சநல்லூர் | 11. வல்லம் |
| 12. நம்பியூர் | 12. குளித்தலை | 12. திருப்பனந்தாள் |
| 13. வெள்ள்க்கோவில் | 13. துவரங்குறிச்சி | 13. பாப்பாநாடு |
| 14. சத்தியமங்கலம் | 14. இரும்பூதிப்பட்டி | |
| 15. புஞ்சைபுளியம்பட்டி | 15. சின்னதாராபுரம் | |
| 16. தாளவாடி | 16. புள்ளம்பாடி | |
| 17. பெருந்துறை | 17. தாத்தையங்கார் பேட்டை | |
| 18. குன்னத்தூர் | 18. மேலணைக்குழி | |
| 19. காங்கேயம் | 19. அரும்பாவூர் | |
| 20. வெள்ளாங்கோவில் | | |
| 21. தாராபுரம் | | |
| 22. மூலனூர் | | |
| 23. அலங்கியம் | | |
| 24. முத்தூர் | | |
| 25. எழுமாத்தூர் | | |

[2003 ஏப்ரல் 24

| 12. புதுக்கோட்டை | 13. மதுரை | 14. இராமநாதபுரம் |
|---|---|---|
| 1. ஆலங்குடி | 1. திருமங்கலம் | 1. விருதுநகர் |
| 2. அறந்தாங்கி | 2. உசிலம்பட்டி | 2. இராஜபாளையம் |
| 3. புதுக்கோட்டை | 3. மேலூர் | 3. சாத்தூர் |
| 4. கந்தர்வக்கோட்டை | 4. மதுரை | 4. அருப்புக்கோட்டை |
| 5. ஆவுடையார்கோவில் | 5. டி.கல்லுப்பட்டி | 5. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 6. கீரனூர் | 6. வாடிப்பட்டி | 6. வத்திராயிருப்பு |
| 7. கீரமங்கலம் | | 7. வெம்பக்கோட்டை |
| 8. பொன்னமராவதி | | 8. சிவகங்கை |
| 9. இலுப்பூர் | | 9. திருப்புவனம் |
| 10. கரம்பக்குடி | | 10. மானாமதுரை |
| | | 11. சிங்கம்புணரி |
| | | 12. காரைக்குடி |
| | | 13. இளையான்குடி |
| | | 14. தேவக்கோட்டை |
| | | 15. இராமநாதபுரம் |
| | | 16. பரமக்குடி |
| | | 17. கமுதி |
| | | 18. திருவாடானை |
| | | 19. இராசசிங்கமங்கலம் |
| | | 20. முதுகுளத்தூர் |



2003 ஏப்ரல் 24]

| 15. திருநெல்வேலி | 16. கன்னியாகுமரி | 17. தேனி |
|---|---|---|
| 1. கோவில்பட்டி | 1. ஈத்தாமொழி | 1. தேனி |
| 2. சங்கரன்கோவில் | 2. வடசேரி | 2. கம்பம் |
| 3. தூத்துக்குடி | 3. களியக்காவிளை | 3. போடிநாயக்கனூர் |
| 4. புதூர் | 4. திங்கள்சந்தை | 4. சின்னமனூர் |
| 5. கடம்பூர் | 5. குலசேகரம் | 5. ஆண்டிப்பட்டி |
| 6. கழுகுமலை | 6. தொடுவெட்டி | 6. உத்தமபாளையம் |
| 7. தென்காசி | | 7. பெரியகுளம் |
| 8. அம்பாசமுத்திரம் | | |
| 9. வள்ளியூர் | | |
| 10. ஸ்ரீவைகுண்டம் | | |
| 11. திருநெல்வேலி | | |
| 12. விளாத்திகுளம் | | |
| 13. கடையநல்லூர் | | |
| 14. திசையன்விளை | | |
| 15. பாலூர்சத்திரம் | | |
| 16. திருவேங்கடம் | | |
| 17. எட்டையபுரம் | | |
| 18. சிவகிரி | | |
| 19. ஆலங்குளம் | | |

| 18. திண்டுக்கல் | 19. நாகப்பட்டினம் | 20. திருவாரூர் |
|---|---|---|
| 1. திண்டுக்கல் | 1. கீவளூர் | 1. வலங்கைமான் |
| 2. ஒட்டன்சத்திரம் | 2. குத்தாலம் | 2. கொரடாச்சேரி |
| 3. பழனி | 3. மயிலாடுதுறை | 3. மன்னார்குடி |
| 4. நத்தம் | 4. நாகப்பட்டினம் | 4. பூந்தோட்டம் |
| 5. வத்தலகுண்டு | 5. செம்பனார்கோவில் | 5. வடுவூர் |
| 6. கோபால்பட்டி | 6. சீர்காழி | 6. குடவாசல் |
| 7. வடமதுரை | 7. வேதாரண்யம் | 7. திருவாரூர் |
| 8. வேடசந்தூர் | 8. திருப்பூண்டி | 8. திருத்துறைப்பூண்டி |

## அட்டவணை-4

### தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக அக்மார்க் ஆய்வகங்களின் விவரம்

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | அக்மார்க் ஆய்வகங்கள் இருப்பிடம் |
|---|---|---|
| 1 | சென்னை | சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையரகத்திலுள்ள அமைந்துள்ள முதன்மை ஆய்வகம் |
| 2 | வேலூர் | வேலூர் |
| 3 | கடலூர் | கடலூர் |
| 4 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 5 | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி-1 |
| | | திருச்சிராப்பள்ளி-2 |
| 6 | கரூர் | கரூர் |
| 7 | மதுரை | மதுரை-1 |
| | | மதுரை-2 |
| 8 | தேனி | தேனி |
| 9 | திண்டுக்கல் | திண்டுக்கல் |
| 10 | விருதுநகர் | விருதுநகர் |
| 11 | திருநெல்வேலி | திருநெல்வேலி, தென்காசி |
| 12 | தூத்துக்குடி | தூத்துக்குடி |
| 13 | கன்னியாகுமரி | நாகர்கோவில், மார்த்தாண்டம் |
| 14 | சேலம் | சேலம் |
| 15 | தர்மபுரி | தர்மபுரி |
| 16 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், திருப்பூர், பல்லடம் |
| 17 | ஈரோடு | பெருந்துறை, ஈரோடு-1, ஈரோடு-2, காங்கேயம்-1, காங்கேயம்-2 வெள்ளக்கோவில், சித்தோடு |



## அத்தியாயம் - 9

### மாநில நிதி உதவியுடன் செயல்படும் வேளாண் அமைப்புகள்

### தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டேன்ஹோப்)

தமிழ்நாடு தோட்டக்கலைப் பொருட்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு நிறுவனம் (டேன்ஹோப்) 1995 ஆம் ஆண்டு தோட்டக்கலை செயல்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் தோட்டக்கலை பொருட்களுக்கான சந்தை அபிவிருத்திக்கென நிறுவப்பட்ட ஒரு கூட்டுறவு நிறுவனம். இந்நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு 18—1—1995 முதல் செயல்பட்டு வருகிறது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் இயக்குநர் இந்நிறுவனத்தின் தனி அலுவலர் ஆவார்.

இந்நிறுவனத்தில் இதுகாறும் 3795 தோட்டக்கலை விவசாயிகள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.3.79 இலட்சம். இந்நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளில் 2000-2001-ல் ரூ.36.19 இலட்சத்திற்கும் 2001-2002-ல் ரூ.38.97 இலட்சத்திற்கும் 2002-2003-ல் ரூ.79.48 இலட்சத்திற்கும் வணிகம் புரிந்துள்ளது.

இந்நிறுவனம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் ரூ.4.70 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தினை 1998 முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்ட ஒப்பளிப்பு காலம் 30-6-2001 உடன் முடிவடைந்தது. இத்திட்டத்தின்கீழ் தோட்டக்கலைப் பொருட்களை சந்தைக்குக் கொணரும் பொருட்டு பின்வரும் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

| வ.எண் | விவரம் | எண்கள் | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) (3) | (4) | |
| 1. | சில்லரை விற்பனை அங்காடி | 17 | 15.82 |
| 2. | கொள்முதல் மையம் (உள் குளிர்பதன வசதியின்றி) | 1 | 26.75 |
| 3. | கொள்முதல் மையம் (உள் குளிர்பதன அறை வசதியுடன் | 2 | |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 4. | போக்குவாத்து வாகனங்கள் | 3 | 13.11 |
| 5. | இதா இனங்கள் | - | 22.97 |
| | மொத்தம் .. | - | 78.65 |

இத்திட்டத்திற்கு அரசின் பங்கு மூலதனமாக ரூ.188.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2002-2003ஆம் ஆண்டில் 2,96,000 முந்திரி ஒட்டுக் கன்றுகள் இந்நிறுவன உறுப்பினர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, தோட்டக்கலைத் துறையில் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த முந்திரி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

டான்ஹோாப் நிறுவனத்தின் செயல்பாட்டினை விரிவாக்கும் வண்ணம் தமிழக அரசால் 2003-2004-ல் செயல்படுத்த உள்ள திட்டங்களுக்குப் பலவகையான உயர் விளைச்சல் வகைச் செடிகளை அதனுடைய உற்பத்தியாளர் அங்கத்தினரிடமிருந்து கொள்முதல் செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (அக்ரோபெட்)**

தமிழ்நாடு வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் மற்றும் அதனுடைய சார்புச் சங்கங்கள் (மாவட்ட மற்றும் வட்டார அளவில்) 1972 ஆம் ஆண்டு பிரிவு 9, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டம் 57, 1961-ன்படி நிறுவப்பட்ட விவசாய விளைப் பொருட்கள் உற்பத்தி அதிகரிக்கும் பொருட்டு வேளாண் பணிகளை இயந்திரமயமாக்கும் எண்ணத்தோடு இந்த இணையமும் அதன் சார்புச் சங்கங்களும், விவசாயிகளுக்குச் சேவை செய்து வருகின்றன.

எனினும், அக்ரோபெட் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தாலும், எதிர்காலத்தில் இதனை இலாபகரமாக இயக்க வாய்ப்புகள் ஏதுமில்லையென்பதாலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம் 1983, பிரிவு 137-ன்கீழ் அக்ரோபெட் நிறுவனச் செயல்பாடுகள் குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மைத் துறை ஆணையர்/பதிவாளர், வேளாண்மை பொறியியல் பணிகள் அவர்களுக்கு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.



சங்கத் தமிழ் கால நிலவகைப் படம்
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்

D
V211,31'003
P03.44.2

185077

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 112, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.